REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/ Thinakaran.lk / ThinakaranLK

# தினகரன்

2021 மே 4 செவ்வாய்க்கிழமை
THINAKARAN தினகரன்
89 1932 - 2021
வரு. 89 இல. 104 | May 04, Tuesday, 2021 | 20பக்கங்கள் | 30/-




மக்களின் தகவல் அறியும் உரிமையை உறுதி செய்ய

## இரவு பகல் அயராது உழைக்கும் சகல ஊடகவியலாளர்களுக்கும் பிரதமர் வாழ்த்து

**சர்வதேச ஊடக சுதந்திர தினத்தை முன்னிட்டு செய்தி**



மக்களின் தகவல் அறியும் உரிமையை உறுதி செய்வதற்காக இரவு பகலாக அயராது உழைக்கும் அனைத்து ஊடக நிறுவனங்கள் மற்றும் ஊடகவியலாளர்களுக்கும் சர்வதேச ஊடக சுதந்திர தினத்தையொட்டி பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ வாழ்த்துகளை தெரிவித்துள்ளார்.

அவ் வாழ்த்துச் செய்தியில் மேலும் 06

## ஆஸ்பத்திரிக்கு செல்ல முடியவில்லையா?



**1906 எனும் இலக்கத்துடன் தொடர்பு கொள்ள கோரிக்கை**

கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளாகி வைத்தியசாலைகளுக்கு செல்ல முடியாதோர் உடனடியாக 1906 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுமாறு இராணுவத்தளபதி ஜெனரல் சவேந்திர சில்வா பொதுமக்களிடம் கேட்டுக் கொண்டுள்ளார்.

## ஆஸ்பத்திரிகளில் நெருக்கடி நிலை ஓரிரு தினங்களில் நிவர்த்தியாகும்

**இன்று ஒருதொகை ரஷ்ய தடுப்பூசி நாட்டை வந்தடையும்**



**லோரன்ஸ் செல்வநாயகம்**

ஆஸ்பத்திரிகளில் நிலவும் நெருக்கடி நிலை இன்னும் இரண்டு மூன்று தினங்களில் நிவர்த்தி செய்யப்படும் என சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் விசேட மருத்துவ நிபுணர் 06

நாட்டிற்குள் சட்டவிரோதமாக உட்பிரவேசிப்பதை தடுக்க

# இலங்கை கடற்பிரதேசத்தில் பாதுகாப்பு ஏற்பாடுகள் தீவிரம்

**24 மணித்தியாலமும் விஷேட கண்காணிப்புகள்**

**மேலதிக கப்பல்கள் மற்றும் படகுகள் அனுப்பி வைப்பு**



**ஸாதிக் ஷிஹான**

கடல் வழியைப் பயன்படுத்தி நாட்டிற்குள் சட்டவிரோதமாக உட்பிரவேசிப்பதை தடுக்கும் வகையில் இலங்கையின் கடற் பிரதேசத்தின் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளதுடன் 24 மணித்தியாலமும் விஷேட கடல் கண்காணிப்பு நடவடிக்கைகள் அதிகரிக்கப்பட்டுள்ளதாக இலங்கை கடற்படை அறிவித்துள்ளது.

கடல் வழியைப் பயன்படுத்தி சட்டவிரோதமாக பிரவேசிப்பதன் மூலம் நாட்டிற்குள் கொவிட் 19 தொற்று நோய் அச்சுறுத்தல் 06

**வெளிநாட்டு மீனவர்களுடன் தொடர்பை பேண வேண்டாம் என கடற்படை அறிவுறுத்தல்.**



பொலிஸ் சமுதாய சேவைகள் இராஜாங்க அமைச்சராக ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ முன்னிலையில் இராஜாங்க அமைச்சர் திலும் அமுனுகம நேற்று ஜனாதிபதி அலுவலகத்தில் சத்தியபிரமாணம் செய்து கொண்டபோது.....

## சில கவனக்குறைவுகளால் மீண்டும் அச்சுறுத்தல் நிலை



**கொரோனா குறித்து அரசு தீவிர நடவடிக்கை**

இலங்கை கொரோனா தொற்றை கட்டுப்பாட்டில் வைத்திருந்த போதும் சில கவனக்குறைவு காரணமாக மீண்டும் அதன் 06

பிராந்திய பயணத்தின் ஒரு பகுதியாக

## சீன வெளிவிவகார அமைச்சர் அடுத்த மாதம் இலங்கை வருகிறார்



சீன வெளிவிவகார அமைச்சர் வாங் யி அடுத்த மாதம் இலங்கைக்கு வருவார் என தெரிவிக்கப்படுகிறது.

இது அண்மைய மாதங்களில் சீனாவிலிருந்து மூன்றாவது 06

கொரோனா வைரஸ் பரவல் தடுப்பு நடவடிக்கை;

## 13 மாவட்டங்களைச் சேர்ந்த 77 GS பிரிவுகள் முடக்கம்

**லோரன்ஸ் செல்வநாயகம்**



நாட்டில் நேற்றுவரை 13 மாவட்டங்களைச் சேர்ந்த 77 கிராம சேவை உத்தியோகத்தர் பிரிவுகள் தனிமைப்படுத்தலுக்காக முடக்கப்பட்டுள்ளதாக கொரோனா வைரஸ் கட்டுப்பாட்டுக்கான தேசிய மத்திய நிலையத்தின் தலைவர் இராணுவத் தளபதி சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.

நேற்றைய தினமும் கொழும்பு, கம்பஹா, மட்டக்களப்பு, நுவரெலியா உட்பட சில மாவட்டங்களில் உள்ள சில கிராம சேவை உத்தியோகத்தர் பிரிவுகள் தனிமைப் படுத்தலுக்காக 06

## திருமலையில் 9 கிராமங்கள் முழுமையாக முடக்கம்

**PCR,அன்டிஜன் சோதனைகள் முன்னெடுப்பு**


**அன்புவழிபுரம் தினகரன் நிருபர்**

திருகோணமலையில் வேகமாக பரவும் கொவிட் 19 தொற்றின் காரணமாக இதுவரை 9 கிராமங்கள் முழுமையாக முடக்கப்பட்டுள்ளன.

மேலும் பல கிராமங்களில் அன்டிஜன் பரிசோதனை மற்றும் பிசிஆர் பரிசோதனைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இதேவேளை, திருகோணமலை மாவட்டத்தில் 523 பேர் தொற்றுக்குள்ளாகியதாக தெரிவிக்கப்படுகிறது. கடந்த 30 ஆம் திகதி கந்தசாமி கோயில் 06

பூஜித் ஹேமசிறிக்கு

## எதிரான குற்றச்சாட்டுகள் நீதிமன்றில் முன்வைப்பு



**லோரன்ஸ் செல்வநாயகம்**

முன்னாள் பொலிஸ் மாஅதிபர் பூஜித் ஜயசுந்தர மற்றும் முன்னாள் பாதுகாப்பு 06

ரமழான் தொழுகை நேரம்

| திகதி | 04– 08 |
|---|---|
| சஹர் | 04–22 |
| சுபஹ் | 04–37 |
| சூ.உதயம் | 05–57 |
| லுஹர் | 12–09 |
| அஸர் | 03–27 |
| மஃரிப் | 06–19 |
| இஷா | 07–32 |




Complete Family Protection
Hotline: 077 4648855

## நாட்டில் ஒட்சிசனுக்கு தட்டுப்பாடு இல்லை

தட்டுப்பாடு என பெய்க் குற்றச்சாட்டு – டலஸ் 14

## சென்னையிலிருந்து தப்பிவந்த பெண்ணும் பிள்ளைகளும் கைது

படகு மூலம் வந்து புத்தளத்திலிருந்த போது சிக்கினர் 14

## புலிகளை ஊக்குவித்த குற்றச்சாட்டில் ஒருவர் கைது

வலைத்தளங்களில் பதிவுகளை இட்டாராம் 07

TNA – SLMC இடையே பேச்சுவார்த்தை;

## சுமந்திரனின் கருத்துக்கு கருணா எதிர்க்கருத்து

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரசுடனோ வேறு எந்த முஸ்லிம் கட்சியுடனோ எந்தவித பேச்சுவார்த்தைகளையும் மாகாணசபை தேர்தல் தொடர்பில் முன்னெடுக்கவில்லையெனத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் கோவிந்தன் கருணாகரம் தெரிவித்துள்ளார். ஒன்றிரண்டு பாராளுமன்ற உறுப்பினர்கள் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் 06



தமிழகத்தின் 10ஆவது முதல்வராக

## ஸ்டாலின் எதிர்வரும் 7ஆம் திகதி பதவியேற்பு



தமிழ்நாடு சட்டமன்றத் தேர்தலில் திராவிட முன்னேற்றக் கழக கூட்டணி 159 ஆசனங்களை வென்றுள்ளதையடுத்து, தமிழகத்தின் 10 ஆவது முதலமைச்சராக எதிர்வரும் 7 ஆம் திகதி ஸ்டாலின் பதவியேற்கவுள்ளார்.

நடந்து முடிந்த தேர்தலில் தி.மு.க 129 தொகுதிகளில் தனியாக வெற்றி பெற்றுள்ளது. அதேசமயம் தி.மு.க தலைமையிலான கூட்டணி மொத்தம் 06

## தேர்தல் முறை மாற்றம்; வெற்றி கொள்வது கடினம்

**வேலுகுமார் எம்.பி தெரிவிப்பு**



தனி தமிழ் தொகுதி, முஸ்லிம் தொகுதி என்ற அடிப்படையில் தேர்தல் முறை மாற்றம் தொடர்பான சவாலில் வெற்றிக் கொள்ள முடியாது என ஜனநாயக மக்கள் முன்னணியின் பிரதி தலைவரும், தமிழ் முற்போக்கு கூட்டணியின் கண்டி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான வேலு குமார் தெரிவித்தார்.

இன்று நாட்டில் புதிய தேர்தல் முறை மாற்றம் தொடர்பாக 06

**விக்கல் வீராச்சாமி**



ஸ்டாலினின் வெற்றி இலங்கைத் தமிழரின் விடுதலைக்கு ஆதரவை வழங்கும் எண்டு மாவை ஐயா வாழ்த்தி இருக்கிறார்....

ஓம், ஓம், நானும் பாத்தன், எம்.ஜி.ஆர்ல தொடங்கி கருணாநிதி, ஜெயலலிதா எண்டு மாறிமாறி 40 வருஷமா இப்படி அறிக்கை விட்டுதானே மிச்சம்...!!!

லேக் ஹவுஸ் ஆகிய நாம் உங்கள் பாதுகாப்பின் முக்கியத்துவம் கருதி பின்வரும் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுத்துள்ளோம்



# சர்வதேச செய்திகள்

## உலகில் ஒரு பில்லியன் தடுப்பூசிகள் பயன்பாடு

உலகெங்கும் பயன்படுத்தப்பட்ட கொரோனா வைரஸ் தடுப்பு மருந்தின் எண்ணிக்கை ஒரு பில்லியனைத் தொட்டிருப்பதாக சயன்டிபிக் அமெரிக்கன் என்ற இணைய செய்தி தளம் குறிப்பிட்டுள்ளது.



அவசர பயன்பாட்டுக்காக தடுப்பு மருந்துக்கு உலக சுகாதார அமைப்பு அனுமதி அளித்து நான்கு மாதங்களின் பின்னரே இந்த மைல்கல் எட்டப்பட்டுள்ளது. எனினும் தடுப்பூசி பகிர்வில் உலகில் பெரும் ஏற்றத்தாழ்வு இருந்து வருவதாக போர்பஸ் சஞ்சிகை குறிப்பிட்டுள்ளது.

கடந்த ஏப்ரல் 27 ஆம் திகதியன்று உலகெங்கும் 570 மில்லியன் மக்களுக்கு 1.06 பில்லியன் தடுப்பூசிகள் வழங்கப்பட்டுள்ளது. இது தற்போதைய 7.79 பில்லியன் உலக மக்கள் தொகையில் முதல் தடுப்பூசியை பெற்றவர்கள் எண்ணிக்கை 7.3 வீதமாக உள்ளது.

இதன்படி தினசரி மக்களுக்கு 18.5 மில்லியன் டோஸ்கள் வழங்கப்படுவதோடு, இந்த வேகத்தில் தடுப்பு மருந்து வழங்கினால் உலக மக்கள் தொகையில் 75 வீதத்தினருக்கு தடுப்பூசி வழங்க இன்னும் 19 மாதங்கள் எடுத்துக் கொள்ளும் என்று புளூம்பர்க் இணைதளம் தெரிவித்துள்ளது.

'இது முன்னெப்போதும் எட்டப்படாத விஞ்ஞான அடைவாக உள்ளது. 16 மாதங்களுக்குள் புதிய வைரஸ் ஒன்றை அடையாளம் கண்டு உலகளாவிய ரீதியில் பல்வேறு வகையான தடுப்பூசிகளை, பல்வேறு தளத்தில் மற்றும் பல்வேறு நாடுகளில் ஒரு பில்லியன் பேருக்கு எம்மால் தடுப்பூசி வழங்க முடிந்திருப்பது நினைத்துப் பார்த்திராத ஒன்று' என்று உலக சுகாதார அமைப்பின் தலைமை விஞ்ஞானி சௌம்யா சுவாமிநாதன், சயன்டிபிக் அமெரிக்கன் இணையதளத்திற்கு தெரிவித்தார்.

எனினும் 87 வீதமான தடுப்பு மருந்துகள் செல்வந்த நாடுகளிலேயே வழங்கப்பட்டிருப்பதாக ஏ.பி செய்தி நிறுவனம் கடந்த வாரம் குறிப்பிட்டிருந்தது. அதன்படி செல்வந்த நாடுகளில் நான்கில் ஒருவர் குறைந்தது ஒரு தடுப்பு மருந்தை பெறும் அதே நேரத்தில் ஏழை நாடுகளில் 500 பேரில் ஒருவரே தடுப்பு மருந்தை பெற்றுள்ளார். இது தடுப்பு மருந்தின் செயல்திறன் மிக்க விநியோகத்தை வலியுறுத்துவதாக உள்ளது. இதில் கிடைக்கப்பெற்ற தடுப்பு மருந்துகளில் 0.2 விதம் மாத்திரமே குறைந்த வருமானம் கொண்ட நாடுகளுக்கு விநியோகிக்கப்பட்டிருப்பதாக நியூயோர்க் டைம்ஸ் பத்திரிகையின் தரவுகள் குறிப்பிட்டுள்ளன.

## காலாவதியான போர்ப் பயிற்சி: சீன இராணுவம் மீது விமர்சனம்



சீன இராணுவ பயிற்சிகள் கடினமானது என்றபோதும் அவை காலாவதியான மற்றும் செயல்திறனற்றவை என்ற விமர்சனங்கள் எழுந்துள்ளன. அது பற்றி சீன இராணுவ நாளிதழில் கடந்த வாரம் வெளியான பல கட்டுரைகளில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

அனைத்து போட்டியாளர்களும் (நவீன போர்க் களத்தில்) தொழில்நுடுட்பத்தை நம்பியுள்ளனர்' என்று சீன இராணுவ அகடமியைச் சேர்ந்த ஆய்வாளரான சாங் ஷிசென்ஞ் எழுதியுள்ளார்.

'போர் நடவடிக்கையில் புதிய உத்திகளை பற்றி அவதானம் செலுத்தி பயிற்சியில் நாம் புதிய மாற்றங்களை கொண்டுவராவிட்டால் எம்மால் இலக்கை நோக்கிச் செல்ல முடியாமல்போகும்' என்றும' அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

சில இராணுவ கட்டளை தளபதிகள் தொழில்நுட்பம் பற்றியும் அது எவ்வாறு நவீன போர் நடவடிக்கைகளில் தாக்கம் செலுத்தும் என்பது பற்றியும் புரிதலை பெறாதிருப்பதாகவும் அந்தக் கட்டுரையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

உலகின் மிகப்பெரிய இராணுவத்தை வேகமான மற்றும் திறமையான போர் படையாக மாற்றும் நோக்கில் அதன் ஆயுத அமைப்பை தானியக்கமாக மாற்றும் திட்டத்திற்கு மத்தியிலேயே பாதுகாப்பு ஆய்வாளர்கள் இந்த விமர்சனங்களை எழுப்பியுள்ளனர்.

### வூஹான் இசை நிகழ்ச்சி:

## ஆயிரக்கணக்கான மக்கள் முகக்கவசமின்றி பங்கேற்பு



மத்திய சீனாவின் வூஹான் நகரில் ஸ்ட்ரோபர்ரி இசை நிகழ்ச்சியின் முதல் நாளில் ஆயிரக்கணக்கானோர் கலந்து கொண்டனர். அவர்களில் பலர் முகக்கவசம் அணியாமல் நிகழ்ச்சியை ரசித்தனர்.

வெளிப்புறத்தில் இடம்பெறும் அந்த இரண்டு நாள் இசை நிகழ்ச்சி கொரோனா வைரஸ் பரவல் காரணமாக கடந்த ஆண்டு தாமதமானது, பின்னர் ரத்து செய்யப்பட்டது.

இந்த ஆண்டு நிகழ்ச்சியில் பங்கேற்கும் ரசிகர்களின் எண்ணிக்கையைக் கட்டுப்படுத்த வேண்டியிருந்ததாக ஏற்பாட்டாளர்கள் கூறினர்.

5 நாள் தேசிய விடுமுறையை ஒட்டி சீனாவின் மற்ற நகரங்களிலும் இதே போன்ற நிகழ்ச்சிகள் நடத்தப்படுகின்றன. கொரோனா வைரஸ் பரவல் ஆரம்பித்தபோது வூஹான் நகரில், உலகின் மிகக் கடுமையான முடக்கம் முதன்முதலில் நடைமுறைப்படுத்தப்பட்டது. அங்கு வசிப்பவர்கள் சுமார் 2 மாதங்களுக்கும் மேலாகக் கடுமையான கட்டுப்பாடுகளைப் பின்பற்றி நடந்தனர். தற்போது, வூஹான் நகர் கிட்டத்தட்ட வைரஸ் பரவல் இல்லாத இடமாக மாறியுள்ளதாக அதிகாரபூர்வத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

## மெக்சிகோ: மாயன் காலத்து கைச்சுவடுகள் கண்டுபிடிப்பு



மெக்சிக்கோவில் உள்ள ஒரு குகையில் கறுப்பு, சிவப்பு நிறங்களில் கைச்சுவடுகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

அவை, பண்டைய மாயன் காலத்துக் குழந்தைகளின் கைச்சுவடுகள் என்று கருதப்படுகின்றன. 137 கைச்சுவடுகள் 1,200 ஆண்டுகளுக்கு முந்தியவை என்று கூறப்படுகிறது. மெக்சிக்கோ யுகாடன் தீபகற்பத்தின் வட முனைக்கு அருகே அந்தக் குகை அமைந்துள்ளது. பெண் பிள்ளைகள் பருவமடையும்போது, அவர்களின் கைச்சுவடுகள் பதிப்பது மாயன்களின் வழக்கமாக இருந்திருக்கலாம் என்று தொல்பொருள் ஆய்வாளர் செர்கியோ கிரோஸ்ஜீன் கூறினார். கறுப்பு நிறத்தில் உள்ள கைச்சுவடுகள் இறப்பையும், சிவப்பு நிறத்தில் உள்ள கைச்சுவடுகள் போர் அல்லது வாழ்க்கையையும் குறிக்கும் என்றார் அவர்.

## சீன 12 நிறுவனங்களுக்கு பாகிஸ்தான் கோரிக்கை



மின் கட்டணத்தை ஒரு யுனிட்டுக்கு 1.5 ரூபாவாக உயர்த்தும் தேவையை அகற்றும் முயற்சியில் சீன – பாகிஸ்தான் பொருளாதார தாழ்வார எரிசக்தி திட்டங்களுக்கு எதிராக பாகிஸ்தான் 3 பில்லியன் டொலர் கடன் மறுசீரமைப்பை கோரியுள்ளதாக மின்சக்தி மற்றும் பெற்றோலியத் துறையில் பிரதமரின் சிறப்பு உதவியாளரான தபிஷ் கொஹார் தெரிவித்துள்ளார்.

'மூன்று ஆண்டுகளில் 12 சீன சுயாதீன மின் உற்பத்தியாளர்களிடம் இருந்து சுமார் 3 பில்லியன் டொலர் அல்லது 435 பில்லியன் ரூபாவை முதன்மை மீள் செலுத்தலாக பெறுவதற்கு திட்டமிட்டுள்ளது' என்றும் அவர் குறிப்பிட்டார்.

## சிங்கங்களின் இனப்பெருக்கம்: தென்னாபிரிக்கா கட்டுப்பாடு



கூண்டுகளில் அல்லது வேலியால் அடைக்கப்பட்ட இடங்களில் சிங்கங்களின் இனப்பெருக்கத்தைத் தடை செய்வதற்கான திட்டங்களைத் தென்னாபிரிக்கா வெளியிட்டுள்ளது.

அந்த விலங்களுக்கு இயற்கையான சூழலை வழங்கும் முயற்சியில், அவ்வாறு செய்யப்படுகிறது. அடைத்து வைக்கப்பட்ட சிங்கங்களை வேட்டையாடவோ சுற்றுப்பயணிகள் அவற்றைச் செல்லமாக வருடவோ இனி அனுமதியில்லை.

அரசாங்கத்தால் நியமிக்கப்பட்ட சிறப்புக் குழு நடத்திய ஆய்வில் வெளியிடப்பட்ட பரிந்துரைகளைத் தொடர்ந்து, அந்த முடிவு எடுக்கப்பட்டது.

சிங்கம், யானை, காண்டாமிருகம், சிறுத்தை போன்ற விலங்குகளின் வேட்டை, வர்த்தகம் குறித்த விதிகளை அந்தக் குழு ஆய்வு செய்தது.

சிங்கங்களை அடைத்து வைத்து இனப்பெருக்கம் செய்வதையும் வளர்ப்பதையும் தடுத்து நிறுத்த வேண்டும் என ஆய்வறிக்கை கூறியதாக அந்நாட்டின் சுற்றுப்புற அமைச்சர் தெரிவித்தார்.

## இந்தியாவின் கொரோனா திரிபு இந்தோனேசியாவில்



இந்தியாவில் உருமாறிய கொரோனா வைரஸ் இந்தோனேசியாவில் அடையாளம் காணப்பட்டுள்ளது.

மிக வேகமாகப் பரவக்கூடிய ஆற்றலைக் கொண்ட அந்த வைரஸ் வகை, தலைநகர் ஜக்கர்த்தாவில் இரண்டு பேரைப் பாதித்துள்ளது. அந்தத் தகவலை அந்நாட்டுச் சுகாதார அமைச்சர் பூடி குணாடி நேற்று தெரிவித்தார்.

தென்னாபிரிக்காவில் உருமாறிய கொரோனா வைரஸ் பாலியில் அடையாளம் காணப்பட்டுள்ளது.

இந்தியாவில் கட்டுக்கடங்காமல் பரவி வரும் கொவிட்–19 நோய்த்தொற்று காரணமாக அந்நாட்டிலிருந்து வரும் பயணிகளுக்கு இந்தோனேசியா தடை விதித்துள்ளது.

இதன்படி முந்திய 14 நாட்களில் இந்தியாவில் இருந்த வெளிநாட்டினருக்கு விசா வழங்குவதை இந்தோனேசியா கடந்த வாரம் நிறுத்தியமை குறிப்பிடத்தக்கது.

## பங்களாதேஷ் படகு விபத்து: 26 பேர் பலி



பங்களாதேஷில் பயணிகளை நிரப்பிய விசைப்படகு ஒன்று மணலை எடுத்துச் செல்லும் படகில் மோதிய விபத்தில் குறைந்தது 26 பேர் உயிரிழந்துள்ளனர்.

நேற்று இடம்பெற்ற இந்த விபத்தில் மாவா சிறு நகரில் இருந்து வந்த விசைப் படகில் மூன்று டஜன் பயணிகள் ஏற்றப்பட்டிருந்ததாக பொலிஸார் தெரிவித்தனர். இதன்போது பத்மா நதியின் சிபச்சர் நகரில் இருக்கும் பிரதான நதித் தரிப்படம் ஒன்றுக்கு அருகிலேயே மற்றைய படகுடன் அது மோதியுள்ளது.

'பெண் ஒருவர் உட்பட 26 பேரின் உடல்களை நாம் மீட்டுள்ளோம். மூன்று சிறுவர்கள் உட்பட ஐவரை காப்பாற்றினோம்' என்று பொலிஸ் அதிகாரியான ஆமிர் ஹொசைன் ஏ.எப்.பி செய்தி நிறுவனத்திற்கு தெரிவித்தார்.

விசைப்படகு மோதியபோது அதன் முன் பக்கம் சேதமடைந்து சில நிமிடங்கிலேயே மூழ்கி இருப்பதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். சம்பவ இடத்திற்கு விரைந்த பொலிஸார், தீயணைப்புப் படையினர் மற்றும் இராணுவ மீட்புக் குழு தேடுதல் மற்றும் மீட்புப் பணியில் ஈடுபட்டு வருவதாக ஆமிர் ஹொசைன் மேலும் தெரிவித்தார். கடந்த ஏப்ரல் மாத ஆரம்பத்தில் மத்திய நகரான நரயங்கஜில் கொரோனா தொற்றுக்கு எதிராக முடக்கநிலைக்கு முன்னர் அவசரமாக தமது வீடுகளுக்கு செல்வதற்காக 50 பயணிகளை ஏற்றியபடி சென்ற படகு ஒன்று விபத்துக்குள்ளான சம்பவத்தில் 30 க்கும் அதிகமானவர்கள் உயிரிழந்தனர்.

## கொவிட்-19: பாகிஸ்தான் எல்லைகளுக்குப் பூட்டு

கொரோனா தொற்றுக்கு எதிரான போராட்டத்தின் தீர்க்கமான வாரங்களை எதிர்கொண்டிருப்பதாக அறிவித்திருக்கும் பாகிஸ்தான் ஈரான் மற்றும் ஆப்கானிஸ்தான் எல்லைகளை மூடி இருப்பதோடு சர்வதேச விமானப்பயணங்களையும் குறைத்துள்ளது.

முஸ்லிம்களின் நோன்புப் பெருநாளுக்கு தயாராகி வரும் நிலையில் பாகிஸ்தானில் நகரங்கள் மற்றும் கிராமங்களை நோக்கி மக்களின் நடமாட்டம் அதிகரிக்கும் சூழலிலேயே கடந்த ஞாயிற்றுக்கிழமை அண்டை நாட்டு எல்லைகள் மூடப்பட்டுள்ளன.



அண்டை நாடான இந்தியாவில் கொரோனா தொற்று தீவிரம் அடைந்திருப்பது பற்றி பகிஸ்தான் உன்னிப்பாக அவதானித்து வருகிறது.

புதன்கிழமை தொடக்கம் 80 வீதமான விமானப் பயணங்கள் இரண்டு வாரங்களுக்கு இடைநிறுத்தப்பட்டிருப்பதாக பாகிஸ்தான் சிவில் விமானசேவை நிர்வாகம் தெரிவித்துள்ளது. நோன்புப் பெருநாள் முடியும் மே நடுப்பகுதி வரை குறிப்பாக மத்திய கிழக்கில் இருந்து வரும் விமானங்களுக்கே இந்த கட்டுப்பாடு கொண்டுவரப்பட்டுள்ளது.

வர்த்தக செயற்பாடுகள் தவிர்த்து ஆப்கான் மற்றும் ஈரான் நாடுகளில் இரு எல்லையை கடப்பதும் தடுக்கப்பட்டுள்ளது என்று பாகிஸ்தான் கொரோனா கட்டுப்பாட்டு செயலணி தெரிவித்துள்ளது.

தினசரி இலட்சக்கணக்காக தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டு வரும் அண்டை நாடான இந்தியாவுடனான எல்லைகள் கொரோனாவுக்கு முன்னரே அரசில் பதற்றம் காரணமாக மூடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. மூன்றாவது அலை பாதிப்பை எதிர்கொண்டிருக்கும் பாகிஸ்தானில் 800,000க்கும் அதிகமான நோய்த் தொற்று சம்பவங்கள் பதிவாகி இருப்பதோடு 18,000 பேர் உயிரிழந்துள்ளனர்.

## மியன்மார் போராட்டக்காரரர் எட்டுப் பேர் சுட்டுக்கொலை



மியன்மாரில் இராணுவ சதிப்புரட்சிக்கு எதிராக அண்மைய நாட்களில் இடம்பெற்ற மிகப்பெரிய ஆர்ப்பாட்டங்களில் பொலிஸார் நடத்திய துப்பாக்கிச் சூட்டு சம்பவங்களில் குறைந்தது எட்டுப் பேர் கொல்லப்பட்டுள்ளனர்.

சிறுநகரங்கள் மற்றும் நகரங்களில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற ஆர்ப்பாட்டங்களில் ஆயிரக்கணக்கான மக்கள் பங்கேற்றுள்ளனர். நாட்டின் இரண்டாவது பெரிய நகரான மண்டாலாயில் இருவர் சுட்டுக்கொல்லப்பட்டிருப்பதாக மசிமா செய்தி நிறுவனம் தெரிவித்தது. மத்திய நகரான வெட்லட்டில் மூன்று ஆர்ப்பாட்டக்காரர்கள் கொல்லப்பட்டிருப்பதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன. வடக்கு நகரான ஹப்கன்டில் மேலும் ஒரு ஆர்ப்பாட்டக்காரர் பொலிஸாரின் துப்பாக்கிச் சூட்டில் கொல்லப்பட்டுள்ளார்.

கடந்த பெப்ரவரி முதலாம் திகதி ஆங் சான் சூச்சியின் அரசை கவிழ்த்து இராணுவம் ஆட்சியை கைப்பற்றியது தொடக்கம் சிவில் ஒத்திழையாமை போராட்டங்கள் மற்றும் பெரும் ஆர்ப்பாட்டங்கள் இடம்பெற்று வருகின்றன.

தினகரன் விளம்பரம்
0112429367
விற்பனை பிரிவு
0112429444, 0112429378
ஆசிரியபீடம்
editor.tkn@lakehouse.lk

2021 மே 4 செவ்வாய்க்கிழமை

# தினகரன்
THINAKARAN



**தொழுகை நேரம்**
04 முதல் 08 வரை
சுபஹ் - 04.37
லுஹர் - 12.09
அஸர் - 03.27
மஃரிப் - 06.19
இஷா - 07.32

**இன்றைய சுபதினம்**
பிலவ வருடம் சித்திரை 21
ராகுகாலம் : மாலை : 03.00 - 04.30வரை
சுபநேரம் : காலை : 07.30 - 09.00வரை
யோகம்: சித்தயோகம்
திதி: அஷ்டமி

**இராசி பலன்கள்**
மேஷம் - வெற்றி
ரிஷபம் - பாராட்டு
மிதுனம் - செலவு
கடகம் - போட்டி
சிம்மம் - கோபம்
கன்னி - முயற்சி
துலாம் - நன்மை
விருச்சிகம் - சுகம்
தனுசு - நிறைவு
மகரம் - பொறுமை
கும்பம் - மறதி
மீனம் - செலவு

கலாநிதி இராமச்சந்திரகுருக்கள்
(பாபு சர்மா)

# மக்களை குழப்பும் பொய்யான செய்திகளை தவிர்ப்பது ஊடகங்களின் பொறுப்பு



### ஊடக சுதந்திர தின செய்தியில் ஜனாதிபதி

உண்மைச் செய்திகளை மக்களிடம் கொண்டுசென்று சேர்ப்பது மட்டுமே ஊடகங்களின் பணி அல்ல, உண்மையற்ற செய்திகள் மக்களுக்குள் பரவி குழப்ப நிலைகளை ஏற்படுத்துவதையும் ஊடகங்களே பொறுப்புடன் தடுக்க வேண்டும் என ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். அனைத்துலக ஊடக சுதந்திர தினத்தையொட்டி விடுத்துள்ள செய்தியில் குறிப்பிட்டுள்ள அவர் ,

இன்று நாடு சந்தித்து நிற்கும் பெரும் சுகாதார நெருக்கடியான ஒரு காலகட்டத்தில், அவ்வாறு செயற்படுவதே ஊடகங்களின் பெரும் பொறுப்பாகவும் இருக்க முடியும்.

நிறைவுகள் தொடர்பாகப் பேசுவதைத் தவிர்த்து, குறைகளை மட்டுமே கேள்விக்கு உட்படுத்தி ஒரு நாட்டையும் அதன் மக்களையும் திறம்பட நிர்வகித்துச் செல்வதில் ஓர் அரசாங்கம் சந்திக்கும் சவால்களை விமர்சிப்பது அல்லாமல், மக்களை நல்வழிப்படுத்திச் செல்வதில் அரசாங்கத்திற்கு ஆக்கபூர்வமான உறுதுணையாகவும் ஊடகங்களே திகழ வேண்டும்.

அவையே, ஊடக சுதந்திரம் என்பதன் உள்ளார்ந்த அர்த்தம் ஆகும். எமது நாட்டில் ஊடக சுதந்திரத்தை பாதுகாப்பதில் எமது அரசாங்கம் உறுதிப்பாட்டோடு உள்ளது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.




## லைலத்துல் கத்ர் அமைந்துள்ள காலம்

ரமழான் மாதத்தின் முக்கியத்துவம் மிக்க காலப்பகுதி முஸ்லிம்களை வந்தடைந்துள்ளது. அது தான் லைலத்துல் கத்ர் இரவு அமைவுற்றிருக்கும் காலப்பகுதியாகும். இம்மாதத்தின் இறுதிப்பத்து நாட்களிலுள்ள ஒற்றைப்படையான ஓர் இரவில் தான் இவ்விரவு அமைவுற்றுள்ளது. இது அருள் மறையாம் அல் குர்ஆன் அருளப்பட்ட இரவாகும். அல்லாஹ் இவ்விரவை ஆயிரம் மாதங்களை விடவும் மேலான மகத்துவம் மிக்க மாட்சிமை நிறைந்த இரவாக ஆக்கி வைத்துள்ளான்.

அதேநேரம் அல்லாஹ்வை ஆசானாகக் கொண்டுள்ள இக்குர்ஆன் இவ்விரவு தொடர்பில் தனியொரு அத்தியாயத்தையே தன்னகத்தே கொண்டிருக்கின்றது. அந்த அத்தியாயத்தில் 'லைலத்துல் கத்ர்' என்ற பிரயோகம் மூன்று தடவைகள் பயன்படுத்தப்பட்டுள்ளன.ஆகவே இவ்விரவின் சிறப்பையும் முக்கியத்துவத்தையும் சொல்லித்தான் தெரிய வேண்டியதில்லை. இறையருள் நிறைந்த புண்ணியங்கள் பூத்துக்குலுங்கும் இரவு இது.

இந்த இரவில் அல்லாஹ்விடம் நன்மைகளை எதிர்பார்த்து நின்று வணங்குபவரின் முன்செய்த பாவங்கள் மன்னிக்கப்படும் என்று நபி(ஸல்) அவர்கள் குறிப்பிட்டுள்ளார்கள்.

அதேநேரம் இவ்விரவின் அருட்பேறுகளை அடைந்து கொள்வதில் அன்னார் விஷேட கவனம் எடுத்துக் கொண்டிருக்கின்றார்கள். இதன் நிமித்தம் நபி (ஸல்) அவர்கள் கடும் முயற்சிகளை மேற்கொண்டுள்ளார்கள். குறிப்பாக இஃதிகாப் இருந்து அதிகமதிகம் இறை வணக்கங்களில் அன்னார் ஈடுபட்டுள்ளார்கள். இது தொடர்பில் தம் குடும்பத்தினரையும் ஊக்குவித்துள்ளார்கள். இதன் ஊடாகவும் லைலத்துல் கத்ர் இரவின் பெறுமதியும் சிறப்பும் எடுத்துக் காட்டப்பட்டிருக்கின்றன.

இவ்வாறு சிறப்புற்று விளங்கும் லைலத்துல் கத்ர் அமைவுற்றுள்ள இவ்வருட ரமழானின் இறுதிப்பத்து காலப்பகுதி கொவிட் 19 தொற்று பரவுதல் அச்சுறுத்தலுக்கு மத்தியில் முஸ்லிம்களை அடைந்துள்ளது. அதனால் லைலத்துல் கத்ரின் அருள் வளங்களை அடைந்து கொள்வதில் உச்ச பட்ச கவனம் எடுத்துக்கொள்வதோடு கொவிட் 19 தொற்று பரவுதல் தொடரைத் துண்டிக்கக் கூடியவகையிலும் தம் செயற்பாடுகளை அமைத்துக்கொள்ளவும் வேண்டும். அதுவே இன்றைய தேவையாகும்.

மர்லின் மரிக்கார் ...

**கொரோனா வைரஸ்:**

# கர்ப்பிணித் தாய்மார்கள் எழுபது பேர் பல்வேறு ஆஸ்பத்திரிகளில் சிகிச்சை

**லோரன்ஸ் செல்வநாயகம்**

நாடளாவிய ரீதியில் உள்ள ஆஸ்பத்திரிகளில் 70 கொரோனா வைரஸ் தொற்று கர்ப்பிணித் தாய்மார்கள் சிகிச்சை பெற்று வருவதாக சுகாதார அமைச்சின் குடும்ப சுகாதார பிரிவு பணிப்பாளர் விசேட மருத்துவ நிபுணர் சித்ரமாலி டி சில்வா தெரிவித்துள்ளார்.

அவர்களில் மூன்று கர்ப்பிணித் தாய்மார்கள் தீவிர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்று வருவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

தற்போது நாட்டில் பரவி வரும் கொரோனா வைரஸ் தொற்றிலிருந்து கர்ப்பிணித் தாய்மார்களையும் சிறுவர்களையும்

06


மத்திய நெடுஞ்சாலை திட்டத்தின் மீரிகமவில் இருந்து பொதுஹர வரையான பகுதி நிர்மாணப் பணிகளை நெடுஞ்சாலை அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்ணான்டோ பார்வையிட சென்ற போது...

# இந்திய உல்லாசப் பிரயாணிகளின் வருகை மட்டுப்படுத்தப்படும்

### -அமைச்சர் பிரசன்ன ரணதுங்க

**லோரன்ஸ் செல்வநாயகம்**

இந்தியாவிலிருந்து வருகை தரும் உல்லாசப் பயணிகளின் எண்ணிக்கையை உச்ச அளவில் மட்டுப்படுத்தியுள்ளதாக சுற்றுலாத் துறை அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள்ளார்.

இந்திய உல்லாச பயணிகள் தொடர்பில் நாட்டில் நடைமுறைப் படுத்தப்பட்டுள்ள கடுமையான சட்டங்கள் காரணமாகவே நாட்டிற்கு வருகை தரும் இந்திய உல்லாசப் பிரயாணிகளின் வருகை குறைவடைந்துள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

அது தொடர்பில் அமைச்சர் மேலும் தெரிவிக்கையில் இந்தியாவில் கொரோனா வைரஸ் தொற்று மிக வேகமாகப் பரவல் அடைந்து வருகின்றது. கடந்த சில தினங்களில் கொரோனா நோயாளர்களின் எண்ணிக்கை மூன்று இலட்சத்தை விட அதிகரித்துள்ளது. அதனைக் கருத்திற் கொண்டு சில நாடுகள் இந்தியாவுக்கான விமான சேவைகளையும் இடைநிறுத்தியுள்ளன.

அதேவேளை எமது நாட்டிலுள்ள ஹோட்டல் உரிமையாளர்கள் இந்திய சுற்றுலாப் பயணிகளுக்கு சேவைகள் வசதிகளைப் பெற்றுக் கொடுப்பதில் அதிருப்தியை

06

# தனிமைப்படுத்தல் சட்டத்தை மீறிய 215 பேர் நேற்று கைது

தனிமைப்படுத்தல் சட்டத்தை மீறிய 215 பேர் நேற்று கைது செய்யப்பட்டதாக பொலிஸ் ஊடக பேச்சாளரும் பிரதி பொலிஸ் மாஅதிபருமான அஜித் ரோஹண தெரிவித்தார்.

நேற்று (03) காலை 06 மணியுடன் நிறைவடைந்த கடந்த 24 மணித்தியாலங்களில் இவர்கள் கைதாகியுள்ளனர். அதன்படி, இது வரையில் தனிமைப்படுத்தல் சட்டத்தை மீறிய 4,857 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

2020 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 31 ஆம் திகதி முதல் இதுவரையான காலப்பகுதியில் குறித்த நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

தனிமைப்படுத்தல் சட்டத்தை மீறுயோரை கைது செய்ய நாடளாவிய ரீதியில் தேடுதல்கள் நடத்தப்பட்டு வருகிறது.

பொது இடங்கள்

06

# ஊழியர்களுக்கு கொரோனா; அதிவேக நெடுஞ்சாலையில் நேற்று கடும் வாகன நெரிசல்

தெற்கு அதிவேக நெடுஞ்சாலையின் கஹதுடுவ நுழைவிற்கு அருகில் நேற்று (03) காலை கடும் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டது.

தெற்கு அதிவேக நெடுஞ்சாலையின் கொட்டாவ வெளியேற்றத்தில் கடமையாற்றும் ஊழியர்கள் சிலர் கொரோனா தொற்றுக்கு உள்ளானதையடுத்து குறித்த கட்டணம் செலுத்தும் பகுதி தற்காலிகமாக மூடப்பட்டுள்ளது.

இதனால் மாத்தறை திசையில் இருந்து பயணிக்கும் வாகனங்கள் கஹதுடுவ கட்டணம் செலுத்தும் பகுதியில் கட்டணத்தை செலுத்தி வெளியேற வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

06

**கொரோனா வைரஸ் தொற்று**

# மேல் மாகாணத்தில் ஒரே நாளில் ஆயிரத்தைத் தாண்டியுள்ளது

**லோரன்ஸ் செல்வநாயகம்**

நாட்டில் ஒரேநாளில் 1891 பேருக்கு புதிதாக கொரோனா வைரஸ் தொற்று இனம் காணப்பட்டுள்ள நிலையில் அதில் மேல் மாகாணத்தில் மாத்திரம் 1014 நபர்களுக்கு வைரஸ் தொற்று இனம் காணப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

அதற்கிணங்க கொழும்பு மாவட்டத்தில் 387 பேரும் களுத்துறை மாவட்டத்தில் 330 பேர் கம்பஹா ா மாவட்டத்தில் 297 பேர் என நோயாளர்கள் பதிவு செய்யப்பட்டுள்ளனர் என்றும் சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

அதனைத் தவிர மேலும் நாட்டின் 21 மாவட்டங்களில் 829 புதிய வைரஸ் தொற்று நோயாளிகள் இனம் காணப்பட்டுள்ளதாகவும் அமைச்சு தெரிவித்தது. கொழும்பு மாவட்டத்தில் பிலியந்தலை பிரதேசத்திலேயே அதிகளவு நோயாளர்கள் இனங்காணப்பட்டுள்ளனர் என்றும் அங்கு 81 புதிய வைரஸ் தொற்று நோயாளர்கள் இனங்காணப்பட்டுள்ளனர் என்றும் அமைச்சு தெரிவித்தது.

கொழும்பு நகர் பகுதியில் 64 பேரும் தெஹிவலையில் 17 பேரும் ஹோமகமையில் 13 பேரும் மொரட்டுவையில் 17 பேரும் வெல்லம்பிட்டியில் 23 பேரும் நராஹேன்பிட்டியில் 25 பேரும் இனங்காணப்பட்டுள்ளதாகவும் அமைச்சு தெரிவித்துள்ளது.

தற்போதைய சூழ்நிலையில் மக்கள் மிகவும் அவதானமாக செயற்பட வேண்டும் என்றும் முகக் கவசம் அணிவது

06

# சுகாதார வழிமுறைகளை பின்பற்றாவிட்டால் இந்தியாவின் நிலையே இங்கும் ஏற்படலாம்

### இலங்கை மருத்துவ சங்கம் எச்சரிக்கை

**லோரன்ஸ் செல்வநாயகம்**

நாட்டு மக்கள் சுகாதார சட்ட திட்டங்களை முறையாக பின்பற்றாது செயற்பட்டால் எதிர்வரும் இரண்டு வாரத்திற்குள் இலங்கையிலும் இந்தியா போன்றதொரு நிலைமை உருவாகும் என இலங்கை மருத்துவர் சங்கத்தின் தலைவர் விசேட மருத்துவ நிபுணர் பத்மா குணரட்ன தெரிவித்துள்ளார்.

அந்த வகையில் நாட்டின் அனைத்து மக்களும் சுகாதாரத் துறையினர் வழங்கியுள்ள வழிகாட்டல்களை முறையாக கடைப்பிடிப்பதில் அலட்சியம் காட்டக்கூடாது என்றும் அவர் மக்களைக் கேட்டுக் கொண்டுள்ளார். நாட்டில் வைரஸ் தொற்று நோயாளர்களின் தொகை பெருமளவு அதிகரித்து வரும் நிலையில் சுகாதார வழிகாட்டல்களை முறையாக கடைப்பிடிக்காத மக்கள் உதாசீனப் போக்குடன் செயல்பட்டால் தற்போது இந்தியாவில் நிலவும் நிலைமையே இலங்கைக்கும் வந்து சேரும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

அதேவேளை நாட்டின் தற்போதைய வைரஸ் பரவல் தொடர்பில் விசேட மருத்துவ நிபுணரும் மூலக்கூறு மருத்துவத்துறை பணிப்பாளருமான சந்திம ஜீவந்தர தெரிவிக்கையில்;

நாட்டில் பிரித்தானியாவின் திரிபுபடுத்தப்பட்ட கொரோனா வைரஸ் பரவல் நிலவுகின்றது.

இந்த வைரஸானது வயது முதிர்ந்தவர்களை மட்டுமன்றி இளம் வயதினரையும் பாதிக்கக் கூடியது. அதற்கிணங்க அனைவரும்

06

# ஆதிவாசிகளின் காணிகளை கையகப்படுத்துவதற்கு எதிரான மனு

### ஜூலை 13 இல் விசாரணை

ஆதிவாசிகளின் பூர்வீக காணிகளை கையகப்படுத்தி முன்னணி நிறுவனங்களுக்கு சோளச்செய்கை மேற்கொள்வதற்காக வழங்கப்படுவதை உடனடியாக நிறுத்துவதற்கு உத்தரவு பிறப்பிக்குமாறு கோரி ஆதிவாசிகளின் தலைவர் ஊருவரிகே வன்னில எத்தோ தாக்கல் செய்துள்ள மனுவை ஜூலை மாதம் 13 ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக் கொள்ள மேன்முறையீட்டு நீதி மன்றம் உத்தரவிட்டுள்ளது.

இந்த மனு நேற்று (03) மேன்முறையீட்டு நீதிமன்ற தலைவர் அர்ஜுன ஒபேசேகர மற்றும் மாயாதுன்ன கொரய ஆகியோர் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

06









உயிர்நீத்த ஊடகவியலாளர்களுக்காக சர்வதேச ஊடக சுதந்திர தினமான நேற்று யாழ்ப்பாணம் ஊடக அமையத்தில் அஞ்சலி செலுத்தப்பட்ட போது.....

**நாணய மாற்று**

| நாணயம் | வாங்கும் விலை | விற்பனை விலை |
|---|---|---|
| அவுஸ்திரேலியா டொலர் | 150.28 | 158.82 |
| கனடியன் டொலர் | 158.43 | 163.10 |
| யூரோ | 233.61 | 240.64 |
| ஜப்பான் யென் | 1.7705 | 1.8248 |
| சிங்கப்பூர் டொலர் | 145.95 | 150.26 |
| ஸ்டேலிங் பவுன்ஸ் | 268.34 | 276.45 |
| சுவிஸ் பிராங்க் | 212.42 | 219.21 |
| அமெரிக்க டொலர் | 195.73 | 199.89 |

| மத்திய கிழக்கு | குறித்த விலை | | குறித்த விலை |
|---|---|---|---|
| பஹ்ரின் டினார் | 528.45 | கட்டார் ரியால் | 54.70 |
| குவைத் டினார் | 661.29 | சவூதி ரியால் | 53.12 |
| ஓமான் ரியால் | 517.48 | ஐ.அ. இராச்சியம் டிர்ஹாம் | 54.23 |

# தினகரன்
THINAKARAN

35, டி.ஆர்.விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10
தபால் பெட்டி இலக்கம் : 834
தொலைபேசி இலக்கம் : 2429429, 2429272, 2429279
பெக்ஸ் : 2429270, 2429329, விளம்பர முகாமையாளர் : 2429321


பிலவ வருடம் சித்திரை மாதம் 21ம் நாள் செவ்வாய்க்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1442 ரமழான் பிறை 21

**குறள் தரும் சிந்தனை**

அவிசொரிந் தாயிரம் வேட்டலின் ஒன்றன்
உயிர்செகுத் துண்ணாமை நன்று

*நெய் முதலியப் பொருள்களைத் தீயில் சொரிந்து ஆயிரம் வேள்விகள் செய்தலை விட ஒன்றன் உயிரைக்கொன்று உடம்பைத் தின்னாதிருத்தல் நல்லது.*

## திரிபடைந்த வைரஸ் நாட்டுக்குள் ஊடுருவுவதை தடுக்கும் ஏற்பாடுகள்

இலங்கையில் கொவிட் 19 தொற்றுக்கு உள்ளானவர்களாகப் பதிவாகின்றவர்களின் எண்ணிக்கை நாளாந்தம் அதிகரித்த வண்ணமுள்ளது. இது இந்நாட்டில் ஏற்கனவே பரவிய கொவிட் 19 தொற்றை விடவும் வேகமாக பரவக் கூடிய வைரஸாக உள்ளது.

இதேநேரம் இந்தியாவிலும் கொவிட் 19 தொற்றின் பரவுதல் மிகவும் மோசமான தாக்கத்தையும் பாதிப்புக்களையும் ஏற்படுத்தியுள்ளது. இந்த நிலையில் இத்தொற்றின் அச்சுறுத்தலில் இருந்து பாதுகாப்பு பெற்றுக் கொள்வதற்காக கடல் மார்க்கமாக படகுகள் மூலம் இலங்கைக்குள் வருகை தர இந்தியர்கள் முயற்சிப்பதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன. இதனை அலங்கார மீன் வளர்ப்பு, நன்னீர் மீன் மற்றும் இறால் வளர்ப்பு மற்றும் மீன்பிடித் துறைமுகங்கள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர் காஞ்ஜன விஜேசேகர சுட்டிக்காட்டியுள்ளார்.

இதேவேளை சில தினங்களுக்கு முன்னர் இந்தியாவிலிருந்து கடல் மார்க்கமாக வருகை தந்து வென்னப்புவ பிரதேசத்தில் மறைதிருந்த பெண்ணொருவர் கைது செய்யப்பட்டிருக்கின்றார்.

இவ்வாறான நிலையில் பொதுசுகாதார பரிசோதகர்கள் சங்கம், இந்திய மீனவர்கள் கடல் மார்க்கமாக நாட்டுக்குள் பிரவேசிக்கின்றனரா என்பது தொடர்பில் பொலிஸாரும் கடற்படையினரும் கண்காணிக்க வேண்டுமெனக் கோரிக்கை விடுத்துள்ளதோடு, தவறும் பட்சத்தில் எதிர்வரும் நாட்களில் தற்போதைய நிலைமையை விடவும் மிகவும் மோசமான நிலையை இலங்கையும் எதிர்கொள்ள நேரிடும் என்றும் சுட்டிக்காட்டியுள்ளது.

இதேவேளை இலங்கையும் இந்தியாவும் அயல் நாடுகளாக இருப்பதால் இரு நாட்டு மீனவர்களும் சர்வதேசக் கடற்பரப்பில் கடற்றொழிலில் ஈடுபடும் போது நெருங்கி பழகுவது குறித்தும், பொருட்களை பரிமாறிக் கொள்வது குறித்தும் ஏற்கனவே தகவல்கள் வெளிவந்துள்ளன.

தற்போதைய கொவிட் 19 தொற்று பரவுதல் அச்சுறுத்தல் நிலவும் சூழலில் இவ்வாறு உறவைப் பேணுவதும் பொருட்களைப் பரிமாறிக் கொள்வதும் ஆரோக்கியமானதல்ல. அத்தோடு இத்தொற்று அச்சுறுத்தலில் இருந்து பாதுகாப்பு பெற்றுக் கொள்ள கடல் மார்க்கமாக இலங்கைக்கு வர முயற்சிப்பவர்களுக்கு உதவ முயற்சிப்பதும் நல்லதல்ல.

ஏனெனில் தற்போது இந்நாட்டில் ஏற்பட்டுள்ள கொவிட் 19 தொற்று தீவிர நிலைக்கு பிரித்தானியாவில் திரிபடைந்த தொற்றுதான் காரணம் என்பதை மருத்துவ நிபுணர்கள் உறுதிப்படுத்தியுள்ளனர். ஆனால் இந்தியாவில் பரவிக் கொண்டிருக்கும் கொவிட் 19 தொற்றானது அந்நாட்டில் திரிபடைந்த ஒன்றாகும். அத்தொற்று இற்றைவரையும் 17க்கும் மேற்பட்ட நாடுகளுக்கு பரவி விட்டது.

இவ்வாறான நிலையில் இந்தியாவில் திரிபடைந்துள்ள தொற்று இலங்கைக்குள்ளும் வந்து சேருமாயின் இந்நாட்டின் நிலைமை மேலும் மோசமடைய முடியும். பிரித்தானியாவில் திரிபடைந்த வைரஸினால் ஏற்கனவே ஏற்பட்டுள்ள தாக்கங்களுக்கு மேலதிகமான தாக்கங்களுக்கும் பாதிப்புகளுக்கும் இந்நாடு முகம் கொடுக்க நேரிடும்.

அதனால் சர்வதேச கடல் எல்லையில் கடற்றொழிலில் ஈடுபடும் மீனவர்கள் இந்திய மீனவர்களுடன் நெருங்கிப் பழகுதல் மற்றும் பொருட்களை பரிமாறிக் கொள்ளுதல் தொடர்பில் மிகுந்த பொறுப்புணர்வுடனும் முன்னவதானத்துடனடனும் செயற்படுவது அவசியம். அத்தோடு இத்தொற்றின் பரவுதலைக் கட்டுப்படுத்துவதற்கு இந்நாட்டில் முன்னெடுக்கப்பட்டு வரும் நடவடிக்கைகளுக்கு கடற்றொழிலாளர்களும் முழுமையான ஒத்துழைப்பை நல்க வேண்டும்.

கொவிட் 19 தொற்றிலிருந்து பாதுகாப்பு பெற்றுக் கொள்வதற்காக இலங்கைக்குள் படகுகள் மூலம் வெளிநாட்டவர்கள் பிரவேசிப்பதைத் தடுப்பதற்கு தேவையான பாதுகாப்பு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இது தொடர்பில் கடற்படையினர், பொலிஸார் மற்றும் கடற்றொழில் நீரியல் வளங்கள் திணைக்களத்திற்கும் ஆலோசனைகள் வழங்கப்பட்டுள்ளதாக இராஜாங்க அமைச்சர் காஞ்ஜன விஜேசேகர குறிப்பிட்டிருக்கின்றார்.

அந்த வகையில் சட்டவிரோத குடியேற்றவாசிகள் கடல் மார்க்கமாக நாட்டுக்குள் பிரவேசிப்பதைக் கட்டுப்படுத்தும் வகையில் கடற்படையினர் வடக்கு மற்றும் வட மேற்கு கடற்பரப்புகளில் மேலதிக ரோந்து நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளனர். அத்தோடு சர்வதேச கடல் எல்லையின் கண்காணிப்பை அதிகரிப்பதற்காக மேலதிக கப்பல்களும், தாக்குதல் படகுகளும் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளன.

கடலோரப் பகுதிகளைக் கண்காணிப்பதற்கும் மேலதிக கடற்படைக் கலங்கள் ஈடுபடுத்தப்பட்டு ரோந்து நடவடிக்கைகளும் அதிகரிக்கப்பட்டுள்ளன. கண்காணிப்பு நிலையங்களும் அமைக்கப்பட்டுள்ளன. அதனால் சட்டவிரோத குடியேற்றவாசிகள் நாட்டுக்குள் பிரவேசிப்பது குறித்து கடற்றொழிலாளர்கள் விழிப்புடன் இருக்க வேண்டும் என்றும் சந்தேகத்திற்கிடமான நடமாட்டங்கள் குறித்து தங்களுக்கு உடனுக்குடன் அறியத் தருமாறும் கடற்படை கேட்டுள்ளது.

ஆகவே தற்போதைய சூழலில் இத்தொற்று பரவுதலைக் கட்டுப்படுத்துவதற்கு ஏற்ற வகையில் கடற்றொழிலாளர்கள் உள்ளிட்ட அனைத்து தரப்பினரும் தம் செயற்பாடுகளை அமைத்துக் கொள்ள வேண்டும். சுகாதார தரப்பினர் வழங்கியுள்ள வழிகாட்டல்களை உச்சளவில் கடைப்பிடிப்பது இன்றியமையாததாகும்.

editor.tkn@lakehouse.lk

# உலக வரலாற்று ஓட்டத்தின் திருப்புமுனை லைலத்துல் கத்ர்

இஸ்லாத்தில் 'லைலத்துல் கத்ர்' என்பது மாட்சிமை மிக்க இரவாகும். இது ரமழான் மாதத்தில் மிகுந்த முக்கியத்துவமும் சிறப்பும் பெற்று விளங்கும் இரவாகும். இந்த இரவு இம்மாதத்தின் இறுதிப் பத்திலுள்ள ஒற்றைப்படையான நாட்களில் ஒன்றில்தான் அமைந்திருக்கின்றது.

அந்த இரவில்தான் அருள் மறையாம் அல் குர்ஆன் அருளப்பட்டது. உலகம் இருக்கும் வரையும் உயிரோட்டத்துடன் இருந்து கொண்டிருக்கும் இக்குர்ஆன் 'லவ்ஹுல் மஹ்ஃபூள்' என்ற பாதுகாக்கப்பட்ட பதிவேட்டிலிருந்து முதல் வானத்தில் இருக்கும் 'பைத்துல் இஸ்ஸா'வுக்கு இவ்விரவில்தான் இறக்கி அருளப்பட்டது. அத்தோடு இஸ்லாத்தின் இறுதிதூதராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட முஹம்மத் (ஸல்) அவர்களுக்கு அல் குர்ஆனின் முதல் ஐந்து வசனங்கள் அருளப்பட்டதும் இந்த இரவில்தான்.


இதனைத் தொடர்ந்து கால இட சூழல் தேவைகளுக்கு ஏற்ப கட்டம் கட்டமாக 23 வருட காலப் பகுதியில் நபி (ஸல்) அவர்கள் ஊடாக இக்குர்ஆன் உலகிற்கு அருளப்பட்டு முழுமைப்படுத்தப்பட்டது.

இக்குர்ஆன் லைலத்துல் கத்ர் இரவில் அருளப்பட ஆரம்பமானதுமே ரமழான் மாத நோன்பு கடமையாக்கப்படவில்லை. மாறாக இக்குர்ஆனின் குறிப்பிடத்தக்களவு பகுதி அருளப்பட்டிருந்த நிலையில் 15 ஆம் ஆண்டில்தான் அதாவது ஹிஜ்ரி 02 இல் இந்நோன்பு கடமையாக்கப்பட்டது. அது வரைக்கும் மாதத்தில் மூன்று நாட்கள் நோன்பு நோற்கும் முறைமை வழக்கில் இருந்தது.

அதேநேரம் அல் குர்ஆன் இந்த இரவு தொடர்பில் தனியொரு அத்தியாயத்தையே தன்னகத்தே கொண்டிருக்கின்றது.நன்மை தீமைகளையும் சத்தியத்தையும் அசத்தியத்தையும் தெளிவாகப் பிரித்தறிவிக்கும் இக்குர்ஆன் அருளப்பட்ட இவ்விரவு ஒற்றைப்படையான எந்த நாளில் அமைந்திருக்கின்றது என்பதை சரியாக மக்களுக்கு அறிவித்து விடும் நோக்கில் நபி (ஸல்) அவர்கள் ஒரு நாள் வீட்டிலிருந்து கிளம்பி வரும் போது இடைவழியில் இருவர் சண்டையில் ஈடுபட்டுக் கொண்டிருந்தனர். அதன் விளைவாக அவ்விரவை அச்சொட்டாக அறிவிக்க முடியாத நிலை நபி (ஸல்) அவர்களுக்கு ஏற்பட்டது. ஆனாலும் இவ்விரவு ரமழான் மாதத்தின் இறுதிப் பத்திலுள்ள ஒற்றைப்படையான நாட்களில் ஒன்றில்தான் அமைந்திருக்கின்றது என்று அன்னார் அறிவித்திருக்கின்றார்.

மனிதனது ஈருலக வாழ்வின் விமோசனத்திற்கு நேர்வழிகாட்டிக் கொண்டிருக்கும் இவ்வருள்மறை அருளப்பட்ட இரவை சர்வ வல்லமை படைத்த அல்லாஹ் எல்லையில்லாத அளவுக்கு சிறப்பித்து வைத்துள்ளான். குறிப்பாக அந்த இரவு ஆயிரம் மாதங்களை விடவும் மேலானதாக ஆக்கப்பட்டிருக்கின்றது. அவ்விரவில் அல்லாஹ்விடம் நன்மையை எதிர்பார்த்து நின்று வணங்கும் போது முன்செய்த பாவங்கள் மன்னிக்கப்படும்.

இவ்விரவில் வானவர்களின் தலைவரான ஜிப்ரீல் (அலை) அவர்களும் வானவர்களும் அல்லாஹ்வின் கட்டளைப்படி (மனிதனின் உலக வாழ்வுடன் தொடர்பான) ஒவ்வொரு விவகாரத்தையும் குறிப்பாக ஆயுட்காலம், ரிஸ்க் நிர்ணயம் உள்ளிட்ட அனைத்து விடயங்களையும் ஏந்தியவாறு பூமிக்கு இறங்கி வருகின்றார்கள். அதாவது அவ்விரவில் வானவர்கள் அதிகமதிகம் பூமிக்கு இறங்குகின்றார்கள். வானவர்கள் இறங்குதல் என்பது அருளும் வளமும் பொழிவதுடன் அமைதலாகும். அந்தளவுக்கு இவ்விரவு அருட்பேறு நிறைந்த மாட்சிமை மிக்கதாக உள்ளது.



இவ்வாறு இறங்கும் வானவர்கள் குர்ஆன் ஓதுதல், இறைதுதி, இறைபுகழ் என்பவற்றில் ஈடுபட்டிருப்பவர்களை சூழந்து கொள்கின்றனர்.

அதேநேரம் இந்த இரவு தெளிவாகவும் ஒளிமயமாகவும் இருக்கும். அதாவது உதயமாகும் சந்திரன் அதில் ஒளிர்வது போன்று காட்சி தரும். எங்கும் அமைதி சூழ்ந்திருக்கும். அவ்விரவில் அதிக வெப்பமோ அதிக குளிரோ நிலவாது. அதிகாலையில் சூரியன் உதயமாகும் போது பலவீனமாகவும் சிவப்பு நிறமாகவும் காட்சி தரும். இவ்விரவு முதல் அதிகாலையில் வெளிச்சம் பரவும் வரையில் ஷைத்தான்கள் வெளியே வராது.

இவ்வாறு சிறப்புற்று விளங்கும் இவ்விரவின் சிறப்பையும் மகத்துவத்தையும் அடைந்து கொள்வதில் நபி(ஸல்) அவர்கள் அதிக அக்கறை காட்டியுள்ளார்கள். இதன் நிமித்தம் கடுமையான முயற்சிகளில் ஈடுபட்டுள்ளார்கள். அந்த வகையில் இம்மாதத்தின் கடைசிப் பத்து நாட்களும் நபி(ஸல்) அவர்கள் இஃதிகாப் இருந்து இறைவணக்கங்களில் அதிகமதிகம் ஈடுபடக்கூடியவர்களாக இருந்தார்கள். அன்னார் வபாத்தான வருடம் லைலத்துல் கத்ர் இரவின் நிமித்தம் இருபது நாட்கள் இஃதிகாப் இருந்துள்ளார்கள்.

இந்த மாட்சிமை மிக்க இரவானது உலகில் மனித வரலாற்று ஓட்டத்தின் திருப்புமுனையாகவும் திகழுகின்றது. குறிப்பாக இந்த உலகின் தலைவிதியை மாற்றியமைத்தது இந்த இரவுதான். ஜிப்ரீல் (அலை) அவர்கள் இவ்விரவில் நபி(ஸல்) அவர்களை சந்தித்து அல் குர்ஆனின் முதல் ஐந்து வசனங்களை அருளியதன் ஊடாக உலக வரலாற்று ஓட்டத்தின் மாற்றத்திற்கு அடித்தளமிடப்பட்டது. அதன் ஊடாக மாற்றமும் மறுமலர்ச்சியும் ஆரம்பித்து வைக்கப்பட்டன.

அல் குர்ஆன் அருளப்பட்ட இந்த இரவை அடிப்படையாகக் கொண்டு லைலத்துல் கத்ர் இரவுக்கு முந்திய உலகம், லைலத்துல் கத்ர் இரவுக்கு பிந்திய உலகம் என உலக வரலாறு அமைந்திருக்கின்றது. உலக வரலாற்றின் பிரிகோடாகவும் அமைந்திருக்கின்றது இந்த இரவு.

அதாவது லைலத்துல் கத்ர் இரவுக்கு முந்திய உலகில் சமூக ஏற்ற தாழ்வுகள், குடும்ப, கோத்திர, சாதி கட்டமைப்புக்கள், கலாசார சீர்கேடுகள், அடக்குமுறைகள் தவறான நம்பிக்கைகள் என்பன மிகைத்திருந்தன. கோத்திரங்களுக்கு இடையிலான சண்டை சச்சரவுகள் தலைவிரித்தாடின. அவை பல தசாப்தங்களாக நீடித்து வந்தன. மனித சமத்துவம், ஐக்கியம், பெண்ணுரிமை என்பன அருகிப் போய் மனித நேயமும், மனிதாபிமானமும் அற்றுப் போயிருந்தன.

இந்த இரவுக்கு பிந்திய உலகிற்கு குர்ஆன் ஒளி பாய்ச்ச ஆரம்பித்தது. அந்த ஒளியில் நெறிப்படுத்தப்பட்டு வழிப்படுத்தப்படும் மனிதன் சீரும் சிறப்பும் பெற்று விளங்கும் நிலை உருவானது. சமூக ஏற்ற தாழ்வுகள் நீங்கி அமைதி, சமாதானம் தலைத்தோங்கவும் மனித நேயமும், மனிதாபிமானமும், சகோதரத்துவமும் கோலோச்சவும் ஆரம்பமானது. அத்தோடு முன்னொரு போதும் இல்லாத அளவுக்கு சமூக, பொருளாதார, அறிவியல், அரசியல் உள்ளிட்ட அனைத்து துறைகளிலும் மறுமலர்ச்சி ஏற்படவும் வழிவகுத்திருக்கின்றது இந்த இரவு.

இவ்வாறு சிறப்புற்று விளங்கும் லைலத்தில் கத்ர் இரவு உலகம் இருக்கும் வரையும் வருடா வருடம் மனித சமூகத்தை கடந்து சென்று கொண்டே இருக்கும். அந்த வகையில் இவ்வருடம் இந்த இரவு அமைவுற்றுள்ள காலப்பகுதியை தற்போது மனித சமூகம் அடைந்திருக்கின்றது. அதனால் அந்த இரவை அடைந்து கொள்வதிலும் அவ்விரவு கொண்டுள்ள பாக்கியங்களைப் பெற்றுக்கொள்வதிலும் நபி (ஸல்) அவர்களின் வழிகாட்டல்களுக்கு ஏற்ப முஸ்லிம்கள் ஆர்வத்துடன் செயற்பட்டுக் கொண்டிருக்கின்றனர்.

ஆனால் கடந்த காலங்களைப் போன்று இவ்விரவின் அருள்களையும் பாக்கியங்களையும் அடைந்து கொள்வதில் இம்முறை சுதந்திரமாக செயற்பட முடியாது. உலகிற்கே பெரும் சவாலாக விளங்கும் கொவிட் 19 தொற்று பரவுதல் அச்சுறுத்தல் நிலவும் காலப்பகுதியில்தான் இவ்வருடம் முஸ்லிம்களை இவ்விரவு அமைந்திருக்கும் காலப்பகுதி அடைந்திருக்கின்றது. அதனால் இந்த சவால் மிக்க காலப்பகுதியில் லைலத்துல் கத்ர் இரவு கொண்டுள்ள பாக்கியங்களை அடைந்து கொள்ள உச்ச கவனம் எடுக்கின்ற அதேவேளை கொவிட் 19 தொற்று பரவுதல் அச்சுறுத்தலைத் தவிர்த்து கொள்வதிலும் பொறுப்புடனும் முன்னெச்சரிக்கையுடனும் செயற்பட தேவையையும் மறந்து விட முடியாது. அவற்றின் ஊடாக லைலத்துல் கத்ரின் பாக்கியங்களை அடைந்து கொள்ள முடிவதோடு கொவிட் 19 தொற்று பரவுதல் தொடரைத் துண்டிக்கப் பங்களித்த பெறுமையையும் பெற்றுக்கொள்ளவும் முடியும். அதுவே இன்றைய காலத்தின் தேவையும் கூட.

**மர்லின் மரிக்கார்...**

# போதைப் பொருள் பாவனைக்கு அடிமையாகி புனர்வாழ்வு பெறுவோருக்கு தொழில் பயிற்சி

போதைப் பொருள் பாவனை தொடர்பில் நீதிமன்றத்தில் குற்றவாளிகளாகக் காணப்பட்டு புனர்வாழ்வு அளிக்கப்பட்டு வருபவர்களுக்கு தொழிற் பயிற்சி வழங்குவதற்கான வேலைத் திட்டமொன்று முன்னெடுக்கப்படவுள்ளது. திறன் அபிவிருத்தி, தொழில் கல்வி, ஆராய்ச்சி மற்றும் புத்தாக்க இராஜாங்க அமைச்சர் டொக்டர் சீதா அரம்பேபொல மற்றும் சிறைச்சாலைகள் முகாமைத்துவம், சிறைக்கைதிகள் புனர்வாழ்வு இராஜாங்க அமைச்சர் லொஹான் ரத்வத்த ஆகியோருக்கிடையில் இத்திட்டம் தொடர்பில் விசேட கலந்துரையாடல் இடம்பெற்றது.

போதைப் பொருள் பாவனை தொடார்பில் குறைந்தது ஒரு வருட கால புனர்வாழ்வுக்கான நீதிமன்ற கட்டளை பெற்றவர்களுக்கு இந்த வேலைத் திட்டத்தின் கீழ் தொழில் பயிற்சி வழங்குவது பற்றி ஆராயப்பட்டுள்ளதுடன், சிறைச்சாலைகள் திணைக்களத்தின் வீரவில புனர்வாழ்வு நிலையத்தில் தொழில் பயிற்சி வேலைத் திட்டத்தை ஆரம்பிக்கவும் யோசனை முன்வைக்கப்பட்டுள்ளது.





திறன் அபிவிருத்தி ,தொழில் கல்வி,ஆராய்ச்சி மற்றும் புத்தாக்க இராஜாங்க அமைச்சின் கீழ்வரும் தேசிய தொழில் பயிற்சி அதிகார சபை மற்றும் தேசிய பயிலுநர், கைத்தொழில் பயிற்சி அதிகார சபை ஆகிய தொழிற்பயிற்சி நிறுவனங்களின் மேற்பார்வையில் மேற்படி போதைப் பொருள் பாவனை புனர்வாழ்வு தண்டனை பெறுபவர்களுக்கான தொழில் பயிற்சி திட்டம் அமுல் படுத்தப்படவுள்ளது .

மேற்படி தொழிற் பயிற்சி திட்டம் தொடர்பாக இராஜாங்க அமைச்சர்கள் மற்றும் அதிகாரிகளுக்கிடையிலான பேச்சுவார்த்தையின் போது, பெண் கைதிகளுக்கு சிறந்த தொழில் வழிகாட்டல் வழங்குதல் மற்றும் அர்களது எதிர்காலம் தொடர்பிலும் ஆராயப்பட்டுள்ளது.

இராஜாங்க அமைச்சர்களின் செயலாளர்கள்,சிறைச்சாலைகள் ஆணையாளர், இராஜங்க அமைச்சுகளின் அதிகாரிகள், சமுதாயம்சார் சீர்திருத்த திணைக்கள அதிகாரிகள் மற்றும் துறை சார்ந்த அதிகாரிகள் பலரும் இச்சந்திப்பில் கலந்து கொண்டனர்.

வீரவில சிறைச்சாலை, போதைப் பொருளுக்கு அடிமையானவர்களுக்கான சிகிச்சை மற்றும் புனர்வாழ்வு நிலையமாக அபிவிருத்தி செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

சிறைச்சாலைகள் முகாமைத்துவம் மற்றும் கைதிகள் புனர்வாழ்வு இராஜாங்க அமைச்சின் செயலாளர் ஓய்வு பெற்ற மேஜர் ஜெனரல் வீ.ஆர். சில்வா, சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகம் எச்.எம்.டீ.என்.உபுல்தெனிய உள்ளிட்ட திணைக்கள அதிகாரிகள் புனர்வாழ்வு நிலையமாக அபிவிருத்தி செய்யப்பட்டுள்ள வீரவில சிறைச்சாலையை அண்மையில் பார்வையிட்டனர்.

**எம்.எஸ்.எம்.முன்தஸிர்...**
**(பாணந்துறை மத்திய குறூப் நிருபர்)**

# 20 வருடங்களுக்கு பின்னர் பூத்த நான்கு தாமரைகள்

தமிழ்நாட்டில் தாமரை 4 தொகுதிகளில் மலர்ந்துள்ளது.. இது யாருமே எதிர்பாராத ஒன்று. தமிழக பா.ஜ.கவுக்கு கிடைத்த மிகப்பெரிய வெற்றி இது. ஆனாலும் இந்த வெற்றிக்கான விதையை போட்டவரை பா.ஜ.க மறந்து விட முடியாது.

இந்த தேர்தலில் அ.தி.மு.க கூட்டணியில் இடம்பெற்றுள்ள பா.ஜ.க, ஒரு இடத்தில் கூட வெற்றி பெறாது என்று தேர்தலுக்கு முந்திய கருத்து கணிப்புகள் கூறின. இதுதான் வாக்குப்பதிவு அன்றைய தினமும் சொல்லப்பட்டது. இதையேதான் கருத்துக் கணிப்புகளும் கூறின.

ஆனால், பா.ஜ.கவின் 4 தொகுதி வெற்றியானது பேசுபொருளாக உருவெடுத்துள்ளது. இதற்கு காரணம், 20 வருடமாக ஒரு வெற்றியை கூட பதிவு செய்யாத கட்சி அது. வாக்கு வங்கியை கூட நிலையாக வைத்திருக்காத கட்சி. தமிழகத்தில் 2 சதவீத வாக்கு வங்கி இல்லாத தேசியக் கட்சி.



ஆனால், கோவை தெற்கு தொகுதியில் வானதி சீனிவாசன், திருநெல்வேலி தொகுதியில் நயினார் நாகேந்திரன், நாகர் கோவில் தொகுதியில் எம். ஆர். காந்தி, மொடக்குறிச்சி தொகுதியில் சி.கே. சரஸ்வதி ஆகியோர் வெற்றி பெற்றுள்ளனர். ஒரு தேசிய கட்சியாக இருந்தாலும், திராவிட கட்சிகளின் முதுகில் சவாரி செய்தே தேர்தலை சந்திக்க வேண்டிய சூழலில் பா.ஜ.க உள்ளது.

திராவிட கட்சிகளுக்கு மாற்று தாங்கள்தான் என்று பா.ஜ.க சொன்னாலும், திராவிட கட்சிகளை பகைத்து கொண்டு தமிழகத்தில் காலூன்ற முடியாத நிலைமைதான் ஏற்பட்டுள்ளது. அதேசமயம், எங்கோ அடிபாதாளத்தில் தொங்கி கொண்டிருந்த பா.ஜ.கவை, தமிழகம் முழுக்க கொண்டு போய் சேர்த்த பெருமை டொக்டர் தமிழிசை சவுந்தராஜனையே சாரும். தமிழக பா.ஜ.கவுக்கு தமிழிசை செய்த பணிகள் அளப்பரியன.

தனிநபர் விமர்சனங்கள் தமிழிசை மீது வீசப்பட்டன. அனைத்தையும் அன்று இன்முகத்துடன் ஏற்று கொண்டவர் தமிழிசை. இந்த அளவுக்கு பக்குவத்துடனும், சகிப்புத்தன்மையுடனும் மகளை வளர்த்த பெருமை குமரி அனந்தனை சேரும். ை "தாமரை மலர்ந்தே தீரும்" என்ற வாசகத்தை ஒவ்வொரு தெருக்களிலும் போய் ஒப்படைத்தது தமிழிசைதான்.

# பா.ஜ.கவின் வியூகத்தை முறியடித்து ஈட்டிய தனிப்பெரும்பான்மை வெற்றி

## தமிழக முதல்வராக 7ஆம் திகதி பதவியேற்கிறார் ஸ்டாலின்



சட்டசபைத் தேர்தலில் பெற்ற அமோக வெற்றியையடுத்து தமிழக முதல்வராக தி.மு.க தலைவர் ஸ்டாலின் எதிர்வரும் 7 ஆம் திகதி பதவி ஏற்க உள்ளார். தமிழக ஆளுநர் பன்வாரி லால் புரோகித்திடம் ஆட்சி அமைக்க ஸ்டாலின் இன்று உரிமை கோருகிறார்.

தமிழக சட்டசபைத் தேர்தலில் தி.மு.க கூட்டணி மாபெரும் வெற்றியை பெற்றுள்ளது. மொத்தமுள்ள 234 தொகுதிகளில், ஆட்சி அமைக்க 118 தொகுதிகளில் வெற்றி பெற வேண்டும் என்ற நிலையில், தி.மு.க கூட்டணி 159 இடங்களில் வென்றுள்ளது.

இதில் தி.மு.க தனியாக 125 இடங்களில் வெற்றி தனிப்பெரும்பான்மை பெற்றுள்ளது. அ.தி.மு.க கூட்டணி 75 இடங்களிலும், அ.தி.முக தனியாக 65 இடங்களிலும் வென்றுள்ளது. இந்த நிலையில் நேற்று தமிழக முதல்வர் எடப்பாடி பழனிசாமி தனது பதவியை இராஜினாமா செய்துள்ளார்.



## பலம் வாய்ந்த எதிர்க் கட்சியாக சட்டசபையில் அமரும் அ.தி.மு.க

ஆளுநர் மாளிகையில் எளிமையான முறையில் பதவி ஏற்பு வைபவம் நடக்க உள்ளதாக தகவல்கள் வருகின்றன. கொரோனா பரவல் காரணமாக பெரிய ஆரவாரம் இன்றி, கொண்டாட்டங்கள் இல்லாமல், தலைவர்களுக்கு அழைப்பு இல்லாமல் இந்த விழா நடைபெறும் என்று கூறப்படுகிறது.

பா.ம.கவை கூட்டணியில் சேர்த்துக் கொள்வதன் மூலம் வடதமிழகத்தில் கணிசமான வாக்குகளை பெற முடியும் என்கிற எடப்பாடி பழனிசாமியின் தேர்தல் வியூகத்தை தி.மு.க அணி தவிடுபொடியாக்கி விட்டது. தமிழக சட்டசபையில் 20 எம்.எல்.ஏக்களை கண்ட கட்சியாக பா.ம.க விஸ்வரூபம் எடுத்த வரலாறும் உண்டு. ஒரு எம்.எல்.ஏ கூட கிடைக்காத பரிதாபத்துக்குள்ளான வரலாறும் அந்த கட்சிக்கு இருக்கிறது.

15 ஆண்டுகளுக்கு முன்னர் தி.மு.கவுடன் கூட்டணி அமைத்து சட்டசபைக்குள் நுழைந்த பா.ஜ.க தற்போது அதிமுகவுடன் கூட்டணி அமைத்து மீண்டும் 4 பேருடன் சட்டசபைக்குள் நுழைகிறது. கடந்த 2019ஆம் ஆண்டு நடந்த நாடாளுமன்றத் தேர்தலில் பா.ஜ.க தமிழகத்தில் ஒரு தொகுதியில் கூட வெல்லவில்லை. இந்த நிலையில் 2021 ஆம் ஆண்டு நடந்த சட்டசபைத் தேர்தலில் பா.ஜ.க 4 இடங்களில் வென்றுள்ளது. இதன் மூலம் சுமார் 15 ஆண்டுகளுக்கு பிறகு தமிழக சட்டசபைக்குள் பா.ஜ.க செல்கிறது.

அ.தி.மு.கவையே பா.ஜ.க அழித்து விடும் என்றார்கள். அ.தி.மு.கவை அழித்து விட்டு பா.ஜ.க தாறுமாறாக வளரும் என்றார்கள். இந்த இரு கணிப்புகளுமே இன்று தவிடுபொடியாகி உள்ளன.

ஒருகட்டத்தில் அ.தி.மு.கவையே ஒதுக்கி தள்ளி விட்டு, திமுகவுக்கு ஒரே எதிரி தாங்கள்தான் என்ற பிம்பத்தை பா.ஜ.க தோற்றுவிக்க முயலும் என்றும் பேச்சுக்கள் எழுந்தன. அதாவது திமுக Vs பாஜக என்றே இனி தமிழக அரசியல் இருக்க வேண்டும் என்பதுதான் பா.ஜ.கவின் விருப்பம். ஆனால், இந்த தேர்தல் ஒரு செய்தியை உணர்த்தி உள்ளது. அ.தி.மு.க என்ற கட்சியை யாரும் தொட கூட முடியாது. அ.தி.மு.க என்ற கட்சி எப்போதும் இருக்கும் என்பதுதான் அந்த செய்தி.

காரணம் மிக மோசமான அளவில் அ.தி.மு.க தோற்று போய் விடவில்லை. எதிர்பார்த்த அமைச்சர்கள் வெற்றி பெற்றுள்ளனர். இன்று தி.மு.கவுக்கு எதிரில் உட்காரப் போகிறது அ.தி.மு.க. எனவே, பா.ஜ.க என்ன நினைத்து இந்த தேர்தலில் கணக்கு போட்டதோ அதுதான் உடைந்து நொருங்கி உள்ளது. அதனால் தி.மு.கவுக்கு மாற்று அ.தி.மு.கதான், அ.தி.மு.கவுக்கு மாற்று தி.மு.கதான் என்ற நிலைப்பாடே இப்போதும் தொடர்கிறது.

அதுமட்டுமல்ல, தேசிய கட்சிகளே இனி தி.மு.க, அ.தி.மு.க என்று ஏதாவது ஒரு திராவிட கட்சியில்தான் கூட்டணி வைக்கக் கூடிய நிலைமைக்கு தள்ளப்பட்டுள்ளன. எனவே, இந்தத் தேர்தலை பொறுத்தவரை, அ.தி.மு.கவும் அழியவில்லை, பா.ஜ.கவும் வளரவில்லை. அந்த தாமரை மொட்டாகவே இன்னமும் இருக்கிறது.

இது ஒருபுறம் இருக்க, வலுவான எதிர்க் கட்சியாக இருந்தாலும் எதிர்க் கட்சித் தலைவராக அமரப்போவது யார் என்ற குழப்பம் அதிமுகவிற்குள் எழுந்துள்ளது. ஏற்கனவே தேர்தலுக்கு முன்னர் முதல்வர் வேட்பாளர் யார் என்பதில் ஓ.பி.எஸ், இ.பி.எஸ் இடையே போட்டி ஏற்பட்டது. பிறகு ஒரு வழியாக வேறு வழியில்லாமல் இ.பி.எஸ்ஸை முதல்வர் வேட்பாளராக ஓ.பி.எஸ் அறிவித்தார்.

இந்தத் தேர்தலில் அதிக வாக்கு எண்ணிக்கை வித்தியாசத்தில் வெற்றி பெற்றவர்கள் பட்டியலில் எடப்பாடி பழனிச்சாமி 3 வது இடத்தில் உள்ளார். ஆனால் ஓ.பன்னீர்செல்வம், திமுக வேட்பாளர் தங்க தமிழ்செல்வனிடம் மிகுந்த போராட்டத்திற்கு பிறகு குறைவான வாக்கு வித்தியாசத்திலேயே வெற்றி பெற்றுள்ளார். பல சுற்றுகளில் பின்னடைவையும் சந்தித்தார்.

ஆனால் பன்னீர்செல்வத்திற்கு டெல்லியிலும், கட்சிக்குள்ளும் இருக்கும் செல்வாக்கால் பல விஷயங்களை அவரால் சாதிக்க முடியும். எடப்பாடி பழனிச்சாமி, ஓ.பன்னீர்செல்வம் இருவருமே சம அளவு பலத்துடன் இருப்பதால் யார் எதிர்க்கட்சி தலைவராக அமர போகிறார் என்ற குழப்பம் ஏற்பட்டுள்ளது. இவர்களில் யார் எதிர்க்கட்சி தலைவர் என்பதை அதிமுகவின் பொதுக்குழு மற்றும் செயற்குழு முடிவு செய்யும் என கூறப்படுகிறது.

தமிழக சட்டமன்றத்திற்குள் பல ஆண்டுகளுக்கு பிறகு பல்வேறு கட்சிகளை சேர்ந்த பிரதிநிதிகளின் குரல் ஓங்கி ஒலிக்க இருக்கிறது.

இதுவரை தி.மு.க, அ.தி.மு.க, காங்கிரஸ், என்று மட்டுமே இருந்து வந்த கட்சிகளின் பிரதிநிதித்துவம் இப்போது பரந்து விரிந்துள்ளது. தற்போது நடைபெற்று முடிந்த தேர்தல் மூலம் 13 கட்சிகளை சேர்ந்த பிரதிநிதிகள் சட்டமன்ற அவையை அலங்கரிக்க உள்ளனர்.

தமிழக சட்டமன்றம் என்றாலே தி.மு.க, அ.தி.மு.க என்றுதான் பலருக்கும் நினைவுக்கு வரும். ஆனால் அவ்விரு கட்சிகளை கடந்து மாற்றுக் கட்சிகளை சேர்ந்த உறுப்பினர்களும் ஆரோக்கியமான விவாதங்களை, ஆலோசனைகளை நல்கிய காலமும் இருந்திருக்கிறது. குறிப்பாக 2001 முதல் 2011 காலகட்டங்களில் நடந்த அத்தகைய நிகழ்வுகள் மீண்டும் திரும்ப இருக்கின்றன. பலதரப்பட்ட சிந்தனைகளை, கொள்கைகளை உடைய உறுப்பினர்களின் உரிமைக் குரல்கள் இனி ஓங்கி ஒலிக்க இருக்கின்றன.

அதன்படி தி.மு.க, அ.தி.மு.கவை தவிர்த்து தேசியக் கட்சிகளான காங்கிரஸ், பா.ஜ.க, இந்திய கம்யூனிஸ்ட், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் உள்ளிட்ட கட்சிகளை சேர்ந்த உறுப்பினர்கள் பேரவைக்கு செல்லவிருக்கின்றனர். இதேபோல் பிராந்தியக் கட்சிகளான விடுதலை சிறுத்தைகள், ம.தி.மு.க, ம.ம.க, கொ.ம.தே.க., தமிழக வாழ்வுரிமைக் கட்சி, பா.ம.க, புரட்சி பாரதம் என வெவ்வேறு சித்தாந்தங்களை கொண்ட கட்சிகளை சேர்ந்த உறுப்பினர்களும் இம்முறை சட்டப் பேரவைக்கு செல்கின்றனர்.

இதனால் மு.க.ஸ்டாலின் தலைமையிலான தி.மு.க அரசு இதுவரை இல்லாத வகையில் ஒரு புதுமையை எதிர்கொள்ள உள்ளது. இதனிடையே எதிர்க்கட்சி உறுப்பினர்கள் முன் வைக்கும் கேள்விகள், சந்தேகங்கள், புகார்கள், கோரிக்கைகள் என எல்லாவற்றையும் சமநிலை செய்து செல்ல வேண்டிய சூழல் உருவாகியுள்ளது. பல்வேறு கட்சிகளை சேர்ந்த உறுப்பினர்களும் இந்த முறை இடம்பெற்றுள்ளதால் புதிதாக அமையவுள்ள 16 வது சட்டமன்றத்தை ஜனநாயக சட்டமன்றமாகவே கருதத் தோன்றுகிறது.

சட்டசபைத் தேர்தலில் வெற்றி பெற்று முதல்வராக பதவியேற்கப் போகும் தி.மு.க தலைவர் மு.க ஸ்டாலின் தனது அம்மாவிடம் ஆசி பெறுவதற்காக கோபாலபுரம் சென்றார். மனைவி துர்காவுடன் சென்ற ஸ்டாலினை ஆரத்தி எடுத்து வரவேற்று தேங்காயில் சூடம் ஏற்று சுற்றி திருஷ்டி கழித்துள்ளார் அவரது சகோதரி செல்வி.

மு.க ஸ்டாலினுக்கு எடப்பாடி பழனிசாமி உட்பட பல்வேறு அரசியல் கட்சி தலைவர்களும், திரை பிரபலங்களும் வாழ்த்து தெரிவித்து வருகின்றனர். இன்றைய தினம் அண்ணா அறிவாலயத்தில் எம்.எல்.ஏக்கள் கூட்டம் நடைபெற உள்ளது. கூட்டத்தில் சட்டசபை உறுப்பினர்கள் அனைவரும் முதல்வராக மு.க ஸ்டாலினை தெரிவு செய்ய உள்ளனர். வெற்றிச் சான்றிதழை வாங்கிய உடன் நள்ளிரவில் நேராக கருணாநிதி நினைவிடத்திற்கு சென்று ஆசி பெற்றார் ஸ்டாலின். நேற்றுக் காலை தனது தாயார் தயாளு அம்மாவிடம் ஆசி வாங்குவதற்காக கோபாலபுரம் இல்லத்திற்கு சென்றார். அங்கு அவருக்கு ஆரத்தி எடுத்து குடும்ப உறுப்பினர்கள் வரவேற்றனர்.


'ஊர் கண்ணு எல்லாம் உங்க மேலதான்' என்று சொல்லி சகோதரி செல்வி தேங்காயில் சூடம் ஏற்றி சுற்றி திருஷ்டி கழித்தார். கோபாலபுரத்தில் பிறந்து வளர்ந்த ஸ்டாலின், திருமணம் முடிந்து சில காலம் வரைக்கும் அங்குதான் வசித்து வந்தார். தனது மனைவி, குழந்தைகள், பேரன், பேத்திகளுடன் வேறு வீட்டிற்கு சென்றாலும் அவ்வப்போது கருணாநிதி, தயாளு அம்மாளை சந்தித்து செல்வார். மிகப் பெரிய வெற்றியை தனது தாயிடம் பகிர்ந்து கொண்டு ஆசி பெற வேண்டும் என்பதற்காக நேற்று தான் பிறந்து வளர்ந்த கோபாலபுரம் வீட்டிற்குச் சென்றார்.

சொந்தங்களுடன் வெற்றி பெற்ற மகிழ்ச்சியை பகிர்ந்து கொண்டார். அக்கம் பக்கத்தினர், நண்பர்கள் வீட்டிற்கு சென்று நலம் விசாரித்தனர். கோபாலபுரம் பகுதியில் உள்ள பால்ய கால நண்பர் இராமச்சந்திரனையும் சந்தித்து பேசினார் ஸ்டாலின். சிறுவயது நினைவுகளை நண்பர்களுடன் பேசி மகிழ்ந்தார் ஸ்டாலின்.

மாணவப் பருவத்தில் அரசியலை தொடங்கி இளைஞரணி, செயல் தலைவர், துணை முதல்வர், எதிர்கட்சித் தலைவர் என படிப்படியாக வளர்ந்து விரைவில் முதல்வராக பொறுபேற்கப் போகிறார் அவர். பலருடைய வாழ்த்துக்கள் வந்தாலும் அண்ணன் அழகிரியின் வாழ்த்தை ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார் மு.க ஸ்டாலின்.

## தகர்ந்து போனது அ.ம.மு.கவின் கனவு

### கூட்டு சேர்ந்த தே.மு.தி.கவும் படுதோல்வி






என்னவெல்லாம் அரசியல் கணக்கு போட்டு வைத்திருந்தாரோ, அத்தனையும் டி.டி.வி தினகரனுக்கு தகர்ந்து விட்டது. இதையடுத்து, அ.ம.மு.கவின் அடுத்த நிலை என்ன என்ற கேள்வியும் பிறந்துள்ளது. இந்த முறை தேர்தலில் டி.டி.வி தினகரன், அதிகமாக நம்பியிருந்தது சசிகலாவைத்தான்.

பெங்களூரில் இருந்து வந்ததுமே, அ.ம.மு.க தலைமை பொறுப்பை ஏற்க செய்ய வேண்டும், அ.ம.மு.க ராயப்பேட்டை அலுவலகத்துக்கு அழைத்து செல்ல வேண்டும், கட்சி பொதுக்குழுவை கூட்டி, முதல்வர் வேட்பாளராக சசிகலாவை அறிவிக்க வேண்டும்.. இப்படி பட்டியல் போட்டு கனவு கண்டு கொண்டிருந்தார்.

ஆனால் "அரசியல் விலகல்" என்ற அறிக்கையை விட்டு தினகரன் கனவில் மண்ணை அள்ளி போட்டு விட்டார் சசிகலா. தேர்தல் முடிவு வந்தபிறகு, பா.ஜ.கவை வைத்து காய்நகர்த்தி அ.தி.மு.கவை மீட்டு விடலாம் என்பதெல்லாம் தினகரன் போட்டு வைத்த திட்டங்கள் ஆகும். ஆனால், இன்றைய நிலைமையை பார்த்தால், அவர் அ.ம.மு.கவை தொடர்ந்து நடத்துவாரா? இல்லையா என்பதே சந்தேகம் ஆக இருக்கிறது.அ.ம.மு.கவை தொடங்கியதே அ.தி.மு.கவை மீட்கதான் என்று சூளுரைத்தவர், இன்று தன் கட்சியையே பத்திரமாக வைத்து கொள்ள வைக்கவும், மீட்டெடுக்கவும் தவறி விட்டார். அத்துடன் அவர் கூட்டுச் சேர்ந்த தே.மு.தி.கவும் சுவடு தெரியாமல் காணாமல் போயுள்ளது. ஒரு இடத்தில் கூட வெற்றியை நெருங்க முடியாமல், அளவுக்கு அ.ம.முக திணறி போனது.

## தோல்வியுற்றாலும் பாராட்டப்பட வேண்டிய ஆளுமை கமல்



இம்முறை தேர்தலில் கோவை தெற்கு தொகுதி நட்சத்திர அந்தஸ்தை பெற்றது. காரணம் இங்கு போட்டியிட்ட கமல்ஹாசன் தான். அது போல் வானதியும் மயூரா ஜெயக்குமாரும் அவரவர் கட்சிகளின் மூத்த தலைவர்கள்.

கோவை தொகுதியை கமல்ஹாசன் தெரிவு செய்ய இரு முக்கிய காரணங்கள் இருந்தன. ஒன்று தொழில் துறையை வளர்ச்சி பாதைக்கு கொண்டு செல்ல தொழிற்சாலைகள் நிறையவுள்ள கோவையிலிருந்து எம்.எல்.ஏவாக தெரிவாவது, மற்றொன்று பா.ஜ.கவை எதிர்த்து கமல் போட்டியிட விரும்பியது.

மயூரா ஜெயக்குமார் கடந்த தேர்தலில் இரண்டாவது இடத்தையும் வானதி ஶ்ரீனிவாசன் மூன்றாவது இடத்தையும் பிடித்தார்கள் என தெரிந்தும் அங்கு போட்டியிட்ட கமல்ஹாசனை பாராட்டித்தான் ஆக வேண்டும்.

வாக்கு எண்ணிக்கையின் போது வானதிக்கும் மயூராவிற்கும் சவால் கொடுத்தார் கமல். ஒரு கட்டத்தில் தொடர்ந்து முன்னிலை வகித்த கமல்ஹாசன், வானதியுடன் மட்டுமே கடுமையாக போராடினார். இறுதியில் கொஞ்சம் வாக்குகள் வித்தியாசத்தில் வானதி வென்றார். கமல் தோற்றாலும் பாராட்ட வேண்டிய விஷயம் உள்ளது.

தனியொரு மனிதனாக நின்று போராடி இத்தனை வாக்குகளை அள்ளியுள்ளார் கமல். அரசியலுக்காக சோரம் போகாத நேர்வழியை அவர் கடைப்பிடித்தார்.

## கட்சிகள் ஒவ்வொன்றும் வென்றெடுத்த ஆசனங்கள்

தமிழக சட்டசபைத் தேர்தலில் எந்தெந்த கட்சிகள் எவ்வளவு ஆசனங்கள் பெற்றன என்று தேர்தல் ஆணையம் விபரங்களை வெளியிட்டுள்ளது.

தி.மு.க கூட்டணி 159 இடங்களில் வெற்றி பெற்றுள்ளது. அதேவேளை தி.மு.க தனியாக 125 இடங்களில் வெற்றி பெற்றது.

காங்கிரஸ் 18, வி.சி.க 4, ம.தி.மு.க (உதயசூரியன் சின்னம்) 4, சி.பி.எம் 2, சி.பி.ஐ 2, கொங்குநாடு மக்கள் தேசிய கட்சி, மனிதநேய மக்கள் கட்சி உள்ளிட்ட இதர கட்சிகள் 4 இடங்களில் வெற்றி, அ.தி.மு.க கூட்டணி 75 இடங்களில் வெற்றி, அ.தி.மு.க தனியாக 65, பா.ம.க 5, பா.ஜ.க 4, இதர கட்சிகள்1.

மநீம+, நாம் தமிழர், அ.ம.மு.க+ எங்கும் முன்னிலை, வெற்றி பெறவில்லை. தமிழகத்தில் ஆட்சி அமைக்க 234 இடங்களில் 118 இடங்களில் வெல்ல வேண்டும் என்ற நிலையில் தி.மு.க கூட்டணி 159 இடங்களில் வென்று ஆட்சி அமைக்கிறது.

தமிழகத்தில் தி.மு.க, அ.தி.மு.கவிற்கு அடுத்ததாக நாம் தமிழர் கட்சி பல இடங்களில் மூன்றாவது இடத்தை பெற்றுள்ளது. வாக்கு சதவீத ரீதியாக அந்த கட்சி 3வது பெரிய கட்சியாக உள்ளது.

## கேலி கிண்டல்களை தவிடுபொடியாக்கி சட்டசபைக்குள் பிரவேசிக்கும் ம.தி.மு.க



ம.தி.மு.க இடம்பெறும் கூட்டணி ஆட்சிக்கு வந்ததில்லை என்ற புரட்டுவாதத்தை தூள் தூளாக உடைத்தெறிந்திருக்கிறார் அக்கட்சியின் பொதுச்செயலாளர் வைகோ. சமூக வலைதளங்களில் தன்னை பற்றி வெளிவரும் கேலி கிண்டல்களை பொருட்படுத்தாமல், தொடர்ந்து அரசியல் பயணம் மேற்கொண்டு வரும் அவர் ம.தி.மு.க சார்பில் 4 சட்டமன்ற உறுப்பினர்களை வென்றிருக்கிறார்.

ஏறத்தாழ 10 ஆண்டுகளுக்கு பிறகு ம.தி.மு.க உறுப்பினர்கள் சட்டப்பேரவைக்குள் செல்கின்றனர். ம.தி.மு.க இடம்பெறும் கூட்டணி ஆட்சிக்கு வந்ததில்லை எனக் கூறி சிலர் சமூக வலைதளங்களில் கருத்து பதிவிட்டு விமர்சித்து வந்தனர். 'போற்றுவோர் போற்றட்டும், புழுதுவாரி தூற்றுவோர் தூற்றட்டும்' என்ற பாரதிதாசனின் வரிகளுக்கு ஏற்ப அரசியலில் தனது உழைப்பை செலுத்தி வந்தார் வைகோ.

மு.க.ஸ்டாலினை முதலமைச்சராக்காமல் ஓயமாட்டேன் என சபதம் எடுக்காத குறையாக பணியாற்றினார். 4 தொகுதிகளில் இதனால் கூட்டணி விவகாரத்தில் கூட ஆசனப் பங்கீட்டில் சற்று தாராளம் காட்டினார் வைகோ. காலத்தின் தேவை கருதி உதயசூரியன் சின்னத்தில் போட்டியிடவும் இசைவு தெரிவித்து அவ்வாறே தனது கட்சி வேட்பாளர்களையும் போட்டியிட வைத்தார்.

இந்நிலையில், ம.தி.மு.கவுக்கு ஒதுக்கப்பட்ட 6 இடங்களில் சாத்தூர், அரியலூர், வாசுதேவநல்லூர், மதுரை தெற்கு என 4 தொகுதிகளில் வெற்றி பெற்றுள்ளது. மதுராந்தகம் மற்றும் பல்லடத்தில் மட்டும் அக்கட்சி தோல்வியடைந்தது.

கடந்த 2006_2011க்கு பிறகு இப்போது தான் ம.தி.மு.க சட்டமன்றம் செல்கிறது. இடைப்பட்ட 2011 தேர்தலின் போது தேர்தலையே புறக்கணித்திருந்தார் வைகோ. இதேபோல் 2016ல் மக்கள் நலக் கூட்டணியில் போட்டியிட்டார். இதனால் ம.தி.மு.க தொண்டர்களும், நிர்வாகிகளும் சோர்வடைந்திருந்த நிலையில், இப்போது அவர்கள் உற்சாகம் கொள்ளும் வகையில் வெற்றி ம.தி.மு.க வசம் தேடி வந்துள்ளது.

## எதிரான குற்றச்சாட்டுகள்...

செயலாளர் ஹேமஸ்ரீ பெர்னாண்டோ ஆகியோருக்கு எதிராக 863 குற்றச்சாட்டுக்களை உள்ளடக்கி குற்றப்பத்திரத்தை சட்ட மாஅதிபர் தப்புல டி லிவேரா மேல் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்ய தீர்மானித்துள்ளார்.

உயிர்த்த ஞாயிறு பயங்கரவாத தாக்குதல் தொடர்பில் புலனாய்வுப் பிரிவினரின் தகவல்கள் கிடைத்திருந்த நிலையிலும் அதனை தடுப்பதற்கு முறையான நடவடிக்கையை மேற் கொள்ள தவறிய குற்றத்திற்காக முன்னாள் பொலிஸ் மாஅதிபர் பூஜித் ஜயசுந்தர மற்றும் முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் ஹேமஸ்ரீ பெர்னாண்டோ ஆகியோருக்கு எதிராக 863 குற்றச்சாட்டுக்களை உள்ளடக்கி கொழும்பு மேல் நீதிமன்றத்தில் 2 தனித்தனி வழக்குகளை தொடுக்க சட்ட மாஅதிபர் நேற்றைய தினம் தீர்மானித்துள்ளார்.

மேற்படி வழக்குகளை விசாரணை செய்வதற்காக தனித்தனியாக மேல் நீதிபதிகள் மூவரடங்கிய நீதிபதிகள் குழாம் இரண்டை நியமிக்குமாறு சட்ட மாஅதிபர் நேற்றைய தினம் பிரதம நீதியரசரிடம் எழுத்து மூலம் வேண்டுகோள் விடுத்துள்ளார். அத்த கவலை சட்ட

மாஅதிபரின் இணைப்புச் செயலாளர் சட்டத்தரணி நிஷாரா ஜயரத்ன நேற்று தெரிவித்தார்.

அதற்கிணங்க புலனாய்வுப் பிரிவின் தகவல்கள் கிடைத்திருந்தும் உயிர்த்த ஞாயிறு தாக்குதலை தடுப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளாமை, புலனாய்வுப் பிரிவு பணிப்பாளர் நிலந்த ஜயவர்தனவின் புலனாய்வுத் தகவல்களை அலட்சியப்படுத்தியமை உள்ளிட்ட 863 குற்றச்சாட்டுகளை முன்வைத்து மேற்படி வழக்கு சட்ட மாஅதிபரினால் தொடரப்பட்டுள்ளது.

அதற்கிணங்க மேற்படி பிரதிவாதிகளுக்கு எதிராக மனிதப்படுகொலை மற்றும் மனித படுகொலைக்கு சந்தர்ப்பம் அளித்தமை ஆகிய குற்றச்சாட்டுக்களை உள்ளடக்கி மேற்படி வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. (ஸ)

## இரவு பகல் அயராது உழைக்கும் சகல...

கூறப்பட்டுள்ளதாவது,....

தகவல் தொடர்பு தற்போது உலகில் மிக வேகமாக முன்னேறிவரும் துறைகளில் ஒன்றாக மாறியுள்ளது.

கடந்த சில தசாப்தங்களில் பல்வேறு ஊடகங்களின் ஊடாக தகவல்கள் பொதுமக்களை சென்றடையும் நடவடிக்கை துரிதப்படுத்தப்பட்டது. எனினும், சுயாதீனமான மற்றும் பொறுப்பான ஊடக பாவனையே காலத்தின் தேவையாகும். முறையான ஊடக பயன்பாட்டின் மூலமே மக்களின் தகவல் அறியும் உரிமை பாதுகாக்கப்படுகிறது.

அதற்காக பணியாற்றுவது அனைவரதும் பொறுப்பும், கடமையுமாகும் என நான் நம்புகின்றேன். இந்நாட்டின் ஊடக சுதந்திரம் கடுமையாகப் பாதிக்கப்பட்ட விசித்திரமான காலங்களை நாம் நினைவுபடுத்தத் தேவையில்லை.

நாம் அதிகாரத்தில் இருந்த அனைத்து சந்தர்ப்பங்களிலும் தகவல் அறியும் உரிமையையும், ஊடக சுதந்திரத்தையும் பாதுகாக்க நடவடிக்கை எடுத்துள்ளோம் என்பதை உங்களுக்கு நினைவூட்டுகிறேன் எனவும் தெரிவித்துள்ளார்.

முழு உலகமும் தொற்று நிலைமையினால் பாதிக்கப்பட்டுள்ள இச்சூழ்நிலையில் 'தகவல்கள் பொது மக்களின் நலனுக்கானது' எனும் தொனிப்பொருளில் சர்வதேச ஊடக சுதந்திர தினத்தை கொண்டாடுவது காலத்திற்கு உகந்ததாகும். நாடு என்ற ரீதியில் இந்த தொற்று நோயை எதிர்கொண்டு, அதனை இல்லாதொழிக்கும் செயற்பாட்டில் பொதுமக்களை தெளிவுபடுத்தி, உயிராபத்தையும் பொருட்படுத்தாது ஊடகவியலாளர்கள் நிறைவேற்றும் இந்த உன்னத செயற்பாட்டையும், அர்ப்பணிப்பையும் அரசாங்கம் எப்போதும் பாராட்டும்.

அறிவை ஆயுதமாகக் கொண்ட ஊடகவியலாளர்களின் தொழில் வளர்ச்சிக்காக கல்வி புலமைப்பரிசில்கள் மற்றும் ஊடக உபகரணங்களை வழங்குவதற்கான எமது நடவடிக்கை எதிர்காலத்திலும் செயற்படுத்தப்படும். துல்லியமான செய்திகளை அறிந்துக் கொள்வதற்கான மக்களின் உரிமையை பாதுகாத்து, நாட்டின் ஒட்டுமொத்த சமூக, கலாசார மற்றும் பொருளாதார அபிலாஷைகளை அடைவதற்கு ஊடக சுதந்திரத்தை பயன்படுத்துமாறு அனைத்து ஊடகவியலாளர்களிடமும் கேட்டுக் கொள்கின்றேன் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

## ஆஸ்பத்திரிகளில் நெருக்கடி நிலை...

அசேல குணவர்தன தெரிவித்துள்ளார்.

கடந்த பத்து தினங்களுக்கு முன்னர் கொரோனா வைரஸ் தொற்று நோயாளிகளாக இனங்காணப்பட்டு சிகிச்சை பெற்று வரும் நோயாளிகள் இத்தினங்களில் ஆஸ்பத்திரிகளிலிருந்து வெளியேறி வரும் நிலையில் எதிர்வரும் இரண்டு மூன்று தினங்களில் ஆஸ்பத்திரிகளில் நிலவும் நெருக்கடி நிலைமை நிறைவுக்கு வரும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

அதேவேளை;

ரஷ்யாவின் தயாரிப்பான ஸ்புட்னிக் கொரோனா வைரஸ் தடுப்பூசி 27 இலட்சம் நாட்டுக்கு கிடைக்க உள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது. முதற் கட்டமாக அதில் ஒரு தொகுதி தடுப்பூசிகள் இன்று இலங்கைக்கு வந்து சேரும் என்றும் அமைச்சு தெரிவித்துள்ளது.

அத்துடன் இந்தியாவின் உற்பத்தியான ஒக்ஸ்போர்ட் எஸ்ட்ரா செனேகா தடுப்பூசியை கொள்வனவு செய்வதற்காக அரசாங்கம் மூன்று நாடுகளுடன் பேச்சுவார்த்தை நடத்தி வருவதாக இராஜாங்க அமைச்சர் சன்ன ஜயசுமன தெரிவித்துள்ளார்.

நாட்டில் இதுவரை 50 இலட்சத்துக்கும் மேற்பட்டோருக்கு முதற் கட்ட தடுப்பூசிகள் வழங்கப்பட்டுள்ள நிலையில் இரண்டாம் கட்ட தடுப்பூசிகள் விரைவில் பெற்றுக் கொடுக்கப்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். இந்தியாவின் தடுப்பூசிகள் தாமதமாவதாலேயே இரண்டாம் கட்ட தடுப்பூசிகளும் தாமதமாவதாகவும் அவர் தெரிவித்துள்ளார். ரஷ்ய அரசாங்கத்துடன் மேற்கொள்ளப்பட்ட பேச்சுவார்த்தைகளுக்கு அமைய அந்த நாட்டில் இருந்து 29 இலட்சம் தடுப்பூசிகளை இலங்கைக்கு கொள்வனவு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அதன் முதற்கட்டமாக இன்றைய தினம் சுமார் 2 இலட்சம் தடுப்பூசிகள் இலங்கைக்கு கிடைக்கும் என்றும் எதிர்வரும் மாதங்களில் மேலும் ஒரு தொகை தடுப்பூசிகள் இலங்கைக்கு கிடைக்கும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ஸ)

## சுமந்திரனின் கருத்துக்கு...

கருத்தாக அவர்களின் தீர்மானங்களைக் கூறுவதை ஏற்றுக்கொள்ள முடியாது எனவும் அவர் தெரிவித்துள்ளார். நேற்று மட்டக்களப்பிலுள்ள அவரது அலுவலகத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இதன்போது தொடர்ந்து கருத்து தெரிவித்த அவர்,

நேற்று முன்தினம் ஊடகங்களில் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பைப் பற்றியும் கிழக்கு மாகாணசபைத் தேர்தலைப் பற்றியும் வந்த செய்திகள் மக்கள் மத்தியில் குழப்பமான நிலைமையை ஏற்படுத்தியிருக்கின்றது. குறிப்பாகக் கிழக்கு மாகாணத்திலே மட்டக்களப்பு மாவட்டத்திலே அந்த செய்திக்குப் பின்பு ஒரு அதிர்வலை ஏற்பட்டது. எனக்கும் பல தொலைபேசி அழைப்புக்கள் வந்திருந்தன.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எதிர்வரும் கிழக்கு மாகாணசபைத் தேர்தலில் தமிழ் பேசும் மக்களாக அதாவது முஸ்லிம்களுடன் சேர்ந்து ஆட்சியமைப்பதற்காக நாங்கள் பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டிருக்கின்றோம் என்று தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன், மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சாணக்கியன் பத்திரிகையாளர் மாநாட்டிலே குறிப்பிட்டிருந்தார்கள். அந்தச் செய்தியை உறுதிப்படுத்தும் விதமாக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் செயலாளர் நிசாம் காரியப்பர் கூட அப்படி நடந்ததாகக் கூறியிருந்தார்.

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பைப் பொறுத்தமட்டில் மூன்று கட்சிகள் அதில் அங்கம் வகிக்கின்றன. அதன் ஒரு கட்சியான தமிழீழ விடுதலை இயக்கத்தின் செயலாளர் நாயகமாகக் கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த நான் பதவி வகித்துக் கொண்டிருக்கின்றேன்.

இந்த வேளையில் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு அலுவலக ரீதியாக எந்தவொரு கட்சிகளுடனோ குறிப்பாக முஸ்லிம் கட்சிகளுடனோ முஸ்லிம் காங்கிரஸுடனோ பேச்சுவார்த்தைகளில் ஈடுபடவில்லை.

சிலவேளைகளில் பாராளுமன்ற உறுப்பினர்களான எம்.ஏ.சுமந்திரன் , சாணக்கியன் பேசியிருக்கலாம். அது அவர்களுடைய தனிப்பட்ட பேச்சுவார்த்தையோ விருப்பமோ தவிர தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் உத்தியோகபூர்வ பேச்சுவார்த்தையாகக் கருத முடியாது.

## சில கவனக்குறைவுகளால்...

தாக்கத்தை எதிர்கொள்ள நேரிட்டுள்ளது. ஆனாலும் அதனை கட்டுப்படுத்த அரசாங்கம் தீவிர நடவடிக்கை எடுத்து வருகின்றது என கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா குறிப்பிட்டுள்ளார். கொரோனா தொற்று இலங்கையில் மாத்திரமல்ல உலகக்கிலும் தற்போது பாரிய அச்சுறுத்தலை ஏற்படுத்தி வருவதுடன் சில நாடுகளில் பாரதூரமான விளைவுகளையும் ஏற்படுத்தியுள்ளது. அதில் இந்தியாவையும் குறிப்பிடலாம் என்றார்.

வவுனியாவிற்கு சென்றிருந்த அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இதன்போது அவர் மேலும் கூறுகையில்,

வெளிநாடுகளில் இருந்து பரவுவதற்கான வாய்ப்புக்கள் இருந்தாலும் கூட விமான நிலையத்தின் ஊடாக வெளிநாடுகளில் இருந்து வருகை தருபவர்களை கட்டுப்படுத்தி இருப்பதால் அது குறைக்கப்பட்டுள்ளது. இத்தொற்றை முழுமையாக கட்டுப்படுத்துவதற்காக நாட்டை முழுமையாக முடக்குவதில் எவ்வித பிரயோசனமும் இல்லை என்றும் தெரிவித்துள்ளார்.

மேலும் எமது நாடு மட்டுமல்லாது அனைத்து நாடுகளுமே தங்களது நாட்டினை முடக்கும் நிலைக்கு உட்படுத்தாமல் பாதிக்கப்பட்ட பகுதிகளை மாத்திரமே அந்த அரசாங்கங்கள் முடக்கி வருகின்றன. அவ்வாறு நாட்டினை முடக்கும் சந்தர்ப்பத்தில் நாடு பட்டினியில் மரணிக்க வேண்டி வரும். அதற்காகத்தான் எமது அரசாங்கம் பல்வேறு சுகாதார நடவடிக்கைகளை பேணுவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது.

இராணுவ சோதனைச் சாவடிகளில் இராணுவத்தினர் முகக்கவசம் அணியாதவர்களை மறித்து அணிந்து செல்லுமாறு அறுவுறுத்தி வருகின்றனர். மேலும் இராணுவச்சோதனை சாவடிகள் இவ்வாறான தேவைப்பாடுகளுக்கு வசதியாக இருப்பதுடன் நாங்கள் அதனை வசதியாக மாற்றிக் கொள்ள வேண்டுமே தவிர அதனை கெடுபிடி என்று நோக்கக்கூடாது.

ஆகவே சோதனைச் சாவடி இருப்பதால் முகக்கவசம் அணிய வேண்டும் என அனைவரும் கவனமாக இருப்பார்கள். அத்தோடு சோதனைச் சாவடிகளை நிரந்தரமாக்க வேண்டிய தேவை இல்லை என்றும் சுட்டிக்காட்டியுள்ளார்.

## 13 மாவட்டங்களைச் சேர்ந்த...

முடக்கப்பட்டதாகவும் அவர் தெரிவித்தார்.

அதேவேளை, கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்ட நபர்கள் வீடுகளில் இனங் காணப்படுவார்களானால் அத்தகையோர் தொடர்பில் கொரோனா வைரஸ் கட்டுப்பாட்டுக்கான தேசிய மத்திய நிலையத்திற்கு அறிவிக்கும் வகையில் விசேட தொலைபேசி இலக்கம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

அவர்கள் தொடர்பில் அறிவிப்பதற்கு 1906 என்ற தொலைபேசி இலக்கத்திற்கு அழைப்பை மேற்கொண்டால் அது தொடர்பில் உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

அதற்கிணங்க கொழும்பு மாவட்டத்தில் பிலியந்தலை பொலிஸ் நிர்வாகப் பிரிவில் 10 கிராம சேவை உத்தியோகத்தர் பிரிவுகளும் மகரகம பொலிஸ் நிர்வாகப் பிரிவில் ஒரு கிராம சேவை உத்தியோகத்தர் பிரிவும் பாதுக்கை பொலிஸ் நிர்வாகப் பிரிவில் ஒரு கிராம சேவகர் பிரிவும் தனிமைப்படுத்தலுக்காக முடக்கப்பட்டுள்ளன.

கம்பஹா மாவட்டத்தில் வத்தளை அல்விஸ் டவுன் பிரதேசமும்

மொனராகலை மாவட்டத்தில் 6 கிராம சேவை உத்தியோகத்தர் பிரிவும் அம்பாறை மாவட்டத்தில் மூன்று கிராம சேவை உத்தியோகத்தர் பிரிவும் மாத்தளை மாவட்டத்தில் ஐந்து பொலிஸ் பிரிவுகளும் ஒரு கிராம சேவை உத்தியோகத்தர் பிரிவும் தனிமைப்படுத்தலுக்காக முடக்கப்பட்டுள்ளன. அத்துடன் தம்புள்ளை பொருளாதார மத்திய நிலைய பிரதேசமும் முடக்கப்பட்டுள்ளன.

காலி மாவட்டத்தில் 4 கிராம சேவை அதிகாரிகள் பிரிவுகள், பொலநறுவை மாவட்டத்தில் இரண்டு கிராம சேவை அதிகாரிகள் பிரிவுகள் கம்பகா மாவட்டத்தில் 5 கிராம சேவை உத்தியோகத்தர் பிரிவும் களுத்துறை மாவட்டத்தில் 25 கிராம உத்தியோகத்தர் பிரிவுகளும்

குருநாகல் மாவட்டத்தில் 3 பொலிஸ் நிர்வாக பிரிவுகளும் 4 கிராம சேவை உத்தியோகத்தர் பிரிவுகளும் இரத்தினபுரி மாவட்டத்தில் ஒரு கிராம சேவை அதிகாரி பிரிவும் நுவரெலியா மாவட்டத்தில் இரண்டு கிராம சேவை உத்தியோகத்தர் பிடிப்புகளும் மட்டக்களப்பு மாவட்டத்தில் ஒரு கிராம சேவை உத்தியோகத்தர் பிரிவும் இதுவரை தனிமைப்படுத்தலுக்காக முடக்கப்பட்டு ள்ளதாகவும் இராணுவத்தளபதி மேலும் தெரிவித்துள்ளார்..(ஸ)

## இலங்கை கடற் பிரதேசத்தில்...

ஏற்படலாம் என்பதை கருத்திற் கொண்டு அவற்றை தவிர்க்கும் வகையிலேயே வடக்கு மற்றும் வடமேற்கு கடற்பிராந்தியங்களின் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளதாக இலங்கை கடற்படையின் பேச்சாளர் கொமாண்டர் இந்திக சில்வா தெரிவித்துள்ளார்.

இது தொடர்டபில் இலங்கை கடற்படையினர் உரிய பாதுகாப்பு நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ள போதிலும் பொது மக்களும் அவதானத்துடன் இருக்குமாறு அவர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இலங்கை கடற்படையினரால் முன்னெடுக்கப்பட்டுள்ள விஷேட கடல் வழி பாதுகாப்பு நடவடிக்கைகள் தொடர்பாக கடற்படைப் பேச்சாளர் மேலும் விளக்கமளிக்கையில்:

விஷேட பாதுகாப்பு வேலைத் திட்டத்திற்கு அமைய இலங்கையின் வடக்கு மற்றும் வடமேற்கு கடற்பிராந்தியங்களின் பாதுகாப்பை பலப்படுத்தும் வகையில் இலங்கை கடற்படைக்குச் சொந்தமான ஆழ் கடல் கப்பல்கள் மற்றும் அதிவேக தாக்குதல் படகுகள் மேலதிக பாதுகாப்பு நடவடிக்கைகளில் ஈடுப்படுத்தும் பொருட்டு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதுடன், சர்வதேச கடல் எல்லை பிரதேசத்தில் கண்காணிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் கரையோர பாதுகாப்பை அதிகரிக்கும் பொருட்டும் கரையோர கண்காணிப்பு படகுகளும் விஷேட கண்காணிப்பு நடவடிக்கைகளில் ஈடுப்படுத்தப்பட்டுள்ளன.

இந்த விஷேட நடவடிக்கைகளுக்காக கிழக்கு கடற்படை கட்டளை தலைமையகத்திலிருந்து மேலதிக கப்பல்கள் மற்றும் படகுகள் வடபிராந்தியத்திற்கும், மேற்கு கடற்படை கட்டளை தலைமையகத்திலிருந்து சிலாபம் முதல் மன்னார் வரையான கடற் பிரதேசத்தின் ரோந்து நடவடிக்கைகளுக்கும் அனுப்பி வைத்து பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது.

மேற்படி நடவடிக்கைகளுக்கு சமமாக மேற்படி கடற்பிரதேசத்தை அண்மித்த கரையோர பகுதிகளில் கடற்படையினர் தரைவழி ரோந்து நடடிக்கைகளில் ஈடுப்படுத்தப்பட்டுள்ளதுடன் தேர்ந்தெடுக்கப்பட்ட பகுதிகளில் கடற்படையின் கண்காணிப்பு மையங்களும் ஸ்தாபிக்கப்பட்டுள்ளது என்றும் கடற்படைப் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, கடல் வழியைப் பயன்படுத்தி நாட்டிற்குள் சட்ட விரோதமாக எவரேனும் உட்பிரவேசிப்பது தொடர்பில் தகவல்கள் கிடைக்கும் பட்சத்தில் அல்லது அவதானிக்கப்படும் பட்சத்தில் அது தொடர்பில் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு உடனடியாக அறிவிக்குமாறும் வெளிநாட்டவர்களுடன் கடலில் எவ்வித தொடர்பை பேணுவதை தவிர்க்குமாறும் பிரதேச மீன்பிடி சமூகத்தினருக்கு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளதாக கடற்படைப் பேச்சாளர் சுட்டிக் காட்டியுள்ளார்.

இலங்கை கடற்படையினர் கடல் ரோந்து நடவடிக்கைகளை அதிகரித்ததன் மூலம் வெளிநாடுகளிலிருந்து சட்டவிரோதமாக பிரவேசிக்க முற்பட்ட பலர் உடனடியாக எமது பொறுப்பில் எடுத்து மீண்டும் அனுப்பி வைக்க நடவடிக்கை எடுக்கபட்டமை குறிப்பிடத்தக்கது என்றும் கடற்படையின் பேச்சாளர் கொமாண்டர் இந்திக சில்வா மேலும் தெரிவித்துள்ளார்.

## கர்ப்பிணித் தாய்மார்கள்... (03ஆம் பக்கத் தொடர்)

பாதுகாப்பதில் கூடுதல் கவனம் செலுத்த வேண்டியுள்ளதாகவும் இம்முறை அவர்களுக்கு கொரோனா வைரஸ் பரவும் வீதம் அதிகரித்துக் காணப்படுவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

அதேவேளை நாட்டின் பல்வேறு வைத்தியசாலைகளிலும் கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளான சிறுவர்கள் சிகிச்சை பெற்று வரும் நிலையில் அவர்களில் ஒரு மாதத்திற்கும் 6 மாதத்திற்கும் இடைப்பட்ட குழந்தைகளும் காணப்படுவதாக அவர் தெரிவித்துள்ளார்.

அதற்கிணங்க கர்ப்பிணித் தாய்மார்கள் முடிந்தளவு பயணங்களை தவிர்த்துக் கொள்ள வேண்டும். (ஸ)

## இந்திய உல்லாச... (03ஆம் பக்கத் தொடர்)

தெரிவித்து வருகின்றனர்.

எவ்வாறெனினும் உல்லாசப் பிரயாணிகள் இலங்கைக்கு வருகை தரும் நாடுகளான பிரிட்டன், ஜெர்மன், சீனா உள்ளிட்ட நாடுகளில் இருந்து உல்லாசப் பிரயாணிகளின் வருகை குறைவடைந்து ள்ளதாகவும் அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார்.(ஸ)

## மேல் மாகாணத்தில் ஒரே... (03ஆம் பக்கத் தொடர்)

உள்ளிட்ட சுகாதார வழிகாட்டல்களை முறையாக பின்பற்ற வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டுள்ளது.(ஸ)

## சுகாதார வழிமுறைகளை... (03ஆம் பக்கத் தொடர்)

முகக்கவசங்களை கண்டிப்பாக பாவிப்பது அவசியம்.

வீடுகளில் அலுவலகங்களில் இருக்கும்போதும் முகக்கவசத்தை தொடர்ச்சியாக அணிந்துகொள்வது நல்லது.

புதிய வைரஸ் பரவலானது பெருமளவிலான வைரஸ் தொற்றாளர்களுக்கு எந்தவித நோய் அறிகுறிகளும் வெளிப்படாமை அச்சுறுத்தலான நிலையை தோற்றுவித்துள்ளது.

அனைத்து வயதினரும் தம்மை பாதுகாத்துக் கொள்வதில் முக்கிய கவனம் செலுத்த வேண்டும் என்றும் அவர் கேட்டுக் கொண்டுள்ளார். (ஸ)

## தனிமைப்படுத்தல் சட்டத்தை... (03ஆம் பக்கத் தொடர்)

வர்த்தக நிலையங்கள் என்பவற்றில் பொலிஸாரும் சுகாதார பரிசோதகர்களும் சென்று சோதனை நடத்தி வருவது குறிப்பிடத்தக்கது.(பா)

## ஊழியர்களுக்கு கொரோனா... (03ஆம் பக்கத் தொடர்)

இதுவரையில் கொட்டாவ வெளியேற்றத்தில் கடமையாற்றும் 12 பேருக்கும், கடுவலை வெளியேற்றத்தில் கடமையாற்றும் 4 பேருக்கும் மற்றும் அத்துருகிரிய வெளியேற்றத்தில் ஒருவருக்கும் கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

இந்த நிலையில் அதிவேக நெடுஞ்சாலையில் பயணிக்கும் வாகனங்களுக்கு நீண்ட வரிசையில் இருக்க நேரிட்டதாக அறிய வருகிறது.

## ஆதிவாசிகளின் காணிகளை... (03ஆம் பக்கத் தொடர்)

இதன்போது இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

சுற்றாடல் அமைச்சின் செயலாளர், வனஜீவராசிகள் அமைச்சர், மகாவலி அபிவிருத்தி அதிகார சபை, வனஜீவராசிகள் மற்றும் வனப்பாதுகாப்பு திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் ஆகியோர் இந்த மனுவில் பிரதிவாதிகளாக பெயர் குறிப்பிடப்பட்டுள்ளனர்.

## ஸ்டாலின் எதிர்வரும்...

159 ஆசனங்களைக் கைப்பற்றியுள்ளது. இந்த வெற்றியையடுத்து எடப்பாடி பழனிச்சாமி நேற்று தனது முதலமைச்சர் பதவியை இராஜினாமா செய்தார்.

தி.மு.க தலைவர் ஸ்டாலின் முதல்வராக பதவியேற்கும் வைபவம் எதிர்வரும் 7 ஆம் திகதி ஆளுநர் மாளிகையில் எளிமையான முறையில் நடைபெறவுள்ளது.

(முழுமையான விபரம் 5ஆம் பக்கம்)

## சீன வெளிவிவகார அமைச்சர்...

முக்கியஸ்தர் ஒருவரின் உத்தியோகபூர்வமான விஜயமாக அமையவுள்ளது.

ஏற்கனவே சீன பாதுகாப்பு அமைச்சர் பெங் கடந்த வாரம் நாட்டிற்கு வந்து ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ மற்றும் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ ஆகியோருடன் பேச்சுவார்த்தை நடத்தினார்.

இதன்போது பாதுகாப்பு ஒத்துழைப்பை மேம்படுத்த இரு நாடுகளும் இணக்கம் வெளியிட்டிருந்தன.

இந்த நிலையில் சீன வெளியுறவு அமைச்சர் வாங் தனது பிராந்திய பயணத்தின் ஒரு பகுதியாக இலங்கைக்கு வரவுள்ளார் என்பதோடு, இது இலங்கைக்கான அவரது இரண்டாவது உத்தியோகபூர்வ விஜயமென்பது குறிப்பிடத்தக்கது.

## திருமலையில் 9 கிராமங்கள்...

பகுதியில் ஒரு கொரோனா மரணம் பதிவாகியுள்ளது.

முதலாவதாக முடக்கப்பட்ட பூம்புகார் கிராமத்தை தொடர்ந்து அதனுடன் தரை வழித் தொடர்புடைய கோவிலடி கிராம சேவகர் பிரிவு மற்றும் மட்கோ கிராம சேவகர் பிரிவு மற்றும் இலிங்க நகர் கிராம சேவகர் பிரிவு ஆகியன உள்ளடங்கலாக 7க்கும் மேற்பட்ட கிராமங்கள் முடக்கப்பட்டுள்ளன.

அத்துடன் மே 1 ஆம் திகதி மாலை முதல் அன்புவழிபுரம் கிராம சேவகர் பிரிவு மற்றும் உவர்மலை கிராம சேவகர் பிரிவு என்பன தனிமைப்படுத்தப்பட்டுள்ளன.

இந்நிலையில் இந்தக் கிராமங்களைச் சேர்ந்த மக்களின் அத்தியாவசிய தேவைகளில் பிரச்சினைகள் எலாமல் சுகாதார திணைக்களமும் பொலிஸார் மற்றும் இராணுவத்தினர் நடவடிக்கை மேற் கொண்டு வருகின்றனர்.

தொற்றுக்குள்ளாகி முடக்கப்பட்ட பகுதிகளைத் தவிர ஏனைய பகுதிகளில் உள்ள மக்கள் தமது இயல்பு வாழ்க்கையை மேற்கொண்டு வருகின்றனர்.

## தேர்தல் முறை மாற்றம்...

கலந்துரையாடல்கள் ஆரம்பித்திருக்கிறது.எதிர் வரும் மாகாண சபை தேர்தலுக்கான முறைமையாக மட்டும் இதனை நோக்க முடியாது.

மாகாண சபை தேர்தலுடன், இனி வரும் பொது தேர்தலுக்கான தேர்தல் முறையும் இதனுடன் தொடர்புபடுகின்றது.

இத்தேர்தல் முறை மாற்றத்தில் தமிழ் பேசும் சிறுபான்மை சமூகம் பாரிய சவாலை எதிர்நோக்கியுள்ளது.

மறுபக்கம் பெரும்பான்மை சமூகத்திலுள்ள நாட்டின் சிறு கட்சிகளும் அதே சவாலுக்குள்ளாகின்றது. எனினும் தனி தமிழ் தொகுதி, தனி முஸ்லிம் தொகுதி என்ற அடிப்படையில் தேர்தல் முறை மாற்றம் தொடர்பான சவாலில் வெற்றிக் கொள்ள முடியாது.

தேர்தல் முறைமை தொடர்பாக பேசுகின்ற போது, அடிப்படையில் மூன்று முறைகளை எடுத்துக்காட்டலாம். தொகுதி வாரியான முறை, விகிதாசார முறை மற்றும் கலப்பு தேர்தல் முறை.

இவற்றில் பல்லினங்கள் வாழுகின்ற நாடுகளில் அதுவும் செறிந்து அல்லது பரந்து வாழுகின்ற போது விகிதாசார தேர்தல் முறையே அனைத்து சமூகங்களினதும் பிரதிநித்துவத்தை உறுதிப்படுத்தும். அத்தகைய ஜனநாயக விழுமியம் கொண்ட அனைத்து சமூகங்களுக்கும், அதே போன்று பல்வேறு மாற்று கருத்துக்கள் கொண்டவர்களுக்கும் வாய்ப்பினை ஏற்படுத்தும் விகிதாசார முறையே இன்று நடைமுறையில் உள்ளது. இதனுடைய மாற்றம் ஜனநாயக ரீதியான வெளிப்படுத்தல்களுக்கு தடையான ஒன்றாக அமைவதற்கு இடமளிக்க கூடாது.

இச்சூழ்நிலையை நாம் சாதகமாக பயன்படுத்திக்கொள்ள வேண்டும். விகிதாசார தேர்தல் முறையை தக்க வைத்துக் கொள்வதற்கு கோட்பாட்டு ரீதியாகவும், தர்க்க ரீதியாகவும் முன்னெடுப்புகளை மேற்கொள்ள வேண்டும். அந்த வகையில் தமிழ் முற்போக்கு கூட்டணி, தலைவர் மனோ கணேசனின் தலைமையில் விகிதாசார தேர்தலை, வளைய முறையில் (Zonal System) நடத்துவதற்குரிய முன்மொழிவுகளை செய்திருக்கின்றது. இம்முறை இன்று பலராலும் ஏற்றுக்கொள்ளும் நிலைக்கு வந்திருக்கின்றது.

எனவே குறுகிய வட்டத்திற்குள் இருந்து, இன ரீதியான அடிப்படைகளை மையப்படுத்தி, எம்மை நாமே ஓரம் கட்டிக்கொள்ள கூடாது.



# அரசியல் யாப்பின் பிரகாரம் மாகாண சபை உயிர்ப்பிக்கப்பட வேண்டும்

**மாகாண சபைத் தேர்தலைப் பொறுத்தவரையில் இன்று இந் நாட்டில் இருக்கக் கூடிய அரசியல் யாப்பின் பிரகாரம் மாகாண சபை உயிர்ப்பிக்கப்பட வேண்டும்.ஏனென்றால் மிகவும் கூடுலான பாடசாலைகள் மாகாண சபையின் கீழ் தான் வருகின்றன. இது ஒரு முக்கியமான விடயம் என்று அக்குறணை பிரதேச சபையின் தவிசாளர் இஸ்திஹார் இமாமுதீன் தினகரனுக்கு வழங்கிய செவ்வியில் தெரிவித்துள்ளார்......**

**மாகாண சபைத் தேர்தல் நடக்குமோ இல்லையோ என்ற சந்தேகங்கள் இருந்த போதிலும் இந்தியாவின் அழுத்தம் காரணமாக நடக்கக் கூடும் என்ற வாய்ப்பு அதிக பட்சம் இருக்கிறது. அது எப்பொழுது என்று இப்போது கூற முடியாது. ஆனாலும் மாகாண சபை நோக்கி எல்லா கட்சி மட்டங்களிலும் அரசியல் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இது குறித்து உங்கள் கருத்து என்ன?**

இந்தக் கேள்விக்கு ஆட்சியில் இருக்கக் கூடிய அரசாங்கம் தான் பதிலளிக்க வேண்டும். இந்த தேர்தல் தொடர்பில் முக்கிய பிரச்சினை இருக்கிறது. பழைய விகிதாசர முறைப்படி தேர்தலை நடத்துவதா அல்லது தொகுதிவாரி அடிப்படையிலான தேர்தலை நடத்துவதா என்ற சிக்கல் இருக்கின்றது.

அவ்வாறு புதிய முறையில் செய்வதாயின் எல்லை நிர்ணயம் சரியாக திருத்தியமைக்கப்படவில்லை. அவற்றை சரியாக தீர்மானித்து நடைமுறைக்கு கொண்டு வரவேண்டும். அதே போன்று இந்த தேர்தலை நடத்துவதில் எமது அண்டைய நாடான இந்தியா பாரிய அழுத்தத்தினை கொடுப்பதை நாங்கள் காணக் கூடியதாக இருக்கிறது. அந்த வகையில் இந்த நடப்பு அரசாங்கத்தின் சில காய் நகர்த்தலைப் பார்க்கும் பொழுது அவர்கள் மாகாண சபைத் தேர்தலை நடத்துவதற்கான முஸ்தீபுகளைத் தான் செய்து கொண்டு இருக்கிறார்கள்.

**குறிப்பாக மாகாண சபைத் தேர்தல் இந்நாட்டின் தமிழ் மக்களுடைய இனப்பிரச்சினையைத் தீர்த்து வைப்பதற்காக இந்தியாவால் கொண்டு வரப்பட்டதாகும். எனினும் உங்கள் பார்வையில் இம் மாகாண சபையின் மூலம் யதார்த்த ரீதியாக அடையக் கூடிய அனுகூலங்கள் என்ன?**

மாகாண சபைத் தேர்தலைப் பொறுத்தவரையிலும் இன்று இந் நாட்டில் இருக்கக் கூடிய அரசியல் யாப்பின் பிரகாரம் மாகாண சபை உயிர்ப்பிக்கப்பட வேண்டும். ஏனென்றால் மிகவும் கூடுலான பாடசாலைகள் மாகாண சபைக்கு கீழ் தான் வருகின்றன. இது ஒரு முக்கியமான விடயம். கண்டி மாவட்டத்தில் மாகாண சபைக்கு உட்பட்ட முஸ்லிம் பாடசாலைகள் மிகவும் பரிதாபகரமான நிலைமையில் உள்ளன. அவற்றை கட்டி எழுப்ப வேண்டிய அதிகளவு தேவை இருக்கிறது. கண்டி மாவட்ட முஸ்லிம்களுடைய கல்வி எழுச்சிக்கு வழிகோலும் செயற்பாடுகள் முன்னெடுப்பதற்கு ஒரு சாதனமாக இம்மாகாண சபை பயன்படுமென நான் கருதுகின்றேன்.

**கடந்த மாகாண சபைத் தேர்தலில் கண்டி முஸ்லிம்கள் தங்களுடைய வாக்குகளை சிந்தித்து வாக்குகளைப் பிரயோகிக்க முடியாமல் போனதன் காரணமாக முஸ்லிம் பிரதிநித்துவங்களை இழக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. முஸ்லிம் வாக்குகள் சிதறிவிடும் பட்சத்தில் முஸ்லிம் பிரதிநித்துவங்களைப் பெற்றுக் கொள்ள முடியாது. எனவே இதற்கான திட்டங்கள் உங்களிடம் இருக்கின்றதா?**

கண்டி மாவட்டத்தைப் பொறுத்தவரையில் விசேடமாக கடைசியாக நடந்த மாகாண சபைத் தேர்தலில் முஸ்லிம் பிரதிநித்துவங்கள் ஒழுங்காகப் பாதுகாக்கப்படவில்லை என்று சொல்ல வேண்டும்.

அந்த வகையில் மாகாண சபைத் தேர்தல் நடந்தாலும் சரி அல்லது பாராளுமன்றத் தேர்தல் நடந்தாலும் சரி பிரதேச சபைத் தேர்தல் நடந்தாலும் சரி எமது முஸ்லிம் சமூகம் எல்லாத் தேர்தல்களிலும் சற்று நிதானத்துடன் தமது பிரதிநிதித்துவங்களைப் பாதுகாத்துக் கொள்ள வேண்டும் என்ற வகையில் எல்லோரும் செயற்பட வேண்டும்.

போட்டியிடக் கூடிய பிரதான கட்சிகள் அனைத்தும் முஸ்லிம் வேட்பாளர்களை களமிறக்கும் என்பதில் எந்தவித சந்தேகமுமில்லை. ஆனால் கட்சி என்று பார்க்காமல் சமூகத்தின் மேல் அக்கறை உள்ள வேட்பாளர்களைத் தெரிவு செய்வதில் இந்த சமூகம் அக்கறை செலுத்த வேண்டும் என்பதுதான் எனது கருத்தாகும்.

**மாகாண சபைத் தேர்தல் நடைபெற்றால் நீங்களும் களமிறங்கவுள்ளீர்களா?**

நிச்சயமாக. எதிர்வரும் மாகாண சபைத் தேர்தலில் போட்டியிடுவது என்பது உறுதியானதாகும். எனினும் கடந்த பிரதேச சபைத் தேர்தலில் போட்டியிட்டு அரசாங்கத்துடன் சேர்ந்துதான் ஆட்சி அமைத்தோம். இம்முறை நாங்கள் பாராளுமன்றத் தேர்தலில் தனியாகத் தான் தேர்தலில் களமிறங்கினோம். வரக் கூடிய மாகாண சபைத் தேர்தலில் களமிறங்குவது உறுதியான விடயம்.

**நீங்கள் சுயாதீனமாக அல்லது தேசிய கட்சிகளுடன் இணைந்தா களமிறங்கவுள்ளீர்கள்?**

சேர்ந்தோ அல்லது தனித்தோ என்ற விடயத்தில் பல மட்டங்களிலும் பேச்சுவார்த்தைகளையும் கலந்துரையாடல்களையும் நடத்தி கருத்துக்களை அறிந்து வருகின்றோம். அதே நேரம் முஸ்லிம் பிரதிநித்துவத்தைப் பாதிக்காத வகையில் ஓர் ஒழுங்கு முறையில் எதிர்வரும் தேர்தலில் போட்டியிட இருக்கின்றோம். இதுவரையிலும் நாங்கள் எந்தவொரு இறுதி முடிவையும் இன்னும் எட்டவில்லை. இது சம்பந்தமாக பலதரப்பட்ட மட்டங்களுடன் நாங்கள் கலந்தாலோசனை செய்து வருகின்றோம். நிச்சயமாக சிறந்த முடிவினை எடுத்து எதிர்வரும் மாகாண சபைத் தேர்தலில் நாங்கள் களமிறங்க இருக்கின்றோம் என்பது உறுதியானதாகும்.

**அண்மைக் காலமாக முஸ்லிம்களுடைய அரசியல் வலுவிழந்து காணப்படுகிறது. இதைப் பற்றி நீங்கள் என்ன கூற விரும்புகின்றீர்கள்?**

அண்மைக் காலமாக அல்ல. இரு தசாப்தங்களாக முஸ்லிம்களுடைய அரசியல் வலுவிழந்து காணப்படுகிறது. இது இன்றும் கேள்விக் குறியாக இருப்பதுதான் உண்மையான நிலையாகும்.முஸ்லிம் அரசியல் தன்மைத்துவங்கள் பற்றி அறிந்து கொள்ள வேண்டுமாயின் முன்னர் இருந்த அரசியல் தலைவர்களுடைய அரசியல் நடவடிக்கைகளையும் இப்போதுள்ள அரசியல் தலைவர்களுடைய நடவடிக்கைகள் எவ்வகையில் அமைந்துள்ளன என்பது பற்றி ஒப்பிட்டுப் பார்த்தால் நன்றாக அறிந்து கொள்ள இயலுமாகும்.

இன்று இனவாதங்கள் தலைவிரித்தாடியதைப் போன்று கடந்த 20 வருடங்களுக்கு முன்னரும் எங்களது சமூகம் இப்படியான நெருக்குவாரங்களுக்கு முகம் கொடுத்துத்தான் இருந்தது. அந்த நேரத்தில் இருந்த தலைவர்கள் சிங்கள சகோதர பெரும்பான்மை சமூகத்தோடும் சிங்கள பெரும்பான்மை ஆட்சியார்களுடனும் மிக நெருக்கமான முறையில் அரசியல் நடிவக்கைகளை முன்னெடுத்தமை காரணமாக அதில் எந்தவிதமான தாக்கமும் முஸ்லிம்களுக்கு ஏற்படவில்லை.

**அப்படியாயின் விசேடமாக அவர்களிடத்தில் காணப்பட்ட அரசியல் பண்புகள் எவை என்று கூறுவீர்களா?**

ஆம்.அந்தக் காலத்தில் இருந்த தலைவர்கள் தங்களுடைய சொந்த நிதிகளைப் பயன்படுத்தி தங்களுடைய சொத்துக்களைக் கூட விற்பனை செய்து சமூகத்திற்காகவும் நாட்டுக்காகவும் அவர்கள் பாடுபட்டுள்ளார்கள். இன்று எல்லோரும்தங்களுடையபாராளுமன்ற ஆசனத்தை தக்க வைத்துக் கொள்வதற்காகவும் தனிப்பட்ட பிரயோசனங்களை அடைந்து கொள்வதற்காகவும் தான் முனைப்புடன் செயற்படுகின்றார்கள் என்பது நன்றாக புலப்படுகிறது.இந்த நிலைமை மாற வேண்டும். அடி மட்டத்தில் இருந்து நல்ல தலைமைத்துவங்கள் இனங்காணப்பட்டு அவர்கள் சமூகத்தால் முன்கொண்டு வரப்பட வேண்டும். நாங்கள் முக்கியமான கால கட்டத்தில் இருந்து கொண்டிருக்கின்றோம்.

**நீங்கள் ஒரு பிரதேச சபை தவிசாளர் என்ற வகையில் முன் வைக்கும் ஆலோசனைகள் என்ன?**

எமது சமூகம் ஒன்று பட்டு நல்ல தலைமத்துவங்களை இனங் கண்டு முன் கொண்டு வராவிட்டால் எதிர் காலத்தில் இன்னு மின்னும் கஷ்டங்களையே நாங்கள் நிச்சயமாக எதிர்நோக்க வேண்டி வரும்.எங்கள் அரசியல் முன்னெடுப்பை அடி மட்டத்தில் இருந்து தெரிவு செய்து அவர்களை முன் கொண்டு வரும் வேலைகளையே செய்து கொண்டு இருக்கின்றோம்.

இது எல்லா மட்டங்களிலும் எல்லாப் பிரதேசங்களிலும் இந்த முன்னெடுப்புக்கள் முன்னெடுக்கப்பட வேண்டும்.சமூகத்திற்காகவும் நாட்டுக்காகவும் ஒரு தூய்மையான சிந்தனையோடு பணியாற்றக் கூடிய அரசியல் தலைமைத்துவங்கள் உருவாக்கப்பட வேண்டும்.

இந்த விடயத்தை எமது முஸ்லிம் சமூகம் அதிகளவு உணர்ந்து செயற்பட வேண்டி இருக்கிறது. துணிவுள்ள செயற்திறன் மிக்க தலைமைத்துவங்களை உருவாக்குகின்ற அதேவேளையில் ஒரு பல்லின சமூகம் வாழக் கூடிய இந்த நாட்டில் ஏனைய சமூகங்களோடு எப்படி நடந்து கொள்ள வேண்டும் என்று வழிகாட்டக் கூடிய தலைமைத்துவங்கள் கட்டாயம் இருக்க வேண்டும்.

ஏனென்றால் இன்றைக்கு மாற்று மத சகோதரர்கள் பேரினவாதக் கட்சிகள் எப்படி இனவாதத்தை மூலதனமாகக் கொண்டு அரசியல் செய்கிறார்களோ அதே மாதரி ஒரு போக்கினையே எமது முஸ்லிம் சமூகத்திலும் காணக் கூடியதாக இருக்கிறது. இது கவலைக்குரிய விடயம்.

இனவாதத்தை மூலதனமாகக் கொண்டு அரசியல் செய்வது என்பது சமூகத்திலுள்ள உணர்ச்சிகளைத் தூண்டுவதோடு மட்டுமல்ல பிழையான வழிநடத்தலுக்கு மக்களை இட்டுச் செல்வதை இந்த தலைமைத்துவங்கள் சற்று உணர்ந்து கொள்ள வேண்டும்.

அப்படி நாங்கள் அல்ல இப்படித் தான் நாங்கள் அரசியல் செய்வோம் என்ற விடாப்பிடியுடன் அரசியல் செய்வோமாக இருந்தால் அது நிச்சயமாக எங்கள் அடுத்த சந்ததியினருக்கு மிகவும் பாரதூரமாக பாதிப்பை ஏற்படுத்தும். ஒரு இக்கெட்டான நிலைமைக்கு இட்டுச் செல்லும் என்பதுதான் என்னுடைய கருத்தாகும்.

ஆகவே நாம் அரசியலை ஒரு பொழுது போக்காகக் கொள்ளாமல் உணர்ச்சிபூர்வமான அரசியல் செய்வதில் இருந்து தவிர்ந்து ஆக்கபூர்வமாகவும் அறிவுபூர்வமாகவும் அரசியலை முன்னெடுப்பதற்கு முஸ்லிம் சமூகத்தில் இருக்கக் கூடிய எல்லா மட்டத்திலும் உள்ள மக்களும் ஒன்றிணைந்து புதுபுது தலைமைத்துவங்களை உருவாக்குவதற்கு ஒன்று பட்டு முன் வருதல் வேண்டும்.

நேர்காணல்
இக்பால் அலி

# பாதுகாப்பற்ற கிணற்றில் யானைகள் விழுந்து காயம்



**செம்மலை கிராமத்தில் சம்பவம்**

முல்லைத்தீவு மாவட்டத்தின் கரைதுறைப்பற்று பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட செம்மலைக் கிராமத்தில் யானைகள் இரண்டு பாழடைந்த கிணறு ஒன்றுக்குள் வீழ்ந்துள்ளது.

செம்மலையின் புளியமுனைப் பகுதியில் பாதுகாப்பற்ற நிலையில் காணப்படும் கிணறு (துரவு) ஒன்றிலேயே மேற்படி யானைகள் விழுந்து சகதிக்குள் சிக்கியுள்ளன.

சம்பவம் தொடர்பில் வனஜீவராசிகள் திணைக்களத்தினருக்கு தகவல் வழங்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

(சண்முகம் தவசீலன்)

# தமிழர் உணர்வாழ்வு அமைப்பின் தலைவர் மோகன் கைது

**மட்டக்களப்பு விசேட நிருபர்**



விடுதலைப் புலிகளை மீண்டும் முகநூல் வாயிலாக புதுப்பித்த குற்றச்சாட்டில் தமிழர் உணர்வாழ்வு அமைப்பின் தலைவர் க.மோகன் ஞாயிற்றுக்கிழமை (02) பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் செங்கலடியில் உள்ள அவரது வீட்டில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிசார் தெரிவித்தனர்.

விடுதலைப் புலிகளை மீண்டும் புதுப்பித்தல் நடவடிக்கையில் முகநூல் வழியாக ஈடுபட்டு வந்துள்ளதாக குற்றம் சுமத்தப்பட்டு 3 மாத கால பொலிஸ் தடுப்பு காவலில் வைத்து விசாரணை செய்ய கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிசார் மேலும் தெரிவித்தனர்.

சந்தேகநபர் ஏறாவூர் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்து விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

காரைநகர் ஆலய திருவிழா;

# உபயக்காரர் உள்ளிட்ட 04 பேர் தனிமைப்படுத்தலில்

**(யாழ்.விசேட நிருபர்)**

கொரோனா சுகாதார விதிமுறைகளை மீறி ஆலயத்தில் திருவிழா நடத்திய உபயக்காரர் உள்ளிட்ட நான்கு பேர் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர்.

காரைநகர் களபூமி பகுதியில் உள்ள ஆலயத்தில் வருடாந்திர மகோற்சவம் நடைபெற்று வருகின்றது. நேற்றைய தினம் திங்கட்கிழமை தேர் திருவிழா நடைபெறவுள்ள நிலையில் நேற்றைய தினம் சப்பர திருவிழா நடைபெற்றது.

அதன் போது காரைநகர் சுகாதார வைத்திய அதிகாரி மற்றும் காரைநகர் பொது சுகாதார பரிசோதகர் ஆகியோரின் அறிவுறுத்தல்களை மீறி ஆலயத்தில் பெருமளவானோர் சப்பர திருவிழாவில் கூடியிருந்தனர்.

சுகாதார விதிமுறைகள் , கட்டுப்பாடுகளை மீறி 50க்கும் மேற்பட்டோர் உரிய முறையில் முக கவசங்கள் இன்றியும் , சமூக இடைவெளிகளை பேணாதும் திருவிழாவில் கூடி இருந்துள்ளனர்.

அதனை அடுத்து, ஆலயத்திற்கு சென்றிருந்த சுகாதார வைத்திய அதிகாரி மற்றும் பொது சுகாதார பரிசோதகர் உள்ளிட்டோர் ஆலய திருவிழாவினை நிறுத்தி, ஆலய குருக்கள் , உபாயக்காரர் , ஆலய நிர்வாகத்தை சேர்ந்தோர் உள்ளிட்ட நான்கு பேரை தனிமைப்படுத்தி உள்ளனர்.

# குறிஞ்சாக்கேணி படகு சேவையை இலவசமாக வழங்க வேண்டும்

**கிண்ணியா மத்திய நிருபர்**



கிண்ணியா நகர சபையையும் கிண்ணியா பிரதேச சபையையும் இணைக்கும் குறிஞ்சாக்கேணி பாலம் உடைக்கப்பட்டு, தற்போது புதிதாக பாலம் நிர்மாணிக்கப்பட்டு வருகின்றது.

இந்த நிலையில் மக்கள் போக்குவரத்துக்காக தற்காலிக பயண ஏற்பாடாக இழுவை படகு சேவை நேற்று தனியார் ஒருவரால் ஆரம்பித்து வைக்கப்பட்டது. இதில் பயணக்கட்டணமாக ஒருவருக்கு 20 ரூபா அறவிடப்படுகின்றது. இது தொடர்பாக பல்வேறு விமர்சனங்கள் முன்வைக்கப்படுகின்றன.

ஒரு பயணி பல முறை இதனூடாக பயணம் செய்ய வேண்டி ஏற்பட்டால் இப்பயணத்திற்காக பல நூறு ரூபாய்களை செலவு செய்ய வேண்டிய நிலை ஏற்படும் என்று விசனம் தெரிவிக்கப்படுகின்றது.

இலங்கையிலேயே மிக நீளமான கிண்ணியா பாலம் கட்டுவதற்கு முன்பாக இயந்திர படகு மூலமே அப்பெரும் கடலை கடந்து மக்கள் பயணம் செய்தனர். இதற்காக எந்தவொரு பணமும் பயணிகளிடமிருந்து அறவிடப்படவில்லை. ஆனால் இந்த இழுவைப் படகுக்கு கட்டணம் அறவிடுவது எந்த வகையிலும் நியாயமாகாது என பலரும் கருத்து தெரிவிக்கின்றனர்.

இந்த பாலம் கட்டி முடியும் வரை தனியார் இழுவை படகுக்கு கட்டணமாக பாதசாரிகள் கொடுக்க வேண்டிய கூலி 46 மில்லியன் ரூபாவாக இருக்கும் என்றும் இவை பொது மக்களின் பணத்தை சூரையாடும் திட்டம் என்றும் தெரிவித்த அவர், அரசியல் தலைவர்களின் திட்டமிடல் இல்லாத செயற்பாட்டின் வெளிப்பாடு இதன் மூலம் தெளிவாகிறது என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

ஒரு பாதையோ பாலமோ திருத்த வேலை நடக்கின்றபோது அதற்குப்பதிலாக தற்காலிக போக்குவரத்து வசதி அமைத்து கொடுக்க வேண்டியது அரசாங்கத்தின் கடமையாகும்.

திகதி 02.05.2021 ஞாயிற்றுக்கிழமை உத்தியோகபூர்வ முடிவுகள் www.nlb.lk NLB NATIONAL LOTTERIES

மஹஜன சம்பத
சீட்டிழுப்பு இலக்கம் : 4469
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 8,371,260.00
ஆங்கில எழுத்து C வெற்றி இலக்கங்கள் 5 0 0 9 7 9
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 13,774,571.60

கொவிசெத Govisetha
சீட்டிழுப்பு இலக்கம் : 2764
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 4,283,120.00
ஆங்கில எழுத்து H வெற்றி இலக்கங்கள் 24 30 36 39
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 69,791,221.20

செவன
சீட்டிழுப்பு இலக்கம் : 334
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 1,563,060.00
ஆங்கில எழுத்து I வெற்றி இலக்கங்கள் 07 11 30 52
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 14,000,000.00

தன நிதானய
சீட்டிழுப்பு இலக்கம் : 506
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 3,430,960.00
ஆங்கில எழுத்து H வெற்றி இலக்கங்கள் 12 47 56 74
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 95,850,982.00

தரு திரி சம்பத
சீட்டிழுப்பு இலக்கம் 36
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 2,062,820.00
ஆங்கில எழுத்து J வெற்றி இலக்கங்கள் 23 41 44 74
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 7,252,258.80

02.05.2021 - தேசிய லொத்தர் சபை உருவாக்கிய மொத்த வெற்றியாளர்கள் எண்ணிக்கை 488,335
பகிர்ந்தளிக்கப்பட்ட மொத்த பரிசுத்தொகை ரூ.19,711,220.00
ரூ. 2,000,000.00 பரிசுகள் 01 ரூ. 1,000,000.00 பரிசுகள் 01 ரூ. 100,000.00 பரிசுகள் 16

- ரூ. 5 லட்சத்துக்கு அதிகமான பரிசுகள் அரசாங்க வரி விதிகளுக்கு உட்படும்.
- பரிசு தொகையை பெற்றுக்கொள்வதற்கு தேசிய அடையாள அட்டை கட்டாயமானதாகும்.
- வெற்றி பெறும் லொத்தர் சீட்டு செல்லுபடியாகும் காலமானது சீட்டிழுக்கும் தினத்தில் இருந்து 6 மாத காலம் வரையிலாகும்.

ජාතික ලොතරැයි මණ්ඩලය
தேசிய லொத்தர் சபை
National Lotteries Board
தொலைபேசி: 0114 607 000, 0112 324 324
பெக்ஸ்: 0114 669 416
இலக்கம் 32, தேஷமான்ய N.W.J. முதலிகே மாவத, கொழும்பு 01

# கேள்விகோரல்

## கொழும்பு தெற்கு போதனா வைத்தியசாலை — களுபோவில தெஹிவளை துணி வகைகள் மற்றும் அது சார்ந்த உற்பத்திகளை கொள்வனவு செய்தல்

கொழும்பு தெற்கு போதனா வைத்தியசாலையின் பிரதேச பெறுகைக் குழுவின் தலைவரால் வைத்தியசாலைக்கு தேவையான துணி வகைகள் மற்றும் அது சார்ந்த உற்பத்திகளை, கொள்வனவு செய்வதற்காக விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

(1) இது பற்றி ஆர்வம் காட்டுகின்றவர்கள் கேள்வி ஆவணக் கட்டணமாக ரூ.2000.00 மீளளிக்கப்படாத விண்ணப்பப்படிவக் கட்டணத்தை கொழும்பு தெற்கு போதனா வைத்தியசாலையின் பணிப்பாளருக்கு செலுத்தி பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டுடன் தமது தேசிய அடையாள அட்டையை சமர்ப்பித்து 2021.05.04 முதல் 2021.05.17 வரை சாதாரண அலுவலக நாட்களில் மு.ப.9.00 முதல் பி.ப.2.00 வரை இவ் வைத்தியசாலையின் நிதிப்பிரிவில் கேள்வி ஆவணங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

(2) கேள்வி விண்ணப்பங்கள் உள்ளிடும் உறையின் இடது பக்க மேல் மூலையில் - கொழும்பு தெற்கு போதனா வைத்தியசாலை, களுபோவில தெஹிவளை - துணிவகைகள் மற்றும் அது சார்ந்த உற்பத்திகளுக்கான விலைமனுக்கள் - 2021.05.18 என்று குறிப்பிட்டு 2021.05.18 மு.ப.10.00 இற்கு அல்லது அதற்கு முன் கிடைக்குமாறு தலைவர், பிரதேச பெறுகைக்குழு, கொழும்பு தெற்கு போதனா வைத்தியசாலை, களுபோவில, தெஹிவளை என்ற முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்பலாம் அல்லது கொழும்பு தெற்கு போதனா வைத்தியசாலை, களுபோவில, தெஹிவளை என்ற முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்பலாம் அல்லது கொழும்பு தெற்கு போதனா வைத்தியசாலையின் கணக்காளர் பணிமனையில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடலாம். விலைமனுக்களை ஏற்றுக்கொள்ளும் இறுதித்திகதி 2021.05.18 மு.ப.10.00 இற்கு இடம்பெறுவதுடன் அன்றே மு.ப.10.00 இற்கு கணக்காளர் பணிமனையில் விலைமனுக்கள் திறக்கப்படும். விலைமனுக்களை திறப்பதற்கு முன்னர் சாம்பிளை பொது களஞ்சியத்திற்கு ஒப்படைத்து பொது களஞ்சிய பொறுப்பாளரால் ஏற்கப்பட்டதாக உறுதி செய்துள்ள கடிதத்தின் பிரதியை விலைமனுவுடன் சமர்ப்பித்தல் வேண்டும்.

(3) கேள்வி ஆவணங்கள் 02 பிரதிகளுடன் மூலப்பிரதி மற்றும் நகல் பிரதியெனக் குறிப்பிட்டு வேறு வேறு உறைகளில் இட்டு அவ் உறைகள் 02 ஐ தனி உறையில் இட்டு சமர்ப்பித்தல் வேண்டும்.

(4) கேள்விகள் ஏற்றுக்கொள்ளல் முடிவடைந்தவுடன் அவ் இடத்திலேயே கேள்வி விண்ணப்பங்கள் திறக்கப்படுவதுடன், கேள்விதாரர் அல்லது அவரது அதிகாரமளிக்கப்பட்ட ஒரு பிரதிநிதிக்கு அவ்வேளையில் சமுகமளிப்பதற்கு அனுமதியளிக்கப்படும்.

(5) கேள்வி ஆவணங்களை கட்டணங்கள் இன்றி கொழும்பு தெற்கு போதனா வைத்தியசாலையின் கணக்காளர் பணிமனையில் பரீட்சிக்கலாம்.

(6) அரச ஒப்பந்தங்கள், நிபந்தனைகளை மீறி அபகீர்த்தியானோர் பட்டியலில் இடம்பெறாத நபர்களுக்கு கேள்விப் பத்திரங்கள் விநியோகிக்கப்படும்.

(7) குறித்த கேள்விகளை முழுமையாக அல்லது அதன் ஒரு பகுதியை ஏற்றுக்கொள்ளல் அல்லது நிராகரிக்கும் உரிமை பிரதேச பெறுகைக்குழுவிற்கு உரியது.

(8) மேலதிக விபரங்களுக்கு கொழும்பு தெற்கு போதனா வைத்தியசாலையின் கணக்காளரை அழையுங்கள்

(தொலைபேசி இலக்கம் - 0112763038

**தலைவர்**
**பிரதேச பெறுகைக்குழு,**
**கொழும்பு தெற்கு போதனா வைத்தியசாலை**
**களுபோவில, தெஹிவளை**

OBSERVER JOBS
BREAKING BOUNDARIES
THE COUNTRY'S LARGEST RECRUITMENT DATABASE
FOR JOBSEEKERS
www.observerjobs.lk

## பூங்காப் பயிர் ஆய்வு மற்றும் அபிவிருத்தி நிறுவனம், கன்னொருவ

# கேள்வி கோரல்

**இலங்கையின் 14 மாவட்டங்களிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட 15 கமத்தொழில் சேவை நிலையங்களில் வயல் காணிகளிலிருந்து பெற்றுக்கொண்ட மண் சாம்பிள் ஐம்பதாயிரத்தை (50,000) மண் பரிசீலனை செய்து உர பரிந்துரைகளை வழங்குவதற்கு குறித்த பகுப்பாய்வு கூடங்களுக்கான இரசாயனப் பொருட்களை கொள்வனவு செய்தல்.**

பூங்காப் பயிர் ஆய்வு மற்றும் அபிவிருத்தி நிறுவனத்தின் பெறுகைக் குழுவின் தலைவரால் நெல் பயிர்ச் செய்கையின் மண்ணைப் பரீட்சித்து உர பரிந்துரைகளை வழங்கும் வேலைத் திட்டத்தின் கீழ் 14 மாவட்டங்களிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட 15 கமத்தொழில் சேவை நிலையங்களில் வயல் நிலங்களிலிருந்து பெற்றுக்கொண்ட சாம்பிள் ஐம்பதாயிரம் (50,000) மண் பரிசீலனை செய்து உர பரிந்துரைகளை வழங்குவதற்காக பகுப்பாய்வு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு இரசாயனப் பொருட்களை கொள்வனவு செய்வதற்காக உள்ளூர் கேள்விதாரர்களிடமிருந்து பொறியிடப்பட்ட கேள்விகள் கோரப்படுகின்றன பெறுகை வழிகாட்டியின் கீழ் 13ஆம் செயற்றிட்டத்தின் 8:1 இல் தரப்பட்டுள்ளவாறு விண்ணப்பதாரிகள் 1987 இல 03 பொது ஒப்பந்த சட்டத்தின் கீழான பதிவாளரின் கீழே பதிவு செய்யப்பட்டிருத்தல் வேண்டும்.

மேற்படி விடயத்திற்காக ஒரு கேள்விப் படிவத்தை மாத்திரம் பாவித்தல் வேண்டும் ரூபா 3000/- மீளளிக்கப்படாத கட்டணத்தை விவசாயத் திணைக்களத்தின் காசாளரிடம் காசாகச் செலுத்தி பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டை த.பெ.11, கன்னொருவ, பேராதனை என்ற முகவரியில் அமைந்துள்ள பூங்காப் பயிர் ஆய்வு மற்றும் அபிவிருத்தி நிறுவனத்தின் அலுவலகத்திற்கு சமர்ப்பித்த பின்னர்ஆங்கில மொழியில் தயாரிக்கப்பட்ட கேள்வி ஆவணங்களை 2021 மே 04 முதல் மே 24 வரை வாரத்தின் வேலை நாட்களில் மு.ப. 9.00 முதல் பி.ப. 3.00 வரை பெற்றுக்கொள்ளலாம்.

மேலும் இதனோடு சம்பந்தப்பட்ட மேலதிக விபரங்கள் கேள்வி ஆவணங்களில் குறிப்பிடப்படுவதுடன் இதற்காக ஆர்வம் காட்டுகின்ற கேள்விதாரர்களுக்கு மேற்படி இடத்திலேயே அவ் ஆவணங்களை இலவசமாகப் பரீட்சிக்கலாம்.

சகல கேள்விகளையும் பொறியிடப்பட்ட உறைகளில் இட்டு, அவ் உறையின் இடது பக்க மேல் மூலையில் 'Purchasing of Chemicals Needed for 50000 Soil Samples Analysis for the Soil & Plant Nutrition Division, Horticultural Crops Rescarch & Development Institute. Gannoruwa, Peradeniya' என்று குறிப்பிட்டு தலைவர், பெறுகைக் குழு, பூங்காப் பயிர் ஆய்வு மற்றும் அபிவிருத்தி நிறுவனம், கன்னொருவ, பேராதனை என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும். இல்லையெனில் மேற்படி முகவரியில் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள ஆவணத்தில் குறிப்பிட்டு கேள்விப் பெட்டியில் உள்ளிடலாம்.

கேள்விகளை ஏற்றுக்கொள்ளல் 2021 மே 25ம் திகதி முற்பகல் 10.30 இற்கு முடிவடைவதுடன், உடனடியாக கேள்விகள் திறக்கப்படும். அவ்வேளையில் கேள்விகளை சமர்ப்பித்தவர்களுக்கு அல்லது அவர்களது எழுத்து மூல அதிகாரமுள்ள பிரதிநிதியொருவருக்கு சமுகமளிக்கலாம். தாமதமாகக் கிடைக்கும் கேள்விகள் நிராகரிக்கப்படும். சகல கேள்விகளும் இலங்கை மத்திய வங்கியினால் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக வங்கியிலிருந்து பெற்றுக்கொண்ட ரூ. 86400.00 (எண்பத்து ஆறாயிரத்து நானூறு) வங்கிப் பிணையொன்றை விவசாயப் பணிப்பாளர் நாயகத்தின் பெயரில் சமர்ப்பித்தல் வேண்டும். காசாக செலுத்துவதாயின் பிணை ரூ. 43200.00 (நாற்பத்து மூவாயிரத்து இருநூறு) ஆகும். வங்கிப் பிணையின் செல்லுபடியாகும் காலம் 2021.09.06 வரையானதாக இருத்தல் வேண்டும்.

எந்த கொள்வனவையும் நிராகரிக்கும் உரிமை அல்லது சகல கேள்வியையும் நிராகரிக்கும் உரிமை பூங்காப் பயிர் ஆய்வு மற்றும் அபிவிருத்தி நிறுவனத்தின் பெறுகைக் குழுவிற்கு உரியது.

**தலைவர்,**
**பிரதேச பெறுகைக் குழு**
**பூங்காப் பயிர் ஆய்வு மற்றும் அபிவிருத்தி நிறுவனம்**
**கன்னொருவ, பேராதனை.**
**2021.05.04**
**தொ.பே. 081-2388011/12**

கடற்றொழில் அமைச்சு

அலங்கார மீன்கள், நன்னீர் மீன்கள், இறால்களை வளர்த்தல், கடற்றொழில் துறைமுகங்கள் அபிவிருத்தி, பலநாள் கடற்றொழில் அலுவல்கள் மற்றும் மீன் ஏற்றுமதி இராஜாங்க அமைச்சு

NAQDA

# இலங்கை தேசிய நீர் உயிரின வளர்ப்பு அபிவிருத்தி அதிகாரசபை (NAQDA)

## கிளிநொச்சி மற்றும் யாழ்ப்பாண மாவட்டங்களின் கடல் அட்டை ஏற்றுமதி கிராமங்களிலுள்ள கொத்தணி அடிப்படையிலான கடல் அட்டை பண்ணைகளை தாபித்தல் தொடர்பாக ஆர்வமுள்ளவர்களுக்கான அழைப்பிதழ்

**Contract No.: NQ/DPC/2021/PPP/03**

அலங்கார மீன்கள், நன்னீர் மீன்கள், இறால்களை வளர்த்தல், கடற்றொழில் துறைமுகங்கள் அபிவிருத்தி, பலநாள் கடற்றொழில் அலுவல்கள் மற்றும் மீன் ஏற்றுமதி இராஜாங்க அமைச்சின் மேற்பார்வையின் கீழுள்ள இலங்கை தேசிய நீர் உயிரின வளர்ப்பு அபிவிருத்தி அதிகார சபையானது இலங்கையின் நன்னீர் மீன் பிடித்தல் ஆகியவற்றிற்கான தேசிய நீர் உயிரின வளர்ப்பு அபிவிருத்தி மற்றும் ஊக்குவித்தலுக்கான அரசாங்கத்தின் பிரதான அமைப்பாகும்.

இலங்கை தேசிய நீர் உயிரின வளர்ப்பு அபிவிருத்தி அதிகார சபையானது ஏற்றுமதி அடிப்படையிலான கடல் உணவு உற்பத்தியை மேம்படுத்தவும் அத்துடன் அப்பிரதேசங்களில் வாழ்வாதார செயற்பாடுகளை அபிவிருத்தி செய்வதற்காகவும் கிளிநொச்சி மற்றும் யாழ்ப்பாண மாவட்டங்களில் கொத்தணி அடிப்படையிலான கடல் அட்டை பண்ணைகளை அமுல் நடாத்துவதற்காக திட்டமிட்டுள்ளது. மேற்கூறப்பட்டுள்ள மாவட்டங்களின் கடல் சார்ந்த பிரதேசங்களில் கொத்தணி அடிப்படையிலான கடல் அட்டை அடைப்புக்களை தாபிப்பதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. இந்த செயற்திட்டங்கள் தெரிவு செய்யப்பட்ட முதலீட்டாளர் மற்றும் கொத்தணி கடற்றொழிலாளர்களின் கூட்டுப்பங்காண்மையுடன் முன்னெடுத்து செல்வதற்காக எதிர்பார்க்கப்படுகின்றது.

கொத்தணி அடிப்படையிலான கடல் அட்டை பண்ணைச் செய்கையை அவர்களின் சொந்தமான இளம் குஞ்சுகளுக்கான பொரிப்பிடங்களை வழங்குவதன் மூலம் தாபித்து முன்னெடுத்துச் செல்வதற்காக கடற்றொழில் நிறுவனங்கள், கடற்றொழில் சமூகங்கள், நிறுவனங்கள் மற்றும் ஏனைய ஆர்வமுள்ள தனியார் முதலீட்டாளர்களிடமிருந்து ஆர்வ வெளிப்பாடுகள் அழைக்கப்படுகின்றன.

விண்ணப்பத்தில் பின்வரும் விபரங்கள் வழங்கப்படல் வேண்டும். (அ) கம்பனியின் பொதுவான தகவல் (ஆ) சட்ட ரீதியிலான நிலபரம் (இ) தொழில் முயற்சியாளரின் நிதிசார் ஆற்றலை காட்சிப்படுத்துவதற்கான ஆவணங்கள் (ஈ) கடல் அட்டைகளின் செய்கை, வளர்த்தல் மற்றும் சந்தைப்படுத்தலிலுள்ள அனுபவம். (உ) இந்த செயற்திட்டத்திற்காக கடல் அட்டை இளம்பருவ குஞ்சுகளை வழங்கும் ஆற்றல் தொடர்பான விபரங்கள் (ஊ) தொழில்நுட்ப ஆளணியினர்களின் விபரங்கள் (எ) நீர் உயிரின வளர்ப்பு தொழில்துறை தொடர்பாக எந்தவொரு நீதிமன்றினாலும் அல்லது அதிகாரம் வழங்கப்பட்ட அமைப்பொன்றினாலும் தொழில் முயற்சியாளர் குற்றவாளியாக தீர்ப்பிடவில்லை என்பதற்கான சத்திய பிரமாணமொன்று.

உரித்தான செயற்றிட்டத்திற்கான ஆர்வமுள்ளவர்களின் விபரங்களுடனான விண்ணப்பங்கள் 2021 ஜூன் 04 ஆம் திகதியன்று பி.ப. 2 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் வகையில் தலைவர், இலங்கை தேசிய நீர் உயிரின வளர்ப்பு அபிவிருத்தி அதிகாரசபை, இல. 41/1, புதிய பாராளுமன்ற வீதி, பெலவத்த, பத்தரமுல்ல என்ற முகவரியை வந்தடையும் வகையில் அனுப்பப்படல் வேண்டும். தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் **"Expression of Interest – Establishment of cluster based sea cucumber farms in Sea Cucumber Export Villages'** என்று சொற்களை தயவு செய்து குறிப்பிடவும்.

பெற்றுக் கொள்ளப்பட்ட ஆர்வ வெளிப்பாடுகளின் திட்டவட்டமான முறைமையான மதிப்பீட்டின் பின்னர், விண்ணப்பதாரிகள் தெரிவு செய்யப்பட்டு முன்மொழிவுகளுக்கான அழைப்புக்கள் இந்த செயற்திட்டம் தொடர்பான நியதிக் குறிப்புக்களுடன் தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பதாரிகளுக்கு அனுப்பப்படும். தொழில்நுட்ப மற்றும் நிதிசார் முன்மொழிவுகள், தனித்தனியாக மதிப்பீடு செய்யப்பட்டு மிகவும் சிறந்த விண்ணப்பதாரியானவர் செயற்திட்டத்தின் அமுல் நடாத்தலுக்காக தெரிவு செய்யப்படுவார்.

**தலைவர்,**
**இலங்கை தேசிய நீர் உயிரின வளர்ப்பு அபிவிருத்தி அதிகார சபை**
**04.05.2021**

**மேலதிக தகவலுக்காக, தொடர்பு கொள்ளவும்.**
**உதவிப் பணிப்பாளர்**
**கரையோர நீர்வாழ் உயிரினவளர்ப்பு அபிவிருத்தி - வட மாகாண**
**தொலைபேசி இல.: +9421 2283890/ +9477 8415543**
**மின்னஞ்சல்: adcad.np@naqda.gov.lk**
**இணையதளம்: www.naqda.gov.lk**

Daily News Classifieds, the Housewives' companion

கடற்றொழில் அமைச்சு

அலங்கார மீன்கள், நன்னீர் மீன்கள், இறால்களை வளர்த்தல், கடற்றொழில் துறைமுகங்கள் அபிவிருத்தி, பலநாள் கடற்றொழில் அலுவல்கள் மற்றும் மீன் ஏற்றுமதி இராஜாங்க அமைச்சு

NAQDA

# இலங்கை தேசிய நீர் உயிரின வளர்ப்பு அபிவிருத்தி அதிகார சபை (NAQDA)

## நீர் உயிரின வளர்ப்பிற்காக ஆர்வமுள்ளவர்களுக்கான அழைப்பிதழ்

Contract No.: NQ/DPC/2021/PPP/04

அலங்கார மீன்கள், நன்னீர் மீன்கள், இறால்களை வளர்த்தல், கடற்றொழில் துறைமுகங்கள் அபிவிருத்தி, பலநாள் கடற்றொழில் அலுவல்கள் மற்றும் மீன் ஏற்றுமதி இராஜாங்க அமைச்சின் மேற்பார்வையின் கீழ் இயக்கப்படுகின்ற இலங்கை தேசிய நீர் உயிரின வளர்ப்பு அபிவிருத்தி அதிகார சபையானது இலங்கையின் நன்னீர் மீன்பிடித்தல் ஆகியவற்றிற்கான தேசிய நீர் உயிரின வளர்ப்பு அபிவிருத்தி மற்றும் ஊக்குவித்தலுக்கான அரசாங்கத்தின் பிரதான அமைப்பாகும்.

அந்நிய செலாவணியை பிரதான இலக்காகக் கொண்டு கடல்சார் நீர் உயிரின வளர்ப்பின் மூலமாக 8700 மெ.தொ. உற்பத்தியொன்று 2020 ஆம் ஆண்டில் பெறப்பட்டது. மேலும், 2025 ஆம் ஆண்டில் மேற்குறிப்பிட்டுள்ள அளவை 60,000 மெ.தொ. வரையும் அதிகரிப்பதற்கான திட்டங்கள் தயாரிக்கப்பட்டுள்ளன. இவ்வாறான இலக்குகளை அடைவதற்காக, பின்வரும் காணிகளை 30 வருடங்களுக்கு நீண்டகால குத்தகைக்கு வழங்கப்படுவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. எனவே, பின்வரும் காணிகளில் வர்த்தக அடிப்படை மற்றும் பாதுகாக்கப்பட்ட முறைமையில் கரையோர நீர் உயிரின வளர்ப்பு உற்பத்திக்காக தனியார் தொழில்முயற்சியாளர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

(01) மட்டக்களப்பு மாவட்டத்தின் மண்முனை பிரதேச செயலகப்பிரிவிற்குட்பட்ட கொக்கட்டிச்சோலை தென் மேற்கில் அமைந்துள்ள 380 ஏக்கர் அண்ணளவான 153.76 ஹெக்டயர் அரசாங்க காணியானது நீர் உயிரின வளர்ப்பிற்கு பொருத்தமானதென அடையாளம் காணப்பட்டுள்ளது.

(02) ஹம்பந்தொட்ட மாவட்டத்தில் அம்பலந்தொட்ட பிரதேச செயலகப்பிரிவிற்குட்பட்ட கல்முல்லயில் நீர் உயிரின செயற்திட்டத்திற்காக 89 ஹெக்டயர் (200 ஏக்கர்கள் காணிப் பிரதேசம் ஒதுக்கப்பட்டுள்ளது.

விண்ணப்பத்தில் பின்வரும் விபரங்கள் சுருக்கமாக வழங்கப்படல் வேண்டும். (அ) தொழில்முயற்சியாளரின் பொதுவான தகவல் (ஆ) சட்டரீதியிலான நிலபரம் (இ) தொழில்முயற்சியாளரின் நிதிசார் ஆற்றலை காட்சிப்படுத்துவதற்கான ஆவணங்கள் (ஈ) நீர் உயிரின வளர்ப்பிலுள்ள அனுபவம். (உ) இந்த செயற்திட்டத்திற்காக மீன் முட்டைகளை வழங்கும் ஆற்றல் தொடர்பான விபரங்கள் (ஊ) தொழில்நுட்ப ஆளணியினர்களின் விபரங்கள் (எ) நீர் உயிரின வளர்ப்பு தொழில்துறை தொடர்பாக எந்தவொரு நீதிமன்றினாலும் அல்லது அதிகாரம் வழங்கப்பட்ட அமைப்பொன்றினாலும் தொழில்முயற்சியாளர் குற்றவாளியாக தீர்ப்பிடவில்லை என்பதற்கான சத்திய பிரமாணமொன்று.

உரித்தான செயற்திட்டத்திற்கான ஆர்வமுள்ளவர்களின் விபரங்களுடனான விண்ணப்பங்கள் 2021 ஜூன் 04 ஆம் திகதியன்று பி.ப. 2 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் வகையில் தலைவர், இலங்கை தேசிய நீர் உயிரின வளர்ப்பு அபிவிருத்தி அதிகாரசபை, இல. 41/1, புதிய பாராளுமன்ற வீதி, பெலவத்த, பத்தரமுல்ல என்ற முகவரியை வந்தடையும் வகையில் அனுப்பப்படல் வேண்டும். தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் **"Expression of Interest – Provision of lands for Aquaculture"** என்று சொற்களை தயவு செய்து குறிப்பிடவும்.

பெற்றுக் கொள்ளப்பட்ட ஆர்வ வெளிப்பாடுகளின் திட்டவட்டமான முறைமையான மதிப்பீட்டின் பின்னர், விண்ணப்பதாரிகள் தெரிவு செய்யப்பட்டு முன்மொழிவுகளுக்கான அழைப்புக்கள் இந்த செயற்திட்டம் தொடர்பான நியதிக் குறிப்புக்களுடன் தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பதாரிகளுக்கு அனுப்பப்படும். தொழில்நுட்ப மற்றும் நிதிசார் முன்மொழிவுகள், தனித்தனியாக மதிப்பீடு செய்யப்பட்டு மிகவும் சிறந்த விண்ணப்பதாரியானவர் செயற்திட்டத்தின் அமுல்நடாத்தலுக்காக தெரிவு செய்யப்படுவார்.

**தலைவர்,**
**இலங்கை தேசிய நீர் உயிரின வளர்ப்பு அபிவிருத்தி அதிகாரசபை**
**04.05.2021.**

**மேலதிக தகவலுக்காக,**
**உதவிப் பணிப்பாளர், (கரையோர)**
**தொலைபேசி இல.:** +9411 278 6578/ +9411 278 6578/ +9471 805 5360
**தொலைநகல்:** +9411 278 6578/+9411 278 6493
**மின்னஞ்சல்:** adcad@naqda.gov.lk
**இணையதளம்:** www.naqda.gov.lk




# இரத்தினபுரி மாவட்டத்தில் புதிதாக 179 பேருக்கு கொரோனா தொற்று

காவத்தை தினகரன் விசேட நிருபர்



இரத்தினபுரி மாவட்டத்தில் புதிதாக கொரோனா தொற்றாளர்கள் 179 பேர் இனங்காணப்பட்டுள்ளதாக மாவட்ட செயலாளர் மாலணி லொக்குபோத்தாகம தெரிவித்தார். இரத்தினபுரி மாவட்ட கொரோனா தொற்று நிலைமை குறித்து நேற்றுமுன்தினம் கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இது குறித்து அவர் தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில்,

இரத்தினபுரி மாவட்டத்தில் நிவித்திகல பிரதேச செயலகப் பிரிவில் 4 பேரும், இரத்தினபுரி பிரதேச செயலகப் பிரிவில் 7 பேரும், கொடக்கவெல பிரதேச செயலகப் பிரிவில் 6 பேரும், கலவான பிரதேச செயலகப் பிரிவில் 53 பேரும், இம்புல்பே, அயகம, எஹலியகொடை ஆகிய பிரதேச செயலகப் பிரிவில் தலா 5 பேரும், குருவிட்ட பிரதேச செயலகப் பிரிவில் 46 பேரும், பலாங்கொடை பிரதேச செயலகப் பிரிவில் 7 பேரும், காவத்தை பிரதேச செயலகப் பிரிவில் 11 பேரும், கிரியெல்ல பிரதேச செயலகப் பிரிவில் 12 பேரும், பெல்மதுளை பிரதேச செயலகப் பிரிவில் 4 பேரும், கொலன்ன பிரதேச செயலகப் பிரிவில் 2 பேரும், எம்பிலிபிட்டிய பிரதேச செயலகப் பிரிவில் 12 பேரும் உட்பட இம்மாவட்டத்தில் 179 பேர் கொரோனா தொற்றாளர்களாக இனங்காணப்பட்டுள்ளனர்.

இரத்தினபுரி மாவட்டத்தில் இதுவரை 4288 பேர் கொரோனா தொற்றாளர்களாக உறுதிப்படுத்தப்பட்டுள்ளதுடன் அதில் 3903 பேர் குணமடைந்துள்ளனர்.

இரத்தினபுரி மாவட்டத்தில் 882 குடும்பங்களை சேர்ந்த 2526 பேர் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர்.மக்கள் அனைவரும் சுகாதார விதிமுறையை முறையாக பின்பற்ற வேண்டுமெனவும் இரத்தினபுரி மாவட்ட செயலாளர் மாலணி லொக்குபோத்தாகம மேலும் தெரிவித்தார்.

# திமுக தலைவர் மு.க.ஸ்டாலினுக்கு செந்தில் தொண்டமான் வாழ்த்து



தமிழகத்தில் நடைப்பெற்று முடிந்த சட்டமன்ற தேர்தலில் திராவிட முன்னேற்ற கழகம் பெரும்பான்மையான இடங்களில் வெற்றி பெற்று தமிழகத்தின் புதிய முதல்வராக பொறுப்பேற்க உள்ள மதிப்பிற்குரிய திமுக தலைவர் மு.க.ஸ்டாலினுக்கு வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன் என பிரதமரின் இணைப்புச் செயலாளர் செந்தில் தொண்டமான் தெரிவித்துள்ளார்.

அவ் வாழ்த்துச் செய்தியில் மேலும் கூறப்பட்டுள்ளதாவது,

தன்னுடைய சிறுவயதிலேயே அரசியல் வாழ்க்கையில் அடியெடுத்து வைத்த மதிப்பிற்குரிய திமுக தலைவர் மு.க.ஸ்டாலின் தமிழக உள்ளாட்சி துறை அமைச்சராகவும் தமிழக துணை முதல்வராகவும், 6 முறை சட்டமன்ற உறுப்பினராகவும் பதவி வகித்தவர். இந்த பெருந்தொற்று காலத்தில் தமிழக மக்களின் நம்பிக்கையின் அடையாளமாக திகழும் ஸ்டாலினின் அரசியல் வாழ்வில் மேன்மேலும் வெற்றிகள் கிட்ட இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் சார்பாக மனமார்ந்த வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன்.

# கலைஞர் கருணாநிதியின் ஆளுமையே திராவிட முன்னேற்றக் கழகத்தின் வெற்றிக்கு காரணம்

## வாழ்த்து செய்தியில் ரமேஸ்வரன் எம்.பி



முதன் முறையாக தமிழக முதல்வராக பொறுப்பேற்க உள்ள திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவர் மு.க.ஸ்டாலினுக்கு தனது இதயபூர்வமான வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்வதாக இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் நிதிச்செயலாளரும் நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான மருதபாண்டி ரமேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் வெற்றி குறித்து அவர் தெரிவித்துள்ளதாவது.

தமிழக சட்டமன்றத் தேர்தலில் திமுக கூட்டணி அபார வெற்றி பெற்றுள்ளது. குறிப்பாக, திமுக தனிப்பெருமைப்பான்மையுடன் ஆட்சி அமைக்க உள்ளது. தமிழகத்தின் பெரும் அரசியல் தலைவர்களான புரட்சித் தலைவி செல்வி.ஜெயலலிதா, கலைஞர் மு.கருணாநிதி ஆகியோரின் மறைவுக்குப் பின்னர் நடந்த தேர்தலில் மு.க.ஸ்டாலின் தலைமையிலான திராவிட முன்னேற்றக் கழகம் அமோக வெற்றியீட்டிருப்பது கலைஞர் கருணாநிதியின் ஆளுமைக்கு கிடைத்த வெற்றியாகும். இந்திய அரசியலில் முப்பெரும் அறிஞரும் தமிழகத்தை தனது உழைப்பால் முன் மாதிரி மாநிலமாக முன்னெடுத்துச் சென்ற கலைஞர் அவர்கள் பெருவாழ்வு வாழ்ந்து மறைந்திருந்தாலும் அவரின் சிந்தனையும்,செல்வாக்கும் தமிழக அரசியலில் என்றுமே அழிக்க முடியாத சிற்பங்களாக உயர்ந்து நிற்கின்றன. ஆகவே இந்தியாவின் ஒருமைப்பாட்டிற்கு ஓர் எடுத்துக்காட்டாய்த் திகழ திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவர் மு.க.ஸ்டாலினுக்கு என் மனமார்ந்த வாழ்த்துகள் என்றார்.

# மலையக வடகிழக்கு மக்களின் பிரச்சினைகளுக்கு முக்கியத்துவம் கொடுத்து செயற்படுங்கள்

## வாழ்த்து செய்தியில் இராதாகிருஸ்ணன் எம்.பி



முதல்வர் ஸ்டாலினை வாழ்த்தும் அதே வேளை மலையக வடகிழக்கு மக்களின் பிரச்சினைகளுக்கு முக்கியத்துவம் கொடுத்து செயற்படுங்கள் என இராதாகிருஸ்ணன் எம்.பி வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இதுதாடெர்பில் அவர் கருத்து தெரிவிக்கையில்,

இலங்கை இந்திய மீனவர்களின் பிரச்சினை தொடர்பாக தாங்கள் நன்கு அறிந்தவர் என்ற வகையில் எங்களுடைய இலங்கை மீனவர்களுக்கு பாதிப்பு ஏற்படாத வகையில் ஒரு தீர்வை பெற்றுக் கொடுக்க வேண்டிய தேவை இருக்கின்றது.எனவே இது தொடர்பாக இலங்கை அரசாங்கத்துடன் ஒரு சுமுகமான உறவை பேணி அதற்கான தீர்வை பெற்றுக் கொடுப்பீர்கள் என எதிர்பார்க்கின்றேன்.

10 வருட நீண்ட கால போராட்டத்தின் பின்பு தி.மு.க தமிழ்நாட்டில் ஆட்சியை கைப்பற்றியுள்ளது.அதற்கு மலையக மக்களின் சார்பாக எனது வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கின்றேன்.

உங்களுடைய வெற்றி தமிழ் நாட்டு மக்கள் பல எதிர்பார்ப்புகளுடன் வழங்கியுள்ள வாக்குகளாகும்.எனவே அவர்களுடைய எதிர்பார்ப்புகளை நிறைவேற்றும் வகையில் உங்களுடைய ஆட்சி அமையும் என்ற நம்பிக்கை என்னிடம் இருக்கின்றது.

அரசியலில் நீண்ட அனுபவம் கொண்ட ஒருவர் தமிழ் நாட்டில் முதலமைச்சராக தெரிவு செய்யப்பட்டுள்ளமை பாராட்டிற்குரியது.முதல்வர் ஸ்டாலின் எதிர்கட்சி தலைவராக இளைஞர் அணி செயலாளராக கட்சி தலைவராக படிப்படியாக வளர்ந்து வந்த ஒரு முதல்வர்.

அவருடைய தந்தையார் தமிழக மக்களுக்கு மட்டுமன்றி உலக தமிழர்கள் எங்கெல்லாம் வாழ்கின்றார்களோ அவர்கள் அனைவருக்கும் தலைமைத்துவம் கொடுத்தவர்.அதனை உணர்ந்து ஸ்டாலின் செயற்பட வேண்டும்.

நீங்கள் தனியே தமிழ் நாட்டிற்கு மாத்திரம் முதல்வராக இல்லாமல் எங்களுடைய தொப்புள் கொடி உறவுகள் எங்கெல்லாம் பரந்து வாழ்கின்றார்களோ அவர்களுக்கு பிரச்சினை என்று வருகின்ற பொழுது குரல் கொடுக்கவும் செயற்படவும் தயாராக இருக்க வேண்டும்.

குறிப்பாக இன்று இலங்கையில் வாழுகின்ற தொப்புள் கொடி உறவுகளான மலையக மக்கள் பல்வேறு சந்தர்ப்பங்களில் இடம்பெயர்ந்து தமிழ் நாட்டில் தஞ்சமடைந்துள்ளனர்.

இப்படி தஞ்சமடைந்தவர்கள் இன்று பல்வேறு சட்ட சிக்கல்கலை எதிர் நோக்கியுள்ளனர். அவர்களின் விடயத்தில் அதிக கவனம் எடுத்து இந்திய மத்திய அரசாங்கத்துடன் கலந்துரையாடி தீர்வை பெற்றுக் கொடுக்க முன்வர வேண்டும்.

நீங்கள் பல சவால்களுக்கு மத்தியிலேயே முதல்வராக கடமையை முன்னெடுக்க வேண்டியுள்ளது.அதற்கு தைரியமாக முகம் கொடுக்க கூடிய துணிவு உங்களிடம் இருக்கின்றது.

இலங்கை இந்திய மீனவர்களின் பிரச்சினை தொடர்பாக தாங்கள் நன்கு அறிந்தவர் என்ற வகையில் எங்களுடைய இலங்கை மீனவர்களுக்கு பாதிப்பு ஏற்படாத வகையில் ஒரு தீர்வை பெற்றுக் கொடுக்க வேண்டிய தேவை இருக்கின்றது.எனவே இது தொடர்பாக இலங்கை அரசாங்கத்துடன் ஒரு சுமுகமான உறவை பேணி அதற்கான தீர்வை பெற்றுக் கொடுப்பீர்கள் என எதிர்பார்க்கின்றேன் என குறிப்பிட்டுள்ளார்.

# தோட்டங்களில் விழிப்புணர்வு நடவடிக்கை

நோட்டன் பிரிட்ஜ் நிருபர்



கொரோனா தொற்று விழிப்புணர்வு நடவடிக்கை ஹற்றன் கே.எம். டிவிசனில் நேற்று 03/05 முன்னெடுக்கப்பட்டது.

தோட்ட நிர்வாகத்தின் வேண்டுகோளுக்கிணங்க தொழிலாளர்கள் தொழில் புரியும் இடங்களுக்கு சென்று குடியிருப்புகளில் கொரோனா தொற்றிலிருந்து தம்மை எவ்வாறு பாதுகாத்துக்கொள்வது என்பது தொடர்பில் ஹற்றன் பொலிஸாரினால் விளக்கமளிக்கப்பட்டது .

ஹற்றன் பொலிஸ் பிரதான பொலிஸ் பரிசோதகர் எஸ்.பி.பலிபான தலைமையில் ஆரம்பமாகிய விழிப்புணர்வு நடவடிக்கை ஏனைய தோட்டப்பகுதிகளிலும் முன்னெடுக்கப்படவுள்ளது.





பொகவந்தாலவ முகாமைத்துவத்தின் தீர்மானத்திற்கு எதிர்ப்பு தெரிவித்து 300மேற்பட்ட தொழிலாளர்கள் நேற்று கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் ஈடுப்பட்டனர். இதன்போது எடுக்கப்பட்ட படங்களை இங்கு காணலாம். (படங்கள்: கொட்டக்கலை நிருபர்)

# பவுசர் - ஆட்டோ மோதி விபத்து; மூவர் படுகாயம்

பதுளை தினகரன் விசேட நிருபர்




பண்டாரவளை ஹப்புத்தளை பிரதான பாதையில் நேற்று இடம் பெற்ற வாகன விபத்தில் மூவர் படுகாயங்களுடன் அரசினர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர்.

பவுசர் ஒன்றுடன் முச்சக்கர வண்டி மோதி விபத்துக்குள்ளாகியதில் அதில் பயணித்த

மூவர் படுகாயங்களுக்குள்ளாகி, தியத்தலாவை அரசினர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர்.

பண்டாரவளை ஹப்புத்தளை பிரதான பாதையில் ககாகொல்லை என்ற இடத்தில் இவ்விபத்து நேற்று இடம்பெற்றுள்ளது.

இவ்விபத்தில் காயமுற்ற மூவரில் இருவரின் நிலை கவலைக்கிடமாக இருப்பதாக, தியத்தலாவை அரசினர் மருத்துவமனை விபத்துப் பிரிவு வைத்தியர்கள் தெரிவித்தனர். விபத்து குறித்து, ஹப்புத்தளைப் பொலிஸார் ஸ்தல விசாரணைகளை மேற்கொண்டுள்ளதுடன்,

பவுசர் வாகனத்தின் சாரதி மற்றும் உதவியாளர் ஆகியோர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

# சுகாதார வழிமுறைகளை பின்பற்றாத 25 பேர் மீது சட்ட நடவடிக்கை

நாவலப்பிட்டிய பொலிஸார் மேற்கொண்ட சுற்றிவளைப்பு நடவடிக்கையின் போது சுகாதார வழிமுறைகளைப் பின்பற்றாத பலர் கைது செய்யப்பட்டுள்ளனர். அதில் 25 பேர் மீது வழக்குத் தொடரப்படவுள்ளது.

இன்னும் பலர் எச்சரித்து விடுதலை செய்யப்பட்டனர்.

கைது செய்து பின்னர் எச்சரிக்கை விடுக்கப்பட்டவர்கள் 8 பேர் என பொலிஸார் தெரிவித்தனர். முறையாக முகக் கவசம் அணியாதவர்கள், சமூக இடை வெளியைப் பேணாதவர்கள் போன்ற காரணங்களினால் பலர் கைது செய்யப்பட்டுள்ளனர். அவர்களில் வர்த்தகர்கள் மாணவர்கள், பாதசாரிகள் எனப்பலர் அடங்குவதாக பொலிஸார் தெரிவித்தனர்.

25 பேர் மீது நீதிமன்றில் சட்ட நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

# கொவிட் 19 சுகாதார வழிமுறைகளை முறையாக பின்பற்றவும்

கொரோனா பரவல் அதிகரித்து வருவதால் சுகாதார அதிகாரிகளும் பாதுகாப்பு தரப்பினரும் கூறும் அறிவுரைகளை மக்கள் முறையாக பின்பற்றவேண்டும் என்று கண்டி மாவட்ட பிரதி வைத்திய பணிப்பாளர் விசேட மருத்துவர் நிதர்ஷினி பெரியசாமி தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில்

அயல்நாடான இந்தியாவில் நடப்பதை தொலைக்காட்சியிலும் ஊடகங்களிலும் பார்க்கும் போது கவலையாக இருக்கிறது, இந் நிலைமை இலங்கையிலும் ஏற்படுவதற்கு வாய்ப்பிருக்கின்றது. கடந்த புத்தாண்டு காலத்தில் மக்கள் சுகாதார வழிமுறைகளை முறையாக பின்பற்றாமையால் தற்போது இலங்கையிலும் நாளுக்கு நாள் கொரோனா தொற்று வீதம் அதிகரித்து வருகின்றது. இது நம்மை அச்சப்பட வைக்கின்றது.

ஆகவே மக்கள் அரசாங்கமும் சுகாதார அதிகாரிகளும் பாதுகாப்பு தரப்பினரும் கூறும் அறிவுரைகளை முறையாக பின்பற்றவேண்டும்.

முகக்கவசம் அணிந்து செல்வது, சமூக இடைவெளியை பேணுவது, சவக்காரமிட்டு நன்றாக கைகளை கழுவது, தேவையற்ற பயணங்களையும் தவிர்த்துக்கொள்ளல் போன்ற சுகாதார வழிமுறைகளை பின்பற்ற வேண்டும் என அவர் தெரிவித்தார்.



முன்மொழியப்பட்டுள்ள புதிய தேர்தல் முறை குறித்த விசேட கலந்துரையாடலொன்று பிரதமரின் இணைப்பு செயலாளரும் இ.தொ.காவின் உபத் தலைவருமான செந்தில் தொண்டமானுக்கும் ஊவா மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர்களுக்கும் இடையில் இடம்பெற்றது. இக்கலந்துரையாடலில் சச்சிதானந்தன், தீபா வேலாயுதம், பூமினாதன், சிவலிங்கம், மூர்த்தி ஆகியோர் கலந்து கொண்டனர். இக்கலந்துரையாடலில் ஹல்துமுல்ல பிரதேச சபை தலைவர் அசோக் குமாரும் கலந்து கொண்டார்.

# தந்தைக்கேயுரிய தனயனின் வெற்றி த.வி.கூ செயலாளர் சங்கரி வாழ்த்து



தி.மு.க.ஆட்சியில் 10 ஆண்டுகளின் பின் மீண்டும் உதயசூரியன் உதித்தமை தமிழ் பேசும் நல்லுலகில் மக்கள் அனைவருக்கும் பெரும் மகிழ்ச்சியை தந்துள்ளது என்று தமிழர் விடுதலைக் கூட்டணி செயலாளர் நாயகம் வீ. ஆனந்தசங்கரி வாழ்த்து தெரிவித்துள்ளார்.

அந்த வாழ்த்துச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

நீங்கள் அடைந்த வெற்றி தமிழர்களுக்கு பெரும் திருப்தியை தந்ததோடு, தங்கள் தந்தை இன்று இல்லாதது வருத்தத்திற்குரியதாகும். இச்சந்தர்ப்பத்தில் நீங்கள் இளைஞனாக இருந்த காலத்தில் நடந்த ஒரு சம்பவம் சரித்திர முக்கியத்துவம் பெற்றமையால் இங்கே குறிப்பிட விரும்புகின்றேன்.

ஏறக்குறைய 42 ஆண்டுகளுக்கு மேல் தங்கள் தந்தையார் வகித்து வந்த இதே பதவியை நியாயமற்ற முறையில் அன்றைய அரசு கலைத்த போது சீறியெழுந்த இலங்கை தமிழர் தலைவர் ஜீ.ஜீ.பொன்னம்பலம் தமிழ் நாட்டிற்கு வந்து நீதி கேட்டு வாதாடி வென்ற வழக்கு நடைபெற்ற போது அன்று இலங்கை பாராளுமன்ற உறுப்பினராக இருந்த நான் அன்றைய வெற்றியில் கலந்து கொண்டு மகிழ்ச்சி அடைந்தேன். ஆகவே இன்று நீங்கள் ஈட்டியுள்ள வெற்றி எனக்கு பல மடங்கு மகிழ்ச்சியை தருகிறது. இனப்பிரச்சினை தீர்விற்கு தங்கள் தந்தையார் கலைஞர் ஐயாவின் உதவியை பெறும்படி அன்றைய அரசை வேண்டியிருந்தேன். எமது நாட்டுப் பிரச்சினை தீர உங்களின் பங்களிப்பு மிக முக்கியமானது மட்டுமல்ல அவசியமானது என்றும் ஞாபகமூட்டி உங்கள் தந்தையார் ஆற்றிய பணியை எமது விடயத்திலும் நீங்கள் தொடர வேண்டும் என வேண்டி இலங்கை வாழ் தமிழ் மக்களின் சார்பில் எமது மகிழ்ச்சியையும் வாழ்த்தையும் தெரிவிக்கின்றேன். உங்கள் பணி நீண்ட காலம் தொடர வேண்டும் என ஆண்டவனை பிரார்த்திக்கின்றேன்.

# தமிழகத்தில் திமுக கூட்டணி வெற்றிக்கு மாவை வாழ்த்து



இந்திய நாட்டின் தமிழகத் தேர்தலில் திமுக கூட்டணியின் மாபெரும் வெற்றிக்கு வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறோம் என இலங்கை தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜா அனுப்பி வைத்துள்ள வாழ்த்துச் செய்தியில் தெரிவித்துள்ளார்.

நடைபெற்ற தமிழ் நாட்டின் சட்டசபைத் தேர்தலில் திமுக தலைமையில் கூட்டணிக் கட்சிகள் பெரு வெற்றி பெற்றமை இலங்கைத் தமிழர்களுக்குப்பெரு மகிழ்ச்சியைத் தருகிறது.

தளபதி மு.க.ஸ்டாலின் தலைமையில் தமிழகத்தின் ஆட்சி அமைவதனால் இலங்கைத் தமிழரின் இன விடுதலைக்கும் பேராதரவு கிடைக்குமென நம்பிக்கை கொண்டுள்ளோம்.

இலங்கைத் தமிழர்களின் நலனுக்கு அனைத்துக் கட்சிகளுடனும் மத்திய அரசுடனும் இணக்கம் கொண்டு செயற்படுவதற்கும் வாய்ப்பு ஏற்படும் என நம்புகிறோம்.

திராவிட இயக்கத் தலைவர் தமிழ் நாட்டு மக்கள் தலைவர் கலைஞர் கருணாநிதியின் கொள்கை வழி நின்று எதிர்காலத்திலும் தலைவர், தளபதி முதலமைச்சர் ஸ்டாலின் தமிழகத்தின் வெற்றிக்கும் உழைத்திட இலங்கைத் தமிழர் தரப்பில் அனைத்துக் கட்சித் தலைவர்களுக்கும், வெற்றி பெறவைத்த மக்களுக்கும் நாம் இச்சந்தர்ப்பத்தில் பாராட்டுக்களையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கிறோம் என மாவை சேனாதிராஜா அனுப்பியுள்ள வாழ்த்துச் செய்தியில் தெரிவித்துள்ளார்.

பி சி ஆர் என நினைத்து;

# அம்பியூலன்ஸைக் கண்டதும் தெறித்தோடிய பக்தர்கள்

*யாழ். மீசாலை பகுதி ஆலயம் ஒன்றில் பரபரப்பு!*

மீசாலை வேம்பிராய் கல்லடி விநாயகர் ஆலயத் தேர்த்திருவிழா நேற்று முன்தினம் காலை இடம்பெற்றது.

இதன் போது நூற்றுக்கு மேற்பட்ட பக்தர்கள் கலந்து கொண்டதை அடுத்து அங்கு விரைந்த பொலிஸார் திருவிழாவை நிறுத்துமாறு அறிவித்துள்ளனர்.

ஆனாலும் பக்தர்கள் அங்கிருந்து கலைந்து வயல்களில் தஞ்சம் புகுந்ததால் 50 பேருடன் தேரை விரைவாக முடிவுக்கு கொண்டுவர அனுமதியளிக்கப்பட்டது.

பொலிஸார் சென்றதும் பக்தர்கள் திரும்பவும் ஒன்று கூட முயன்ற போது அம்புலன்ஸ் வருகை தந்ததை யடுத்து பிசி ஆர் பரிசோதனையை மேற்கொள்ள பொலிஸாரே அம்புலன்ஸ் வண்டியுடன் வருகின்றனர் என்று கருதி பக்தர்கள் அங்கிருந்து தெறித்தோடினர்.

எனினும் பொலிஸார் அவ்விடத்தை விட்டு அகன்ற பின்னர் 50 பக்தர்களுடன் தேர் இருப்பிடத்துக்கு கொண்டுவரப்பட்டு தேர்த்திருவிழா நிறைவு செய்யப்பட்டது.

# இராணுவ சோதனை சாவடி இருப்பது எமது நன்மைக்காகவே

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா

**ஓமந்தை விஷேட, வவுனியா விசேட நிருபர்கள்**



இராணுவ சோதனை சாவடி இருப்பது எமது வசதிக்காகவே என்று கடற்றொழில் மற்றும் நீரியல் வள அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார். வவுனியாவிற்கு (02) வருகை தந்திருந்த அமைச்சர் ஊடகங்களிற்கு கருத்து தெரிவிக்கும் போதே இவ்வாறு தெரிவித்தார்.

மேலும் அவர் தெரிவிக்கையில்,

கொரோனா என்பது இலங்கையில் மாத்திரமல்ல எல்லா நாடுகளிலுமே தற்போது பாரிய அச்சத்தை ஏற்படுத்தி வருகின்றது. சில நாடுகளில் பார தூரமான விளைவுகளை ஏற்படுத்தியுள்ளது. அதில் இந்தியாவையும் குறிப்பிடலாம். ஆனால் இலங்கையை பொறுத்தவரை கட்டுப்பாட்டில் வைத்திருந்த போதும் சில கவனக்குறைவு காரணமாக மீண்டும் அதிகரிக்க தொடங்கியுள்ளது. இருந்த போதும் இதனை கட்டுப்படுத்தும் நடவடிக்கையை அரசாங்கம் எடுத்து வருகின்றது. அதே போன்று விமான நிலையத்தின் ஊடாக வெளிநாடுகளில் இருந்து வருகை தருபவர்களை கூட கட்டுப்படுத்தி இருக்கின்றது.

வெளிநாடுகளில் இருந்து பரவுவதற்கான வாய்ப்புக்கள் இருந்தாலும் கூட அவ்வாறு நடைபெறாமல் குறைக்கப்பட்டுள்ளது. முழுமையாக கட்டுப்படுத்துவதற்காக நாட்டை முழுமையாக முடக்குவதில் எவ்வித பிரயோசனம் இல்லை. எமது நாடு மட்டுமல்லாது அனைத்து நாடுகளுமே தங்களது நாட்டினை முடக்கம் நிலைக்கு உட்படுத்தாமல் பாதிக்கப்பட்ட பகுதிகளே மாத்திரமே அந்த அரசாங்கங்கள் முடக்கி வருகின்றது. அவ்வாறு நாட்டினை முடக்கும் சந்தர்ப்பத்தில் நாடு பட்டினியில் மரணிக்க வேண்டி வரும்.

அதற்காகத்தான் எமது அரசாங்கம் பல்வேறு சுகாதார நடவடிக்கைகளை சுகாதார முறைகளில் பேணுவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது.

குறிப்பாக வீதியிலே இருக்கின்ற இராணுவ சோதனை சாவடிகளில் இராணுவத்தினர் முகக்கவசம் அணியாதவர்களை மறித்து அணிந்து செல்லுமாறு அறுவுறுத்தி வருகின்றனர்.

மேலும் இராணுவச்சோதனை சாவடிகள் எங்களிற்கு வசதியாக இருப்பதுடன் நாங்கள் அதனை வசதியாக மாற்றிக்கொள்ள வேண்டுமே தவிர அதனை கெடுபிடி என்று அதனை நோக்கக்கூடாது. அவர்கள் முகக்கவசம் அணிந்து செல்லுமாறு அறிவுறுத்தி வருகின்றனர். அதனை சொல்லுவதற்கும் ஒருவர் தேவைதானே அதனைத்தான் அவர்கள் செய்து வருகின்றனர். ஆகவே சோதனை சாவடி இருப்பதால் முகக்கவசம் அணிய வேண்டும் என அனைவரும் கவனமாக இருப்பார்கள். அத்தோடு சோதனை சாவடி நிரந்தரமாக்க வேண்டிய தேவை இல்லை .

கடந்த காலத்தில் ஜனாதிபதி தேர்தலின் போதும், பாராளுமன்ற தேர்தலின் போதும் கொரோனா பெரிய பிரச்சினையாக இருக்கவில்லை. இன்று இத்தொற்று நோய் அதிக பிரச்சினையாக உள்ளமையால் அதனை கருத்தில் எடுக்க வேண்டும். அதனை விட புதிய முறையிலா அல்லது பழைய முறையிலா தேர்தல் நடாத்துவதா என்ற முடிவுக்கு வரவில்லை. இது தொடர்பான கலந்துரையாடல்கள் விவாதங்கள் நடந்து கொண்டிருக்கின்றது.

புதிய முறையில் தேர்தல் நடாத்துவதாக இருந்தாலும் அல்லது பழைய முறையில் தேர்தல் நடாத்துவதாக இருந்தாலும் பாராளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை தேவை. ஏனென்றால் இது தொடர்பான சட்டத்தை திருத்த வேண்டும். பழைய முறையில் தேர்தல் நடாத்துவதாக இருந்தால் அதற்கு காலம் போகாது. ஆனால் புதிய முறையில் தேர்தல் நடாத்துவதாக இருந்தால் எல்லை நிர்ணய குழுக்கள் அமைக்கப்பட வேண்டும். அதற்கு நிறைய காலம் எடுக்கும். சிலவேளைகளில் நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை எடுப்பது மாத்திரமல்லாது சர்வஜன வாக்கெடுப்பிற்கும் போக வேண்டி வரும். அதன் அடிப்படையில் அரசாங்கம் தமக்குள்ளேயும், எதிர் தரப்பினருடனும் கலந்துரையாடி வருகின்றது. இந்த தேர்தலை விரைவாக நடாத்துவதற்கு ஒத்துழைப்பு வழங்குமாறு கேட்டுள்ளதாக மேலும் தெரிவித்தார்.

# சுகாதாரப் பணியாளர் நியமனத்தில் எம்மையும் இணையுங்கள்

புறக்கணிக்கப்பட்ட சுகாதாரத் தொண்டர்கள் அங்கஜன் எம்.பியிடம் கோரிக்கை

**சாவகச்சேரி விசேட நிருபர்**

வடக்கு மாகாண சுகாதாரத் தொண்டர்கள் 388பேரை ஒரு இலட்சம் அரச வேலைவாய்பிற்குள் இணைத்து அவர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்குமாறு கடந்த (29/04) ஜனாதிபதி செயலகம் பல்நோக்கு செயலணி திணைக்களத்திற்கு பணித்துள்ள நிலையில் இவ் நியமனத்திற்குள் உள்ளீர்க்கப்படாத சேவை அனுபவம் உடைய சுகாதாரத் தொண்டர்கள் தம்மையும் இந் நியமனத்திற்குள் உள்ளீர்க்குமாறு யாழ் மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுத்தலைவர் அங்கஜன் இராமநாதனிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

அவர்கள் தமது கோரிக்கை கடிதத்தில்;

வடக்கு மாகாண சுகாதார சேவைகள் திணைக்களத்தில் நிலவும் சுகாதாரப் பணி உதவியாளர் பதவி வெற்றிடத்திற்கு ஆட்சேர்ப்பு செய்யும் முகமாக சுகாதார தொண்டர்களின் தகமைகள் 31/05/2019 நேர்முகத்தேர்வு ஊடாக பரிசீலிக்கப்பட்டது. அதில் தெரிவு செய்யப்பட்ட 456சுகாதாரத் தொண்டர்களுக்கு நியமனக் கடிதம் வழங்கி வைப்பதற்காக 05/09/2019 அன்று சாவகச்சேரி நகரசபை மண்டபத்திற்கு அழைக்கப்பட்டிருந்தனர்.

இருப்பினும் அதில் உள்ளீர்க்கப் படாத மற்றொரு தரப்பு சுகாதாரத் தொண்டர்கள் கடும் எதிர்ப்பு வெளியிட்டு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டதால் அன்றைய தினம் நியமனக் கடிதங்கள் வழங்கி வைக்கப்படவில்லை.

குறித்த எதிர்ப்புக் காரணமாக 29/09/2019 மீண்டும் தொண்டர்களுக்கு நேர்முகத்தேர்வு நடத்தப் பட்டது. இரண்டாவது நேர்முகத் தேர்வில் நியமனக் கடிதம் பெற முதல் நேர்முகத்தேர்வில் தெரிவான நூற்றுக்கும் மேற்பட்டவர்கள் போதிய தகமைகள் இருந்தும் புறக் கணிக்கப்பட்டுள்ளனர்.இவ்வாறு புறக்கணிக்கப்பட்டவர்கள் 2015 ஆம் ஆண்டு காலப்பகுதிக்கு முன்னர் யுத்த காலங்களில் மிகவும் நெருக்கடியான சூழ்நிலையில் சேவையாற்றியவர்கள்.

எனவே இரண்டாவது நேர்முகத் தேர்வில் புறக்கணிக்கப்பட்ட எமக்கும் நீதியான தீர்வினைப் பெற்றுத் தாருங்கள் என மேலும் அவர்கள் குறிப்பிட்டுருந்தனர்.

பாராளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதனின் கோரிக்கையை அடுத்து ஜனாதிபதி செயலகம் வடக்கு மாகாண சுகாதாரத் தொண்டர்கள் 388பேரை அரச சேவைக்குள் உள்ளீர்க்க நடவடிக்கை எடுத்திருக்கும் நிலையில் அதில் உள்ளீர்க்கப் படாத தொண்டர்கள் குழப்பநிலை அடைந்துள்ளமை குறிப்பிடத் தக்கது.

# புத்தர் சிலையை உடைத்த இளைஞன் கைது

**யாழ்.விசேட நிருபர்**

யாழ்ப்பாணம் காங்கேசன்துறை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதியில் புத்தர் சிலையை உடைத்த இளைஞன் கைது செய்யப்பட்டுள்ளார்.

கீரிமலை நல்லிணக்க புரம் பகுதிக்கு அண்மையில் ஞாயிற்றுக்கிழமை (02) குறித்த சம்பவம் இடம் பெற்றுள்ளது.

அப்பகுதியில் இருந்த புத்தர் சிலையை உடைத்த இளைஞன் அப்பகுதியில் காணப்பட்ட பழைய இரும்புகளையும் சேகரித்துள்ளார்.

புத்தர் சிலை உடைக்கப்பட்ட சம்பவம் தொடர்பில் அறிந்து கொண்ட காங்கேசன்துறை பொலிஸார் மற்றும் இராணுவத்தினர் அப்பகுதிக்கு விரைந்து சிலையை உடைத்த இளைஞனை கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட இளைஞன் காங்கேசன்துறை பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு வருகின்றார்.

# மண் அகழ்வினை கட்டுப்படுத்த இராணுவ பாதுகாப்பு வேண்டும்

கொக்காவில் மக்கள் கோரிக்கை

**முல்லைத்தீவு குறூப் நிருபர்**



முல்லைத்தீவின் புத்துவெட்டுவான், ஐயன்கன்குளம், பழையமுறிகண்டி ஆகிய கிராம அலுவலர் பிரிவுகளில் தொடர்கின்ற மணல் அகழ்வுகளைக் கட்டுப்படுத்துவதற்கு கொக்காவில் பகுதியில் இராணுவ நிலையொன்று அமைக்கப்பட வேண்டும் என இப்பகுதி பொது மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். கடந்த பத்தாண்டுகளுக்கு மேலாக மேற்படி கிராம அலுவலர் பிரிவுகளில் உள்ள ஆற்றுப்படுகைகளில் தொடர்ச்சியாக மணல் அகழ்வு நடைபெறுகின்றது. துணுக்காய் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டங்களில் இவ்விடயம் தெரியப்படுத்தப் பட்டாலும் மணல் அகழ்வு நடைபெறுகின்ற பகுதிகளுக்கு கூட்டத்தினை நடாத்துகின்ற இணைத்தலைவர்களும் பிரதேச செயலாளரும் வருகை தருவதாக பல தடவைகள் கூறப்பட்டாலும் இணைத்தலைவர்கள் ஒருநாளும் மணல் அகழ்வு நடைபெறுகின்ற பகுதிகளுக்கு வருகை தந்ததில்லை. புத்துவெட்டுவானில் இருந்து கொக்காவில் வரையான புனரமைக்கப்பட்ட வீதி மணல் டிப்பர்களினால் குண்டும்குழியுமாக மாறி உள்ளது. மேற்படி மூன்று கிராம அலுவலர் பிரிவுகளின் உள்வீதிகள் டிப்பர்களினால் சேதமடைந்துள்ளன.

பத்தாண்டுகளில் மணல் அகழ்வினைத் தடுப்பதற்கு பொலிசாரும் அதிகாரிகளும் தவறி விட்ட நிலையில் கிராமங்களைப் பாதுகாப்பதற்கு மணல் வெளியிடங்களுக்குச் செல்லாமல் இருப்பதற்கு கொக்காவில் பகுதியில் இராணுவ நிலையொன்றினை அமைத்து மணல் அகழ்வினைக் கட்டுப்படுத்தும்படி புத்துவெட்டுவான், ஐயன்கன்குளம், பழைய முறிகண்டி கிராம மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். இதேவேளை அண்மையில் தரமுயர்த்தப்பட்டுள்ள ஐயன்கன்குளம் பொலிஸ் நிலைய பொலிசார் இப்பகுதிகளில் நடைபெறுகின்ற மணல் அகழ்வினைக் கட்டுப் படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

# தி.மு.கவின் அமோக வெற்றிக்கு அங்கஜன் எம்.பி வாழ்த்து

**சாவகச்சேரி விசேட நிருபர்**



தமிழகத்தின் 16ஆவது சட்டசபைத் தேர்தலில் தி.மு.க தலைமையிலான கூட்டணிக் கட்சி அமோக வெற்றி பெற்றமையை இட்டு யாழ் . மாவட்ட பாராளுமன்ற குழுக்களின் பிரதி தவிசாளர் அங்கஜன் இராமநாதன்(பா.உ) அக் கூட்டணியின் தலைவர் மு.க.ஸ்டாலினுக்கு தனது வாழ்த்தினைத் தெரிவித்துள்ளார்.

அவர் தனது வாழ்த்துச் செய்தியில்;

பத்து வருட கடும் உழைப்பின் சாட்சியாக தமிழகத்தில் மீண்டும் உதயசூரியன் ஆட்சி மலர்ந்துள்ளது.

மக்களின் மனங்களில் தமிழகத்திற்கு மாற்றம் ஒன்று வேண்டும் என்ற எண்ணத்தோடு 160 தொகுதிகளில் தி.மு.க கூட்டணி அமோக வெற்றியைப் பதிவு செய்ய தமிழக மக்கள் ஆணை வழங்கியுள்ளனர். தலைமைத்துவத்தில் ஆளுமையும், அனுபவமும் கொண்ட புதிய தலைவர் மு.க ஸ்டாலின் தலைமையில் தமிழகத்தின் எழுச்சிப் பயணம் தொடங்கட்டும். மக்களின் அமோக ஆதரவுடன் தமிழகத்தின் முதலமைச்சராகவிருக்கும் தி.மு.க கூட்டணித் தலைவர் மு.க.ஸ்டாலினுக்கு எனது மனமார்ந்த வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்வதாகவும் அவர் தனது வாழ்த்துச்செய்தியில் தெரிவித்துள்ளார்.

# வவுனியா உணவகங்களில் விசேட மேற்பார்வை

**ஓமந்தை விஷேட நிருபர்**

வவுனியாவில் அமைந்துள்ள உணவகங்களில் விஷேட மேற்பார்வை நடவடிக்கைகள் நேற்று முன்னெடுக்கப்பட்டன.

கொவிட்19 தொற்று பரவலடைந்து வரும் நிலையில் நகரில் அமைந்துள்ள உணவகங்களிற்கு பல்வேறு கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளதுடன், சுகாதார பிரிவினர்களால் அறிவுறுத்தல்களும் வழங்கப்பட்டிருந்தன.

இந்நிலையில் வவுனியா உணவகங்களில் கடைப்பிடிக்கப்பட்டுவரும், சுகாதார நடைமுறைகள் தொடர்பாக சுகாதார பரிசோதகர்களால் மேற்பார்வை செய்யப்பட்டன.

இதன்போது ஒவ்வொருவருக்கும் இடையில் சமூக இடைவெளிகள் இறுக்கமாக பேணப்பட வேண்டும் என்று உணவக உரிமையாளர்களிற்கு அறிவுறுத்தப்பட்டுள்ளதுடன், நிபந்தனைகளை மீறுபவர்களிற்கு எதிராக கடுமையான சட்டநடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அறிவுறுத்தியிருந்தனர்.




# கொரோனா தொற்று முடிவுக்கு வர பிரார்த்தனை

## உலகளாவிய பக்தி முயற்சி ஆரம்பம்





இறைவனை நோக்கி இடைவிடாத செபம் என்ற தொனிப்பொருளில் நடைபெறும் உலகளாவிய பக்தி முயற்சியை கடந்த சனிக்கிழமை மே முதலாம் திகதி திருத்தந்தை பிரான்சிஸ் வத்திக்கான் பேராலய கெபியில் தொடக்கி வைத்துள்ளார்.

கொரோனா வைரஸ் உலகத்திலிருந்தே ஒழிக்கப்பட வேண்டும் என்ற தொனியில் ஒரே குரலாக உலக மக்கள் அனைவரும் இறைவனிடம் மன்றாடும் பக்தி முயற்சியாக இது முன்னெடுக்கப்படவுள்ளது.

தினந்தோறும் நாம் எதிர்கொள்ளும் பிரச்சினைகளுக்கு மத்தியில் வாழ்க்கையை கொண்டு நடத்துவதற்கு இறைவனின் உதவி மிகவும் அவசியம் என்பதை சுட்டிக்காட்டியுள்ள திருத்தந்தை எம்மால் இந்த பிரச்சினையோடு வாழ முடியவில்லையே என்ற கவலை எம்மை மிக மோசமாக வாட்டுகிறது.

நமக்கு இயேசுவின் உதவி தேவை. "இயேசுவே நீர் என் அருகில் இருக்கின்றீர். எனக்கு செவிசாய்க்கின்றீர் என நம்புகிறேன். எனது துயரங்களை உம்மிடம் கொண்டு வருகிறேன். எனக்கு உம் மீது நம்பிக்கை உள்ளது என்னை உம்மிடம் கையளிக்கின்றேன்" என்று தினமும் எமது ஜெபங்களில் இறைவனிடம் சொல்வோம் என்றும் திருத்தந்தை பிரான்சிஸ் தெரிவித்துள்ளார்.

உலகெங்கும் பெரும் அழிவுகளை ஏற்படுத்தி வரும் கொரோனா வைரஸ் இந்த உலகத்தில் இருந்தே ஒழித்துவிட வேண்டும் என்ற வேண்டுதலுடன் உலகத்தில் உள்ள அனைத்து திருத்தலங்களிலும் மே மாதம் முதலாம் திகதி முதல் செபமாலை பக்தி முயற்சிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

மே முதலாம் திகதி உரோம் நேரம் மாலை 6.00 மணிக்கு வத்திக்கான் புனித பேதுரு பெசிலிக்கா பேராலயத்தில் திருத்தந்தை பிரான்சிஸ் இந்த பக்தி முயற்சியை தொடக்கிவைத்தார்.

இந்தியாவில் அன்னை வேளாங்கண்ணி திருத்தலம், பிரான்ஸ் நாட்டின் லூர்து நகர் அன்னை மரியாள் திருத்தலம், போர்த்துக்கல் நாட்டில் பாத்திமா அன்னை திருத்தலம் உட்பட உலகின் பல்வேறு நாடுகளிலும் உள்ள 30 முக்கிய திருத்தலங்களில் இந்த பக்தி முயற்சிகள் தொடர்ந்து தினமும் மாலை 6.00 மணிக்கு முன்னெடுக்கப்படவுள்ளன. அன்னை மரியாளுக்காகவும் செபமாலை தியானத்திற்காகவும் அர்ப்பணிக்கப்பட்டுள்ள இந்த மே மாதத்தில் உலகில் உள்ள அனைத்து கத்தோலிக்க மக்களும் கொரோனா வைரஸ் உலகிலிருந்தே ஒழிக்கப்பட வேண்டும் என்ற வேண்டுதலை இறைவனிடம் முன்வைப்பதுடன் அன்னை மரியாளின் பரிந்துரை நாடி பக்தி முயற்சிகளில் ஈடுபடவும் கத்தோலிக்கத் திருச்சபை அனைவருக்கும் அழைப்பு விடுகின்றது.

(ஸ)

# கடவுளோடு இணைந்திருந்தால் மிகுந்த பலன்கொடுக்க முடியும்

மனித வாழ்வு என்பது பிறருக்குக் கனி கொடுக்க வேண்டும். இந்த உலகத்தில் படைக்கப்பட்ட எல்லாப் படைப்புகளுமே பிறருக்குக் கனி தரும் இலக்கை நோக்கமாகக் கொண்டுள்ளது.

விவசாயிகள் விவசாயம் செய்யும் பொழுது தமக்கு நல்ல பலன் கிடைக்கும் என்ற நம்பிக்கையில் தான் தன் வியர்வையை மண்ணில் சிந்துகின்றனர். ஆசிரியர் தங்கள் மாணவர்கள் படித்து நல்ல பலன் கொடுப்பார்கள் என்ற நம்பிக்கையில்தான் பாடம் கற்பிக்கின்றனர். பெற்றோர் தங்கள் பிள்ளைகள் இந்த சமூகத்தில் சிறந்தவர்களாக பலன் கொடுப்பார்கள் என்ற நம்பிக்கையில்தான் பாசத்தோடு வளர்த்து உருவாக்குகிறார்கள்.

மரம் செடிகள் பருவகாலத்தில் தன்னிடமிருக்கும் பலனை விளைச்சல் வழியாக கொடுக்கின்றன. இவ்வாறாக எல்லா படைப்புகளுமே அதன் பயனையும் பலனையும் பிறருக்குக் கொடுத்து வருகின்றன. அதேபோல் நாம் ஒவ்வொருவருமே மிகுந்த கனி தந்து பலன் கொடுக்க அழைக்கப்பட்டுள்ளோம். கடந்த ஞாயிறு திருவழிபாட்டு வாசகங்கள் மிகுந்த கனி கொடுப்பவர்களாக வாழ நமக்கு அழைப்பு விடுக்கின்றன.

அன்றைய நற்செய்தியில் ஆண்டவர் இயேசு திராட்சைச் செடியும், கிளைகளும் பற்றி பேசுகிறார். தன்னை திராட்சை செடியாகவும் நம்மை அதன் கிளைகளாகவும் இயேசு உருவகப்படுத்தியுள்ளார். திராட்சை செடியின் பலன் அதன் கொடியில் தான் தெரியும். கொடியானது மிகுந்த பலன் கொடுக்க வேண்டுமெனில் அதன் செடியோடு இணைந்து இருக்க வேண்டும். இல்லையென்றால் கொடியின் வழியாக மிகுந்த விளைச்சலைக் காணமுடியாது.





நம்மைப் படைத்த கடவுள் நாம் மிகுந்த பலன் கொடுப்பவர்களாக வாழ அழைப்பு விடுக்கிறார். எனவேதான் "இயேசு, 'நீங்கள் மிகுந்த கனி தந்து என் சீடராய் இருப்பதே என் தந்தைக்கு மாட்சி அளிக்கிறது' என்றார்" (யோவான் 15:8). நம்மைப் படைத்த தந்தையின் விருப்பம் நாம் இயேசுவின் சீடராய் வாழ்ந்து அவரின் திருவுளத்தை நிறைவேற்றுவதாகும். நாம் மிகுந்த கனி தர வேண்டுமெனில் எப்படிப்பட்ட வாழ்வை வாழ வேண்டும் என்பதை நற்செய்தி வாசகங்கள் நமக்கு அறிவுறுத்துகின்றன.

முதலாவதாக, கடவுளோடு இணைந்து இருக்க வேண்டும். இணைந்திருத்தல் என்பது நம்முடைய மனித வாழ்வில் அவசியமான ஒன்றாகும். இந்த உலகத்தில் படைக்கப்பட்ட எந்த படைப்புகளுமே தனித்துக் கனி தர இயலாது. மாறாக, இணைந்திருத்தலின் வழியாகத்தான் கனி தர இயலும்.

தொடக்கத்தில் கடவுள் ஆணைப் படைத்த பொழுது அவருக்கு துணையாக பெண்ணைப் படைத்தார். இதற்கு முக்கிய காரணம் இணைந்திருத்தலின் வழியாகத் தான் மனித குலம் இன்னும் பெருகி மண்ணுலகை நிரப்பும் என்பதாலாகும். அதேபோல ஒரு மரம் கனி தர வேண்டுமெனில் மற்றொரு மரத்தின் மகரந்தச் சேர்க்கை தேவை. அதேபோலத் தான் ஒரு மனிதன் வாழ்வில் கனி தரவேண்டுமமெனில் கடவுளோடு இணைந்திருக்க வேண்டும். கடவுளோடு இணைந்திருந்த அனைவருமே வாழ்வில் வெற்றியை பெற்றுள்ளனர். கடவுளோடு இணைந்திராதவர்கள் கடவுளின் அருளை இழந்துள்ளனர்.

இதற்கு மிகச்சிறந்த உதாரணம் நம் முதல் பெற்றோராகிய ஆதாம் ஏவாள் ஆவர். கடவுளோடு இணைந்து இருந்ததற்கு மிகச்சிறந்த உதாரணம் அன்னை மரியாள். கடவுளோடு இணைந்து தூய்மையான வாழ்வு வாழ்ந்ததால் தான் 'அருள் நிறைந்த மரியே' என்ற பெயரைப் பெறும் அளவுக்கு பாக்கியம் பெற்றார்.

இதைத்தான் நற்செய்தியில் ஆண்டவர் இயேசு "நானே திராட்சைச் செடி; நீங்கள் அதன் கொடிகள். ஒருவர் என்னுடனும் நான் அவருடனும் இணைந்திருந்தால் அவர் மிகுந்த கனி தருவார்" என்று கூறியுள்ளார்.

நம்முடைய அன்றாட வாழ்வில் வருகின்ற துன்பங்களையும் இடையூறுகளையும் சந்திக்க முடியாமல் துன்பப்படுகிறோம். இதற்கு முக்கிய காரணம் பல நேரங்களில் நாம் கடவுளோடு இணைந்திருப்பதில்லை. நாம் கடவுளோடு இணைந்திருந்தால் எத்தகைய இடையூறுகளும் தடைகளும் துன்பங்களும் நம் வாழ்வில் வந்தாலும், அவற்றை நாம் முறியடிக்க முடியும். அதற்கு கடவுளோடு நம்முடைய செபத்தின் வழியாகவும் நற்செயல்களின் வழியாகவும் அறச்செயல்களின் வழியாகவும் இணைந்திருக்க முயற்சி செய்வோம்.

திருத்தொண்டர்
**குழந்தை இயேசு பாபு ...**

இரண்டாவதாக, கடவுளோடு இணைந்த பிறகு நாம் அவரோடு நிலைத்திருக்க வேண்டும். எனவேதான் நம் ஆண்டவர் இயேசு "என்னைவிட்டுப் பிரிந்து உங்களால் எதுவும் செய்ய இயலாது. என்னோடு இணைந்து இராதவர் கொடியைப் போலத் தறித்து எறியப்பட்டு உலர்ந்து போவார்" என்று கூறியுள்ளார்.

கடவுளோடு இணைந்திருந்த பிறகு நம்முடைய உறவைப் பிளவுபடுத்திக் கொள்ளாமல் இறுதிவரை அவரது உறவில் நிலைத்திருக்க அழைக்கப்பட்டுள்ளோம். கடவுளோடு கூடிய உறவில் நிலைத்திருக்கும் பொழுது எண்ணற்ற துன்பங்களும் தடைகளும் இடையூறுகளும் வரும். அவற்றை கண்டு மனம் தளராமல் துணிவோடு வாழ அழைக்கப்பட்டுள்ளோம்.

இயேசுவை காட்டிக் கொடுத்த யூதாசு தொடக்கத்தில் இயேசுவோடு இணைந்திருந்தார். ஆனால் அவர் இயேசுவோடு நிலைத்திருக்கவில்லை. எனவேதான் மிகப்பெரிய பாவத்தைச் செய்தார். ஆனால் இயேசுவோடு நிலைத்திருந்த மற்ற சீடர்கள் தூய ஆவியின் வல்லமையைப் பெந்தகோஸ்தே நாளிலே பெற்ற பிறகு மிகுந்த வல்லமையோடு நற்செய்தியைப் பறைசாற்றுவதன் வழியாகக் கனி தந்தனர்.

நம்முடைய அன்றாட வாழ்விலும் கடவுளோடு இணைந்திருந்து அதிலேயே முழுவதும் நிலைத்திருக்க அழைக்கப்பட்டுள்ளோம். அப்பொழுதான் வாழ்விலே மிகுந்த கனி தந்து மகிழ்ச்சியையும் நிறைவையும் காணமுடியும்.

மூன்றாவதாக மிகுந்த கனி தர செயல்பாடு மிக அவசியம். "நாம் சொல்லிலும் பேச்சிலும் அல்ல, செயலில் உண்மையான அன்பை விளங்கச் செய்வோம்" இன்று இரண்டாம் வாசகத்தில் யோவான் கூறுவதுபோல நம்முடைய சொல்லிலும் செயலிலும் உண்மையான அன்பு இருக்கின்ற பொழுது மிகுந்த கனி தரமுடியும். உண்மையான அன்பு இருந்தால் தான் இயேசுவின் மன நிலையை நம்மால் பிரதிபலிக்க முடியும். புனித அன்னை தெரசாவை போல எண்ணற்ற புனிதர்கள் மனிதம் சார்ந்த பணிகளைச் செய்தனர். இதற்கு முக்கிய காரணம் இயேசுவின் மனநிலையில் உண்மையான அன்பை வாழ்ந்ததேயாகும். எனவே உண்மையான அன்போடு நம் வாழ்வில் செயல்பட கடவுளோடு இணைந்திருந்து நிலைத்திருக்க முயற்சி செய்வோம். அப்பொழுது நாம் மிகுந்த கனி தரமுடியும்.

# மே! மரியன்னையின் வணக்க மாதம் தினமும் செபமாலை தியானிப்போம்

மே மாதம் அன்னை மரியாளின் வணக்க மாதமாகும். இந்த மாதத்தில் செபமாலையின் மகிமையை பறைசாற்றும் விதத்தில் பல்வேறு பக்தி முயற்சிகள் கத்தோலிக்க விசுவாசிகளால் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

ஆலயங்களிலிருந்து மரியன்னையின் திருச்சொரூபம் வீடுகளுக்கு எடுத்துச் செல்லப்பட்டு விசேட வழிபாடுகள், குடும்ப செபமாலை தியானங்கள் நடத்தப்படுவது இம்மாதத்தில் தான்.





அன்னை மரியாள் பாத்திமா நகர் திருத்தலத்தில் 2017 ஆம் ஆண்டு மே முதலாம் திகதி முதல் அக்டோபர்வரையிலான காலப்பகுதியில் மக்களுக்கு தரிசனமளித்து "அழிந்துகொண்டிருக்கும் இவ்வுலகை காப்பாற்ற அனுதினமும் செபமாலையை தியானியுங்கள்" என்று வேண்டுகோள் விடுத்துள்ளார் அன்னையின் வேண்டுகோளுக்கு முக்கியத்துவமளித்து மே மாதத்தில் செப மாலைக்கு முக்கியத்துவமளித்து தியானங்கள், பக்தி முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

ஆரம்ப காலத்தில் டொமினிக்கன் துறவிகளால் தினமும் பக்தி முயற்சியாக நூற்றுக்கும் மேற்பட்ட தடவைகள் பரலோக மந்திரமும் அருள் நிறைந்த மரியே என்ற செபமும் தியானிக்கப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

1475 ஆம் ஆண்டில்டொமினிக்கன் சபையைச் சேர்ந்த அலன் டி லா ரோச் என்பவர் பிரான்சில் செபமாலையின் மகிமையை பறைசாற்றியுள்ளார். அன்று முதல் ஐரோப்பிய நாடுகளிலும் செபமாலையின் மகிமை பரப்பப்பட்டது.

செபமாலையின் வரலாறுகளை நோக்கும்போது, சாத்தானை எதிர்த்து நிற்க அன்னை மரியாளின் வலிமையான ஆயுதமாக கருதப்படும் ஜெபமாலையில் உள்ள ஒவ்வொரு மணியும் ஒவ்வொரு ரோஜாவாக தன்மேல் வந்து விழும் என பதின்மூன்றாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் மக்களுக்கு தரிசனம் கொடுத்த அன்னை மரியாள் தெரிவித்துள்ளார். பாரம்பரியத்திற்கிணங்க ஜெபமாலையில் மகிழ்ச்சி, துயரம்,மகிமை என 15மறையுண்மைகளை தியானிக்கும் வழக்கம் இருந்து வந்துள்ளது. 2002ஆம் ஆண்டில் திருத்தந்தை இரண்டாம் அருள் சின்னப்பர் ஒளியின் மறைபொருள்கள் எனும் பெயரில் இயேசுவின் பணி வாழ்வை சித்தரிக்கும் ஐந்து புதிய மறையுண்மைகளை சேர்த்தார்.

தினந்தோறும் செபமாலை தியானிக்கும் போது அன்னைமரியா ளோடு நம் இதயம் இயேசுவின் மறை உண்மைகளை நோக்கி பயிற்சி பெறுகின்றது என கோடிக்கணக்கான விசுவாசிகள் கருதுகின்றனர்.

அதற்கிணங்கவே உலகளாவிய ரீதியில் செபமாலை பக்தி முயற்சிகள் காலத்துக்கு காலம் அதிகரித்து வருகின்றன. சோதனைகளில் இருந்து விடுதலை பெறவும் சாத்தானை எதிர்க்கவும் ஒரு சிறந்த கருவியாக செபமாலை கருதப்படுகிறது. இக்காலங்களில் உலக சமாதானத்திற்காகவும் உலகை ஆட்டிப் படைக்கும் கொரோனா வைரஸிலிருந்து மக்களை மீட்பதற்கும் எமது குடும்பங்களிலும் தனிப்பட்ட வாழ்விலும் அமைதி கிடைக்கவும் அன்னையின் பெயரால் செபமாலையை கரங்களில் ஏந்தி தினமும் செபிப்போம்.

**எல்.செல்வா ...**

# கிழக்கின் குரல்



# நாடு நிம்மதியாக இருக்கும் போதுதான் மக்கள் நிம்மதியாக வாழ முடியும்

## கட்சி முக்கியஸ்தர்களுடனான சந்திப்பில் அதாஉல்லா எம்.பி

(பாலமுனை கிழக்கு தினகரன் நிருபர்)



நாடு நிம்மதியாக இருக்கின்ற போதுதான் நாட்டில் வாழுகின்ற மக்கள் நிம்மதியாக இருக்க முடியும் என தேசிய காங்கிரஸ் கட்சியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான ஏ.எல்.எம். அதாஉல்லா தெரிவித்தார்.

பாலமுனை தேசிய காங்கிரஸ் கட்சியின் அமைப்பாளர் கே.எல். உபைதுள்ளா தலைமையில் நேற்று முன்தினம் பாலமுனை ஹிறா நகர் கிராமத்திலுள்ள பரிமேட்டு சோலையில் நடைபெற்ற கட்சியின் மத்திய குழு முக்கியஸ்தர்களுடனான சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றும் போது இவ்வாறு தெரிவித்தார். அவர் தொடர்ந்தும் உரையாற்றுகையில்,

நமது அரசியல் பயணம் என்பது மிக புனிதமானதாக இருக்க வேண்டும். நமது மக்களுடைய எண்ணங்களை நிறைவேற்றுவது தொடர்பான இலக்கை நோக்கி நாங்கள் செல்ல வேண்டும்.

நாடு நம்மதியாக இருக்கின்ற போதுதான் நாட்டில் வாழுகின்ற மக்கள் நிம்மதியாக இருக்க முடியும். நாட்டையும் சிங்கள மக்களையும் தமிழ் மக்களையும் வேறாக தள்ளிவைத்து விட்டு முஸ்லிம் சமூகம் மாத்திரம் வாழவேண்டும் என்று நினைப்பதென்பது இயற்கைக்கு முறணானது.

இறைவன் உதவியால் யாருக்கும் எதற்கும் அச்சமடைய வேண்டிய அவசியம் எமக்கு இல்லை. யாருக்கும் தலைகுனிய வேண்டிய அவசியம் இல்லை. யாருக்கும் நாம் பதில் கூறவேண்டிய அவசியமும் இல்லை. நமது சமூதாயம் தொடர்பாக நாடு தொடர்பாக எம்மைப் பொறுத்தவரையில் நமது சமுதாயம் என்று மாத்திரம் பேசுவதை பிழையாக பார்க்கிறேன்.

சமுதாயம் சமுதாயம் என்று சொல்கின்ற எல்லாமே இறைவனால் படைக்கப்பட்ட மனித குலம்தான். ஏனைய சமுதாயத்தவர்களுக்கு வழிகாட்டியாக முன்மாதிரியான சமுதாயமாக இஸ்லாமியர்கள் இருக்க வேண்டும். வாழ்ந்து காட்ட வேண்டும். அது அரசியலாக இருந்தாலும் சரி, சமுதாயமாக இருந்தாலும் சரி இன்று தேசிய காங்கிரஸ் அதனை செய்து வருகின்றது. அதனால்தான் அச்சமில்லாமல் இருக்கின்றோம். இன்று முஸ்லிம் தலைவர்கள் முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்கள் அரசியல கட்சி தலைவர்கள் கேள்விக்குட்படுத்தப்படுவதும் சிறைக்குச் செல்வதும் விசாரணை என்பதும் என்கின்ற சூழ்நிலையிலே தேசிய காங்கிரஸ் கவனமாக இருக்கின்றது.

ஒன்றை மாத்திரம் அவர்களுக்கு சொல்ல இருக்கின்றோம். நீங்கள் தனிப்பட்ட முறையில் பிழைகள் செய்திருந்தால் அதனை தனிப்பட்ட முறையில் எதிர் கொள்ளுங்கள். நீங்கள் எதிர்கொள்ள முடியாமைக்காக மக்களை சூடாக்குவதிலிருந்து தவிர்க்க வேண்டும். சுயநல அரசியலிலிருந்து விடுபட வேண்டும். ஆண்டாண்டு காலம் எமது மக்கள் அரசியலுக்காக ஏமாற்றப்பட்டிருக்கின்றார்கள். எத்தனையோ தேர்தல்களில் எமது மக்கள் பாதிக்கப்பட்டிருக்கின்றார்கள் என்றார்.



திருகோணமலையின் பல கிராம சேவகர் பிரிவுகள் கொரோனா தாக்கம் அதிகரிப்பால் முடக்கப்பட்ட நிலையில், ஞாயிற்றுக்கிழமை (02) நகர் பகுதி மற்றும் அதனை அண்டிய பகுதிகள் சனநடமாட்டம் இன்றி வெறிச்சோடி காணப்படுவதைக் காணலாம்.

(படம்: முள்ளிப்பொத்தானை குறூப் நிருபர்)




திருகோணமலை அகம் மனிதாபிமான வளநிலையத்தினர் கொவிட் 19 தாக்கத்தினால் முடங்கப்பட்டிருக்கும் 245 குடும்பங்களுக்கு வழங்கப்படவுள்ள உலர் உணவுப் பொருட்களை, வள நிலையத்தின் பிரதி இணைப்பாளர் அழகுராசன் மதன், திருமலை அரசாங்க அதிபர் சமன் தர்சன பாண்டிகொறளையிடம் கையளிப்பதைக் காணலாம்.

# ரிஷாட்டின் கைதுக்கு எதிராக கல்முனையில் ஆர்ப்பாட்டம்

## நீதிமன்ற தடை உத்தரவை சுட்டிக்காட்டி பொலிஸாரால் தடங்கல்

(கல்முனை மத்திய தினகரன் நிருபர்)

அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவர் ரிஷாட் பதியுதீனின் கைதுக்கு எதிராகவும், அவரது விடுதலையை வலியுறுத்தியும் ஞாயிற்றுக்கிழமை (02) கல்முனையில் ஏற்பாடு செய்யப்பட்ட கண்டன ஆர்ப்பாட்டத்தினை நடாத்த ஆயத்தமான போது நீதிமன்ற தடை உத்தரவை சுட்டிக்காட்டி கல்முனை பொலிசார் மற்றும் பாதுகாப்பு படையினர் அதனை தடுத்து நிறுத்தினர். முன்னாள் மாகாண சபை உறுப்பினர் கே.எம்.அப்துர் ரஸ்ஸாக்கின் வழி நடாத்தலில் ஏற்பாடு செய்யப்பட்ட இந்த ஆர்ப்பாட்டத்தின் போது, பாராளுமன்ற உறுப்பினர் முஸாரப் மற்றும் கல்முனை மாநகர சபை உறுப்பினர்களான எம்.ஐ. அப்துல் மனாப், சீ.எம்.முபீத், சட்டத்தரணி சிபான் மற்றும் சட்டத்தரணி அன்சில், நிந்தவூர் பிரதேச சபை தவிசாளர் தாஹிர் உட்பட பலரும் கலந்து கொள்ள விருந்த வேளை, இதற்கான தடையை பொலிசார் அறிவித்திருந்தனர். ஆனாலும் சட்டத்தரணி அன்சில் மற்றும் கல்முனை மாநகர சபை உறுப்பினர் எம்.ஐ. அப்துல் மனாப் ஆகியோர் அமைதியாக சுலோகங்களை ஏந்தி நடந்து சென்றதை அவதானிக்க முடிந்தது.





இதேவேளை இவ் ஆர்ப்பாட்ட இடத்தில் நின்ற பலருக்கும் சுகாதார துறையினர் பீ.சீ.ஆர். பரிசோதனையினை மேற்கொண்டமையும் குறிப்பிடத்தக்கது.

# நஞ்சற்ற உணவு உற்பத்தி மூலம் சுகதேகியான சமூகத்தை உருவாக்க முடியும்

## பாராளுமன்ற உறுப்பினர் சந்திரகாந்தன்

(வெல்லாவெளி தினகரன் நிருபர்)

மட்டக்களப்பு மாவட்டத்தில் பெரும்போக நெற்செய்கையின் போது நஞ்சற்ற உற்பத்திகளை உற்பத்தி செய்வதன்மூலம் எதிர்காலத்தில் நோயற்ற,சுகதேகியான ஆரோக்கியமான சிறந்தோர் சமூகத்தை கட்டியெழுப்ப முடியும் எனவும் இத்திட்டத்தை இவ்வாண்டு அமுல்படுத்தப்படவுள்ளதாக பாராளுமன்ற உறுப்பினர் சி.சந்திரகாந்தன் தெரிவித்தார்.

ஜனாதிபதியின் கொள்கை திட்டத்தின்படி விவசாய உற்பத்திப் பொருட்களை நஞ்சற்றவையாக உற்பத்தி செய்வதன் மூலம் எதிர்காலத்தில் சிறந்ததோர் சமூகத்தை உருவாக்க முடியும். மட்டக்களப்பு மாவட்டத்தில் இத்திட்டமானது இவ்வாண்டு பெரும்போக நெற்செய்கையின் போது அமுல்படுத்தப்படவுள்ளதாக அவர் தெரிவித்தார். மட்டக்களப்பு மாவட்ட செயலகத்தில் ஞாயிற்றுகிழமை (02) நடைபெற்ற கூட்டத்தில் இதனை தெரிவித்தார்.

மேலும் அவர் தெரிவிக்கையில்...

எதிர்காலத்தில் எமது சமுதாயத்தில் சிறந்த பிரஜைகளை உருவாக்குவது நம் எல்லோரினதும் கைகளில் இருக்கின்றது. அதற்காக விவசாயத்திற்கு பயன்படுத்தப்படுகின்ற இராசாயனப் பொருட்களை தடைசெய்து சேதனப்பசளை மற்றும் எண்ணெய் வகைகளை பயன்படுத்த வேண்டும் அதற்காக துறைசார்ந்த திணைக்கள அதிகாரிகள் தங்கள் திட்டங்களையும், கருத்துக்களையும் எதிர்வரும் ஆறு வாரங்களுக்குள் முன்வைக்குமாறு பாராளுமன்ற உறுப்பினர் கேட்டுக்கொண்டார்.




இந் நிகழ்வில் அரச அதிபர் க.கருணாகரன்,மேலதிக அரசாங்க அதிபர் திருமதி.சுதர்சினி ஸ்ரீகாந், பிரதேச செயலாளர்கள், உள்ளூராட்சி தவிசாளர்கள், விவசாயத் திணைக்கள அதிகாரிகள், அபிவிருத்தி குழு இணைப்பாளர்கள், விவசாய அமைப்புக்கள், சேதனப்பசளை உற்பத்தியாளர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

# வர்த்தக சங்கத்தால் விழிப்புணர்வு

நற்பிட்டிமுனை தினகரன் நிருபர்

சாய்ந்தமருது மாளிகைக்காடு வர்த்தக சங்கத்தின் ஏற்பாட்டில் கொரோனா தொற்றை ஒழிக்க ஒலி பெருக்கிகள் மூலம் சுகாதார நடைமுறைகள் தொடர்பான விழிப்புணர்வுகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

பெருநாளை முன்னிட்டு வெளியூரிலிருந்து மக்கள் பொருட்களை கொள்வனவு செய்ய வருவதனை கருத்தில் கொண்டே இச் செயற்பாடு முன்னெடுக்கப்பட்டுள்ளது.

# வீதியை விட்டு விலகி பஸ் விபத்து

(ரொட்டவெவ குறூப் நிருபர்)

திருகோணமலைஹொரவ்பொத்தான பிரதான வீதி பம்மதவாச்சி பகுதியில் பஸ் ஒன்று வீதியை விட்டு விபத்துக்குள்ளானதில் இருவருக்கு காயம் ஏற்பட்டுள்ளதாக தெரிய வருகின்றது. இவ்விபத்து நேற்று (03) அதிகாலை 4.00 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

யாழ்ப்பாணத்திலிருந்து மட்டக்களப்பு நோக்கி பல்கலைக்கழக மாணவர்களை ஏற்றுவதற்காக சென்று கொண்டிருந்த தனியாருக்குச் சொந்தமான பஸ்ஸொன்றே வீதியை விட்டு விலகி விபத்துக்குள்ளானதாகவும் தெரியவருகின்றது.

குறித்த விபத்தில் இருவருக்கு சிறு காயங்கள் ஏற்பட்டுள்ளதாகவும் தூக்க கலக்கத்தினாலேயே இவ் விபத்து ஏற்பட்டுள்ளதாகவும் தெரிய வருகின்றது.



விபத்து தொடர்பில் விசாரணைகளை மொரவெவ பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# மட்டக்களப்பு திசவீரசிங்க சதுக்க பிரிவு முடக்கம்

மட்டக்களப்பு விசேட நிருபர்

மட்டக்களப்பு திசவீரசிங்கம் சதுக்க கிராம சேவையாளர் பிரிவு ஞாயிற்றுக்கிழமை (02) முதல் 14 நாட்களுக்கு முடக்க ப்பட்டுள்ளதாக மட்டக்களப்பு சுகாதார வைத்திய அதிகாரி டொக்டர் கே.கிரிசுதன் தெரிவித்தார்.

கடந்த வெள்ளிக்கிழமை (30) மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு குறித்த பிரதேசத்திலிருந்து சென்ற 13 பேருக்கு எடுக்கப்பட்ட பி.சி ஆர் பரிசோதனையிலிருந்து 11 பேருக்கு தொற்று உறுதிப்படுத்தப் பட்டுள்ளதனால் இப் பிரதேசம் 14 நாட்களுக்கு முடக்கப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு மாவட்ட கொவிட் 19 கொரோனா தடுப்புச் செயலணிக் கூட்டம் கடந்த வெள்ளிக்கிழமை (30) அரசாங்க அதிபர் கே.கருணாகரன் தலைமையில் நடைபெற்றபோது பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாகலிங்கம் மயூரன், மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் சுதத் மாசிங்க, இராணுவ கட்டளை அதிகாரி கேணல் வி.எம்.என். ஹெட்டியாராச்சி, மேலதிக அரசாங்க அதிபர் சுதர்சினி சிறிகாந், பிரதேச செயலாளர்கள் மற்றும் வலயக் கல்விப் பணிப்பாளர் கே.சுஜாதா ஆகியோர் கலந்து கொண்டு தனியார் ரியூசன் வகுப்புகள், பொதுமக்கள் ஒன்று கூடுதல் என்பனவற்றைத் தடுக்குமாறும் சுகாதார நடைமுறைகளைக் கடைப்பிடிக்குமாறும் பொது மக்களிடம் கேட்டுக் கொண்டமை குறிப்பிடத்தக்கது.



# இறக்காமம் கலாசார மண்டபத்தின் அவலம்

(அம்பாறை மத்திய குறூப் நிருபர்)

சுமார் 10 வருடங்களுக்கு முன்பு அடிக்கல் நடப்பட்டு நிர்மாணிக்கப்பட்டுள்ள இறக்காமம் பிரதேச கலாசார மண்டபம், இன்று வரை திறக்கப்படாமல் புல் பூண்டுகள் பிடித்து எவருக்கும் பயனற்றதாய் உள்ளது. இதுவரை எந்தத் தேவைக்கும் பயன்படுத்தவில்லை. இது மக்களின் பணமல்லவா? அதிகாரிகள் கண் திறப்பார்களா என்பதே மக்களின் அங்கலாய்ப்பு.



# திருகோணமலையில் 09 கிராமங்கள் முடக்கம்

அன்புவழிபுரம் தினகரன் நிருபர்

திருகோணமலையில் அதிகரித்து வருகின்ற கொரோனா தொற்றின் காரணமாக இது வரை 09 கிராமங்கள் முழுமையாக முடக்கப்பட்டுள்ளது. இன்னும் பல கிராமங்களிலுள்ள மக்களிடம் அன்டிஜன் பரிசோதனை மற்றும் பி.சி.ஆர் பரிசோதனைகள் இடம்பெற்று வருகின்றன.

3ம் அலையில் இது வரை திருகோணமலை மாவட்டத்தில் 523 பேர் தொற்றுக்கு உள்ளாகியதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. சனிக்கிழமை (1) மாலையிலிருந்து அன்புவழிபுரம் கிராம சேவகர் பிரிவு மற்றும் உவர்மலை கிராம சேவகர் பிரிவு என்பன தனிமைப்படுத்தப் பட்டுள்ளன.

தொற்றுக்குள்ளாகி முடக்கப்பட்ட பகுதிகளைத் தவிர ஏனைய பகுதிகளில் உள்ள மக்கள் தமது இயல்வு வாழ்க்கையை மேற்கொண்டு வருகின்றனர்.

# கிழக்கின் குரல்



# அம்பாறை சுகாதார சேவை பிரிவில் 282 பேருக்கு கொரோனா தொற்று

## மாகாண சுகாதார சேவை பணிப்பாளர் டொக்டர் தௌபீக்

**தனிமைப்படுத்தலில் தெஹியெத்தக் கண்டிய கிராமம்**

(அம்பாறை மத்திய குறூப், காரைதீவு குறூப் ஒலுவில் விசேட நிருபர்கள்)

அம்பாறை சுகாதார சேவை பிராந்தியத்தில் மூன்றாம் அலையில் 282 தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டு சிகிச்சை பெற்று வருவதாக மாகாண சுகாதார பணிப்பாளர் டொக்டர் ஏ.ஆர்.எம்.தௌபீக் தெரிவித்தார். அத்துடன் தெகியத்தக்கண்டிய பிரதேச செயலக பிரிவில் தெகியத்தக்கண்டிய, கதிராபுர ஆகிய கிராம சேவகர் பிரிவுகள் தனிமைப்படுத்தப்பட்டுள்ளதுடன், இப்பிரதேசங்களில் 253 குடும்பங்கள் தனிமைப்படுத்தப் பட்டுள்ளதாகவும் பிரதேச செயலாளர் பிரியங்கா வீரசிங்க தெரிவித்தார். எனினும் தெகியத்தக்கண்டிய பிரிவில் தொடர்ந்தும் அபாயகரமான நிலை தற்போது நிலவுவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

அம்பாறை நகரிலும் அதனை அண்டியுள்ள பிரதேசங்களிலும் தினமும் சுகாதார வைத்திய அதிகாரிகள் சகிதம் பொதுச் சுகாதார பரிசோதகர்கள் சென்று வர்த்தக நிலையங்கள் மற்றும் அரச திணைக் களங்கள் அலுவலகங்கள் என்பனவும் விசேட கண்காணிப்புக்குட்படுத்தப்பட்டு வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

நேற்று நண்பகல் 12 மணியுடன் (திங்கள்) நிறைவடைந்த 24 மணிநேர காலப்பகுதியில் அம்பாறை சுகாதார பிராந்தியத்தின் உகன, அம்பாறை, தமண, பதியத்தலாவ, தெகியத்தக்கண்டிய ஆகிய சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுகளிலேயே இந்த அதிகரிப்பு ஏற்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

எனவே குறித்த பிரதேசங்களில் பயணிப்பவர்களுக்கு எழுமாற்றாக என்டிஜன் மற்றும் பி.சி.ஆர் பரிசோதனைகளும் மேற்கொள்ளப்பட்டு வருவதும் குறிப்பிடத்தக்கது. அத்துடன் மகாஓயா பொலிஸ் பிரிவில் பிற பிரதேசத்தில் உள்ளவர்களுடன் உறவுகளைப் பேணிய 78 குடும்பங்கள் தனிமைப்படுத்தப்பட்டுள்ளதாக மகாஓயா பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி பிரியங்கா அத்தநாயக்க தெரிவித்தார்.



மேலும், தற்போதைய நிலையில் பரவி வரும் கொரோனா வைரஸின் தாக்கம் வீரியம் கூடியதாகவுள்ளதால் முகக்கவசம் கட்டாயம் அணிந்து கொண்டு பயணிப்பதும் அடிக்கடி கைகளை கழுவுவது காலத்தின் தேவை என்றும் மாகாண சுகாதார சேவை பணிப்பாளர் மேலும் குறிப்பிட்டார்.

# கிழக்கில் மூன்றாவது அலையில் 1193 பேருக்கு கொரோனா தொற்று

(காரைதீவு குறூப் நிருபர்)

கிழக்கு மாகாணத்தில் கொரோனா மூன்றாவது அலையில் இதுவரை 1193 பேருக்கு கொரோனாத் தொற்று ஏற்பட்டுள்ளதாக கிழக்கு மாகாண சுகாதாரத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

கடந்த இரு அலைகளின் போதிருந்த மாவட்ட தொற்றுநிலை தலைகீழாக மாறி திருகோணமலை அதிகூடிய தொற்றையும் அதிகுறைந்த தொற்றை கல்முனைப் பிராந்தியமும் கொண்டுள்ளது.

கிழக்கில் கொரோனா முதல் அலையில் 23 பேரும் இரண்டாவது அலையில் 3645 பேரும் தொற்றுக்குள்ளாகியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

திருகோணமலை மாவட்டத்தில் அதிகூடிய 628 பேரும் அம்பாறைப் பிராந்தியத்தில் 402 பேரும் மட்டக்களப்பு மாவட்டத்தில் 142 பேரும் கல்முனைப் பிராந்தியத்தில் 21 பேரும் தொற்றுகுள்ளாகியுள்ளனர்.

கிழக்கில் 3வது அலையில் இதுவரை 09பேர் மரணித்துள்ளனர். திருமலை மாவட்டத்தில் உப்புவெளியில் மூவரும், திருமலையில் மூவரும், மூதூரில் இருவரும், அம்பாறையில் உகனயில் ஒருவருமாக மொத்தம் 09 பேர் மரணித்துள்ளனர்.

# மூதூர் பிரதேச சபையின் ஏற்பாட்டில் குடிநீர் விநியோகம்

(மூதூர் தினகரன் நிருபர்)

மூதூர் பிரதேச சபையின் ஏற்பாட்டில் குடிநீர் பற்றாக்குறை நிலவும் இருதயபுரம், பட்டித்திடல், இக்பால் நகர், இத்திக்குளம், சின்னக்குளம், பாட்டாளிபுரம் மற்றும் கூனித்தீவு உள்ளிட்ட பல கிராம புறங்களில் வசிக்கும் மக்களுக்கான குடிநீர் விநியோகம் மூதூர் பிரதேச சபையினால் மேற்கொள்ளப்பட்டு வருவதாக மூதூர் பிரதேச சபையின் தவிசாளர் எம்.எம்.ஏ. அரூஸ் தெரிவித்தார்.

இப்பிரதேசங்களில் வாழும் மக்கள் தூய குடிநீரைப் பெறுவதில் எதிர்நோக்கிவரும் கஸ்டம் மற்றும் வரட்சியான காலங்களில் கிணறுகளின் நீர் வற்றிவிடுவதால் குடிநீரை பெறுவதிலும் மக்கள் பெரிதும் கஸ்டப்படுகின்றனர்.

இதேவேளை தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபை ஊடாக குடிநீரைப் பெற்று மூதூர் பிரதேச சபைக்கு சொந்தமான குடிநீர் பௌசர் மூலம் அன்றாட குடிநீர் பாவனைக்கான விநியோகம் இடம்பெற்று வருவதாகவும் தவிசாளர் மேலும் தெரிவித்தார்.

# அட்டாளைச்சேனையில் உணவு சேகரிப்பு திட்டம்

(பாலமுனை கிழக்கு தினகரன் நிருபர்)

வறிய குடும்பங்களுக்கு உதவுவதற்கான உணவு சேகரிப்புத் திட்டம் ஒன்றை, முதற்கட்டமாக அட்டாளைச்சேனையில், சிறந்த இலங்கையை உருவாக்குவதற்கான மக்கள் ஒன்றியத்தினால். ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது. என அமைப்பின் தலைவர் எம்.ஏ.சி.றியாஸ் தெரிவித்துள்ளார்.

இப்புனித றமழான் காலத்தில் தனவந்தகர்கள் வசதிபடைத்தவர்களினால் உதவக் கூடிய விசேட அன்பளிப்புக்களை அதாவது சகாத், சதகா போன்ற தர்மங்களையும். பழுதடையாத அதிக தேவையுடைய உணவு பொருட்களான, அரிசி, சீனி, தேயிலை, பருப்பு, டின் மீன், பால்மா, போன்ற பொருட்களையும் இவ்வமைப்பின் உணவு சேகரிப்புத் திட்ட பிரிவினருக்கு ஒப்படைக்க முடியும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின் மூலம் 3500 ரூபா பெறுமதியான உணவுப் பொருட்கள் அடங்கிய பொதிகளை தயார் செய்து வறிய குடும்பங்களுக்கு இவ்வமைப்பினால் விநியோகிக்கப்படவுள்ளது. மேலும் இத்திட்டத்தினை அறிமுகம் செய்து விளக்கமளிக்கும் கூட்டமொன்று அட்டாளைச்சேனை பிரதேச செயலகத்தில் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

# காத்தான்குடியில் சமயத் தலைவர்களுக்கு கொவிட் அறிவூட்டல் செயலமர்வு





புதிய காத்தான்குடி தினகரன் நிருபர்

காத்தான்குடியில் சமயத் தலைவர்களுக்கு கொவிட் தொற்று தொடர்பாக அறிவூட்டும் செயலமர்வொன்று சனிக்கிழமை (01) காத்தான்குடி ஹிஸ்புல்லாஹ் மண்டபத்தில் நடைபெற்றது.

கிழக்கு மாகாண சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மாஅதிபரின் ஆலோசனையின் பேரில் இந்த செயலமர்வு நடைபெற்றது.

காத்தான்குடி பொலிஸ் நிலையத்தின் ஏற்பாட்டில் காத்தான்குடி பொலிஸ் நிலைய பதில் பொறுப்பதிகாரி கஜநாயக்க தலைமையில் நடைபெற்ற இச் செயலமர்வில், காத்தான்குடி சுகாதார வைத்திய அதிகாரி டொக்டர் ஏ.எல்.எம். நபீல், காத்தான்குடி மேற்பார்வை பொதுச் சுகாதார பரிசோதகர் ஏ.எல்.எம்.பசீர், ஆரையம்பதி மேற்பார்வை பொதுச் சுகாதார பரிசோதகர் எஸ்.புலேந்திரகுமார், காத்தான்குடி பொலிஸ் நிலைய உப பொலிஸ் பரிசோதகர் ஏ.எம்.எஸ். ரஹீம் உட்பட பொதுச் சுகாதார பரிசோதகர்கள், சமயத் தலைவர்கள் வழிபாட்டுத் தளங்களின் நிருவாகிகள் என பலரும் கலந்து கொண்டனர்.

இதன் போது தற்போது ஏற்பட்டுள்ள கொவிட் தொற்று நிலைமை தொடர்பாக விளக்க மளிக்கப்பட்டதுடன் அது தொடர்பான அறிவூட்டலும் செய்யப்பட்டது.

# ஆரையம்பதி பொதுச் சந்தையை தற்காலிகமாக மூட தீர்மானம்

புதிய காத்தான்குடி தினகரன் நிருபர்

மண்முனைப் பிரதேச சபை பிரிவிலுள்ள ஆரையம்பதி பொதுச் சந்தை சனிக்கிழமை (01) தற்காலிகமாக மூடப்பட்டுள்ளதாக ஆரையம்பதி சுகாதார அதிகாரிகள் தெரிவித்தனர்.

ஆரையம்பதி பொதுச் சந்தையிலுள்ள வியாபாரியொருவருக்கு கொவிட் தொற்று கண்டறியப்பட்டதையடுத்து ஆரையம்பதி பொதுச் சந்தை தற்காலிகமாக மூடப்பட்டுள்ளது.

ஆரையம்பதி பொதுச் சந்தையிலுள்ள வியாபாரிகள் சிலருக்கு மேற் கொள்ளப்பட்ட பி.சி.ஆர் பரிசோதனையின் போது ஒருவருக்கு கொவிட் தொற்று இருப்பது கண்டறியப்பட்டதையடுத்து ஆரையம்பதி பொதுச் சந்தைக்கு சென்ற சுகாதார அதிகாரிகள் சந்தையை தற்காலிகமாக மூடியதுடன் விழிப்பூட்டல் நடவடிக்கையையும் மேற் கொண்டனர்.

மண்முனைப் பிரதேச சபை தவிசாளர் டி.தயானந்தன், ஆரையம்பதி மேற் பார்வை பொதுச் சுகாதார பரிசோதகர் எஸ்.புலேந்திரகுமார், பொதுச் சுகாதார பரிசோதகர் கே.ஜே.சங்கர் உட்பட பொதுச் சுகாதார பரிசோதகர்கள் மற்றும் பொலிசார் உட்பட அதிகாரிகள் இங்கு சென்று சந்தையை தற்காலிகமாக மூடியதுடன் கிருமி தொற்று நீக்கம் செய்யவும் நடவடிக்கை எடுத்தனர்.

# மட்டு. கூளாவடியில் ஐவருக்கு கொரோனா தொற்று உறுதி



மட்டக்களப்பு விசேட நிருபர்

மட்டக்களப்பு நகரில் கொவிட்19 கொரோனா தொற்று அதிகரித்துவரும் நிலையில் நேற்று (03) கூளாவடி இந்து இளைஞர் மன்ற வளாகத்தில் 120 பேருக்கு அன்ரிஜன் பரிசோதனை செய்ததில் 5 பேர் தொற்றுள்ளவர்களாக அடையாளம் காணப்பட்டுள்ளதாக சுகாதார வைத்திய அதிகாரி அலுவலக சுகாதாரப் பிரிவினர் தெரிவித்தனர்.

தொற்றுக்குள்ளான 5 பேரில் ஒருவர் திருகோணமலைக்கு வேலைக்குச் சென்று வந்தவர், தனது உடல்நிலையில் மாற்றம் இருந்ததனால் அவராகவே முன்வந்து பரிசோதனையை மேற்கொண்டதில் தொற்று உறுதியாகியுள்ளது. ஏனைய 4 பேரும் மட்டகளப்பிலுள்ள கராஜ் ஒன்றில் தொழில் புரிபவர்களென அடையாளப்படுத்தப்பட்டுள்ளனர்.

இதேவேளை தனிமைப்படுத்தலில் உள்ள பிரதேசத்தில் பொலிசாரும் இராணுவத்தினரும் தனிமைப்படுத்தல் சட்டவிதிகளை அமுல்படுத்துவதற்காக பணிக்கப்பட்டள்ளனர்.

# மீன்பிடிக்க சென்றவர் சடலமாக மீட்பு

மணல்சேனை நிருபர்

ஏறாவூர் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட மயிலம்பாவெளி விபுலானந்தபுரம் பகுதியில் குடும்பஸ்தர் ஒருவர் சடலமாக ஞாயிற்றுக்கிழமை (2) மீட்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சம்பவ தினத்தன்று காலை வீட்டிலிருந்து மீன்பிடிப்பதற்காக விபுலானந்தபுரம் பகுதிக்கு சென்ற மயிலம்பாவெளி பாடசாலை வீதியைச் சேர்ந்த ராமலிங்கம் பாக்கியராசா (57) என்பவரே சடலமாக மீட்கப்பட்டுள்ளார்

சம்பவ தினத்தன்று வீடு திரும்பாத நிலையில் உறவினர்களால் தேடப்பட்டு வந்த நிலையில் மயிலம்பாவெளி காட்டுப்பகுதியில் சடலமாக மீட்கப்பட்டுள்தாக விசாரணைகளின் மூலம் தெரியவந்துள்ளது.

# கல்முனையில் சுகாதார விதிமுறைகளை பின்பற்றாதவர்களுக்கு அன்டிஜன் பரிசோதனை

பாண்டிருப்பு தினகரன் நிருபர்

கல்முனையில் சுகாதார விதிமுறைகளைப் பின்பற்றாது வீதியில் செல்பவர்களுக்கு எழுமாற்றாக அன்டிஜன் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. நேற்று (03) மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையில் கல்முனை எல்லைவீதியில் வசிக்கும் இளைஞன் ஒருவருக்கு தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

கல்முனை வடக்கு சுகாதாரப் பணிமனையினால் சுகாதாரப் பணிப்பாளர் டொக்டர் ஆர்.கணேஸ்வரன் தலைமையிலான பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் அடங்கிய குழுவினர் கொரோனா தொற்றைக் கண்டறிவதற்கான தீடீர் பி.சி.ஆர். மற்றும் அன்டிஜன் பரிசோதனைகளை தொடர்ச்சியாக மேற்கொண்டு வருகின்றனர்.



நேற்று (03) கல்முனை வடக்கு ஆதாரவைத்தியசாலைக்கு முன்பாக நடமாடும் அன்டிஜன் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது. இங்கு சுகாதார விதிமுறைகளைப் பின்பற்றாதவர்கள் நிறுத்தப்பட்டு அவர்களுக்கு அன்டிஜன் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது. நேற்று எழுமாற்றாக 22 பேருக்கு எடுக்கப்பட்ட அன்டிஜன் பரிசோதனையில் இளைஞர் ஒருவருக்கு கொரோனா தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

பாண்டிருப்பு கல்முனை எல்லை வீதியில் வசிக்கும் குறித்த இளைஞன் அண்மையில் கொழும்பு சென்றுவந்துள்ளார். இதனையடுத்து குறித்த இளைஞர் சுகாதாரப் பிரிவினரால் தனிமைப்படுத்தல் முகாமுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளதுடன். அவரோடு தொடர்புபட்ட குடும்பத்தினர் சுய தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர்.



கந்தளாய் நகரில் அமைக்கப்படவுள்ள கந்தளாய் நகரத் திட்டம் குறித்து திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் கபில அத்துக்கோரலவுடன் நகர மேம்பாட்டு அதிகாரிகள் குழுவினர் சென்று பார்வையிடுவதை காணலாம்.

(படம்: கந்தளாய் தினகரன் நிருபர்)

# சிகை அலங்கார நிலையங்களில் பணிபுரிபவர்கள் மருத்துவ சான்றிதழ் பெற்றுக் கொள்ள வேண்டும்

(ஒலுவில் விசேட நிருபர்)

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பிரிவுக்குட்பட்ட பிரதேசங்களிலுள்ள சிகை அலங்கார நிலையங்களில் பணி புரிபவர்கள் சுகாதார வைத்தியதிகாரிகளிடம் மருத்துவ சான்றிதழ் பெற்றுக் கொள்ள வேண்டுமென, கல்முனைப் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி டொக்டர் ஜீ. சுகுணன் தெரிவித்தார்.

கொவிட் 19 தொற்றின் மூன்றாவது அலையின் தாக்கம் வேகமாக பரவிவருவதால் சிகை அலங்கார நிலையங்களில் பணிபுரிபவர்கள் ஒவ்வொருவரும் பொதுச் சுகாதார பரிசோதகர்கள் ஊடாக சுகாதார வைத்தியதிகாரியிடம் மருத்துவ சான்றிதழ் பெற்றிருத்தல் வேண்டும்.

பணியாளர்கள் கையுறை மற்றும் முகக்கவசம் என்பன அணிவது கட்டாயமாக்கப்பட்டுள்ளது. சிகை அலங்கார நிலையங்களுக்கு வருபவர்கள் முகக்கவசம் அணிந்து வருதல் வேண்டும். ஒருவருக்கு பாவிக்கப்படும் சீலை மற்றவருக்கு பாவிக்க முடியாது. அத்துடன் உபகரணங்கள் உடனுக்குடன் கிருமித் தொற்று நீக்கம் செய்ய வேண்டுமெனவும் கடைக்குள் கட்டாயம் 01 மீற்றர் சமூக இடைவெளி பேணப்பட வேண்டுமெனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

சிகை அலங்கார நிலையத்திற்கு செல்லுபவர்கள் நேர ஒதுக்கீட்டினை பெற்றுச் செல்வது இலகுவாக அமையும்.

இவ் அறிவுறுத்தல்களை பின்பற்றாத சிகை அலங்கார நிலையங்களின் உரிமையாளர்களுக்கெதிராக தனிமைப்படுத்தல் சட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுக்கப்படுமெனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# அறநெறிப் பாடசாலைகள் மறு அறிவித்தல் வரை பூட்டு

## இந்து கலாசார திணைக்களப் பணிப்பாளர்

(காரைதீவு குறூப் நிருபர்)

கொவிட் 19 அச்சுறுத்தல் காரணமாக நாடு முழுவதும் உள்ள அனைத்து அறநெறிப் பாடசாலை நடவடிக்கைகள் மறு அறிவித்தல் வரை தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது.

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களப் பணிப்பாளர் அருளாநந்தம் உமாமகேஸ்வரன் இதனை அறிவித்துள்ளார். அதன்படி கடந்த ஞாயிற்றுக்கிழமை (2) நாட்டில் எந்தவொரு அறநெறிப் பாடசாலையும் நடக்கவில்லை எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

# நகர்வலம்



## தேவைக்கதிகமான ஒக்ஸிஜன் கையிருப்பில்: மக்கள் வீண் அச்சம் கொள்ளத் தேவையில்லை

மாத்தறை தினகரன் நிருபர்

நாட்டில் தேவைக்கு அதிமானளவு ஒக்ஸிஜன் இருப்பதால் இதுகுறித்து யாரும் வீணாக அச்சம் கொள்ளத் தேவையில்லை என, மின்சக்தி அமைச்சர் டளஸ் அழகப்பெரும தெரிவித்தார்.

மாத்தறை மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் அமைச்சரின் தலைமையில் நடைபெற்ற (01) கொவிட்19 விழிப்புணர்வுக் கூட்டத்தில் பேசுகையிலேயே அமைச்சர் இதனைத் தெரிவித்தார். இக்கூட்டத்தில் கருத்துரைத்த அமைச்சர்:



சுகாதார அமைச்சுக்கு நாளாந்தம் 2200 லீற்றர் ஒக்ஸிஜன் தேவைப்படுகிறது. எமதுநாட்டில் ஒக்ஸிஜன் உற்பத்தியில் ஈடுபட்டுள்ள இரண்டு நிறுவனங்களும் நாளாந்தம் 67000 லீற்றர் ஒக்ஸிஜனை உற்பத்தி செய்கின்றன. எமது நாட்டுக்கு அவசர தேவைக்காக ஒக்ஸிஜன் தேவையானால் சிங்கப்பூரிலிருந்து ஒக்ஸிஜனை கொள்வனவு செய்ய ஜனாதிபதி நடவடிக்கை எடுத்துள்ளார். இதனால் மக்கள் அச்சம் கொள்ளத் தேவையில்லை. நாட்டில் பதினையாயிரம் ஜம்போசிலின்டர் ஒக்ஸிஜன் கையிருப்பிலிருக்கிறது. மாத்தறை மாவட்டத்து நோயாளர்களுக்கு மாத்தறை, கம்புறுகமுவ உட்பட ஆறு அஸ்பத்திரிகள் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளன. தேவையேற்படின் மூடப்பட்டுள்ள ஆடைத் தொழிற்சாலையையும் மிகவிரைவில் இதற்காகப் யன்படுத்த முடியுமென்றும் அமைச்சர் தெரிவித்தார்.

## வீதி விபத்தில் பெண்ணொருவர் கைது

அநுராதபுரம் தினகரன் நிருபர்

அநுராதபுரம் ஹிதோகம ஹத்தே எல பகுதியில் இடம்பெற்ற கோர விபத்தில், பெண் ஒருவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார். கெப்வண்டியும் மோட்டார் சைக்கிளும் நேருக்கு நேர் மோதியதில் இவ்விபத்து ஏற்பட்டதாக ஹிதோகம பொலிஸார் தெரிவித்தனர். ஹிதோகம பொலிஸ் பிரிவின் ஹத்தே எல பகுதியில் கடந்த சனிக்கிழமை இவ்விபத்து இடம்பெற்றது.சம்பவத்தில் படுகாயமடைந்த மேலுமொரு பெண்ணொருவர், அநுராதபுரம் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். சம்பவத்தில் 47 வயதுடைய மிஹிந்தலை பகுதியை வசிப்பிடமாக கொண்ட பெண் ஒருவரே உயிரிழந்துள்ளார் என்பது தெரிய வந்துள்ளது. விபத்தில் உயிரிழந்த பெண்ணுடைய சடலம் அநுராதபுரம் போதனா வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது. விபத்து சம்பவத்துடன் தொடர்புடைய கெப்வண்டியின் சாரதியை பொலிசார் கைது செய்துள்ளதுடன் மேலதிக விசாரணைகளும் முன்னெடுக்கப்படுகிறது.



கொவிட் 19 தொற்றுநோய்ப் பரவல்,தீவிரமடைந்துள்ளதால், அநுராதபுரம் மாவட்டத்தில் அரச உத்தியோகத்தர்களுக்கு பீ.சீ.ஆர் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இதன் முதற்கட்டமாக,அநுராதபுரம் மாவட்ட செயலகத்திலுள்ள அரச உத்தியோகத்தர்களுக்கு பீ.சீ.ஆர் பரிசோதனை மேற்கொள்ளப்படுவதைப் படத்தில் காணலாம்.
படம்: அநுராதபுரம் தினகரன் நிருபர்

## முகக்கவசமின்றி பயணிப்போரரைக் கைது செய்ய பொலிஸார் ரோந்து

மாவத்தகம நிருபர்

கொரோனாத் தொற்று விழிப்புணர்வுச் செயற்பாடுகளை முன்னெடுத்த மாவத்தகம பொலிஸார்,அசிரத்தையாகச் செயற்படுவோருக்கு எச்சரிக்கையும் விடுத்தனர்.

முகக் கவசமின்றி வாகனம் செலுத்துவோர், வாகனங்களில் செல்வோர், முகக்கவசமின்றி வர்த்தக நிலையங்களில் கடமைபுரிவோர் மற்றும் சமூக இடைவெளிகளைப் போணாதோருக்கு எச்சரிக்கை விடுத்த பொலிஸார், இலவசமாக முகக் கவசங்களையும் வழங்கினர்.

முச்சக்கர வண்டிகள், வாகனங்கள், மோட்டார் சைக்கிள் உள்ளிட்ட அனைத்து வாகனங்களும் இடைமறிக்கப்பட்டு தெளிவூட்டப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## தமிழ்நாட்டிலுருந்து கடல்வழியாக பிள்ளைகளுடன் வந்த பெண் கைது

புத்தளம் விசேட நிருபர்

தமிழ்நாடு சென்னை குப்பத்திலிருந்து கடந்த 30ம் திகதி சட்டவிரோதமாக நாட்டிற்கு வந்த பெண் மற்றும் அவரது இரண்டு பிள்ளைகளையும் புத்தளம் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இவ்வாறு கைது செய்யப்பட்டவர்களை குடிவரவு, குடியகல்வு சட்டத்தின் கீழ்,நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இவர்களை புத்தளம் பொலிஸார் நேற்று (03) கைது செய்தனர். கைதானோரை, நீதிமன்றத்தில் ஆஜர்படுத்துவதற்கான ஏற்பாடுகளையும் பொலிஸார் செய்து வருவதாக புத்தளம் பொலிஸார் தெரிவித்தார்.

தமிழ்நாடு சென்னை குப்பத்திலிருந்து 34 வயதுடைய பெண் மற்றும் அவரது இரு புதல்வர்களும் சட்டவிரோதமாக கடல் வழியாக மீனவப் படகில் கடந்த 30ம் திகதி வெள்ளிக்கிழமை அதிகாலை நாட்டிற்கு வந்திருந்தனர்.

பின்னர் அவர்கள் புத்தளம் வேப்பமடு பிரதேசத்தில் அமைந்துள்ள வீடொன்றில் மறைந்திருந்தனர்.

இதன்போது பொலிஸார் மற்றும் சுகாதாரத் தரப்பினர் இவ்விடயமறிந்து அவர்களை, அந்த வீட்டிலே தனிமைப்படுத்தி வைத்திருந்தனர்.

இதன்பின்னர், குறித்த பெண் மற்றும் அவரது 13,04 வயதுகளையுடைய பிள்ளைகள் பீ. சி. ஆர். பரிசோதனைக்காக புத்தளம் வைத்தியசாலைக்கு அழைத்துச் செல்லப்பட்டனர்.

இந்நிலையில், குடிவரவு, குடியல்வு சட்ட விதிகளை மீறிய குற்றச்சாட்டின் கீழ் நீதிமன்றத்தில் வழக்குத் தொடர பொலிஸார் ஏற்பாடுகளை செய்து வருகின்றனர்.




கொழும்பு மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினரும் மொரட்டுவ பிரதேச அபிவிருத்தி குழுவின் தலைவருமான சட்டத்தரணி பிரேம்நாத் தொலவத்த, பிரதேச செயலகப் பிரிவிலுள்ள மோல்பே பகுதியில் குடியிருக்கும் மக்களின் குறைபாடுகளை கண்டறியும் நோக்கில்,கள விஜயமொன்றை மேற்கொண்டிருந்தார்.பிரதி மேயர் உள்ளிட்ட பிரமுகர்களும் இதில் கலந்துகொண்டு மக்களின் குறைகளைக் கேட்டறிவதைப் படத்தில் காணலாம்.
படம்: பாணந்துறை மத்திய குறூப் நிருபர்

## தி.மு.கவின் வெற்றி தமிழ்பேசும் மக்களின் அரசியலுக்கு ஒளியேற்றும்

### மு.கா.தலைவர் ஹக்கீம் பெருமிதம்

மு.க.ஸ்டாலின் தலைமையில் தி.மு.க.கூட்டணி தமிழக சட்டமன்றத் தேர்தலில் அமோக வெற்றியீட்டிருப்பது அளப்பரிய மகிழ்ச்சியளிப்பதாகவும், இந்த மகோன்னத வெற்றியில் இந்திய இலங்கை தமிழ் பேசும் மக்களின் வாழ்வில் நம்பிக்கை ஒளிக்கீற்று பளிச்சிடுவதாகவும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

பத்தாண்டு கால இடைவெளியின் பின்னர் ஆறாவது முறையாகவும் தமிழகத்தின் ஆட்சிப் பொறுப்பை திராவிட முன்னேற்றக் கழகம் பொறுப்பேற்றுள்ளமை மகிழ்ச்சி.



மறைந்த கலைஞர் மு . க ரு ண ா நி தி யின் அரசியல் வாரிசான மு.க.ஸ்டாலின் மற்றும் அவரது சகோதரி கனிமொழி உட்பட தி.மு.க வினரும், இந்திய யூனியன் முஸ்லிம் லீக் முதலான அதன் ஏனைய கூட்டுக் கட்சியினரும் எங்களுடன் சிறந்த நட்புறவைப் பேணிவருகின்றனர்.

234 ஆசனங்களைக் கொண்ட தமிழக சட்ட சபையில்,ஆகக் கூடுதலானவற்றை கைப்பற்றும் திறன் திமுக கூட்டணிக்கு வாய்த்திருக்கின்றது.

தந் தை ை ய ப் போலவே புதல்வர் உதயநிதி ஸ்டாலின் தனது தொகுதியில் மிக அதிக வாக்கு வித்தியாசத்தில் வென்றிருப்பது மகிழ்ச்சிக்குரியது.

தளபதி ஸ்டாலின் தலைமையில் திராவிட முன்னேற்றக் கழகமும் அதன் தோழமைக் கட்சிகளும் மத்திய அரசாங்கத்துடனும் எமது தாய்த் திருநாடான இலங்கை முதலான அயல் நாடுகளுடனும் நல்லுறவைப் பேணி பரவலாகப் பல்வேறு நெருக்கடிகளுக்கு உள்ளாகியுள்ள மக்கள் வாழ்வில் மறுமலர்ச்சியை ஏற்படுத்த இறைவன் அருள் புரிய வேண்டுமென இறைஞ்சுகின்றோம்.

இவ்வாறு ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ஹக்கீம் தெரிவித்துள்ளார்.



கொழும்பு மாவட்ட பிரதேச செயலாளர்கள் மாநாடு மாவட்ட செயலாளர் பிரதீப் யசரத்ன தலைமையில் மாவட்ட செயலகத்தில் இடம்பெற்றது. பிரதேச செயலகப் பிரிவுகளில் கொவிட்19 தொற்று நிலை மற்றும் பொதுமக்கள் சேவைகள் தொடர்பில் இங்கு ஆராயப்பட்டன.பிரதேச செயலாளர்கள் மற்றும் மாவட்ட செயலக அதிகாரிகளும் இதில் கலந்து கொண்டனர்.
படம்: பாணந்துறைமத்திய குறூப் நிருபர்

## கதிர்காமம் புனித பிரதேசத்தில் பொலிதீன் மாலைகளுக்கு தடை

### மூவாயிரம் குடும்பங்களின் பொருளாதாரம் பாதிப்பு

ஹம்பாந்தோட்டைகுறூப் நிருபர்

கதிர்காமம் புனித நகரத்தில் பூசைகளுக்காக பொலித்தீன் மாலைகளை தயாரித்து விற்பனை செய்வதை மத்திய சுற்றாடல் அதிகார சபை எதிர்வரும் 22 ஆம் திகதி தொடக்கம் தடை செய்வதற்கு நடவடிக்கை எடுத்துள்ளது. இதனால், மாலை உற்பத்தியாளர்களும் வியாபாரிகளும் பாதிக்கப்பட்டுள்ளனர். கதிர்காமம் புனித நகரிலுள்ள மத ஸ்தானங்களில் வழிபாடுகளுக்காக பழங்களோடு சேர்த்து பொலித்தீன் மாலையும் பயன்படுத்தப்பட்டுவருகிறது. இதனை கதிர்காமம் பிரதேச செயலகப் பிரிவைச் சேர்ந்த 3000 குடும்பங்கள் தொழிலாக மேற்கொண்டு வருகின்றன. இவர்களின் பிரதான ஜீவனோபாயத் தொழிலாகவும் இது உள்ளது.இவ்வாறு தடைவிதிக்கப்படுவதால் இவர்களின் பொருளாதாரம் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் இவர்கள் தெரிவிக்கின்றனர்.

பொலித்தீனால் மாணிக்ககங்கை,குளங்கள், கால்வாய்கள், யால மற்றும் சிதுல்பவ்வை ஆகிய சரணாலயப் பிரதேசங்களது சூழல் பாதிக்கப்படுகிறது. மற்றும் மிருகங்களும் இதனால் உயிரிழப்பதைக் கருத்திற் கொண்டே,இந்தப் பொலிதீன் பாவனையைத் தடை செய்ய நடவடிக்கை எடுத்துள்ளதாக மத்திய சுற்றாடல் சபை அறிவித்துள்ளது.



அம்பலாந்தோட்டை பரவகும்புக நகரில் நிர்மாணிக்கப்பட்ட ச.தொ.ச விற்பனைநிலையத்தை வடிகாலமைப்பு அமைச்சரும் அரச பாதுகாப்பு,உள்நாட்டு அலுவல்கள் மற்றும் அனர்த்த முகாமைத்துவ பிரதி அமைச்சருமான சமல் ராஜபக்ஷ திறந்து வைத்தபோது பிடிக்கப்பட்ட படம்.
படம்: ஹம்பாந்தோட்டைகுறூப் நிருபர்

## வீதியில் வீழ்ந்தவர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் மரணம்

புத்தளம் விசேட நிருபர்

வீதியில் வீழ்ந்த நிலையில்,எடுத்துச் செல்லப்பட்டு சிகிச்சைக்காக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நபர் ஒருவர் வைத்தியசாலையில் உயிரிழந்துள்ளார். பின்னர் மேற்கொள்ளப்பட்ட பீ. சீ. ஆர் பரிசோதனையில் அந்நபர் கோவிட் தொற்றுக்கு உள்ளாகியிருப்பது தெரிய வந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.வென்னப்புவ புஜ்ஜம்பல பிரதேசத்தைச் சேர்ந்த 50 வயதுடைய நபரே இவ்வாறு உயிரிழந்தவராவார். இந்நபர் தென்னந்தோட்டங்களில் தேங்காய் பறிக்கும் தொழிலில் ஈடுபட்டு வந்தவர் எனத் தெரிவிக்கப்படுகின்றது. வென்னப்புவ புஜ்ஜம்பல பிரதேச வீதியில் நேற்று மாலை இவர் வீழ்ந்து கிடந்தார்.பின்னர்,1990 அவசர அம்பியுலன்ஸ் சேவையின் உதவியுடன் இவர் மாராவில வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார். வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட சிறிது நேரத்திலே அவர் உயிரிழந்துள்ளதாகத் தெரிவிக்கப் பட்டது.

## அநுராதபுரம் மாவட்ட உதவித் தேர்தல் ஆணையாளராக முகுந்தன் பதவியேற்பு

அநுராதபுரம் மாவட்ட உதவித் தேர்தல் ஆணையராக திரு. கே. முகுந்தன் நேற்று(03) கடமைகளை பொறுப்பேற்றார்.



அநுராதபுரம் மாவட்ட உதவித் தேர்தல் ஆணையாளராகப் பணியாற்றிய திரு. எம்.பி.எம். சுபியான், மட்டக்களப்பு மாவட்டத்திற்கு இடமாற்றம் பெற்று செல்வதால் இந்தப் பதவிக்கு திரு,முகுந்தன் நியமிக்கப்பட்டுள்ளார்.

இதுபற்றி அவர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில்: அநுராதபுரம் தேர்தல் அலுவலகத்தில் திறமையான அதிகாரிகள் பலர் இருக்கின்றனர்.இவர்களுடன் பணியாற்றக் கிடைத்தமை மகிழ்ச்சியளிக்கிறது.எதிர்காலத்தில் திறம்பட பணியாற்றுவதற்கு அவர்களது ஒத்துழைப்புக்கள் கடைக்கும் என எதிர்பார்ப்பதாகவும் அவர் கூறினார்.

## மாவத்தகமையில் முன்னெடுக்கப்படும் கொரோனா ஒழிப்பு குறித்த செயலமர்வு

மாவத்தகம நிருபர்

மாவத்தகம பிரதேசத்தில்,கொரோனாவைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கைகளுக்கு பொதுமக்கள் உட்பட பொது அமைப்புக்கள், மற்றும் பள்ளிவாசல்கள் ஒத்துழைப்பு வழங்க வேண்டுமென, பொது மக்கள் சுகாதார பரிசோதகர் பண்டார வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இப்பிரதேசத்தில்,எழுமாந்தமாக எடுக்கப்பட்ட பி. சீ. ஆர்பரிசோதனையில் 23 பேருக்கு கொரோனா தொற்றியுள்ளமை உறுதியாகியுள்ளது. இதையடுத்தே, இந்த வேண்டுகோளை அவர் விடுத்துள்ளார்.

முஸ்லிம் சமய கலாசார பண்பாட்டலுவல்கள் திணைக் களத்தின் பரிந்துரைக்கு இணங்க மாவத்தகம சுகாதார வைத்திய அலுவலகத்திற்குட்பட்ட முஸ்லிம் பள்ளிவாசல் நிர்வாகிகளுக்கு, கொரோனா தொற்றுப் பரலைத் தடுக்கும் செயற்பாடுகள் தொடர்பான செயலமர்வு பறகஹதெனிய எம். என் மண்டபத்தில் நடைபெற்றது.

பறகஹதெனிய பள்ளிவாசல் நிர்வாக உத்தியோகஸ்தர் எஸ். ஏ. எம். பௌஸ் தலைமையில் இடம்பெற்ற, இந்நிகழ்வில் கருத்து தெரிவித்த அவர்:

மாவத்தகம பிரதேசத்தில் மொத்தமாக 60 கொரோனா தொற்றாளர்கள் இனங்காணப்பட்டுள்ளனர். இது ஆபத்தானதாகும்.

இது பற்றி பொது அமைமப்புக்கள் கூடிய கவனம் செலுத்த வேண்டும்.

வேஉடப் பிரதேசத்தில் ஒன்பது கொரோனா தொற்றாளர்கள் உள்ளனர். இவர்கள் ஐந்து வீடுகளில் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர். சுகாதாரத் திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்காக பள்ளிவாசல்கள் ஊடாக பல வேலைகள் செய்துள்ளேன்.

அவை அனைத்தும் எமக்கு வெற்றியளித்துள்ளன. தொடர்ந்து சுகாதார அமைச்சினால் முன்னெடுக்கும் செயற்பாடுகளுக்கு பங்களிப்பு வழங்க வேண்டும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்

# இந்திய செய்திகள்



# கொளத்தூரில் 70 ஆயிரம் வாக்குகள் வித்தியாசத்தில் மு.க.ஸ்டாலின் வெற்றி

நடந்து முடிந்த சட்டசபைத் தேர்தலில் திராவிட முன்னேற்றக் கழகம் அமோக வெற்றி பெற்றுள்ளது. திமுக தனித்து 125 இடங்களையும் உதய சூரியன் சின்னத்தில் 8 இடங்களையும் பெற்ற நிலையில் 133 இடங்களைப் பெற்றுள்ளது. இந்த வகையில் திமுக கூட்டணி 159 இடங்களைப் பெற்றுள்ளது. கூட்டணியில் காங்கிரஸ் கட்சி 18 இடங்களையும், இடதுசாரி கட்சிகள் தலா 2 இடங்களையும், மதிமு, விசிக தலா 4 இடங்களையும், மற்ற கூட்டணிக் கட்சிகள் 4 இடங்களையும் பெற்றுள்ளன.

திமுக 133
அ.தி.மு.க 66
காங்கிரஸ் 18
விசிக தலா 4
இடதுசாரி தலா 2
ப.ம.க 5
ப.ஜ.க. 4
இந்திய கம்யூனிஸ்ட் 2
மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் 2



தி.மு.க. தலைவர் மு.க.ஸ்டாலின், சென்னை கொளத்தூர் தொகுதியில் 70 ஆயிரம் வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றார்.

கொளத்தூரில் 2,81,128 வாக்குகள் உள்ளன. இதில் பதிவான வாக்குகள் 1,71,607. இதில் மு.க.ஸ்டாலின் (தி.மு.க.), 1,05,794 வாக்குகளும் ஆதிராஜாராம் (அ.தி.மு.க.), 35,214 வாக்குகளும் ஜெ.ஆறுமுகம் (அ.ம.மு.க.), 1,082 வாக்குகளும் ஏ.ஜெகதீஷ்குமார் (ம.நீ.ம.), 14,234 வாக்குகளும் பெ.கெமில்ஸ் செல்வா (நாம் தமிழர்) 11,320 வாக்குகளும் ஜமால் முகமது மீரா (பகுஜன் சமாஜ்) 1,295 வாக்குகளும் ஜி.வேல்முருகன் (சிவசேனா) 39 வாக்குகளும் பெற்றனர்.

திமுக தலைவர் ஸ்டாலின் தலைமையில் ஆட்சி அமைவது உறுதியாகியுள்ளது. இதனைத் தொடர்ந்து அவருக்குப் பல்வேறு அரசியல் கட்சித் தலைவர்கள், திரையுலக பிரபலங்கள் என பலரும் வாழ்த்து தெரிவித்து வருகிறார்கள்.

வெற்றி பெற்றுள்ள தி.மு.க. எம்.எல்.ஏ.க்கள் சென்னை அண்ணா அறிவாலயத்துக்கு நேற்றுக் காலையில் இருந்து வந்த வண்ணம் இருந்தனர்.

தி.மு.க. தலைவர் மு.க.ஸ்டாலினை, வெற்றி பெற்ற எம்.எல்.ஏ.க்கள் சந்தித்து ஆசி பெற்றனர்.

தி.மு.க. எம்.எல்.ஏ.க்கள் கூட்டம் இன்று (செவ்வாய்க் கிழமை) காலை அண்ணா அறிவாலயத்தில் நடைபெறவுள்ளது. இந்த கூட்டத்தில் மு.க.ஸ்டாலினை முதல் அமைச்சராக எம்.எல். ஏ.க்கள் ஒருமனதாக தேர்ந்தெடுப்பார்கள்.

அதன் பின் மு.க.ஸ்டாலின் கவர்னர் மாளிகை சென்று கவர்னர் பன்வாரிலால் புரோகித்தை சந்தித்து முதல்அமைச்சராக தேர்ந்தெடுக்கப் பட்டதற்கான கடித்தை வழங்குகிறார்.

அப்போது எந்த திகதியில் பதவி ஏற்பது என்ற விவரம் வெளியிடப் படும். அனேகமாக எதிர்வரும் 7ந் திகதி மு.க.ஸ்டாலின் முதல்அமைச்சராக பதவி ஏற்பார் என எதிர்பார்க்கப்படுகிறது.

கிண்டி கவர்னர் மாளிகையில் பதவி ஏற்பு விழா எளிமையாக நடைபெறும் என தெரிகிறது.

திமுக தலைவர் ஸ்டாலின் தலைமையில் ஆட்சி அமைவது உறுதியாகியுள்ளது. இதனைத் தொடர்ந்து அவருக்குப் பல்வேறு அரசியல் கட்சித் தலைவர்கள், திரையுலக பிரபலங்கள் என பலரும் வாழ்த்து தெரிவித்து வருகிறார்கள்.

முதலமைச்சராக பொறுப்பேற்க உள்ள திமுக தலைவர் மு.க.ஸ்டாலினை, அண்ணா அறிவாலயத்திற்கு நேரில் சென்று கூட்டணிக் கட்சிகளின் தலைவர்கள் சந்தித்து வாழ்த்துத் தெரிவித்தனர்.

அண்ணா அறிவாலயமும் விழாக் கோலம் பூண்டிருந்தது. இதேபோல பல்வேறு அரசியல் தலைவர்கள் வருகையால் அண்ணா அறிவாலயம் பரபரப்பாக காணப்பட்டது

இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில செயலாளர் முத்தரசன், திமுக தலைவர் மு.க ஸ்டாலினை சந்தித்து வாழ்த்து தெரிவித்த பின்னர் செய்தியாளர்களை சந்தித்தார். தேர்தல் வாக்குறுதிகளை நிறைவேற்றுவேன் என மு.க.ஸ்டாலின் உறுதி அளித்துள்ளதாக, முத்தரசன் தெரிவித்தார்.

முக தலைவர் மு.க.ஸ்டாலினை சந்தித்து வாழ்த்துத் தெரிவித்த மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில செயலாளர் பாலகிருஷ்ணன், வளமான தமிழகத்தை உருவாக்கும் வகையில் திமுக தலைமையிலான ஆட்சி அமையும் என நம்பிக்கை தெரிவித்தார். அண்ணா அறிவாலயம் வந்து, முதலமைச்சராக பொறுப்பேற்க உள்ள மு.க.ஸ்டாலினை வாழ்த்திய மதிமுக பொதுச் செயலாளர் வைகோ, வரலாற்றில் பொன்னெழுத்துகளால் பொறிக்க வேண்டிய வெற்றியை தேடித் தந்திருப்பதாகக் குறிப்பிட்டார்.

**கமல் தோல்வி**

மக்கள் நீதி மய்யம் கட்சி தலைவர் கமல், கோவை தெற்கு தொகுதியில், தொடர்ந்து முன்னிலையில் இருந்து வந்தார். வெற்றி பெறுவார் என பலரும் எதிர்பார்த்த நிலையில், இறுதியில், 1,728 வாக்குகள் வித்தியாசத்தில், பா.ஜ., வேட்பாளர் வானதி சீனிவாசனிடம் தோல்வியை தழுவினார். அ.ம.மு.க., பொதுச்செயலர் தினகரன், கோவில்பட்டி தொகுதியில் இரண்டாமிடத்தில் வந்தார். நாம் தமிழர் கட்சி தலைவர் சீமான், திருவொற்றியூர் தொகுதியில், மூன்றாமிடத்தில் நின்றார்.

# ராஜினாமா கடிதத்தை ஆளுநருக்கு அனுப்பினார் எடப்பாடி பழனிசாமி



தமிழக சட்டசபை தேர்தலில் தோல்வியடைந்ததைத் தொடர்ந்து முதல்வர் எடப்பாடி பழனிசாமி ராஜினாமா கடிதத்தை ஆளுநருக்கு அனுப்பினார்.

தமிழக சட்டசபை தேர்தலில் தி.மு.க. தனி பெரும்பான்மையுடன் வெற்றி பெற்று ஆட்சியை கைப்பற்றியது. முதல்அமைச்சராக மு.க.ஸ்டாலின் பதவி ஏற்க உள்ளார்.

தமிழக சட்டப்பேரவை தேர்தலில் எதிர்க்கட்சியாக இருந்த தி.மு.க. தனிப் பெரும்பான்மையாக வெற்றி பெற்று, 10 ஆண்டுகளுக்குப் பின் ஆட்சி அமைக்க உள்ளது. மு.க.ஸ்டாலின் தலைமையில் அமைய உள்ள ஆட்சிக்குப் பல்வேறு அரசியல் கட்சித் தலைவர்கள் வாழ்த்து தெரிவித்து வருகின்றனர்.

இந்த தேர்தலில் ஆளுங்கட்சியாக இருந்த அதிமுக கூட்டணி 75 இடங்களில் மட்டும் வென்று தோல்வியை சந்தித்துள்ளது. இந்நிலையில் தேர்தலில் தோல்வியடைந்ததைத் தொடர்ந்து முதல்வர் எடப்பாடி பழனிசாமி தனது ராஜினாமா கடிதத்தை ஆளுநருக்கு அனுப்பியுள்ளார்.

# 24 மணி நேரத்தில் 3.68 லட்சம் பேர் பாதிப்பு, 3,417 பேர் பலி... இந்தியாவில் கொரோனா நிலவரம்

நாடு முழுவதிலும் உள்ள பல்வேறு மருத்துவமனைகளில் சிகிச்சை பெறுவோர் எண்ணிக்கை 34.13 லட்சமாக உயர்ந்துள்ளது.இந்தியாவில் கொரோனா வைரசின் 2ம் அலை கட்டுக்கடங்காமல் பரவி வருகிறது.

தினசரி நோய்த்தொற்றுகளின் எண்ணிக்கை தொடர்ந்து உச்சத்தில் உள்ளது. உயிரிழப்பும் அதிகமாக உள்ளது. நோய்த்தொற்று அதிகம் உள்ள மாநிலங்களில் ஊரடங்கு அமுல்படுத்தப்பட்டு, கூடுதல் கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளன.

இந்நிலையில், இந்தியாவில் கொரோனா பாதிப்பு நிலவரம் குறித்து மத்திய சுகாதார அமைச்சு அறிக்கை வெளியிட்டுள்ளது. அந்த தகவலின்படி இந்தியாவில் இதுவரை இல்லாத அளவிற்கு, கடந்த 24 மணி நேரத்தில் 3,68,147 பேருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. மொத்த பாதிப்பு 1,99,25,604 ஆக உயர்ந்துள்ளது. கடந்த 24 மணி நேரத்தில் 3,417 பேர் உயிரிழந்துள்ளனர். இதன்மூலம் கொரோனா வைரசால் உயிரிழந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 2,18,959 ஆக உயர்ந்துள்ளது.

கொரோனா பாதிப்பில் இருந்து குணமடைந்தவர்களின் எண்ணிக்கை 16,29,3003 ஆக உயர்ந்துள்ளது. நேற்று ஒரே நாளில் 3,00,732 பேர் குணமடைந்துள்ளனர். நாடு முழுவதிலும் உள்ள பல்வேறு மருத்துவமனைகளில் 34,13,642 பேர் சிகிச்சை பெற்றுவருகின்றனர். நாடு முழுவதும் 15,71,98,207 நபர்களுக்கு தடுப்பூசி போடப்பட்டுள்ளது.

# மீன்பிடித் திருநாளில் அதிக மக்கள் திரண்டதால் அச்சம்

மதுரை மேலூரை அடுத்துள்ள திருவாதவூரில் நேற்று நடந்த மீன்பிடித் திருநாளில் அளவுக்கதிகமான மக்கள் ஒன்று திரண்டதால் பெரும் பரபரப்பு ஏற்பட்டது. கொரோனா விழிப்பு, மற்றும் சுகாதார ஒழுங்கு முறைகளை மீற மக்கள் திரண்டதால் அப்பிரதேசத்தில் மக்கள் பெரும் பீதியடைந்தனர். கொரோனா பரவலை இது ஏற்படுத்துமோ என்றும் மக்கள் அஞ்சுகின்றனர்.

மீன்கள் வளர்ந்த நிலையில் அதனை பொதுமக்கள் பிடித்து செல்வதற்கு திகதி குறிக்கப்படுவது, மீன்பிடி திருவிழாவாக கொண்டாடப்படுகிறது.இதில் சிறுவர்கள், பெண்கள், இளைஞர்கள் என அனைத்து தரப்பினரும் பங்கேற்று மீன்களை பிடித்து செல்வர். இங்கு சோழர் காலத்தில் அமைக்கப் பட்ட பெரிய கண்மாய் உள்ளது. இதனாலே இந்த கண்மாயின் பெயர் சோழப் பேரேரி என்று அழைக்கப் படுகிறது. ஒவ்வொரு வருடமும் விவசாய பணிகள் முடிவடைந்த பின்னர் மீன் பிடி திருவிழா நடைபெறுவது வழக்கம். அதே போல் இந்த வருடமும் மீன்பிடி திருவிழா நேற்று நடைபெற்றது. இதனால், ஆயிரக் கணக்கான மக்கள் குவிந்து மீன்களைப் பிடிக்க வந்தனர். இதுவே அங்கு அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது.

# ஒட்சிசன் தட்டுப்பாட்டால் சிகிச்சையளிப்பதில் சிரமம்: புதுடில்லி, கர்நாடகாவில் 32 பேர் மரணம்



இந்தியாவில் கொரோனா வைரசின் இரண்டாம் அலை தீவிர பாதிப்புக்களை ஏற்படுத்தி வருவதால்,நோயாளர்களுக்கு சிகிச்சையளிப்பதற்குத் தேவையான ஒட்சினுக்கு பெரும் தட்டுப்பாடு நிலவுகிறது.இந்நிலையில்,நேற்று முன்தினம் தலைநகர் டில்லியில் உள்ள பத்ரா மருத்துவமனையில் திடீரென ஒட்சிசனுக்குத் தட்டுப்பாடு நிலவியதில் எட்டுப் பேர் உயிரிழந்தனர். தொடர்ந்தும் கொரோனா நோயாளிகள் அதிகரித்து வருவதால், மருத்துவமனைகளில் சிகிச்சைக்கான படுக்கைகள் மற்றும் ஒட்சிசன் என்பவற்றுக்கு கடுமையான தட்டுப்பாடுகள் ஏற்பட்டுள்ளதால் அழுத்தங்களும் அதிகரித்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது. இவ்வாறான தட்டுப்பாடுகள், கவலை தரும் மரணங்களையும் ஏற்படுத்துகின்றன. மேலும் கர்நாடகா மாநிலத்திலும் ஒட்சிசன் பற்றாக்குறையால் 24 நோயாளிகள் உயிரிழந்துள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது.

இவ்வாறு நிகழும் மரணங்கள் குறித்து விரிவான விசாரணைகள் நடத்துமாறும், மருத்துவ ஆய்வு அறிக்கைகள் சமர்ப்பிக்கும்படியும் அதிகாரிகள் கோரியுள்ளனர்.

இவ்வாறு இறந்தவர்களின் மருத்துவ ஆய்வு அறிக்கைக்காக காத்திருப்பதாக மாவட்ட பொறுப்பாளர் அமைச்சர் சுரேஷ்குமார் தெரிவித்துள்ளார். ஒட்சிசன்களுக்கு செயற்கையாகவே தட்டுப்பாடு ஏற்படுத்தும் இரகசிய நடவடிக்கைகள் இடம்பெறுகிறதா எனவும் ஆராயுமாறு அதிகாரிகள் பணிக்கப்பட்டுள்ளனர்.

# தேர்தலில் களம்கண்ட சினிமா பிரபலங்களின் நிலை

தமிழ்நாடு சட்டசபை தேர்தல் கடந்த ஏப்ரல் 6ம் திகதி நடைபெற்றது. இதில் தமிழ் திரையுலகத்தைச் சேர்ந்த பிரபலங்கள் சிலர் போட்டியிட்டார்கள். அவர்களின் வாக்கு விவரம் மற்றும் வெற்றி தோல்வி நிலை குறித்து இந்த தொகுப்பில் காணலாம்.



**உதயநிதி ஸ்டாலின்**

திமுக சார்பில் சென்னை சேப்பாக்கம் தொகுதியில் போட்டியிட்ட நடிகர் உதயநிதி ஸ்டாலின், 69,355 வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றார். அத்தொகுதியில் இவரை எதிர்த்து போட்டியிட்ட அனைவரும் டெபாசிட் இழந்தனர். உதயநிதி பெற்ற மொத்த வாக்குகளின் எண்ணிக்கை 93,285.

**சீமான்**

நாம் தமிழர் கட்சி சார்பில் சென்னை திருவொற்றியூர் தொகுதியில் போட்டியிட்ட சீமான், 39,588 வாக்குகள் வித்தியாசத்தில் தோல்வியடைந்தார். இவரை எதிர்த்து போட்டியிட்ட திமுக வேட்பாளர் கே.பி. சங்கர் 88,185 வாக்குகளை பெற்று வெற்றி பெற்றார். சீமான் பெற்ற வாக்குகளின் எண்ணிக்கை 48,597.

**கமல்ஹாசன்**

மக்கள் நீதி மய்யம் கட்சி சார்பில் கோவை தொற்கு தொகுதியில் போட்டியிட்ட நடிகர் கமல்ஹாசன், 1,728 வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றியை பறிகொடுத்தார். அவரை எதிர்த்து அதிமுக கூட்டணி சார்பில் போட்டியிட்ட பாஜக வேட்பாளர் வானதி ஸ்ரீனிவாசன் 53,209 வாக்குகளை பெற்று வெற்றி வாகை சூடினார். நடிகர் கமல்ஹாசன் பெற்ற வாக்குகளின் எண்ணிக்கை 51,481.

**ஸ்ரீபிரியா**

சென்னை மயிலாப்பூர் தொகுதியில் மக்கள் நீதி மய்யம் கட்சி சார்பில் போட்டியிட்ட நடிகை ஸ்ரீப்ரியா, 53,488 வாக்குகள் வித்தியாசத்தில் படுதோல்வி அடைந்தார். அவரை எதிர்த்து போட்டியிட்ட திமுக வேட்பாளர் வேலு 68,392 வாக்குகள் பெற்று வெற்றி பெற்றார். நடிகை ஸ்ரீபிரியா பெற்ற வாக்குகளின் எண்ணிக்கை 14,904.

**சினேகன் மற்றும் மயில்சாமி**

விருகம்பாக்கம் தொகுதியில் மக்கள் நீதி மய்யம் கட்சி சார்பில் போட்டியிட்ட பாடலாசிரியர் சினேகன், 57,412 வாக்குகள் வித்தியாசத்தில் படுதோல்வி அடைந்தார். இவரை எதிர்த்து போட்டியிட்ட திமுக வேட்பாளர் பிரபாகர ராஜா 74,351 வாக்குகளை பெற்று வெற்றி பெற்றார். பாடலாசிரியர் சினேகன் பெற்ற வாக்குகளின் எண்ணிக்கை 16,939. அதே தொகுதியில் சுயேட்சை வேட்பாளராக போட்டியிட்ட நடிகர் மயில்சாமிக்கு 1,440 வாக்குகள் மட்டுமே கிடைத்தன.

**மன்சூர் அலிகான்**

கோவை, தொண்டாமுத்தூர் தொகுதியில் சுயேட்சை வேட்பாளராக போட்டியிட்ட நடிகர் மன்சூர் அலிகான், வெறும் 428 வாக்குகளை மட்டும் பெற்று படுதோல்வி அடைந்தார். அத்தொகுதியில் அதிமுக வேட்பாளர் எஸ்.பி.வேலுமணி 1,24,225 வாக்குகளை பெற்று வெற்றி பெற்றார்.

**விஜய் வசந்த்**

கன்னியாகுமரி தொகுதிக்கான மக்களவை இடைத்தேர்தலில் காங்கிரஸ் சார்பில் போட்டியிட்ட நடிகர் விஜய் வசந்த், 1 லட்சத்து 37 ஆயிரத்து 950 வாக்குகள் வித்தியாசத்தில் அமோக வெற்றி பெற்றுள்ளார். அவரை எதிர்த்து போட்டியிட்ட பாஜக வேட்பாளர் பொன்.ராதாகிருஷ்ணன் 4,38,087 வாக்குகளை பெற்று தோல்வியை தழுவினார். நடிகர் விஜய் வசந்த் பெற்ற வாக்குகளின் எண்ணிக்கை 5,76,037.

# 'அசுரன்' பட நடிகை அம்மு அபிராமிக்கு கொரோனா



தமிழில் விஜய்யின் பைரவா படத்தில் அறிமுகமானவர் அம்மு அபிராமி.

தொடர்ந்து கார்த்தியின் தீரன் அதிகாரம் ஒன்று, சூர்யாவின் தானா சேர்ந்த கூட்டம், விஷ்ணு விஷாலின் ராட்சசன், தனுசுடன் அசுரன் மற்றும் என் ஆளோட செருப்ப காணோம், துப்பாக்கி முனை ஆகிய படங்களில் நடித்துள்ளார்.

கொரோனா 2வது அலை வேகமாக பரவி வரும் நிலையில் அம்மு அபிராமி தற்போது கொரோனா தொற்றில் சிக்கி உள்ளார். இதுகுறித்து அவர் டுவிட்டரில் வெளியிட்டுள்ள பதிவில், “எனக்கு காய்ச்சல் அறிகுறிகள் இருந்தன. இதையடுத்து கொரோனா பரிசோதனை செய்து கொண்டேன். அப்போது எனக்கு கொரோனா தொற்று இருப்பது உறுதியானது.

இதையடுத்து மருத்துவர் ஆலோசனைப்படி வீட்டில் என்னை தனிமைப்படுத்திக் கொண்டேன். தேவையான மருந்துகளும் எடுத்து வருகிறேன். முன்பை விட வலிமையாக திரும்பி வருவேன். பாதுகாப்பாக இருங்கள். அதிக கவனம் எடுத்துக்கொள்ளுங்கள்'' என்று கூறியுள்ளார்.

அம்மு அபிராமி விரைவில் குணமடைய வலைத்தளத்தில் ரசிகர்கள் வாழ்த்து தெரிவித்து வருகிறார்கள்.

# வாக்கு எண்ணும் மையங்களிலிருந்த அதிகாரிகளுக்கு கொரோனா தொற்று

சட்டசபை தேர்தலில் வாக்கு எண்ணும் மையங்களில் இருந்த தேர்தல் அதிகாரிகள் மற்றும் முகவர்கள் அனைவருக்கும் கடந்த 2 நாட்களுக்கு முன்பே கொரோனா பரிசோதனை செய்யப்பட்டு இருந்தது.

இதில் கொரோனா தொற்று கண்டறியப்பட்டவர்கள் வாக்கு எண்ணும் மையத்தில் அனுமதிக்கப்படவில்லை. அதேபோல் சென்னையில் தி.மு.க. தலைவர் மு.க. ஸ்டாலின் போட்டியிட்ட கொளத்தூர் தொகுதி, தேர்தல் அதிகாரியான தங்கவேலுக்கு கொரோனா தொற்று இருப்பது கண்டறியப்பட்டது. இதைத்தொடர்ந்து கொளத்தூர் தொகுதி வாக்கு எண்ணும் மையத்தில் அவருக்கு பதிலாக கண்ணன் என்பவர் தேர்தல் நடத்தும் அலுவலராக நியமிக்கப்பட்டார். புதிய அதிகாரி வந்தபிறகே வாக்கு எண்ணும் பணிகள் நடைபெற்றன.

இதேபோல் எழும்பூர் தொகுதி தேர்தல் நடத்தும் அலுவலருக்கும் கொரோனா தொற்று இருப்பது கண்டறியப்பட்டது. இதைத்தொடர்ந்து அவரும் கடமையிலிருந்து மாற்றப்பட்டார்.

# பெறுகை அறிவித்தல்

## வீதி அபிவிருத்தி, போக்குவரத்து, மின்சாரம் மற்றும் சக்திவலு, வீடமைப்பு நிர்மாணத்துறை அமைச்சு

## மத்திய மாகாணம்

மத்திய மாகாண சபையின் வீதி அபிவிருத்தி, போக்குவரத்து, மின்சாரம் மற்றும் சக்திவலு, வீடமைப்பு நிர்மாணத்துறை அமைச்சின் பெறுகைக் குழுத் தவிசாளரினால் நிர்மாணக் கைத்தொழில் மற்றும் அதிகார சபையில் (CIDA) வீதிகள் துறையில் செல்லுபடியாகும் பதிவைக் கொண்டுள்ள ஒப்பந்தக்காரர்களிடமிருந்து கைத்தொழில் நிர்மாணம் மற்றும் பொருட்களை வழங்கப் பெற்றுக்கொள்வதற்காக பின்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள வேலைகளுக்காக கேள்விகள் கோரப்படுகின்றன. கேள்வித் தொகை 5 அல்லது 5 மில்லியன் ரூபாவுக்கு மேற்பட்ட வேலைகளுக்கு 1987ஆம் ஆண்டின் 03ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டத்திற்கமைய பதிவு செய்து கொண்டிருத்தல் வேண்டும்.

2021-05-04ஆம் திகதி முதல் 2021-05-25ஆம் திகதி வரையான அரச வேலை நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரை காரியாலய நேரத்தில் கண்டி, போகம்பர, எஹலபொல குமாரிஹாமி மாவத்தையில் அமைந்துள்ள மாகாண வீதி அபிவிருத்தி அதிகார சபை, பொது முகாமையாளரிடம், நிர்மாணக் கைத்தொழில் அபிவிருத்தி அதிகார சபையில் வீதிகளுக்காக செல்லுபடியாகும் பதிவைக் கொண்டுள்ள ஒப்பந்தக்காரர்களின் செல்லுபடியாகும் பதிவுப் புத்தகம் சகிதம் அந்தந்த விடயங்களுக்கு எதிரில் காட்டப்பட்டுள்ள மீளளிக்கப்படாத கேள்வி வைப்பை மக்கள் வங்கியின் 158100110000022 கணக்கு இலக்கத்திற்கு வரவு வைக்கப்பட்ட பற்றுச்சீட்டு மூலப் பிரதியைச் சமர்ப்பித்து கேள்வி மாதிரிப்பத்திரங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

**கவனிக்கவும்:** மேற்படி கணக்கிலக்கத்திற்கு உங்களால் பணம் வைப்புச் செய்யப்படும் போது பற்றுச்சீட்டில்

- ஒப்பந்த நிறுவனத்தின் பெயர் மற்றும் முகவரி
- உங்களால் பணம் செலுத்தப்பட்ட வேலைக்கு இயைபான ஒப்பந்த இலக்கம்
- ஒவ்வொரு கேள்விக்காகவும் மீளளிக்கப்படாத கேள்விக் கட்டணத்தை வெவ்வேறாக தெளிவாகக் குறிப்பிட்டிருத்தல் வேண்டும்.

முறையாகப் பூர்த்தி செய்து முத்திரைக்குறி பொறிக்கப்பட்ட கேள்விகளை மூலப் பிரதி மற்றும் நகல் பிரதி என வெவ்வேறு உறைகளிலிட்டு அவ்விரு உறைகளையும் ஒரு உறையிலிட்டு **தலைவர், பெறுகைக் குழு, வீதி அபிவிருத்தி, போக்குவரத்து, மின்சக்தி, சக்திவலு மற்றும் வீடமைப்பு நிர்மாணத்துறை அமைச்சு, 109, யடிநுவர வீதி, கண்டி எனும்** முகவரிக்கு 2021-05-31ஆம் திகதி மு.ப. 10.30 மணிக்கு முன் கிடைக்கும் வகையில் பதிவுத் தபாலில் அனுப்பியோ அல்லது இக்காரியாலயத்தில் இந்நோக்கத்திற்காக வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிட்டோ கேள்விகளைச் சமர்ப்பிக்கலாம். கேள்விகளைத் தாங்கி வரும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் பத்திரிகை விளம்பரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள வேலைக்கு இயைபுடைய விடய இலக்கத்தையும் வேலையின் பெயரையும் தெளிவாகக் குறிப்பிடவும். கேள்விகள் ஏற்கப்பட்டு முடிவடைந்த உடனடுத்து கேள்விகள் திறக்கப்படுமென்பதுடன் அவ்வேளையில் கேள்விதாரர் அல்லது கேள்விதாரரின் அதிகாரபூர்வ பிரதிநிதியொருவர் கலந்து கொள்வதற்கு அனுமதி வழங்கப்படும்.

விலைக்கோரல் முன்னோடிக் கூட்டம் 2021-05-18ஆம் திகதி மு.ப. 9.30 மணிக்கு கண்டி, போகம்பர, இல. 09, எஹெல்லேபொல குமாரிஹாமி மாவத்தை, வீதி அபிவிருத்தி அதிகார சபையின் தலைமை அலுவலகத்தில் இடம்பெறும்.

உங்களுக்குத் தேவையான மேலதிக விபரங்களை சாதாரண அலுவலக நேரத்தினுள் பின்வரும் தொலைபேசி இலக்கங்களில் பெற்றுக்கொள்ளலாம். தொலைபேசி இலக்கங்கள் 081-4953119, 081-4946345, 052-4930014, 081-2204378)

மாகாண வீதி அபிவிருத்தி அதிகார சபையின் கீழ் ஒப்பந்த நிறுவனத்தினால் 2020ஆம் வருடத்தில் நிறைவேற்றப்பட்ட வேலைகளுக்காக செயலாற்றுகை ஒப்பந்தங்களை வழங்கும் போது கவனத்திற் கொள்ளப்படும். அதேபோல் ஒரு ஒப்பந்த நிறுவனத்திற்கு ஒன்றுக்கு மேற்பட்ட ஒப்பந்தத்தை வழங்கமுடியுமா என்பது பற்றி பெறுகைக் குழு தீர்மானிக்கும். கேள்வி ஆவணங்களுடன் உங்களால் வழங்கப்படும் ஆவணங்களை சரியாகவும் மற்றும் கேள்விப் படிவத்தில் தரப்பட்டுள்ள அறிவுரைகளுக்கு அமைவாகவும் சமர்ப்பித்தல் உங்கள் பொறுப்பாகும் என்பதுடன் இயைபான தகவல்கள் சரியாகச் சமர்ப்பிக்கப்படாமை கேள்விகள் நிராகரிக்கப்படுவதற்கு ஏதுவாகலாம். மேலும் ஏதாவது ஒரு கேள்வியை அல்லது எல்லாக் கேள்விகளையும் காரணம் காட்டாமல் நிராகரிக்கும் உரிமை பெறுகைக் குழுவின் தவிசாளருக்கு உண்டென்பதுடன், ஆகக் குறைந்த விலைமனுவை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்ற கடப்பாடும் இல்லை.

**தவிசாளர்,**
**பெறுகைக் குழு.**

**வீதி அபிவிருத்தி, போக்குவரத்து, மின்சக்தி, சக்திவலு மற்றும்**
**வீடமைப்பு நிர்மாணத்துறை அமைச்சு,**
**109, யடிநுவர வீதி,**
**கண்டி.**

# மாகாண வீதி அபிவிருத்தி அதிகார சபை
# இரண்டாம் கட்ட பெறுகை கோருதல் (திறந்த) - 2021

| தொ. இல | ஒப்பந்த இலக்கம் | விபரங்கள் | CIDA பதிவு | அளவுப் பத்திரத்தின் பெறுமதி (ரூ. மில்.) | மீளளிக்கப்படாத கேள்விப் படிவக் கட்டணம் ரூ. | கேள்விப் பிணை முறி (செல்லுபடியாகும் கால எல்லை 120 நாட்கள்) | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | கேள்விப் பிணை ரொக்கப் பணமாக | கேள்விப் பிணை வங்கிப் பிணை முறியாக |
| **மாகாண நிலையான அபிவிருத்தி மானிய செயற்றிட்டம்** | | | | | | | |
| **கண்டி மாவட்டம்** | | | | | | | |
| **நிறைவேற்றுப் பொறியியலாளர் பிரிவு – கண்டி.** | | | | | | | |
| 1 | CPC/PRDA/PSDG/K/KAN/2021/02 | கந்தகெபுதென்ன நிலவல வீதிக்கு கார்பட் இட்டு அபிவிருத்தி செய்தல் மற்றும் கட்டமைப்புகளை நிர்மாணித்தல் : (2+863-4+750 km) | C5 - C4 | 33.07 | 9,000.00 | 165,500.00 | 331,000.00 |
| **நிறைவேற்றுப் பொறியியலாளர் பிரிவு – ஹாரிஸ்பத்துவ** | | | | | | | |
| 2 | CPC/PRDA/PSDG/K/HAR/2021/03 | யட்டிவாவல பொல்வத்த வீதிக்கு கார்பட் இட்டு அபிவிருத்தி செய்தல் மற்றும் கட்டமைப்புகளை நிர்மாணித்தல் : (0+450 -0+990 km) | C7 - C6 | 6.23 | 3,500.00 | 31,500.00 | 63,000.00 |
| **நிறைவேற்றுப் பொறியியலாளர் பிரிவு – குண்டசாலை** | | | | | | | |
| 3 | CPC/PRDA/PSDG/K/KUN/2021/03 | பிலவல ஹீனட்டிகும்புர வீதிக்கு அஸ்போல்ட் பரப்புதல் மற்றும் கட்டமைப்புகளை நிர்மாணித்தல் : (0+000-0+540km) | C6 - C5 | 13.01 | 5,000.00 | 65,500.00 | 131,000.00 |
| **நிறைவேற்றுப் பொறியியலாளர் பிரிவு – கம்பொல** | | | | | | | |
| 4 | CPC/PRDA/PSDG/K/GAM/2021/03 | பிலிகல தவுலாகல வீதிக்கு கார்பட் இட்டு அபிவிருத்தி செய்தல் மற்றும் கட்டமைப்புகளை நிர்மாணித்தல்: (2+000-3+550 km) | C6 - C5 | 13.76 | 5,000.00 | 69,000.00 | 138,000.00 |
| 5 | CPC/PRDA/MAIN/K/GAM/2021/04 | ஸ்டெலன்பேர்ச் கெப் வீதிக்கு கார்பட் இட்டு அபிவிருத்தி செய்தல் மற்றும் கட்டமைப்புகளை நிர்மாணித்தல்: (0+000-1+600 km) | C6 - C5 | 14.28 | 5,000.00 | 71,500.00 | 143,000.00 |
| **மாத்தளை மாவட்டம்** | | | | | | | |
| நிறைவேற்றுப் பொறியியலாளர் பிரிவு – மாத்தளை | | | | | | | |
| 6 | CPC/PRDA/PSDG/M/MAT/2021/03 | வேரகம பண்டாரபொல கொடபொல வீதிக்கு கார்பட் இட்டு அபிவிருத்தி செய்தல் மற்றும் கட்டமைப்புகளை நிர்மாணித்தல்: (For 4+190 - 5+190km) | C6 - C5 | 19.73 | 6,000.00 | 99,000.00 | 198,000.00 |
| நிறைவேற்றுப் பொறியியலாளர் பிரிவு – நாஉல | | | | | | | |
| 7 | CPC/PRDA/PSDG/M/NAU/2021/03 | மெனிக்தென வெலமிட்டியாவ வீதிக்கு கார்பட் இட்டு அபிவிருத்தி செய்தல் மற்றும் "U" வடிவிலான வடிகானை நிர்மாணித்தல்: (From 3+146 - 3+831 km) | C7 - C6 | 7.99 | 3,500.00 | 40,000.00 | 80,000.00 |
| **வீதிப் பராமரிப்பு நிகழ்ச்சித் திட்டம்** | | | | | | | |
| **கண்டி மாவட்டம்** | | | | | | | |
| **நிறைவேற்றுப் பொறியியலாளர் பிரிவு – கண்டி.** | | | | | | | |
| 8 | CPC/PRDA/MAIN/K/KAN/2021/03 | ரஜபிஹில்ல வீதியை விஸ்தரித்து கார்பட் இட்டு அபிவிருத்தி செய்தல் மற்றும் கட்டமைப்புகளை நிர்மாணித்தல் : (1+475-1+850 km) மற்றும் வாரியபொல ஸ்ரீ சுமங்கள மாவத்தையில் கட்டமைப்புகளை நிர்மாணித்தல் : (0+150 - 1+550 km) | C6 - C5 | 12.26 | 5,000.00 | 61,500.00 | 123,000.00 |
| 9 | CPC/PRDA/MAIN/K/KAN/2021/11 | அங்கெலிபிட்டிய உடுவெல வீதியில் பக்கச் சுவர் மற்றும் "U" வடிவிலான வடிகானை நிர்மாணித்தல் (4+950 - 5+250 km) | C8 - C7 | 2.33 | 2,500.00 | 12,000.00 | 24,000.00 |
| 10 | CPC/PRDA/MAIN/K/KAN/2021/12 | ஹாரகம முற்றவெளியை நவீனமயப்படுத்துதல் | C8 - C7 | 3.14 | 2,500.00 | 16,000.00 | 32,000.00 |
| **நிறைவேற்றுப் பொறியியலாளர் பிரிவு – ஹாரிஸ்பத்துவ** | | | | | | | |
| 11 | CPC/PRDA/MAIN/K/HAR/2021/10 | கல்ஹின்ன விலான வீதியில் பக்கச் சுவர் மற்றும் வீதிக்குக் குறுக்காக வடிகானை அமைத்தல்: (0+000-1+000 km) | C8 - C7 | 4.65 | 2,500.00 | 23,500.00 | 47,000.00 |
| 12 | CPC/PRDA/MAIN/K/HAR/2021/11 | அக்குறணை புலுகொஹோதென்ன வீதியில் கொங்கிறீட் கட்டமைப்புகளை நிர்மாணித்தல்: (0+400 km RHS) | C7 - C6 | 7.72 | 3,500.00 | 39,000.00 | 78,000.00 |
| 13 | CPC/PRDA/MAIN/K/HAR/2021/12 | மடதெனிய மாரதுகொட வீதியில் கொங்கிறீட் கட்டமைப்புகளை நிர்மாணித்தல் மற்றும் வெள்ளைக் கோடுகளை அடையாளமிடல்: (0+000 1+560 km) | C7 - C6 | 5.11 | 3,500.00 | 26,000.00 | 52,000.00 |
| 14 | CPC/PRDA/MAIN/K/HAR/2021/13 | ஹேதெனிய போலகல வீதியில் கட்டமைப்புகளை நிர்மாணித்தல் மற்றும் வீதி சமிஞ்ஞைகளை அடையாளமிடல்: (0+000-3+000 km) | C7 - C6 | 5.11 | 3,500.00 | 26,000.00 | 52,000.00 |
| 15 | CPC/PRDA/MAIN/K/HAR/2021/14 | வெலிகொடபல பொத்தபிட்டிய வீதியில் கட்டமைப்புகளை நிர்மாணித்தல் மற்றும் வீதி சமிஞ்ஞைகளை அடையாளமிடல்: (0+000-6+000 km) | C7 - C6 | 5.53 | 3,500.00 | 28,000.00 | 56,000.00 |
| 16 | CPC/PRDA/MAIN/K/HAR/2021/15 | அரம்பேபொல பதபராகொல்ல வீதியில் "U" வடிவிலான வடிகான் மற்றும் பக்கச் சுவரை நிர்மாணித்தல்: (0+000 - 1+500 km) | C8 - C7 | 4.14 | 2,500.00 | 21,000.00 | 42,000.00 |
| 17 | CPC/PRDA/MAIN/K/HAR/2021/16 | அக்குறணை துனுவில பன்கொல்லாமட வீதியில் "U" வடிவிலான வடிகான் மற்றும் பக்கச் சுவரை நிர்மாணித்தல்: (0+025 LHS & 1+200 RHS) | C8 - C7 | 2.90 | 2,500.00 | 15,000.00 | 30,000.00 |
| 18 | CPC/PRDA/MAIN/K/HAR/2021/17 | போதொட்ட அத்தரகம வீதியில் கட்டமைப்புகளை நிர்மாணித்தல்: (0+000-1+850 km) | C8 - C7 | 3.39 | 2,500.00 | 17,000.00 | 34,000.00 |
| 19 | CPC/PRDA/MAIN/K/HAR/2021/18 | மாரதுகொட பிரிவெனா ஊடாக கல்லேல்ல வீதியில் கட்டமைப்புகளை நிர்மாணித்தல் மற்றும் வெள்ளைக் கோடுகளை அடையாளமிடல்: (0+000-1+000 km) | C8 - C7 | 2.73 | 2,500.00 | 14,000.00 | 28,000.00 |
| 20 | CPC/PRDA/MAIN/K/HAR/2021/19 | கிதுள்கொல்ல வெல்கால வீதியில் கட்டமைப்புகளை நிர்மாணித்தல்: (0+000 - 2+000 km) | C8 - C7 | 2.44 | 2,500.00 | 12,500.00 | 25,000.00 |
| 21 | CPC/PRDA/MAIN/K/HAR/2021/20 | மேமவல ருப்பேவத்த வீதியில் கட்டமைப்புகளை நிர்மாணித்தல்: (0+000 - 6+000 km) | C7 - C6 | 8.39 | 3,500.00 | 42,000.00 | 84,000.00 |
| 22 | CPC/PRDA/MAIN/K/HAR/2021/21 | அம்பேதென்ன இயந்திரப் பொறியியலாளர் அலுவலகத்திற்கு பாதுகாப்புச் சுவரை நிர்மாணித்தல் | C7 - C6 | 5.68 | 3,500.00 | 28,500.00 | 57,000.00 |
| 23 | CPC/PRDA/MAIN/K/HAR/2021/25 | ரூப்போவத்த மெடில்ல வீதியில் வடிவிலான வடிகான் மற்றும் பக்கச் சுவரை நிர்மாணித்தல்: (0+000 - 2+200 km) | C8 - C7 | 4.94 | 2,500.00 | 25,000.00 | 50,000.00 |
| **நிறைவேற்றுப் பொறியியலாளர் பிரிவு – குண்டசாலை** | | | | | | | |
| 24 | CPC/PRDA/MAIN/K/KUN/2021/04 | கரந்தகொல்ல கல்எலுவ வீதிக்கு கொங்கிறீட் இடுதல் : (1+785-1+876 km) மற்றும் சிறிமல்வத்த மெனிக்ஹின்ன வீதியில் தடுப்புச் சுவரை நிர்மாணித்தல் : (2+010-2+025 km) | C8 - C7 | 2.82 | 2,500.00 | 14,500.00 | 29,000.00 |
| 25 | CPC/PRDA/MAIN/K/KUN/2021/05 | கிரிமெட்டிய குண்டசாலை வீதிக்கு கொங்கிறீட் வடிகான், கடினமான வரம்புகள் மற்றும் இரும்பு வலைகளை நிர்மாணித்தல்: (1/5-1/6) | C8 - C7 | 2.85 | 2,500.00 | 14,500.00 | 29,000.00 |
| 26 | CPC/PRDA/MAIN/K/KUN/2021/06 | தெல்தெனிய ஒருதொட்ட பன்வில வீதியில் கொங்கிறீட் வடிகான் மற்றும் வன்மையான வரம்புகளை அமைத்தல்: (3+709-4+000 km) | C8 - C7 | 3.07 | 2,500.00 | 15,500.00 | 31,000.00 |
| 27 | CPC/PRDA/MAIN/K/KUN/2021/07 | கெட்டதென்ன மெதகம்மெத்த வீதிக்கு கார்பட் இட்டு அபிவிருத்தி செய்தல் மற்றும் கட்டமைப்புகளை நிர்மாணித்தல்: (0+000-1+600 km) | C6 - C5 | 17.50 | 6,000.00 | 88,000.00 | 176,000.00 |
| 28 | CPC/PRDA/MAIN/K/KUN/2021/08 | உடுதும்பர கலுதென்ன தெம்மிட்டியான வீதிக்கு கார்பட் இடுதல், கொங்கிறீட் வடிகானை அமைத்தல் மற்றும் அறிவித்தல் பலகையைப் பொருத்துதல்: (0+000-8+800 km) | C5 - C4 | 34.77 | 9,000.00 | 174,000.00 | 348,000.00 |
| **நிறைவேற்றுப் பொறியியலாளர் பிரிவு – கம்பொல** | | | | | | | |
| 29 | CPC/PRDA/MAIN/K/GAM/2021/06 | உடஹேனதென்ன எபலவத்த வீதியில் பக்கச் சுவரை நிர்மாணித்தல் : (Ch- 0+000 RHS 0+540 LHS) | C7 - C6 | 5.83 | 3,500.00 | 29,500.00 | 59,000.00 |
| 30 | CPC/PRDA/MAIN/K/GAM/2021/07 | எரின்முல்கம யெரொவத்த வீதிக்கு கார்பட் இட்டு அபிவிருத்தி செய்தல் மற்றும் "U" வடிவிலான வடிகான் மற்றும் பக்கச் சுவரை நிர்மாணித்தல்: (2+060-3+558 km) | C6 - C5 | 15.71 | 6,000.00 | 79,000.00 | 158,000.00 |
| 31 | CPC/PRDA/MAIN/K/GAM/2021/08 | வதுபொல பம்பரதெனிய வீதியில் பக்கச் சுவரை நிர்மாணித்தல்: (1+380-LHS ) 1+400-LHS km | C8 - C7 | 2.01 | 2,500.00 | 10,500.00 | 21,000.00 |
| 32 | CPC/PRDA/MAIN/K/GAM/2021/09 | கெலிஓய கம்புறுதெனிய வீதிக்கு கார்பட் இட்டு அபிவிருத்தி செய்தல் மற்றும் "U" வடிவிலான வடிகான் மற்றும் மதகை நிர்மாணித்தல்: (0+700-2+702 km) | C8 - C7 | 2.31 | 2,500.00 | 12,000.00 | 24,000.00 |
| 33 | CPC/PRDA/MAIN/K/GAM/2021/10 | வட்டப்பொல கங்ஹத வீதியில் பக்கச் சுவரை நிர்மாணித்தல்: (Ch 2+400 LHS) 2+430 LHS | C8 - C7 | 2.41 | 2,500.00 | 12,500.00 | 25,000.00 |
| 34 | CPC/PRDA/MAIN/K/GAM/2021/11 | களுவஹல்கட கங்ஹத வீதியில் பக்கச் சுவரை நிர்மாணித்தல்: (Ch 0+980LHS, 2+128 LHS | C8 - C7 | 4.58 | 2,500.00 | 23,000.00 | 46,000.00 |
| 35 | CPC/PRDA/MAIN/K/GAM/2021/12 | வெலிகல்ல தலவத்துர வீதியில் பக்கச் சுவர் மற்றும் "U" வடிவிலான வடிகானை நிர்மாணித்தல்: (Ch 2+800 km) | C8 - C7 | 2.18 | 2,500.00 | 11,000.00 | 22,000.00 |
| 36 | CPC/PRDA/MAIN/K/GAM/2021/13 | நியதிவெல கொலொனி வீதிக்கு கார்பட் இட்டு அபிவிருத்தி செய்தல் மற்றும் "U" வடிவிலான வடிகானை நிர்மாணித்தல்: (0+000-1+430 km) | C6 - C5 | 19.53 | 6,000.00 | 98,000.00 | 196,000.00 |
| 37 | CPC/PRDA/MAIN/K/GAM/2021/14 | உடஹேன்தென்ன முற்றவெளியை நவீனமயப்படுத்துதல் | C8 - C7 | 3.57 | 2,500.00 | 18,000.00 | 36,000.00 |

# மருந்துப்பொருள் பாதுகாப்பு பெட்டகங்கள் ஜப்பானிய அரசாங்கத்தினால் அன்பளிப்பு

லோரன்ஸ் செல்வநாயகம்

கொரோனா வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்தும் வேலைத்திட்டத்தை பலப்படுத்தும் வகையில் ஜப்பானிய அரசாங்கம் யுனிசெப் அனுசரணையுடன் 500 குளிரூட்டப்பட்ட மருந்து மற்றும் ஊசி மருந்துகள் பாதுகாப்புப் பெட்டகங்களை இலங்கைக்கு அன்பளிப்புச் செய்துள்ளது.

கொழும்பிலுள்ள யுனிசெப் அலுவலகத்தில் வைத்து சுகாதார அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சியிடம் மேற்படி உபகரணங்களை இலங்கையிலுள்ள ஜப்பான் தூதுவர் சுஜியாமா அகிரா உத்தியோகபூர்வமாக கையளித்துள்ளதுடன் மேற்படி உபகரணங்களின் பெறுமதி ஐந்து மில்லியனுக்கும் அதிகமாகும் என்றும் சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

இதன் இரண்டாம் கட்டமாக மேலும் 750 மருந்து பாதுகாப்பு பெட்டகங்களை வழங்குவதற்கு ஜப்பானிய அரசாங்கம் தீர்மானித்துள்ளது என்றும் சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.




சுகாதார சேவை அதிகாரிகள் காரியாலயத்தில் இருந்து தடுப்பூசிகள் வழங்கப்படும் இடங்கள் வரை பாதுகாப்பான முறையில் தேவையான வெப்ப நிலையுடன் ஊசி மருந்துகளை கொண்டு செல்வதற்கு மேற்படி உபகரணங்கள் பாவிக்கப்பட உள்ளன.

ஜப்பானுக்கும் இலங்கைக்கும் இடையிலான நல்லுறவுகள் நீண்ட காலமாக தொடரும் நிலையில் இலங்கைக்கு உதவுவதில் ஜப்பானிய அரசாங்கம் ஒரு போதும் பின்னிற்கவில்லை என்றும் ஜப்பானின் தொடர் உதவிகளுக்காக நன்றி தெரிவிப்பதாகவும் சுகாதார அமைச்சர் பவித்ரா வன்னியாரச்சி இதன்போது குறிப்பிட்டார்.

மேற்படி நிகழ்வில் யுனிசெப் நிறுவனத்தின் இலங்கைக்கான வதிவிட பிரதிநிதி எம்மா பிரைஹெம், தொடர்பாடல் அதிகாரி, பிஸ்மார்க் ஸ்வன்ஜின், சுகாதார அமைச்சின் அதிகாரி டாக்டர் தம்மிகா ரொவெல், சுகாதார அமைச்சின் மேலதிக செயலாளர் டாக்டர் லக்ஷ்மி சோமதுங்க ஆகியோரும் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.

## விதிமுறைகளை மீறிய திருவிழா; உபயக்காரர்கள் தனிமைப்படுத்தல்

(யாழ்.விசேட நிருபர்)

கொரோனா சுகாதார விதிமுறைகளை மீறி ஆலயத்தில் திருவிழா நடத்திய உபயக்காரர் உள்ளிட்ட நான்கு பேர் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர்.

காரைநகர் களபூமி பகுதியில் உள்ள ஆலயத்தில் வருடாந்திர மகோற்சவம் நடைபெற்று வருகின்றது. இன்றைய தினம் திங்கட்கிழமை தேர் திருவிழா நடைபெறவுள்ள நிலையில் நேற்றைய தினம் சப்பர திருவிழா நடைபெற்றது.

அதன் போது காரைநகர் சுகாதார வைத்திய அதிகாரி மற்றும் காரைநகர் பொது சுகாதார பரிசோதகர் ஆகியோரின் அறிவுறுத்தல்களை மீறி ஆலயத்தில் பெருமளவானோர் சப்பர திருவிழாவில் கூடியிருந்தனர்.

சுகாதார விதிமுறைகள், கட்டுப்பாடுகளை மீறி 50க்கும் மேற்பட்டோர் உரிய முறையில் முக கவசங்கள் இன்றியும், சமூக இடைவெளிகளை பேணாமலும் திருவிழாவில் கூடி இருந்துள்ளனர்.

அதனை அடுத்து, ஆலயத்திற்கு சென்றிருந்த சுகாதார வைத்திய அதிகாரி மற்றும் பொது சுகாதார பரிசோதகர் உள்ளிட்டோர் ஆலய திருவிழாவினை நிறுத்தி, ஆலய குருக்கள், உபயக்காரர், ஆலய நிர்வாகத்தை சேர்ந்தோர் உள்ளிட்ட நான்கு பேரை தனிமைப்படுத்தி உள்ளனர்.

| தொ. இல | ஒப்பந்த இலக்கம் | விபரங்கள் | CIDA பதிவு | அளவுப் பத்திரத்தின் பெறுமதி (ரூ. மில்.) | மீளளிக்கப்படாத கேள்விப் படிவக் கட்டணம் ரூ. | கேள்விப் பிணை முறி (செல்லுபடியாகும் கால எல்லை 120 நாட்கள்) | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | கேள்விப் பிணை ரொக்கப் பணமாக | கேள்விப் பிணை வங்கிப் பிணை முறியாக |
| 38 | CPC/PRDA/ MAIN/K/ GAM/2021/15 | கெலிஓய முற்றவெளியில் களஞ்சியசாலை மற்றும் குளியலறையை நிர்மாணித்தல் | C9 - C8 | 1.31 | 1,000.00 | 7,000.00 | 14,000.00 |
| 39 | CPC/PRDA/ MAIN/K/ GAM/2021/16 | கஹம்பே ஹெபான பூவெலிகட வீதியில் பக்கச் சுவர் மற்றும் "U" வடிவிலான வடிகானை நிர்மாணித்தல்: (Ch 4+650 RHS, 4+845 LHS) | C8 - C7 | 2.83 | 2,500.00 | 14,500.00 | 29,000.00 |
| 40 | CPC/PRDA/ MAIN/K/ GAM/2021/17 | துன்தெனிய கஹவத்த சமரகோன்ஹேன வீதியின் பாலத்தை விஸ்தரித்தல் | C7 - C6 | 5.62 | 3,500.00 | 28,500.00 | 57,000.00 |
| **மாத்தளை மாவட்டம்** | | | | | | | |
| **நிறைவேற்றுப் பொறியியலாளர் பிரிவு – மாத்தளை** | | | | | | | |
| 41 | CPC/PRDA/ MAIN/M/ MAT/2021/05 | ஒலிவ்கந்த, தப்பட்டுவாவ மொரஹெல வீதிக்கு கார்பட் இட்டு அபிவிருத்தி செய்தல் மற்றும் "U" வடிவிலான வடிகானை நிர்மாணித்தல்: (2+320-3+200 km) | C6 - C5 | 16.73 | 6,000.00 | 84,000.00 | 168,000.00 |
| 42 | CPC/PRDA/ MAIN/M/ MAT/2021/06 | மெல்சிரிபுற மில்லவான வீதியில் கட்டமைப்புகளை நிர்மாணித்தல் மற்றும் முன்கலவையைப் பயன்படுத்தி வீதியில் வரம்பை அமைத்தல்: (0+000-3+000 km) | C7 - C6 | 7.18 | 3,500.00 | 36,000.00 | 72,000.00 |
| 43 | CPC/PRDA/ MAIN/M/ MAT/2021/07 | கூம்பியன்கொட கொட்டுவேகெதர வீதியின் மதகு (Ch 0+490 km) பக்கச் சுவரை நிர்மாணித்தல் : (0+570 -0+599 km) "U" வடிவிலான வடிகானை நிர்மாணித்தல் (0+140-0+803 km) மற்றும் திடமான வரம்பை நிர்மாணித்தல் | C6 - C5 | 11.88 | 5,000.00 | 59,500.00 | 119,000.00 |
| 44 | CPC/PRDA/ MAIN/M/ MAT/2021/08 | போவத்த நுகபிட்டிய வீதிக்கு கார்பட் இட்டு அபிவிருத்தி செய்தல் மற்றும் பக்கச் சுவரை நிர்மாணித்தல்: (1+500 - 3+200km) | C6 - C5 | 14.35 | 5,000.00 | 72,000.00 | 144,000.00 |
| 45 | CPC/PRDA/ MAIN/M/ MAT/2021/09 | மாத்தளை நிறைவேற்றுப் பொறியியலாளர் அலுவலகம் மற்றும் பிரதான பொறியியலாளர் அலுவலகக் கட்டிடத்தின் திருத்தவேலைகள் | C8- C7 | 2.74 | 2,500.00 | 14,000.00 | 28,000.00 |
| 46 | CPC/PRDA/ MAIN/M/ MAT/2021/10 | மஹவெல யட்டவத்த மற்றும் திக்கும்புர பதினிகஸ்கொட்டுவ வீதியின் கட்டமைப்புகளை நிர்மாணித்தல் | C6 - C5 | 14.24 | 5,000.00 | 71,500.00 | 143,000.00 |
| **நிறைவேற்றுப் பொறியியலாளர் பிரிவு – நாஉல** | | | | | | | |
| 47 | CPC/PRDA/ MAIN/M/ NAU/2021/06 | பன்னம்பிட்டிய எம்புல்அம்பே வீதிக்கு கார்பட் இட்டு அபிவிருத்தி செய்தல் மற்றும் "U" வடிவிலான வடிகானை நிர்மாணித்தல்: (0+000-1+969km) | C6 - C5 | 23.12 | 7,000.00 | 116,000.00 | 232,000.00 |
| 48 | CPC/PRDA/ MAIN/M/ NAU/2021/07 | தலகிரியாகம தென்னகோன்புர மகுலகஸ்வெவ வீதியின் மதகு (Ch 4+836 km), மற்றும் பக்கச் சுவரை நிர்மாணித்தல்: (Ch 5+600km) | C8 - C7 | 3.11 | 2,500.00 | 16,000.00 | 32,000.00 |
| **நுவரெலியா மாவட்டம்** | | | | | | | |
| **நிறைவேற்றுப் பொறியியலாளர் பிரிவு – ரிகில்லகஸ்கட** | | | | | | | |
| 49 | CPC/PRDA/ MAIN/N/ RIK/2021/05 | பொரடமடுல்ல பல்லேபோவல வீதியில் பக்கச் சுவரை நிர்மாணித்தல் மற்றும் திடமான வரம்பை அமைத்தல்: (மதகு - 4/4 - 4/5) | C9 - C8 | 1.51 | 1,000.00 | 8,000.00 | 16,000.00 |
| 50 | CPC/PRDA/ MAIN/N/ RIK/2021/06 | திம்புல்கும்புர தொடம்கும்புர வீதியில் தடுப்புச் சுவரை நிர்மாணித்தல் (மதகு - 1/1-1/2) | C8 - C7 | 4.42 | 2,500.00 | 22,500.00 | 45,000.00 |
| 51 | CPC/PRDA/ MAIN/N/ RIK/2021/07 | பதியபெலெல்ல எலமுல்ல வீதியில் தடுப்புச் சுவர் மற்றும் கொங்கிறீட் வடிகானை நிர்மாணித்தல் (மதகு 7/1-7/3 மற்றும் 3/2 - 3/3) | C7 - C6 | 6.77 | 3,500.00 | 34,000.00 | 68,000.00 |
| 52 | CPC/PRDA/ MAIN/N/ RIK/2021/08 | பேரவங்குவ உனன்தென்ன வீதியில் பக்கச் சுவர் (Ch-0+900) LHS, மதகு (Ch 0+925) மற்றும் "U" வடிவிலான வடிகானை நிர்மாணித்தல் | C7 - C6 | 5.45 | 3,500.00 | 27,500.00 | 55,000.00 |
| 53 | CPC/PRDA/ MAIN/N/ RIK/2021/09 | உனன்தென்ன கொஸ்கஹதெபவ கித்துள்பே வீதியின் பக்கச் சவர் : Ch-1+900 LHS, மற்றும் "U" வடிவிலான வடிகானை நிர்மாணித்தல், பல்லேபோவல கன்னேவ உடுகம வீதியில் "U" வடிவிலான வடிகானை நிர்மாணித்தல் | C7 - C6 | 9.28 | 3,500.00 | 46,500.00 | 93,000.00 |
| 54 | CPC/PRDA/ MAIN/N/ RIK/2021/10 | பதியபெலெவ்வ வேலை பிரிவை புனரமைத்தல் | C8 - C7 | 2.61 | 2,500.00 | 13,500.00 | 27,000.00 |
| **நிறைவேற்றுப் பொறியியலாளர் பிரிவு – திம்புல்ல** | | | | | | | |
| 55 | CPC/PRDA/ MAIN/N/ DIM/2021/04 | திம்புல்ல பத்தனை அலுவலகத்தின் திருத்தவேலைகள், களஞ்சியசாலை அறையை நிர்மாணித்தல் மற்றும் உத்தியோகபூர்வ விடுதியைச் சுற்றி பாதுகாப்பு வேலியை நிர்மாணித்தல் | C7 - C6 | 9.12 | 3,500.00 | 46,000.00 | 92,000.00 |

| தொ. இல | ஒப்பந்த இலக்கம் | விபரங்கள் | CIDA பதிவு | அளவுப் பத்திரத்தின் பெறுமதி (ரூ. மில்.) | மீளளிக்கப்படாத கேள்விப் படிவக் கட்டணம் ரூ. | கேள்விப் பிணை முறி (செல்லுபடியாகும் கால எல்லை 120 நாட்கள்) | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | கேள்விப் பிணை ரொக்கப் பணமாக | கேள்விப் பிணை வங்கிப் பிணை முறியாக |
| 56 | CPC/PRDA/ MAIN/N/ DIM/2021/05 | கொரகாஓய இறப்பர் தொழிற்சாலை வீதியின் பக்க வடிகான்கள் மற்றும் வரம்புகளை நிர்மாணித்தல்: (0+000-1+000 km) | C8 - C7 | 3.35 | 2,500.00 | 17,000.00 | 34,000.00 |
| 57 | CPC/PRDA/ MAIN/N/ DIM/2021/06 | கினிகத்தேன ஹோமாகம வீதியில் கட்டமைப்புகளை நிர்மாணித்தல்: (0+350-1+230 km) | C7 - C6 | 5.00 | 3,500.00 | 25,500.00 | 51,000.00 |
| 58 | CPC/PRDA/ MAIN/N/ DIM/2021/07 | பதுபொல மெடில்ல தினியாய வீதிக்கு கார்பட் இட்டு அபிவிருத்தி செய்தல் மற்றும் கட்டமைப்புகளை நிர்மாணித்தல்: (0+000-1+500 km) | C6 - C5 | 22.22 | 7,000.00 | 111,500.00 | 223,000.00 |
| 59 | CPC/PRDA/ MAIN/N/ DIM/2021/08 | பகதொலுவ நிறைவேற்றுப் பொறியியலாளர் அலுவலகத்தில் காவற்கூடம் மற்றும் வாகன முற்றவெளியை நிர்மாணித்தல் | C9 - C8 | 1.09 | 1,000.00 | 5,500.00 | 11,000.00 |
| 60 | CPC/PRDA/ MAIN/N/ DIM/2021/09 | திபர்டன் முருதென்ன ஹங்கராபிட்டிய வீதியில் மணல் பரப்பி தார் இடுதல்: (10+902-14+830 km) | C7 - C6 | 7.85 | 3,500.00 | 39,500.00 | 79,000.00 |
| **நிறைவேற்றுப் பொறியியலாளர் பிரிவு – ராகல** | | | | | | | |
| 61 | CPC/PRDA/ MAIN/N/ RAG/2021/05 | (1) உடபுஸ்ஸல்லாவ நில்தண்டாஹின்ன வத்துமுல்ல வீதியில் தடுப்புச் சுவரை நிர்மாணித்தல் (மதகு - 20/1) | C7 - C6 | 7.82 | 3,500.00 | 39,500.00 | 79,000.00 |
| | | (2) உடபுஸ்ஸல்லாவ நில்தண்டாஹின்ன வத்துமுல்ல வீதியில் வீழ்ந்துள்ள கற்பாறையை உடைத்து அப்புறப்படுத்துதல்: (0+000-25+000km) | | | | | |
| 62 | CPC/PRDA/ MAIN/N/ RAG/2021/06 | தம்பகொல்ல பரகஹாராவ வீதியில் பக்கச் சுவரை நிர்மாதணித்தல்: (அமைவிடம் 0 + 450km) | C7 - C6 | 5.97 | 3,500.00 | 30,000.00 | 60,000.00 |
| 63 | CPC/PRDA/ MAIN/N/ RAG/2021/07 | நில்தண்டாஹின்ன கல்கெட்டிவல தெரிபெஹே வீதியில் "U" வடிவிலான வடிகானை நிர்மாணித்தல் மற்றும் திடமான வரம்புகளை நிர்மாணித்தல்: (Ch-2+095-2+235 km) | C8 - C7 | 3.40 | 2,500.00 | 17,500.00 | 35,000.00 |
| 64 | CPC/PRDA/ MAIN/N/ RAG/2021/08 | ராகல நிறைவேற்றுப் பொறியியலாளர் அலுவலகம், 6-A உத்தியோகபூர்வ விடுதி மற்றும் 4-A தொழிலாளர் விடுதியை அமைத்தல் | C8 - C7 | 3.31 | 2,500.00 | 17,000.00 | 34,000.00 |
| 65 | CPC/PRDA/ MAIN/N/ RAG/2021/09 | டில்குட்டி அக்ரஸ் வீதிக்கு கார்பட் இட்டு அபிவிருத்தி செய்தல் மற்றும் கட்டமைப்புகளை நிர்மாணித்தல்: (3+000-5+100 km) | C5 - C4 | 26.58 | 8,000.00 | 133,000.00 | 266,000.00 |
| **விசேட வீதிப் பராமரிப்பு (10%)** | | | | | | | |
| **நிறைவேற்றுப் பொறியியலாளர் பிரிவு – குண்டசாலை** | | | | | | | |
| 66 | CPC/PRDA/ MAIN/K/ KUN/2021/03 | இத்தமல்கொட, தெவதென்ன வீதியை அபிவிருத்தி செய்வதற்கான நிர்மாணம்: (0+090-0+160 km) | C9 - C8 | 0.82 | 1,000.00 | 4,500.00 | 9,000.00 |
| **பொருட்கள் வழங்குதல்** | | | | | | | |
| **நிறைவேற்றுப் பொறியியலாளர் பிரிவு – ஹாரிஸ்பத்துவ** | | | | | | | |
| 67 | CPC/PRDA/ MAIN/K/ HAR/2021/23 | அங்கும்புர எகொடமுல்ல வீதிக்கான பொருட்கள் வழங்குதல்: (0+000-2+000 km) | C9 - C8 | 0.52 | 1,000.00 | 3,000.00 | 6,000.00 |
| **நிறைவேற்றுப் பொறியியலாளர் பிரிவு – ரிகில்லகஸ்கட** | | | | | | | |
| 68 | CPC/PRDA/ MAIN/N/ RIK/2021/11 | ரிகில்லகஸ்கட நிறைவேற்றுப் பொறியியாளர் அலுவலகத்திற்கான பொருட்கள் வழங்குதல் - 2021 | C9 - C8 | 0.73 | 1,000.00 | 4,000.00 | 8,000.00 |
| **நிறைவேற்றுப் பொறியியலாளர் பிரிவு – திம்புல்ல** | | | | | | | |
| 69 | CPC/PRDA/ MAIN/N/ DIM/2021/10 | திம்புல்ல நிறைவேற்றுப் பொறியியாளர் அலுவலகத்திற்கான பொருட்கள் வழங்குதல் | C9 - C8 | 1.77 | 1,000.00 | 9,000.00 | 18,000.00 |
| **அஸ்போல்ட் வழங்குதல்** | | | | | | | |
| **நிறைவேற்றுப் பொறியியலாளர் பிரிவு – ஹாரிஸ்பத்துவ** | | | | | | | |
| 70 | CPC/PRDA/ MAIN/K/ HAR/2021/24 | அங்கும்புர எகொடமுல்ல வீதிக்கு அஸ்போல்ட் வழங்குதல்: (0+000-2+000 km) | அஸ்போல்ட் உற்பத்தி மற்றும் விநியோகத்திற்கான வியாபாரப் பதிவு | 14.91 | 5,000.00 | 75,000.00 | 150,000.00 |
| **ஏனைய செயற்றிட்டங்கள்** | | | | | | | |
| **நிறைவேற்றுப் பொறியியலாளர் பிரிவு – கம்பொல** | | | | | | | |
| 71 | CPC/PRDA/ COM.BUILD/K/ GAM/ 2021/01 | கம்பொல நிறைவேற்றுப் பொறியியலாளர் அலுவலக வளவின் செயற்றிட்டக் கட்டிடத்தில் தடுப்புச் சுவர் மற்றும் Ramp நிர்மாணித்தல். | C7 - C6 | 7.59 | 3,500.00 | 38,000.00 | 76,000.00 |
| 72 | CPC/PRDA/ COM.BUILD/K/ GAM/ 2021/02 | கம்பொல நிறைவேற்றுப் பொறியியலாளர் அலுவலக வளவின் செயற்றிட்டக் கட்டிடத்தில் முதலாம் மற்றும் இரண்டாம் மாடிகளின் மிகுதி வேலைகளை நிறைவேற்றுதல் | C6 - C5 | 22.86 | 7,000.00 | 114,500.00 | 229,000.00 |

## சுகாதார அமைச்சு

# தேசிய போட்டி கேள்வி கோரலின் கீழ் வைத்தியசாலை மற்றும் சுகாதார நிறுவனத்திற்கு சுத்திகரிப்பு சேவையை வழங்குதல் – 2021/2022

# கேள்விகோரல்

2021/2022 ஆம் ஆண்டிற்கு சுகாதார அமைச்சின் கீழ் உள்ள கீழ்க்காணும் வைத்தியசாலை மற்றும் நிறுவனங்களில் சுத்திகரிப்புச் சேவையை வழங்கும் முகமாக பதிவு செய்த நிறுவனங்களில் இருந்து சுகாதார அமைச்சு, அமைச்சு பெறுகை $C_2$ குழுவின் தலைவரால் கேள்விகள் கோரப்படுகின்றன.

01. இவ் ஒப்பந்தத்திற்காக கீழக்காணும் அடிப்படை தகைமைகளைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

I. இலங்கையின் வியாபார பெயர் பதிவு செய்தல் சட்டத்தின் கீழ் அல்லது 2007 இல.07 கம்பனிகள் சட்டத்தின் கீழ் சுத்திகரிப்பு சேவையை வழங்கும் நிறுவனமாக பத்திரிகை அறிவித்தல் பிரசுரமான தினத்திற்கு குறைந்தபட்சம் ஒரு வருடத்திற்கு முன் பதிவு செய்துள்ள நிறுவனமாக இருத்தல் வேண்டும்.

II. சுத்திகரிப்பு சேவையை வழங்குதல் சம்பந்தமாக அரச/அரச சார்பு அல்லது அங்கீகரிக்கப்பட்ட தனியார் நிறுவனத்தில் குறைந்தபட்சம் ஒருவருட அனுபவம் இருப்பதுடன், அதுபற்றி குறித்த நிறுவனத்திற்கு ஒப்பந்தத்தை வழங்கிய கடிதத்துடன் சேவையை வழங்கும் நிறுவனத்திலிருந்து பெற்றுக்கொண்ட கடிதத்தின் மூலம் உறுதி செய்தல் வேண்டும்.

III. பொது ஒப்பந்த சட்டத்தின் 08 ஆம் பிரிவின் கீழான பதிவுச்சான்றிதழ் (அந்தந்த வைத்தியசாலை/நிறுவனத்திற்கு வேறு வேறாக பதிவுச் சான்றிதழை சமர்ப்பித்தல் வேண்டும்.)

IV. வைத்தியசாலைகள் மற்றும் சுகாதார நிறுவனங்களுக்காக கீழ்க்காணும் பெறுமதிகளுக்கு 06 மாதத்திற்கு பிரதேச செயலாளரிடம் இருந்து பெற்றுக்கொண்ட பொது 170 மாதிரியின் பெறுமதிச் சான்றிதழ் (மூலப்பிரதி) (ஒப்பந்தக்காரர்களால் வைத்தியசாலை/பல நிறுவனங்களுக்கு விலைமனுக்களை சமர்ப்பிப்பதாயின் அவ் வைத்தியசாலை/நிறுவனங்களின் பெறுமதிக்கு கூட்டுத்தொகைக்கு சமமான அல்லது கூடுதல் பெறுமதிக்கு பெற்றுக்கொண்ட சான்றிதழாக இருத்தல் வேண்டும்) மேலும், உங்களால் கோரும் போது வைத்தியசாலை/ நிறுவனங்களுக்கு அமைவாக வருடாந்த பெறுமதிக்கு கீழ்க்காணுமாறு இருத்தல் வேண்டும்.

| | வருடாந்த பெறுமதி |
|---|---|
| 1. சுகாதார அமைச்சு/போதனா வைத்தியசாலைகள் மற்றும் பொது வைத்தியசாலைகள் | ரூ.1,000,000.00 |
| 2. தள வைத்தியசாலைகள் மற்றும் மாவட்ட வைத்தியசாலைகள் மற்றும் பிரதேச வைத்தியசாலைகள் | ரூ.500,000.00 |
| 3. சுகாதார நிறுவனம் | ரூ.300,000.00 |

V. கீழ்க்காணும் ஒவ்வொரு வைத்தியசாலை/நிறுவனங்களுக்கான அட்டவணையில் குறிப்பிடப்படும் பெறுமதிகளுக்கு வங்கிக்கடன் வசதிகள் வழங்குவதாக ஒப்பந்தக்காரர் கொடுக்கல் வாங்கல் செய்யும் வங்கியிலிருந்து விநியோகிக்கப்படும் கடிதம் (மூலப்பிரதி) (ஒப்பந்தக்காரர்களால் வைத்தியசாலை/பல நிறுவனங்களுக்கு விலைமனுக்களை சமர்ப்பிப்பதாயின் அந்த வைத்தியசாலை/நிறுவனங்களின் பெறுமதிகளின் சேர்க்கைக்கு சமமான அல்லது கூடுதல் பெறுமதிக்கு பெற்றுக்கொண்ட சான்றிதழாக இருத்தல் வேண்டும்)

VI. கிட்டிய வருடத்திற்கான தமது வியாபார பதிவுப்பெயரின் கீழ் சுத்திகரிப்பு சேவை வழங்குதல் சார்பாக சேவையில் ஈடுபடுத்தப்படும் சகல ஊழியர்கள் சார்பாக ஊழியர் சேமலாப நிதிக்கு மற்றும் ஊழியர் பொறுப்பு நிதியத்திற்கு பங்களிப்பு தொகை வழங்கியுள்ளமைக்கான இலங்கை மத்திய வங்கி/ஊழியர் பொறுப்பு நிதியித்திலிருந்து பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டு மற்றும் ஊழியர்களின் பெயரில் அந்தந்த கணக்குகளுக்கு வைப்புச் செய்யப்பட்டதாக பெற்றுக்கொண்ட அறிக்கை அல்லது இலத்திரனியல் முறையிலான கொடுப்பனவுகள் 2020.12.31 வரை உட்பட்ட கொடுப்பனவு ஆவணங்களை சமர்ப்பித்தல் வேண்டும். (2020/2021 ஆண்டிற்கு குறித்த கிட்டிய கடந்த மாதங்கள் 12)

VII. கிட்டிய மதிப்பீட்டு வருடத்திற்காக சுத்திகரிப்பு நிறுவனங்களின் பெயரில் வெட்வரி/வருமான வரியை செலுத்தியுள்ளதாக எழுத்து மூல சான்றுகள் மூலம் உறுதி செய்தல் வேண்டும். (வ/ப கம்பனியாயின் கம்பனியின் பெயரிலும் தனிநபர்/கூட்டு வியாபார நிறுவனங்கள் சகலதும் பங்குதாரர்களின் பெயரிலும் கிட்டிய வருடத்திற்காக வருமான வரி, வெட் வரி செலுத்தியமைக்காக எழுத்து மூல ஆவணங்களை சமாப்பித்தல் வேண்டும் (2019/2020 வருடத்திற்கு மட்டும்)

VIII. ரூ.............................. பெறுமதியான கேள்விப் பிணையொன்றை இலங்கை மத்திய வங்கியினால் அனுமதிக்கப்பட்ட நிதி நிறுவனத்திலிருந்து /காப்புறுதி நிறுவனத்திலிருந்து கொழும்பு - 10, வண.பத்தேகம விமலவங்ச ஹிமி மாவத்த, சுவசிரிபாய, 385 முகவரியில் உள்ள சுகாதார அமைச்சு செயலாளருக்கு எழுதப்பட்ட கேள்விகளை ஏற்றுக்கொள்ளல், முடிவடைந்த தினம் முதல் 119 நாட்காலத்திற்கு செல்லபடியாகுமாறு பெற்றுக்கொண்ட கேள்வி பிணைமுறியொன்றைச் சமர்ப்பித்தல் வேண்டும். (இணைப்பு 01 மாதிரியின் படி) (2021.05.25 முதல் 2021.09.20) வரை செல்லுபடியாதல் வேண்டும்.

02. கேள்வி விண்ணப்பங்கள் 2021.05.04 முதல் 2021.05.24 வரை வாரத்தின் வேலை நாட்களில் மு.ப.9.00 முதல் பி.ப.2.00 வரை, இல.26, 2ஆம் மாடி, ஶ்ரீ சங்கராஜ மாவத்தை, கொழும்பு 10, முகவரியில் அமைந்த சுகாதார அமைச்சின் (புதிய கட்டிடம்) பெறுகைக்கிளையில் பெற்றுக்கொள்ளலாம். கேள்வி விண்ணப்பங்கள் பெற்றுக்கொள்வதற்காக மீளளிக்கப்படாத அந்தந்த வைத்தியசாலை/நிறுவனங்களுக்காக கீழ்க்காணுமாறு கட்டணமொன்றை இலங்கை வங்கி - தப்ரபேன் கிளையில் சுகாதார சேவைப் பணிப்பாளர் நாயகத்தின் கணக்கு இலக்கம் 7040244இற்கு காசாக செலுத்திப் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டு மற்றும் கேள்வி ஆவணங்களை வேண்டுதல் கடிதத்தை சமர்ப்பித்தல் வேண்டும்.

### நிறுவனம் / வைத்தியசாலை

| தொடர் இல | வைத்தியசாலையின் பெயர் | கேள்வி இலக்கம் | பெறுமதி சான்றிதழ் (ரூ) | கடன் பெற்றுக்கொள்ளக் கூடிய பெறுமதி (ரூ) (அல்லது குறையாத) | கேள்விப்பிணை முறி (ரூ) | கேள்வி ஆவணக் கட்டணம் (ரூ) |
|---|---|---|---|---|---|---|
| 1 | இலங்கை தேசிய வைத்தியசாலை - நரம்பியல் பிரிவு மற்றும் அவசர சிகிச்சை பிரிவு உட்படும் பிரதேசம் | MH/PB/CL/01/2021 | 1,000,000.00 | 1,504,517.00 | 602,000.00 | 12,500.00 |
| 2 | இலங்கை தேசிய வைத்தியசாலை - தொண்டை, காது, மூக்கு, சிகிச்சையகம் 18,45 சிகிச்சையகம் X-ray பிரிவு மற்றும் X-ray கழிவுகள் 15,16,62,63,64,66 வைட்ஹவுஸ் அருகில் தோட்டம், சரும நோய், பௌத்த நிலையம் அருகில் தோட்டம் PH, அலுவலகம், தனியார் அலுவலகம், A.B ஓவர்சியர் அலுவலகம், ABC நவலோக்க சத்திரசிகிச்சையகம், இரத்தவங்கி அருகில், பௌதிக கதிர் அருகில் சகல தரைப் பிரதேசங்கள், 65 வார்ட் உள்ளடக்கும் பிரதேசம். | MH/PB/CL/02/2021 | 1,000,000.00 | 711,503.50 | 285,000.00 | 3,500.00 |
| 3 | இலங்கை தேசிய வைத்திய 17,18,19,20,21,22,23,24,25,26,27,28 மற்றும் 65 AB வார்ட், ரண சிகிச்சையகம், OPD, ECG, அறை, வெஸ்கியூலர் லெப், போதி அருகில் உட்பட்ட தோட்டத்திற்கு உரிய வலயம் உட்படும் பிரதேசம். | MH/PB/CL/03/2021 | 1,000,000.00 | 758,972.25 | 304,000.00 | 3,500.00 |
| 4 | இலங்கை தேசிய வைத்தியசாலை - சமையலறை 02, மருந்தகம், மருந்தாளர் பாடசாலை, காகிதாதிகள் களஞ்சியம், பதிவகம், தொற்று கட்டுபாடு, கணக்காய்வு, புத்தகம் கட்டுதல், காற்றுச்சீராக்கி பரமரிப்பு, போசணைமானி, தாதி, நிர்வாகி, மருத்துவ ஓய்வு, சிற்றூழியர் நிர்வாக பிரதான ஓவர்சியர் அலுவலகம் உட்பட வலயத்திற்கு உட்படும் பிரதேசம் | MH/PB/CL/04/2021 | 1,000,000.00 | 267,844.93 | 108,000.00 | 3,500.00 |
| 5 | இலங்கை தேசிய வைத்தியசாலை - 29,30,31,32,33,34,35,36,37,38,39,40 ஆய்வுகூடம், பிரேத அறை, ஓவர்சியர் அலுவலகம் E, இகியிலேட்டர் பிரதேசம் உட்படும் பிரதேசம். | MH/PB/CL/05/2021 | 1,000,000.00 | 646,936.70 | 259,000.00 | 3,500.00 |
| 6 | இலங்கைதேசிய வைத்தியசாலை - 52,53,54,BO, BMOT, VSOT, நீதிமன்ற மருத்துவ அதிகாரி அலுவலகம், ஓவர்சியர், அதி அவசர விபத்து சீர்படுத்தல் சிகிச்சையகம் (Asoc) சீர்படுத்தல் சிகிச்சையகம் (GSSD) DPM, மருந்தகம், கைத்தொழில் வேலைதளம் உட்பட வலயத்தை உள்ளடக்கும் பிரதேசம். | MH/PB/CL/06/2021 | 1,000,000.00 | 533,059.10 | 214,000.00 | 3,500.00 |
| 7 | இலங்கை தேசிய வைத்தியசாலை - 60,61,69,70, CCU, ICU, NICU, NDU,OTJ,OPD,CIU I, CIU II, ECG, உரை மண்டபம், CIV III, NIS, 93 NQ, 200 NQ, PBS, பௌதிக சிகிச்சை பாடசாலை, DQ உத்தியோகபூர்வ தோட்டம் உட்பட வலயத்தை உள்ளடக்கும் பிரதேசம். | MH/PB/CL/07/2021 | 1,000,000.00 | 1,061,342.48 | 425,000.00 | 3,500.00 |
| 8 | இலங்கை தேசிய வைத்தியசாலை - வெளிநோயாளர் பிரிவு உட்படும் பிரதேசம் | MH/PB/CL/08/2021 | 1,000,000.00 | 327,952.00 | 132,000.00 | 3,500.00 |
| 9 | இலங்கை தேசிய வைத்தியசாலை - அபஸ்மார கட்டிடம் மற்றும் அருகில் உட்பட்ட பிரதேசம் | MH/PB/CL/09/2021 | 1,000,000.00 | 515,446.13 | 207,000.00 | 3,500.00 |
| 10 | தேசிய சுகாதார நிறுவனம், களுத்துறை | MH/PB/CL/10/2021 | 300,000.00 | 215,378.30 | 86,200.00 | 1,000.00 |
| 11 | சுகாதார மேம்பாட்டு பணியகம் | MH/PB/CL/11/2021 | 300,000.00 | 84,530.50 | 34,000.00 | 1,000.00 |
| 12 | பொது வைத்தியசாலை - சிலாபம் | MH/PB/CL/12/2021 | 1,000,000.00 | 1,182,595.62 | 474,000.00 | 3,500.00 |
| 13 | அபேக்ஷா வைத்தியசாலை - மஹரகம | MH/PB/CL/13/2021 | 1,000,000.00 | 1,741,262.65 | 697,000.00 | 12,500.00 |
| 14 | குடும்ப சுகாதார பணியகம் | MH/PB/CL/14/2021 | 300,000.00 | 87,950.00 | 36,000.00 | 1,000.00 |
| 15 | பொது வைத்தியசாலை (போதனா) கேகாலை | MH/PB/CL/15/2021 | 1,000,000.00 | 825,845.16 | 331,000.00 | 3,500.00 |
| 16 | பொது வைத்தியசாலை மாத்தறை மற்றும் இணைந்த நிறுவனம் | MH/PB/CL/16/2021 | 1,000,000.00 | 1,786,080.85 | 715,000.00 | 12,500.00 |
| 17 | தள வைத்தியசாலை (போதனா) கம்பளை | MH/PB/CL/17/2021 | 500,000.00 | 730,950.50 | 293,000.00 | 3,500.00 |
| 18 | மருத்துவ ஆய்வு நிறுவனம், பொரளை | MH/PB/CL/18/2021 | 300,000.00 | 216,000.00 | 87,000.00 | 1,000.00 |
| 19 | காசல் வீதி, மகளிர் மருத்துவமனை (போதனா) | MH/PB/CL/19/2021 | 1,000,000.00 | 1,180,548.15 | 473,000.00 | 3,500.00 |
| 20 | பொது வைத்தியசாலை - திருகோணமலை | MH/PB/CL/20/2021 | 1,000,000.00 | 1,117,221.50 | 447,000.00 | 3,500.00 |
| 21 | மாவட்ட பொது வைத்தியசாலை, மொனராகல | MH/PB/CL/21/2021 | 1,000,000.00 | 1,275,817.19 | 511,000.00 | 12,500.00 |
| 22 | மாகாண பொது வைத்தியசாலை, இரத்தினபுரி | MH/PB/CL/22/2021 | 1,000,000.00 | 2,461,152.00 | 985,000.00 | 12,500.00 |
| 23 | சயரோக தடுப்பு மற்றும் மார்பு நோய் பற்றிய தேசிய நிகழ்ச்சித்திட்டம், நாராஹேன்பிட்ட | MH/PB/CL/23/2021 | 300,000.00 | 134,344.00 | 54,000.00 | 1,000.00 |
| 24 | மாகாண பொது வைத்தியசாலை, பதுளை | MH/PB/CL/24/2021 | 1,000,000.00 | 1,809,593.56 | 724,000.00 | 12,500.00 |
| 25 | டி சொய்சா மகளிர் மருத்துவமனை | MH/PB/CL/25/2021 | 1,000,000.00 | 653,397.00 | 262,000.00 | 3,500.00 |
| 26 | போதனா வைத்தியசாலை, மட்டக்களப்பு | MH/PB/CL/26/2021 | 1,000,000.00 | 1,679,178.44 | 672,000.00 | 12,500.00 |
| 27 | கொழும்பு கிழக்கு தள வைத்தியசாலை, முல்லேரியா | MH/PB/CL/27/2021 | 500,000.00 | 788,604.44 | 316,000.00 | 3,500.00 |
| 28 | முல்லேரியா பிரிவு II மற்றும் தாதியர் பாடசாலை | MH/PB/CL/28/2021 | 1,000,000.00 | 1,026,602.70 | 411,000.00 | 3,500.00 |
| 29 | சிறிமாவோ பண்டாரநாயக்க விசேட சிறுவர் வைத்தியசாலை பேராதனை | MH/PB/CL/29/2021 | 1,000,000.00 | 803,376.31 | 322,000.00 | 3,500.00 |
| 30 | போதனா வைத்தியசாலை, பேராதனை வைத்தியசாலையுடன் இணைந்த கலஹா தேசிய பிக்குகள் நிலையம் | MH/PB/CL/30/2021 | 1,000,000.00 | 95,095.44 | 39,000.00 | 1,000.00 |
| 31 | போதனா வைத்தியசாலை - குளியாப்பிட்டி | MH/PB/CL/31/2021 | 1,000,000.00 | 877,475.22 | 351,000.00 | 3,500.00 |
| 32 | கொழும்பு தெற்கு போதனா வைத்தியசாலை - களுபோவில | MH/PB/CL/32/2021 | 1,000,000.00 | 2,027,500.00 | 811,000.00 | 12,500.00 |
| 33 | மாவட்ட பொது வைத்தியசாலை - நீர்கொழும்பு | MH/PB/CL/33/2021 | 1,000,000.00 | 947,480.03 | 379,000.00 | 3,500.00 |
| 34 | விஜயகுமாரதுங்க ஞாபகார்த்த வைத்தியசாலை - சீதுவ | MH/PB/CL/34/2021 | 1,000,000.00 | 256,031.48 | 103,000.00 | 3,500.00 |
| 35 | போதனா வைத்தியசாலை - கராபிட்டிய | MH/PB/CL/35/2021 | 1,000,000.00 | 2,694,642.01 | 1,078,000.00 | 20,000.00 |
| 36 | தேசிய கண் வைத்தியசாலை, கொழும்பு - 10 | MH/PB/CL/36/2021 | 1,000,000.00 | 599,603.34 | 240,000.00 | 3,500.00 |

03. பூர்த்தி செய்யப்பட்ட கேள்வி ஆவணங்களை 2021.05.25 மு.ப.10.00 இற்கு முன் கிடைக்குமாறு, தலைவர், அமைச்சு பெறுகைக்குழு, "$C_2$" சுகாதார அமைச்சு (புதிய கட்டிடம்), 2ஆம் மாடி, இல.26, ஶ்ரீ சங்கராஜ மாவத்த, கொழும்பு -10 என்ற முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்பலாம் அல்லது சுகாதார அமைச்சு, புதிய கட்டிடத்தின் 2ஆம் மாடியில் மேலதிக செயலாளர் (பெறுகை) அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடலாம் அல்லது ஒப்படைத்தல் வேண்டும். கேள்விகள் உள்ளிட்டு அனுப்பப்படும் உறையின் இடதுபக்க மேல் மூலையில் "2021/2022 ஆண்டின்............ வைத்தியசாலை/நிறுவனத்திற்காக சுத்திகரிப்புச் சேவையை வழங்குதல்" என்று குறிப்பிடுதல் வேண்டும். தாமதமாகிக் கிடைக்கும் கேள்விகள் நிராகரிக்கப்படும்.

04. சுகாதார அமைச்சின் கீழ் நடத்தப்படும் வைத்தியசாலை மற்றும் நிறுவனங்களில் சுத்திகரிப்பு சேவையை வழங்குவதவற்காக சமர்ப்பிக்கப்படும் கேள்விகள் ஒவ்வொரு நிறுவனம் சார்பாகவும் வேறுவேறாக சமர்ப்பித்தல் வேண்டும் அத்துடன் கோரப்பட்டுள்ள ஆவணங்களில் மூலப்பிரதி ஒரு கேள்வியுடனும் உறுதி செய்த பிரதிகள் ஒவ்வொரு கேள்வியுடனும் வேறு வேறாக சமர்ப்பித்தல் வேண்டும்.

05. கேள்வி ஆவணங்கள் 02 பிரதிகள் மூலப்பிரதி மற்றும் நகல்பிரதியென குறிப்பிட்டு வேறு வேறு உறைகளில் இட்டு அவ் உறைகள் இரண்டையும் தனி உறையில் இட்டு சமர்ப்பித்தல் வேண்டும்.

06. 2021.05.25 மு.ப.10.00 வரை, இல.26, ஶ்ரீ சங்கராஜ மாவத்தை, கொழும்பு -10 சுகாதார அமைச்சு, புதிய கட்டிடத்தில் இரண்டாம் மாடியில் மேலதிக செயலாளர் (பெறுகை) அலுவலகத்தில் கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்படும். கேள்விகள் ஏற்றுக்கொள்ளல் முடிவடைந்தவுடன் அவை திறக்கப்படுவதுடன், கேள்விதாரர் அல்லது அவரது அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதியொருவர் கேள்வி ஆவணங்கள் திறக்கப்படும் வேளையில் சமுகமளிக்கலாம்.

மேலதிக விபரங்களுக்கு மேலதிக செயலாளர் (பெறுகை) ஐ அழையுங்கள் (தொலைபேசி இல: 0112112713,0112112717)

07. குறித்த கேள்வியை முழுமையாக அல்லது அதன் ஒரு பகுதியை ஏற்றுக்கொள்ளும் அல்லது நிராகரிக்கும் உரிமை பெறுகைக்குழுவிற்கு உரியது.

**தலைவர், அமைச்சுப்பெறுகைக்குழு "$C_2$", பெறுகைப்பிரிவு, சுகாதார அமைச்சு (புதிய கட்டிடம்),**
**இரண்டாம் மாடி, இல.26, ஶ்ரீ சங்கராஜ மாவத்த, கொழும்பு -10**



# இலங்கை தமிழர்களின் பிரச்சினைக்கு உங்கள் வெற்றி உறுதுணையாக அமையும்



பருத்தித்துறை விசேட நிருபர்

இந்திய நடுவண் அரசுக்கு நீங்கள் வழங்கக்கூடிய அழுத்தங்கள் இலங்கையில் தமிழ் மக்களின் அரசியல், சமூக, பொருளாதாரப் பிரச்சினைகளைத் தீர்க்க உறுதுணையாக அமையுமென தான் நம்புவதாக தி.மு.க தலைவர் மு.க ஸ்டாலினுக்கு புளொட் தலைவர் த.சித்தார்த்தன் (பா.உ) அனுப்பியுள்ள வாழ்த்துச் செய்தியில் தெரிவித்துள்ளார்.

நடந்து முடிந்த தமிழக சட்டமன்றத் தேர்தலில் அமோக வெற்றிபெற்று, ஆறாவது தடவையாகவும் திராவிட முன்னேற்றக் கழகம் அதன் கூட்டணிக் கட்சிகளுடன் இணைந்து ஆட்சி அமைத்திட அறிவுபூர்வமாக செயற்பட்டு அடித்தளமிட்ட திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவரான தங்களுக்கு தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத்தின் (புளொட்) சார்பில் மனமார்ந்த நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

அறுபதாம் ஆண்டுகளின் பிற்பகுதியில் மாணவனாக கோபாலபுரத்தில் சமூகப் பணிகளை ஆரம்பித்து, எண்பதாம் ஆண்டுகளில் கழகத்தின் இளைஞர் அணிச் செயலாளராக செயற்பட்ட காலம் தொட்டு கழகத்தின் வளர்ச்சியில், தங்கள் அயராத உழைப்பின் பங்களிப்பு தொடர்ச்சியாக வளர்ச்சியடைந்து மாபெரும் திராவிட இயக்கத்தினது தமிழகத்தினதும் பொறுப்பேற்கும் மட்டுமல்லாது எதிர்காலத்தை உன்னதமான கடமையினை காலம் இன்று தங்களுக்கு ஒப்படைத்திருப்பதை மகிழ்வுடன் காண்கின்றோம்.

அந்தக் கடமையில் தாங்கள் வெற்றி பெறவேண்டுமெனவும் வாழ்த்துகிறோம் என அவர் தனது வாழ்த்துச் செய்தியில் தெரிவித்துள்ளார்.

## தடுப்பூசி போட்டவருக்கு கொரோனா தொற்று

வவுனியா விசேட, ஓமந்தை விஷேட நிருபர்கள்

வவுனியா பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையின் நோயாளர் காவு வண்டியின் (அம்பியூலன்ஸ்) சாரதியாக பணிபுரியும் ஊழியருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

வவுனியாவை சேர்ந்த குறித்த சாரதிக்கு கடந்த வெள்ளிக்கிழமை பி.சி.ஆர் பரிசோதனைக்கான மாதிரிகள் பெறப்பட்டிருந்தன.

அதன் முடிவுகள் நேற்று கிடைக்கப்பெற்றது. அதனடிப்படையில் குறித்த சாரதிக்கு தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

அவர் வவுனியாவில் கொரோனா தொற்று உறுதியாகும் நோயாளர்களை, கொரோனா வைத்தியசாலைக்கு ஏற்றிச்செல்லும் பணியில் ஈடுபட்டிருந்ததுடன், கொவிட் தடுப்பூசியின் முதலாவது டோஸை ஜனவரி மாதமும், இரண்டாவது டோஸை நேற்று முன்தினமும் செலுத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## மரம் முறிந்து தலையில் வீழ்ந்து ஒருவர் மரணம்

தெல்தோட்டை தினகரன் நிருபர்

மரம் முறிந்து தலையில் வீழ்ந்து 60 வயதான ஆண் ஒருவர் மரணமடைந்த சம்பவம் கடந்த ஞாயிற்றுக்கிழமை கம்பளை தல்பிட்டிய கிராமத்தில் இடம்பெற்றுள்ளது.

காலை எட்டு மணியளவில் தான் வழமையாக செய்து வந்த மரம் தரிக்கும் வேலைக்கு சென்றுள்ளார். தனது சகபாடி மரத்தை அடியோடு சாய்க்க அடிமரத்தை அறுக்கும் போது அறுப்படும் மரத்தை கயிறால் கட்டி தனது எதிர்த்திசைக்கு விழும் முகமாக இழுத்துள்ளார். கயிறு வழுக்கி தனதுபக்கம் மரம் சாய்ந்து இவர் தலையில் வீழ்ந்துள்ளது.

மரணமடைந்தவர் 60 வயதான வடிவேலன் சன்முகவேல் என்பவராவார்.

சடலம் கம்பளை வைத்தியசாலை சவச்சாலையில் வைக்கப்பட்டுள்ளது. மரண விசாரணையின் பின்னர் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்படும் என தெரிவிக்கப்படுகிறது.


## விசேட அற்றோணி தத்துவப் பத்திரத்தை இரத்துச் செய்தல்

பிரசித்த நொத்தாரிசு முல்லேகம முதியன்சலாகே கான்சனா குமாரி (சந்தோஷி எஸ். ஹேரத் எஸோஸியேட்ஸ்) அவர்களால் நிறைவேற்றி அத்தாட்சிப்படுத்தப்பட்ட 631ஆம் இலக்கத்தைக்கொண்டதும் மற்றும் 15.02.2011 ஆம் திகதியுடையதுமான விசேட அற்றோணி தத்துவப் பத்திரத்தின் கீழ், இல. 135/1, காலி வீதி, தெகிவளை என்ற முகவரியில் கூட்டிணைக்கப்பட்ட 'சிறாஸ் டெவலப்பர்ஸ் (பிரைவட்) லிமிடட்' நிறுவனத்தால் இல. 100/1, ஸ்ரீ ஜயவர்தனபுர மாவத்தை, இராஜகிரியா என்ற முகவரியில் கூட்டிணைக்கப்பட்ட 'லங்கா ஒறிக்ஸ் லீஸிங் கம்பனி பிஎல்ஸி' (PQ 70) என்ற நிறுவனத்தை தனது அங்கீகாரம் பெற்ற அற்றோணி தத்துவக்காரராக நியமனம் செய்யப்பட்ட நியமனம் இத்தால் இரத்துச் செய்யப்படுகின்றது.

மேற்சொல்லப்பட்ட விசேட அற்றோணி தத்துவப் பத்திரம், கொழும்பு காணி பதிவகத்தில் எழுத்து மூல அதிகாரம் மற்றும் அற்றோணி தத்துவப்பத்திர பதிவுப் புத்தகத்தில் A813 ஆம் பிரிவில் 293ஆம் இருமடியிலக்கத்தில் நாளேட்டு இல. 7826 இன் கீழ் பதிவு செய்யப்பட்டது.

இயக்குனர்,
**சிறாஸ் டெவலப்பர்ஸ் (பிரைவட்) லிமிடட்**
இல. 135/1, காலி வீதி, தெகிவளை, இலங்கை

## பகிரங்க ஏலவிற்பனை

வெலிபல் பினான்ஸ் நிறுவனத்தில் உத்தரவாத அடிப்படையில் அடகு வைத்து கடன் பெற்று, உரிய காலத்தினுள மீட்கப்படாத தங்க நகைகள் இல: 310, காலி வீதி, கொழும்பு 03 இல் 2021 மே மாதம் 25ம் திகதி மு.ப. 10.00 மணிக்கு பகிரங்க ஏலத்தில் விடப்படும்.

**எந்தவொரு முன்னறிவித்தலும் இன்றி ஏலத்தை நிறுத்தவோ, பின்தள்ளி போடவோ வெலிபல் பினான்ஸ் நிறுவனத்திற்கு உரிமை உள்ளது**

முகாமையாளர் – தங்க கடன் பிரிவு, வெலிபல் பினான்ஸ் பீ எல் சீ
இல: 310, காலி வீதி, கொழும்பு 03

வெலிபல் ஃபினான்ஸ்

## இலங்கை நிர்வாகச் சேவை சங்கம் (SASA)

**38வது வருடாந்தப் பொதுக் கூட்டத்தினை பிற்போடுதல்**

2021 மே 07 ஆம் திகதி நடைபெறுவதற்குத் திட்டமிடப்பட்ட SASA இன் 38 வது வருடாந்தப் பொதுக் கூட்டமானது, கொவிட்-19 வைரஸ் தொற்று பரவல் தொடர்பாக சுகாதாரத்துறையினால் வெளியிடப்பட்டுள்ள வழிகாட்டல்களுக்கமைவாக பிற்போடுவதற்கு நிறைவேற்றுக் குழுவினால் தீர்மானிக்கப்பட்டுள்ளது என்பதனை இத்தால் அங்கத்தவர்களுக்கு அறிவிக்கப்படுகிறது.

SASA இன் 38வது வருடாந்தப் பொதுக் கூட்டத்திற்கான புதிய தினம் www.sasa.lk எமது இணையத்தளத்தில் வெளியிடப்படும்.

அருண தேவேந்திர
கௌரவச் செயலாளர்
இலங்கை நிர்வாக சேவைச் சங்கம் (SASA)

## முன்மொழிவுகளுக்கான அழைப்பு

### அரசாங்க தகவல் திணைக்களம்

### அரசாங்க தகவல் திணைக்களத்தில் ஊடக மேம்படுத்தல் நிலைய கட்டிட புனரமைத்தல்

1. அரசாங்க தகவல் திணைக்களத்தில் ஊடக மேம்படுத்தல் நிலைய கட்டிட புனரமைத்தலுக்காக தகுதியுள்ள உசாத்துணையாளர்களிடமிருந்து அரசாங்க தகவல் திணைக்களத்தின் சார்பாக, திணைக்கள பெறுகைக் குழுவானது முத்திரையிடப்பட்ட முன்மொழிவுகளை அழைக்கின்றது.
2. மீளளிக்கப்படாத கட்டணமான 500 ரூபாவை ரொக்கப் பணத்தில் செலுத்திய பின்னர், கணக்கிடல் பிரிவிலிருந்து முன்மொழிவு ஆவணங்களை பெற்றுக் கொள்ளலாம். 2021.05.04 ஆம் திகதியிலிருந்து 2021.05.24 ஆம் திகதி வரையும் வேலை நாட்களில் மு.ப. 9 மணிக்கும் பி.ப. 3 மணிக்குமிடையில் முன்மொழிவு ஆவணங்கள் வழங்கப்படும்.
3. கொழும்பு-05, கிருளப்பொன அவென்யு, 163 ஆம் இலக்கத்திலுள்ள அரசாங்க தகவல் திணைக்கள பிரதான கணக்காளரின் அலுவலகத்தில் அல்லது **www.news.lk** என்ற இணையதளத்தை பார்வையிடுவதன் மூலம் முன்மொழிவு ஆவணங்களை இலவசமாக பரீட்சிக்கலாம்.
4. தகுதியுள்ள உசாத்துணையாளர்கள் பின்வரும் தகைமை தகவுத்திறன்களுக்கு அமைந்தொழுகல் வேண்டும்.
   - நிகரான வேலைகளின் தன்மையில் அனுபவம்.
   - தகைமையுள்ள உசாத்துணையாளர்கள் செயற்பணிகளை மேற்கொள்ளல்.
5. கொழும்பு-05, அரசாங்க தகவல் திணைக்கள சிறிய கேட்போர் கூடத்தில் 2021 மே 13 ஆம் திகதியன்று மு.ப. 10 மணிக்கு முன்மொழிவு முன்னோடிக் கூட்டம் நடைபெறும்.
6. முன்மொழிவுகள் 2021.07.31 ஆம் திகதி வரையும் செல்லுபடியாகும் தன்மையிலிருத்தல் வேண்டும்.
7. முத்திரையிடப்பட்ட முன்மொழிவுகள் கொழும்பு-05, கிருளப்பொன அவென்யு, 163 ஆம் இலக்கத்திலுள்ள அரசாங்க தகவல் திணைக்கள பிரதான கணக்காளரின் அலுவலகத்திற்கு ஒன்றில் பதிவுத் தபாலில் அனுப்பப்படல் வேண்டும் அல்லது நேரடியாகவே ஒப்படைக்கப்படல் வேண்டும்.
8. முன்மொழிவுகளை சமர்ப்பிப்பதற்கான இறுதி நாள் 2021.05.25 ஆம் திகதியன்று மு.ப. 11 மணி என்பதுடன் அவைகளை மூடிய பின்னர் விரைவாகவே திறக்கப்படும்.
9. முன்மொழிவுகளை திறக்கும் வேளையில் உசாத்துணையாளர்கள் அல்லது அவர்களின் அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதிகள் சமுகமளிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

**தலைவர்,
பெறுகைக் குழு,
அரசாங்க தகவல் திணைக்களம்,
163, கிருளப்பொன அவென்யு,
கொழும்பு-05.**

**தொலைபேசி: 0112-514759, 071-8859889**

## விலைமனுக்களுக்கான அழைப்பு – (IFB)

**நீதி அமைச்சு**

**அத்திவாரத்திற்கான துளையிடுதல் நிர்மாணம்**

**கொழும்பு - 12இல் உள்ள நீதி அமைச்சு கட்டிடத் தொகுதிக்காக**

**ஒப்பந்த இல: MOJ/AC/26/27/2021**

1. கீழே விபரிக்கப்படுமாறு கொழும்பு-12 இல் உள்ள நீதி அமைச்சு கட்டிடத் தொகுதிக்காக அத்திவார துளையிடுதல் நிர்மாணத்திற்காக தகுதியும் தகைமையும் உள்ள விலைமனுதாரர்களிடமிருந்து பொறியிடப்பட்ட விலைமனுக்களை நீதி அமைச்சு, பெறுகைக் குழு (MPC) தலைவர் இப்போது அழைக்கின்றார் - மதிப்பிடப்பட்ட செலவு ரூபா 230 மில்லியன் (VAT நீங்கலாக) ஆகும்.

   ''கொழும்பு-12 இல் உள்ள அமைச்சு கட்டிடத் தொகுதிக்காக அத்திவாரத்திற்கான துளையிடுதல் நிர்மாணத்திற்காக 112 Nos of Bored and cast in-situ மீள்வலுவூட்டப்பட்ட கொங்கிறீட் துளைகள் - 750, 1200, 1500 mm diameter நிர்மாணத்தை இந்த வேலைகள் கொண்டுள்ளது. இந்த வேலைகளில் முடிவுக்காலம் 105 நாட்களாக இருக்கும்.
2. கேள்விகள் தேசிய போட்டி கேள்விகோரல் முறைமையின் ஊடாக நடாத்தப்படும்.
3. வெளிநாட்டு பங்குதாரர்களுடனான கூட்டு முயற்சியை உள்ளடக்கிய வெளிநாட்டு விலைமனுதாரர்கள் விலைமனுவுக்கு அனுமதிக்கப்பட மாட்டார்கள்
4. ஒப்பந்தங்களை வழங்குவதற்கு தகைமை பெறுவதற்கு வெற்றிகரமான கேள்விதாரர் CIDA அல்லது ஏனைய பதிவு செய்த நிறுவனங்களினால் அபகீர்த்தியானோர் பட்டியலில் இடம்பெறாது இருப்பதுடன் கீழ்க்காணும் தேவைப்பாடுகளைக் கொண்டிருத்தல் வேண்டும்.
   - புவித்தொழில்நுட்ப துளையிடுதல் - Bored Cast In-situ விற்காக துளையிடும் வேலைகள் - தரம் GP-B1 இற்கான நிர்மாண கைத்தொழில் அபிவிருத்தி அதிகார சபை (CIDA) இல் பதிவு செய்திருத்தல்.
5. ஒப்பந்தங்களை வழங்குவதற்கு தகைமை பெறுவதற்கு தகைமைகளின் தேவைப்பாடுகள்.
   - கடந்த ஐந்து வருடங்களில் மேற்கொள்ளப்பட்ட நிர்மாண வேலைகளின் வருடாந்த சராசரிப் பெறுமதி ஆகக்குறைந்தது ரூபா 345 மில்லியன்
   - 04 மாத காலத்திற்குள் ரூபா 230 மில்லியன் பெறுமதியான A Bored and cast in-situ துளையிடுதல் திட்டங்களை வெற்றிகரமாக பூர்த்தி செய்திருத்தல் அல்லது கடந்த 5 ஆண்டுகளில் விகிதாசார காலப்பகுதியில் கூடிய மதிப்புள்ள வேலைகளைப் பூர்த்தி செய்திருத்தல்.
   - குறைந்த பட்சம் 03 'Hydraulic Rotary type' துளையிடும் உபகரணங்கள். இத்திட்டத்திற்காக Hard bed rock ஊடாக துளையிடுவதற்கு இயலுமாயிருத்தல்.
   - ஏனைய ஒப்பந்த ரீதியிலான பொறுப்புகள் தவிர்ந்த மற்றும் இந்த ஒப்பந்தத்திற்காக மேற்கொள்ளப்படும் எந்தவொரு முற்பணக் கொடுப்பனவுகள் நீங்கலாக ஆகக் குறைந்த திரவச் சொத்துக்களின் தொகை 200 மில்லியனுக்கு குறையாமல் இருத்தல்.
   - குறிப்பிடப்பட்டவாறு தகைமையான பிரதான ஆளணியினரை வேலையில் ஈடுபடுத்தியிருத்தல் வேண்டும்.
   - 1987ஆம் ஆண்டின் 3ஆம் இலக்க பகிரங்க ஒப்பந்த சட்டத்தின் 8 பிரிவின் நியதிகளின் கீழ் பொது ஒப்பந்த பதிவாளரால் விநியோகிக்கப்படும் செல்லுபடியாகும் சான்றிதழைக் கொண்டிருத்தல் வேண்டும்.
6. ஆர்வமுள்ள விலைமனுதாரர்களுக்கு கொழும்பு - 10, சங்கராஜ மாவத்த, (களுத்தொட்ட கட்டிடம்) இல. 19, பணிப்பாளர் - பொறியியல் இடமிருந்து மேலதிக தகவல்களைப் பெற்றுக்கொள்ளலாம் (தொலைபேசி - 0112331536) மற்றும் விலைமனு ஆவணங்களைப் பரிசீலித்தல் கொழும்பு-12, சங்கராஜ மாவத்த இல-19, பணிப்பாளர் - பொறியியல் இல் அலுவலகத்தில் 2021 மே 04 முதல் 2021 மே 24 வரை வேலை நாட்களில் 09.00 மணி முதல் 14.00 மணி வரை மேற்கொள்ளலாம்.
7. ஓர் மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா முப்பத்து ஐயாயிரம் (ரூபா- 35,000) செலுத்துவதன் பேரில், 2021 மே 04 முதல் 2021 மே 24 வரை 09.00 மணிக்கும் 14.00 மணிக்கும் இடையில் கொழும்பு-12, மீயுயர் நீதிமன்ற கட்டிடத் தொகுதி, நீதி அமைச்சு, கணக்குக்கிளை, 3ம் மாடியிலிருந்து கொழும்பு -12, மீயுயர் நீதிமன்ற கட்டிடத் தெகுதி, நீதி அமைச்சு, பெறுகைக் குழு (MPC) தலைவருக்கு ஓர் எழுத்து மூல விண்ணப்பத்தை சமர்ப்பித்து, ஆர்வமுள்ள விலைமனுதாரரினால் ஓர் முழுமையான தொகுதி விலைமனு ஆவணங்களைக் கொள்வனவு செய்யலாம், கட்டணம் செலுத்தும் முறை காசாக இருத்தல் வேண்டும்.
8. கொழும்பு -12, மீயுயர் நீதிமன்ற கட்டிடத் தொகுதி, நீதி அமைச்சு, கணக்கு கிளை, 3ஆம் மாடியில் உள்ள அலுவலகத்தில் காணப்படும் கேள்விப் பெட்டியில் நகல்களுடனான பொறியிடப்பட்ட விலைமனுக்களை விநியோகிக்கலாம் மற்றும் வைப்புச் செய்யலாம். அல்லது 2021 மே 25ம் திகதி 10.00 மணிக்கு அல்லது அதற்கு முன் அடையுமாறு மேற்படி முகவரியில் உள்ள கணக்காளர் (பெறுகை) இற்கு பதிவுத் தபாலில் அனுப்ப வேண்டும்.
9. விலைமனுக்கள் 2021 ஆகஸ்ட் 24ம் திகதி வரை செல்லுபடியாதல் வேண்டும்.
10. இலங்கை மத்திய வங்கியினால் அனுமதிக்கப்பட்ட இலங்கையில் இயங்கும் ஓர் வர்த்தக வங்கியினால் விநியோகிக்கப்படும் 2021 செப்டம்பர் 21 வரை செல்லுபடியாகும் ரூபா முப்பத்து ஐந்து இலட்சம் (ரூபா- 3,500,000.00) தொகைக்காக நீதி அமைச்சு, செயலாளரின் பெயரில் விநியோகிக்கப்படும். விலைமனு ஆவணத்தின் பிரிவு II இல் உள்ளடக்கப்படும் படிவத்தில் உள்ள விலைமனுப் பிணையை எல்லா விலைமனுவுடனும் இணைத்தல் வேண்டும்.
11. கொழும்பு- 12, மீயுர் நீதிமன்ற கட்டிடத் தொகுதி, நீதி அமைச்சு, 2ம் மாடியில் 2021 மே 13ம் திகதி 10.00 மணிக்கு விலைமனுவுக்கு முன்னரான கூட்டம் நடைபெறும் தொடர்ந்து தள விஜயம் மேற்கொள்ளப்படும்.

**தலைவர்,
அமைச்சு பெறுகைக் குழு (MPC)
நீதி அமைச்சு
மீயுயர் நீதிமன்ற கட்டிடத் தொகுதி,
கொழும்பு-12.**

OBSERVER JOBS
BREAKING BOUNDARIES
THE COUNTRY'S LARGEST RECRUITMENT DATABASE
FOR JOBSEEKERS
www.observerjobs.lk

## இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழு

### விலைமனுக்கோரல்

01. இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழுவினால் **2021.06.01** திகதியிலிருந்து **2022.05.31** ஆம் திகதி வரை தொடர்ந்து ஒருவருட காலத்திற்கு **வாயு சீராக்கி உபகரணங்களை புதுப்பித்தல் மற்றும் பராமரிப்பு சேவை வழங்குவதற்காக** நிபுணத்துவத் திறன் பெற்ற நிறுவனங்களிடமிருந்து விலை மனுக்கள் கோரப்படுகின்றது.
02. கீழ்க் குறிப்பிட்ட பிரதேசங்களில் காணப்படும் நிலையங்களுக்கு சேவை வழங்கப்பட வேண்டும்.
   அ. தலைமை காரியாலயம் 276, எல்விட்டிகல மாவத்தை, கொழும்பு 08.
   ஆ. அலைவரிசை கண்காணிப்பு நிலையம், கதிரான
   இ. அலைவரிசை கண்காணிப்பு நிலையம், ஹந்தான
   ஈ. பலதரப்பட்ட இயக்கங்களை கொண்ட தொலைக்காட்சி மற்றும் தொலைத்தொடர்புகள் கோபுரங்களை கொண்டுள்ள நிலையம், கொக்குவில்
03. இது தொடர்பான மேலதிக விபரங்கள் தேவைப்படின் நிர்வாகம் மற்றும் மனிதவள பிரிவினை தொடர்பு கொள்வதன் மூலம் பெற்றுக்கொள்வதுடன் மனு ஆவணங்களை பரீட்சிக்கவும் முடியும். (தொலைபேசி இலக்கங்கள் : **011-2689345**)
04. தகுதிவாய்ந்த நிறுவனங்கள் மனு ஆவணங்களை மீளச்செலுத்தப்படாத **ரூ.1,000.00** கட்டணத்தினை செலுத்தி **2021.05.04** ஆம் திகதி முதல் **2021.05.18** வரையான காலப்பகுதியினுள் காரியாலய நாட்களில் **மு.ப. 09.00 - பி.ப.03.00 மணி** வரை பெற்றுக்கொள்ள முடியும்.
05. மனு ஏற்றுக்கொள்ளும் கடைசித் திகதியிலிருந்து **91 கலண்டர் நாட்கள்** வரை மனுக்கள் செல்லுபடியாகும். டென்டர் மனுக்களை சரியான முறையில் பூரணப்படுத்தி பிரதியை முத்திரையிடப்பட்ட ஒரு உறையில் இட்டு **2021.05.19 ஆம் திகதி மு.ப.10.00 மணிக்கு** முன்னதாக **தலைவர், கொள்முதல் பிரிவு, இலங்கை தொலைத் தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழு, இல-276, எல்விட்டிகல மாவத்தை, கொழும்பு 8** எனும் முகவரிக்கு கிடைக்குமாறு பதிவுத்தபாலில் அனுப்பி வைத்தல் அல்லது ஆணைக்குழுவின் தரைதளத்தில் வைக்கப்பட்டுள்ள டென்டர் பெட்டியில் இட வேண்டும். கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் **"வாயு சீராக்கி உபகரணங்களை புதுப்பித்தல் மற்றும் பராமரிப்பு சேவை வழங்குவதற்கான விரைமனுக்கோரல் (2021.06.01-2022.05.31)"** எனக் குறிப்பிடுதல் வேண்டும். மனு ஏற்றுக்கொள்ளல் முடிவுற்ற உடனேயே ஒவ்வொரு மனுக்களாக திறக்கப்படும். மனுக்கள் திறக்கப்படும் வேளையில் மனுதாரர் அல்லது அவரது பிரதிநிதிக்கு அவ்வேளையில் பிரசன்னமாயிருக்க முடியும்.

தலைவர்,
கொள்முதல் குழு,
இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழு
276, எல்விட்டிகல மாவத்தை, கொழும்பு 8
தொ.பே. 0112 689345 பெக்ஸ் இல . 0112 689355

# பிரவீனின் வரலாற்று சாதனையுடன் தொடரை வென்றது இலங்கை அணி

பங்களாதேஷ் அணிக்கு எதிரான இரண்டாவது டெஸ்ட் போட்டியை 209 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றிக்கொண்ட இலங்கை அணி 2018ம் ஆண்டுக்கு பின்னர் சொந்த மண்ணில் முதல் டெஸ்ட் தொடர் வெற்றியை பதிவுசெய்துள்ளது.

இலங்கை அணி நிர்ணயித்திருந்த 437 என்ற வெற்றியிலக்கை நோக்கி துடுப்பெடுத்தாடிய பங்களாதேஷ் அணி, 227 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுகளையும் இழந்து தொடரை 0-1 என இழந்தது.

**இலங்கை அணி**

திமுத் கருணாரத்ன (தலைவர்), லஹிரு திரிமான்ன, ஓசத பெர்னாண்டோ, அஞ்செலோ மெதிவ்ஸ், பெதும் நிஸ்ஸங்க, தனன்ஜய டி சில்வா, நிரோஷன் டிக்வெல்ல, சுரங்க லக்மால், ரமேஷ் மெண்டிஸ், ப்ரவீன் ஜயவிக்ரம, விஷ்வ பெர்னாண்டோ

**பங்களாதேஷ் அணி**

தமிம் இக்பால், சயிப் ஹசன், நஜ்முல் ஹுசைன் செண்டோ, மொமினுல் ஹக் (தலைவர்), முஷ்பிகூர் ரஹீம், லிடன் டாஸ், மெஹிடி ஹாசன், தாஜுல் இஸ்லாம், டஸ்கின் அஹமட், அபு ஜெயட், சொரிபுல் இஸ்லாம்

போட்டியின் நான்காவது நாள் ஆட்டநேர நிறைவில், 5 விக்கெட்டுகளை இழந்து 175 ஓட்டங்களை பங்களாதேஷ் அணி பெற்றிருந்தது. அதன்படி, நேற்றைய தினம் களமிறங்கிய பங்களாதேஷ் அணியின் துடுப்பாட்ட வீரர் லிட்டன் தாஸ் 17 ஓட்டங்களுடன் பிரவீன் ஜயவிக்ரமவின் பந்துவீச்சில் ஆட்டமிழந்தார்.

தொடர்ந்து களமிறங்கிய துடுப்பாட்ட வீரர்களில் மெஹிதி ஹசன் மாத்திரம் அதிகபட்சமாக 39 ஓட்டங்களை பெற்றுக்கொள்ள, ஏனைய துடுப்பாட்ட வீரர்கள் வந்த வேகத்தில் ஆட்டமிழந்தனர். இதனடிப்படையில் 227 ஓட்டங்களுக்கு பங்களாதேஷ் அணி சகல விக்கெட்டுகளையும் இழந்தது.

பங்களாதேஷ் அணிசார்பில், மெஹிதி ஹசனுக்கு அடுத்தப்படியாக , முஷ்பிகூர் ரஹீம் 40 ஓட்டங்களையும், சயீப் ஹசன் 34 ஓட்டங்களையும் பெற்றுக்கொண்டனர். பந்துவீச்சில், அறிமுக பந்துவீச்சாளர் ப்ரவீன் ஜயவிக்ரம இரண்டாவது இன்னிங்ஸிலும் 5 விக்கெட் பிரதியை கைப்பற்ற, ரமேஷ் மெண்டிஸ் 4 விக்கெட்டுகளை கைப்பற்றினார்.

போட்டியின் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி லஹிரு திரிமான்ன மற்றும் திமுத் கருணாரத்ன ஆகியோரின் சதங்கள் மற்றும் நிரோஷன் டிக்வெல்லவின் வேகமான அரைச்சதம் என்பவற்றின் ஊடாக 493/7 ஓட்டங்களை பெற்று ஆட்டத்தை இடைநிறுத்தியது.

பங்களாதேஷ் அணியின் பந்துவீச்சில் தஸ்கின் அஹமட் அதிகபட்சமாக 4 விக்கெட்டுகளை வீழ்த்த, பங்களாதேஷ் அணி தங்களுடைய முதல் இன்னிங்ஸை ஆரம்பித்தது. பங்களாதேஷ் அணிக்கு தமிம் இக்பால் 92 ஓட்டங்களை குவித்து சிறந்த ஆரம்பத்தை பெற்றுக்கொடுத்த போதும், ஏனைய துடுப்பாட்ட வீரர்கள் அதிக ஓட்டங்களை குவிக்காத நிலையில், 251 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுகளையும் இழந்தது.









பங்களாதேஷ் அணி சார்பில் தமிம் இக்பாலுக்கு அடுத்தப்படியாக மொமினுல் ஹக் 49 ஓட்டங்களையும், முஷ்பிகூர் ரஹீம் 40 ஓட்டங்களையும் பெற்றுக்கொடுத்தனர். இலங்கை அணியின் பந்துவீச்சில் ப்ரவீன் ஜயவிக்ரம 6 விக்கெட்டுகளை வீழ்த்த, சுரங்க லக்மால் மற்றும் ரமேஷ் மெண்டிஸ் ஆகியோர் தலா 2 விக்கெட்டுகளை வீழ்த்தினர்.

பின்னர் தங்களுடைய இரண்டாவது இன்னிங்ஸை ஆரம்பித்த இலங்கை அணி 194 ஓட்டங்களுக்கு 9 விக்கெட்டுகளை இழந்திருந்த போது, ஆட்டத்தை இடைநிறுத்தி பங்களாதேஷ் அணிக்கு 437 ஓட்டங்களை வெற்றியிலக்காக நிர்ணயித்திருந்தது. இலங்கை அணிசார்பாக திமுத் கருணாரத்ன 66 ஓட்டங்களை அதிகபட்சமாக பெற்றுக்கொள்ள, பங்களாதேஷ் அணியின் பந்துவீச்சில் தாஜுல் இஸ்லாம் 5 விக்கெட்டுகளை வீழ்த்தியிருந்தார்.

இலங்கை அணி இன்றைய தினம் பெற்றுக்கொண்ட வெற்றியின் மூலம் 2018ம் ஆண்டுக்கு பின்னர் தங்களுடைய முதல் டெஸ்ட் வெற்றியை சொந்த மண்ணில் பதிவு செய்துள்ளது. கடந்த 2018ம் ஆண்டு நடைபெற்ற தென்னாபிரிக்க அணிக்கு எதிரான தொடரை இலங்கை அணி 20 என கைப்பற்றியிருந்தது.

இதனைத் தொடர்ந்து இலங்கை அணி தங்களுடைய சொந்த மண்ணில் விளையாடிய டெஸ்ட் தொடர்களில், நியூசிலாந்து அணிக்கு எதிரான தொடரை 1-1 என சமப்படுத்தியதுடன், இங்கிலாந்து அணிக்கு எதிரான தொடரை 2-0 என இழந்திருந்தது.

அதேநேரம், தன்னுடைய கன்னி டெஸ்ட் போட்டியில் 11 விக்கெட்டுகளை வீழ்த்திய பிரவீன் ஜயவிக்ரம, அறிமுக டெஸ்ட் போட்டியில் 10 விக்கெட் பிரதியை கைப்பற்றிய முதல் இலங்கை வீரர் மற்றும் முதல் இடதுகை சுழல் பந்துவீச்சாளர் என்ற பெருமையை பெற்றுக் கொண்டார்.

இதற்கு முதல் இந்தியாவின் நரேந்திர ஹிரவானி, பாகிஸ்தானின் மொஹமட் சயீன் மற்றும் அவுஸ்திரேலியாவின் ஜேசன் க்ரீஷா ஆகியோர் கன்னி டெஸ்ட் போட்டியில் 10 விக்கெட் பிரதியை கைப்பற்றி சாதனை படைத்திருந்தமை குறிப்பிடத்தக்கது.அத்துடன் போட்டியின் நாயகனான பிரவீன் ஜயவிக்ரமவும் தொடரின் நாயகனாக அணியின் தலைவர் திமுத் கருணாரத்னவும் தெரிவானார்கள்.

# அகில இலங்கை சமர் சீஸன் பெட்மின்டன் போட்டி






**நுவரெலியா தினகரன் நிருபர்**

இலங்கை பெட்மின்டன் சங்கத்தின் அனுசரணையுடன் மத்திய மாகாண பெட்மின்டன் சங்கமும் நுவரெலியா பெட்மின்டன் சங்கமும் இணைந்து நுவரெலியா மாநகரபை விளையாட்டு உள்ளரங்கில் நடத்திய " சமர் சீஸன் பெட்மின்டன் " போட்டி அகில இலங்கை ரீதியில் நடைபெற்றது.

இப் போட்டியில் 13, 15, 17, 19 வயதிற்கு கீழ்பட்டவர்களுக்கான போட்டிகளும் 35 , 40,45, 50, 55, 60, 65 வயதிற்கு மேற்பட்டவர்களுக்கான போட்டிகளும் திரந்த போட்டிகளும் நடத்தப்பட்டன. இப்போட்டிகளில் அகில இலங்கையிலிருந்து 1200 வீரர்கள் கலந்துக்கொண்டனர்.

இதில் ஆண்களுக்கான திரந்த போட்டியின் இறுதிப்போட்டியில் 1021, 2119,21 19 புள்ளியடிப்படையில் மூன்று சுற்றில் இரண்டு சுற்றில் வெற்றிப்பெற்று ரன்சுக்கா கருணாதிலக்க முதலாம் இடத்தையும் இவரைஎதிர்த்துபோட்டியிட்ட புவனக்க குணதிலக்க ஒரு சுற்றில் மாத்திரம் வெற்றி பெற்று இரண்டாம் இடத்தை பெற்றார்.

பெண்களுக்கான திரந்த போட்டியின் இறுதிப்போட்டியில் 2110, 2115, புள்ளியடிப் படையில் இரண்டு சுற்றில் வெற்றிப்பெற்ற டில்மி டயஸ் முதலாம் இடத்தையும் இவரை எதிர்த்து போட்டியிட்ட ரணித்மா லியணகே இரண்டாம் இடத்தை பெற்றனர்.

ஆண்களுகான இரட்டையர் திரந்த போட்டியில் 2110, 2112, புள்ளியடிப் படையில் தொடர்ந்து இரண்டு சுற்றில் வெற்றிப்பெற்ற புவனக்க குணதிலக்கவும் ரன்ஸ்சுக்கா ககருணாதிலக்கவும் முதலாம் இடத்தை பெற்றனர். இவர்களை எதிர்த்து போட்டியிட்ட அஸித்த ஜானக்கவும் கிலரன்ஸ் ஓமாவும் இரண்டாம் இடத்தை பெற்றனர்.,

பெண்களுக்கான இரட்டையர் திரந்த போட்டியில் 21-9, 21-15, புள்ளிகள்அடிப்படையில் தொடர்ந்து இரண்டு சுற்றில் வெற்றிப்பெற்ற கவிந்திக்க டீ சில்வாவும் டில்மி டயஸ்ஸும் முதலாம் இடத்தையும் இவர்களை எதிர்த்து போட்டியிட்ட புத்மி கலகமகேயும் நசிராஹா கயான்தியும் இரண்டாம் இடத்தையும் பெற்றனர்.

ஆண் பெண் இரட்டையர் திறந்த போட்டியில் ருவானேக்க குணதிலக்கவும் நதுரஸா கயன்த்தியும் முதலாம் இடத்தையும் இவர்களை எதிர்த்து போட்டியிட்ட லயிரு வீரதுங்கவும் மதுஸ்கா டில்ருக்காசியும் பெற்றனர்.

நுவரெலியா மற்றும் மத்திய மாகாண பெட்மின்டன் சங்கங்களின் தலைவரும் முன்னாள் நுவரெலியா மாநகரசபை முதல்வரும் தற்போதய உறுப்பினருமான மஹிந்த தொடம்பே கமகே தலைமையில் நடைபெற்ற இப் போட்டியின் பரிசளிப்பு வைபவத்தில் கலந்துக்கொண்ட நுவரெலியா மாநகர முதல்வர் சந்தன லால் கருணாரட்ன, இலங்கை பெட்மின்டன் சங்கத்தின் தலைவர் ரொஹான் டீ சில்வா, முன்னாள் மத்திய மாகாண சபை உறுப்பினர் ஆர். இராஜாராம், நுவரெலியா பெட்மின்டன் சங்கத்தின் பொதுச் செயலாளர் பாலித்த ஹெட்டியாராச்சி, பொருளாளர் தம்மிக்க வணிகசேக்கர, மத்திய மாகாண பெட்மின்டன் சங்கத்தின்பொதுச்செயலாளர் சாமர அலுத்கே, நுவரெலியா மாநகர பிரதி முதல்வர் யதர்சனா புத்திரசிகாமணி ஆகியோர் வெற்றிப்பெற்றவர்களுக்கானபரிசுகளை வழங்கினார்கள்.

# பாடசாலை மாணவர்களை தங்களது வீடுகளினுள் இருந்தவாறே உடற்பயிற்சிகளில் ஈடுபடுத்துமாறு அமைச்சர் நாமல் ராஜபக்ஷ பெற்றோர்களிடம் வேண்டுகோள்!

**புத்தளம் விசேட நிருபர்**

கொவிட் தொற்றுக்கு முகங்கொடுத்துக் கொண்டு சுகாதார ஆரோக்கியத்தையும் பாதுகாத்துக் கொள்வதற்காக பாடசாலை மாணவர்களை வீடுகளிலிருந்தே உடற்பயிற்சிகளில் ஈடுபடுத்துமாறு இளைஞர் விவகார மற்றும் விளையாட்டுத் துறை அமைச்சர் நாமல் ராஜபக்ஷ அனைத்து பெற்றோர்களிடத்திலும் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

தேசிய விளையாட்டு வீரர் வீராங்கனைகள் மற்றும் சர்வதேச விளையாட்டு வீரர் வீராங்கனைகளின் பங்களிப்புடன் இளைஞர் விவகார மற்றும் விளையாட்டுத் துறை அமைச்சின் twitter, Instagram, Facebook உள்ளிட்ட சமூக வலைத்தளங்கள் மற்றும் தேசிய தொலைக்காட்சி, EYE நேத்ரா தொலைக்காட்சி ஆகியவற்றின் ஊடாக ஒவ்வொரு காலை வேளையிலும் பிள்ளைகள் ஆரோக்கியமிக்க வாழ்வை முன்னெடுத்துச் செல்வதற்காக வீடுகளிலிருந்து உடற்பயிற்சிகளில் ஈடுபடுத்துவதற்கான நிகழ்ச்சிகளை விரைவில் நடைமுறைப்படுத்தவுள்ளதாக அமைச்சர் இதன் போது தெரிவித்தார்.

கொவிட் 19 தொற்றுக்கு மத்தியில் இளைஞர் விவகார மற்றும் விளையாட்டுத் துறை அமைச்சின் அடுத்தகட்ட செயற்பாடுகள் தொடர்பில் தெளிவுபடுத்தும் ஊடகச் சந்திப்பு விளையாட்டுத் துறை அமைச்சின் முற்றவெளியில் கடந்த வியாழக்கிழமை காலை இடம்பெற்ற போதே அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

எதிர்வரும் 4ம் திகதி சிரேஷ்ட விளையாட்டு வீரர்கள் மற்றும் கிரிக்கட் தலைவரின் அணிக்கிடையில் பல்லேகலே விளையாட்டு மைதானத்தில் இடம்பெறும் இருபதுக்கு இருபது கிரிக்கட் போட்டியின் மூலம் கிடைக்கும் முழு வருமானமும் கொவிட் தடுப்பு மருந்து வேலைத்திட்டத்திற்கு அன்பளிப்புச் செய்யப்படும் என்றும் அமைச்சர் குறிப்பிட்டார்.



தற்போதைய மூன்றாவது கொவிட் அலையின் ஆபத்திற்கு மத்தியில் இந்த போட்களைப் பார்ப்பதற்கு சந்தர்ப்பம் வழங்கப்பட முடியாதுள்ளமை தொடர்பில் விளையாட்டு அமைச்சர் என்ற வகையில் விளையாட்டு ரசிகர்களிடத்தில் தனது கவலையினைத் தெரிவித்த அமைச்சர், இப்போட்டிகளை நேரடி ஒளிபரப்பு செய்ய எதிர்பார்ப்பதாகவும் தெரிவித்தார்.

இங்கு தொடர்ந்தும் உரையாற்றிய அமைச்சர் கூறியதாவது,

“தற்போதைய மூன்றாவது கொவிட் தொற்றின் ஆபத்து நிலையின் காரணமாக பாடசாலைகளை ஆரம்பிக்க முடியாத நிலையில் மீண்டும் மாணவர்கள் வீடுகளிலிருந்து கல்வியைக் கற்கும் நிலை ஏற்பட்டுள்ளது. அதேபோன்று கிராம உத்தியோகத்தர் பிரிவுகள் மட்டத்தில் செயற்பாடுகள் வரையறுக்கப்பட்டுள்ளன.

இளைஞர் விவகார மற்றும் விளையாட்டுத் துறை அமைச்சு என்ற வகையில் நாம் எப்போதும் முயற்சிப்பது சுறுசுறுப்பான சமூகம் மற்றும் செயல் ரீதியான நாட்டைக் கட்டியெழுப்புவதற்காகும். இதன் மூலம் எமது நாடு தெற்காசியாவில் செயற்பாட்டு நாடாக ஆகும் இலக்கிற்குச் செல்வதோடு, உடற்பயிற்சிகளில் ஈடுபடுவதன் ஊடாக தொற்று நோய்களிலிருந்து மக்களை மீட்பதற்கும் எம்மால் முடிகின்றது.

ஒழுக்கமுள்ள சமூகத்தை கட்டியெழுப்புவதற்கான தேவையுள்ள இக்காலத்தில் அதற்காக தோள் கொடுத்து மக்களின் உயிரைப் பாதுகாத்துக் கொள்வதற்கும், கல்வி நிகழ்ச்சிகளுக்கு முன்னுரிமை வழங்கி மாணவர்களின் கல்வி மட்டத்தை உயர்த்துவதற்கும் ஊடக நிறுவனங்கள் செயற்படுகின்றன.

அத்துடன் நாளின் ஏதாவது ஒரு சிறிது நேரத்தில் பாடசாலை மாணவர்களின் சுகாதார

மேம்பாட்டைப் பாதுகாக்கும் நோக்கில் உடற்பயிற்சி நிகழ்ச்சிகள் சிலவற்றை ஏற்பாடு செய்யுமாறும் நான் ஊடக நிறுவனங்களிடம் கேட்டுக் கொள்கிறேன்.

தேசிய விளையாட்டு வீரர் வீராங்கனைகள் மற்றும் சர்வதேச விளையாட்டு வீரர் வீராங்கனைகளின் பங்களிப்புடன் இளைஞர் விவகார மற்றும் விளையாட்டுத் துறை அமைச்சினால் நடாத்திச் செல்லப்படும் twitter, Instagram, Facebook உள்ளிட்ட சமூக ஊடகங்கள் ஊடாக ஒவ்வொரு காலைபொழுதிலும் மாணவர்களின் ஆரோக்கியத்தை நோக்காகக் கொண்டு வீடுகளிலிருந்து உடற்பயிற்சிகளில் ஈடுபடும் நிகழ்ச்சிகளை நடைமுறைப்படுத்துவதற்கு நாம் எதிர்பார்க்கின்றோம்.

தொலைக்காட்சி அல்லது இணைய நிகழ்ச்சிகளில் கல்வி கற்பதற்கு வழங்கப்படும் சந்தர்ப்பத்திற்கு சமமாக காலை வேளைகளில் கூடியளவில் ஒரு மணி நேரமாவது மாணவர்கள் உடற்பயிற்சிகளில் ஈடுபட்டு செயற்திறன் மற்றும் சுகாதார வாழ்வை முன்னெடுப்பதற்குத் தேவையான உடல் ஆரோக்கியத்தைப் பேணிக் கொள்வதற்கான சந்தர்ப்பத்தை வழங்குமாறு எமது நாட்டு பெற்றோர்களிடத்தில் அன்பாகவும், கௌரவமாகவும் கேட்டுக் கொள்கிறேன். இதன் மூலம் பிள்ளைகளை தொற்று நோய்களிலிருந்து காப்பாற்றிக் கொள்ளும் சுற்றுச் சூழலை எம்மால் ஏற்படுத்திக் கொள்ள முடியும்.

கொவிட் 19 தொற்றை தடுப்பதற்காக சுகாதார அமைச்சினால் பரிந்துரைக்கப்பட்டுள்ள சுகாதார வழிகாட்டல்களின் கீழ் பாடசாலைகளின் இணக்கப்பாட்டுடன் பாடசாலை மாணவர்களின் விளையாட்டுப் போட்டிகளை நடாத்துவதற்கான வாய்ப்பு எமக்குள்ளது. கொவிட் 19 தொற்று நிலைக்கு வெற்றிகரமாக முகங்கொடுத்துக் கொண்டு நாம் விளையாட்டுப் போட்டிகளை நடாத்தினோம். எதிர்காலங்களிலும் அப்போட்டிகள் நடாத்துவதற்கு உரிய சுகாதார வழிமுறைகளைப் பின்பற்றி நடாத்தப்படும் .

வரும் 04ம் திகதி பழைய விளையாட்டு வீரர்கள் மற்றும் புதிய விளையாட்டு வீரர்களுக்கிடையில் ரி 20 கிரிக்கட் போட்டியினை பல்லேகலே விளையாட்டு மைதானத்தில் நடாத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இப்போட்டியினை நேரடி ஒளிபரப்பு செய்வதற்கு எதிர்பார்க்கப்படுவதோடு, அப்போட்டியின் மூலம் கிடைக்கும் முழு வருமானமும் கொவிட் 19 தொற்று தடுப்பு வேலைத்திட்டத்திற்கு வழங்கப்படும். தற்போதைய கொவிட் 19 மூன்றாவது அலையின் அச்சுறுத்தலுக்கு மத்தியில் இப்போட்டியினை பார்வையிடுவதற்கு பார்வையாளர்களுக்கு சந்தர்ப்பத்தை வழங்க முடியாதுள்ளமை தொடர்பில் கவலையடைகின்றேன். எனினும் தற்போதுள்ள நிலை உயிரியல் குமிழியினுள் (Bubble) விளையாடுவதற்கு எந்த தடைகளும் இல்லை. தற்போது நிலவும் நிலைகளுக்கு மத்தியில் சுகாதார அமைச்சின் சுகாதார வழிகாட்டல்களுக்கு அமைவாக அவர்களோடு மிக நெருக்கமாக நாம் செயற்படுகின்றோம். எமது குறிக்கோளான விளையாட்டினை முன்னோக்கி கொண்டு செல்வதற்கு அவர்கள் பாரியளவில் ஒத்துழைப்புக்களை வழங்குகின்றனர்.

சூரியவெவ, தம்புள்ள, பல்லேகலே மற்றும் கெத்தாராம ஆகிய நான்கு விளையாட்டு மைதானங்களையம் பயன்படுத்தி இவ்வருடத்தின் எல்பிஎல் போட்டிகள் மற்றும் சர்வதேச கரப்பந்தாட்டப் போட்டிகளையும் இலங்கையினுள் நடாத்துவதற்கு நாம் எதிர்பார்க்கின்றோம்.

எமது நாடு Bubble நடைமுறையினுள் சரியான முறையில் விளையாட்டு முகாமைத்துவம் மற்றும் விளையாட்டு வீரர்களின் பயிற்சி செயற்பாடுகள் வெற்றிகரமாக இடம்பெறுவதால் சரியான சுகாதார வழிகாட்டல்களுக்கு கட்டுப்பட்டு சர்வதேச போட்டிகளைக் கூட எமது நாட்டில் நடாத்துவதற்கு ஒத்துழைப்புக்களை வழங்க முடியும் என நாம் எதிர்பார்க்கின்றோம்.

புதிய விளையாட்டுச் சட்டத்தின் மூலம் புதிய யாப்பு தயாரிக்கப்பட்டு அனைத்து விளையாட்டுக்களின் கட்டமைப்பினை மாற்றுவதற்கு எதிர்பார்க்கின்றோம் என்றார்.

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2021 மே மாதம் 4ம் திகதி செவ்வாய்க்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.